அரைய நாட்டு வரலாறு



வரலாற்று ஆய்வு நூல்

நந்தர்



அரைய நாட்டு வரலாறு

(வரலாற்று ஆய்வு நூல்)

ஆசிரியர் **நந்தர்** M.A.

வெளியீடு

நந்தினி பதிப்பகம்

நாமக்கல்



நூல் விவரம்

நூலின் பெயர்	:	அரைய நாட்டு வரலாறு
நூல் வகை	:	வரலாற்று ஆய்வு நூல்
ஆசிரியர்	:	நந்தர் (எ) தங்கம் விசுவநாதன் அமைப்புச் செயலாளர் வரலாற்று ஆய்வுக்கழகம் நாமக்கல் மாவட்டம்
முதல் பதிப்பு	:	ஆகஸ்ட் 2008
உரிமை	:	பதிப்பகத்திற்கே
பக்கங்கள்	:	216
படிகள்	:	2000
பதிவு	:	R L 0 2351 / 2008
அச்சு	:	டெம்மி 1/8
வடிவமைப்பும் அச்சும்	:	தி. நடராசன் பாரதி அச்சகம், சென்னை-41
பதிப்பக உரிமையாளர்	:	மாமோகனவேல் நந்தினி பதிப்பகம் 158, முதன்மைச் சாலை, நாமக்கல்
முன் அட்டைப்படம் விவரம்	:	பாழடைந்து கிடக்கும் “பரமத்திக் கோட்டையின் நுழைவு வாயில்”
விலை	:	ரூ. 150

வாழ்த்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகக்
கல்வெட்டு-தொல்லியல் துறை
முன்னாள் தலைவர்
புலவர் **செ.இராசு** எம்.ஏ., பிஎச். டி.,
64/5, டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ்,
புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில்,
ஈரோடு - 638011.

நந்தருக்கு நல் வாழ்த்துக்கள்!

கொங்கு செழிக்க, கொங்கர் தலைநிமிரச் செங்கோல் ஓச்சி, வரலாற்றிலும், இலக்கியத்திலும் இடம் பிடித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டுத் தெய்வீக நிலையடைந்த மாமனிதர் அல்லாளன் இளையா நாயகன்!

பெருமைமிக்க அவர் வரலாற்றை முன்னோர், பின்னோர் வரலாற்றுடன் இணைத்துச் செப்பேடு, கல்வெட்டு, இலக்கியம், கள ஆய்வு மூலம் அறிந்திருக்கும் நந்தர் அவர்கள் பணி மிகவும் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியது.

குடத்துள் இருந்த செய்திகளைக் குன்றின் மேல் இட்டது போல் நமக்குக் காட்டியுள்ள நண்பர் நந்தர் வரலாற்றுக் "காவலராகவும்", வரலாற்றுக் காதலராகவும் திகழ்கின்றார். சிறந்த இப்பணிக்கு என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்! வளர்க அவர் வரலாற்றுப் பணிகள்!

வாழ்த்தி மகிழும்
செ.இராசு

வாழ்த்துரை

முத்தமிழ் அறிஞர்

முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்

முன்னைத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்;

நாமக்கல் மாவட்ட வரலாற்று ஆய்வுக் கழகத் தலைவர்

தமிழர்கள், வரலாற்றினை முறைப்படுத்தி எழுதி வைப்பதில் போதிய கவனம் செலுத்தாமையினால் வரலாற்றுக் கோவையை அறிவதில் பல்வேறு இடர்ப்பாடுகள் நேருகின்றன. நாட்டு வரலாற்றுச் செய்திகளை முழுமையாய் அறிய முடிவதில்லை.

நாமக்கல் ஒரு மாவட்டம். கடந்த ஆயிரம் ஆண்டுகளில் அங்கு நடைபெற்ற ஆட்சிகள் சமய நடைமுறைகள் மற்றும் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளைக் காலமுறைப்படி அறிவதற்கான விவரங்கள் இல்லை.

நான் சிற்றூர் ஒன்றில் பிறந்தவன். எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்துதான் அவ்வூர் பற்றிய செய்திகளை என்னால் சொல்ல முடியும். நினைவில் தவறியவைகூட இருக்கலாம். என்னை விட அகவையில் மூத்திருப்பவர்கள் அவர்கள் நினைவுக் காலம் தொட்டுள்ள செய்திகளைத்தான் கூறமுடியும். ஒரு நூற்றாண்டு வரலாறு கூடத் தெரியாத நிலை. வரலாற்றுச் செய்திகளை எழுதிவைக்கவேண்டுமென்ற எண்ணம் இல்லை; படிப்பறி வில்லாமையும் அதற்கு ஒரு காரணம் எனலாம்.

இனியேனும் நடைமுறை ஒன்றனைப் பின்பற்றலாம் என்று கருதுகிறேன். ஊராட்சி அளவில் இன்றுவரை தெரிந்திருக்கும் வரலாற்றுச் செய்திகளை முதலில் எழுதச் செய்யலாம். தொடர்ந்து ஊராட்சியின் பணிகளுள் ஒன்றாக அந்தந்த ஊராட்சியின் வரலாற்று நிகழ்வுகளை எழுதிவைப்பது கட்டாயமாக்கப்படலாம். ஐந்தாண்டுகள் அல்லது பத்தாண்டுகட்கு ஒரு முறை ஊராட்சிகளில் தொகுக்கப்பட்ட அத்தகவல்களைக் கொண்டு மாவட்டச் செய்திக் களஞ்சியங்கள் ஆக்கப் பெறலாம். அவை கொண்டு மாநிலச் செய்திக் களஞ்சியங்கள் தொகுக்கப் பெறலாம். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில்

மாவட்டச் செய்திக் களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றில் வரலாற்றுச் செய்திகள் அனைத்துமே அடங்கியுள்ளன என்று சொல்லுவதற்கில்லை.

மேலே சொன்ன வகையில் இன்று வரையிலான நாமக்கல் வரலாற்றினை எழுதவும், தொடர்ந்து அப்பணியினை மேற்கொள்ளளவும் 'வரலாற்று ஆய்வுக் கழகம்' என்னும் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வமைப்பின் முதல் நூலாய் 'அரைய நாட்டு வரலாறு' வெளிவருகிறது.

'அரைய நாட்டு வரலாறு' நூலின் ஆசிரியர் நந்தர் ஆற்றிவருகின்ற காவல் துறைப்பணியோ மிகவும் பொறுப்பானது; கடினமானது; இரவு பகலெனப் பார்க்காது உழைக்கவேண்டியது. அப்பணியை மிகவும் செம்மையாகச் செய்து வருவதோடு, வரலாற்று ஆய்வினையும் கூடுதல் பணியாகச் செய்து வரும் நந்தரின் ஆர்வம் கண்டு வியக்கவேண்டியுள்ளது. அவருடைய ஓயா உழைப்பு, செய்திகளைச் சேகரிப்பதில் காட்டும் ஆர்வம், கிடைத்த செய்திகளை நுணுகி ஆராய்ந்து முடிவு காணும் திறன் ஆகியவற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சிறு தகவல் ஒன்று அவருக்குத் தெரியவந்தால் தான் செலவிடும் நேரத்தையோ, செல்ல வேண்டிய தொலைவையோ, ஆகும் பணச்செலவையோ கருதாது உடனே சென்று அது பற்றிய முழு விவரங்களையும் அறிந்து வரும் துடிப்புக் கொண்டவர். மனம் நிறைவு பெறும் வகையில் செய்திகளை அறிந்தாலொழிய அவர் ஓய்வதில்லை.

மக்கள் நலன் காக்க காவல் துறையில் அயராது உழைக்கும் அதே ஆர்வத்துடன் வரலாற்று ஆய்விலும் ஈடுபட்டுச் செயலாற்றி வருகிறார். தன் துறைப்பணியில் கிடைக்கும் சிறிது இடைநேரத்தையும் வரலாற்று ஆய்வில் செலவிடுவதால், நந்தர் ஓய்வே அறியாத ஓர் உழைப்பாளராய் உள்ளார். காவல் துறையில் இவரை ஒரு 'வரலாற்றுக் காவலர்' எனப் பெருமையோடு பாராட்டலாம்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் மணல் மேடு ஒன்று, முன்னொரு காலத்தில் கோட்டையாக விளங்கியது என்பது தெரிந்ததும், அதுபற்றி மிகவும் தீவிரமாய் ஆய்ந்து, அக்கோட்டையிலிருந்து ஆட்சி செய்தவர்கள் பற்றிய வரலாற்றினை அறிந்து ஆர்வத்தோடு 'அரையநாட்டு வரலாறு' என்னும் இவ்வரிய ஆராய்ச்சி நூலை இயற்றியுள்ளார்.

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, இராமப்பய்யன் அம்மானை, கொங்கு மண்டல சதகம், கபிலர்மலைக்கோவை எனும் இலக்கியங்களையும்,

ஆறகளூர்க் கல்வெட்டு, வேலாகவுண்டம்பாளையம் கல்வெட்டு, வெங்கம்பூர் கல்வெட்டு, ஜேடர்பாளையம் கல்வெட்டு ஆகிய கல்வெட்டுக் களையும்,

சித்தம்பூண்டி பண்டாரங்கள் செப்பேடு, கபிலர்மலைச் செப்பேடு, அல்லாள இளையான் செப்பேடு ஆகிய செப்பேடுகளையும் மற்றும் செவிவழியாய் வழங்கிவரும் செய்திகளையும் கொண்டு இவ்வாய்வினைச் சிறப்பாகச் செய்துள்ளார். ஆய்வுக்குப் பயன்படுத்திய ஆவணங்களை இந்நூலின் பின்னிணைப்பாகத் தந்து தன் ஆய்வுநெறி பிறழாத் தன்மையையும் புலப்படுத்தியுள்ளார்.

ஆய்வாளர் நந்தர், ஆய்வின் முடிவில் வேட்டுவ அரசர்களின் ஆட்சிக்காலம் அரையநாட்டின் பொற்காலம் எனப் பதிவு செய்துள்ளார்.

வேட்டுவர்களைக் கண்ணப்ப நாயனார் வழி வந்தவர்கள் என்று கூறுகிறார், நந்தர். அவிநாசிப் புலவர் பாடிய திங்களூர் நொண்டி நாடகம் எனும் கொங்கு நாட்டு இலக்கியம்கூட அவர்களை,

தின்றுருசி யானகறி தன்னைச் – சிவனே
தின்னப்பா எனக் கொடுத்த கண்ணப்ப வங்கிசத்தான்

என்று கூறியிருப்பதைக் காணலாம்

பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார் என்னும் புலவர், "மன்னனே! உலகில் உள்ளாரையெல்லாம் வென்று நீ ஒருவனே தலைவனாதலை விரும்பினாலும், மிகப் பெரிய புகழை இவ்வுலகத்தே நீ நிறுத்த விரும்பினாலும், அதற்குரிய தகுதியைச் சொல்கிறேன், கேட்பாயாக! உடம்புக்கு நீர் இன்றியமையாதது! இவ்வுடம்போ உணவை மூலமாய்க் கொண்டது; உணவோ நிலத்தொடு கூடிய நீரால் விளைவது. ஆதலால் இவ்வுலகில் நீரையும் நிலத்தையும் கூட்டியவர்கள் உயிரையும் உடம்பையும் படைத்தவராவர். ஆதலால் நிலத்தில் நீரை நிறுத்தியவர் உலகில் புகழை நிறுத்தியவர் ஆவர். நீரை நிலத்தொடு சேர்க்காதார் உலகில் தம்பெயரைச் சேர்க்காதவரே ஆவர். இதனை உணர்வாயாக" என்றார்.

"நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருக
தட்டோர்அம்ம! இவண் தட்டோரே!
தள்ளாதோர், இவண் தள்ளா தோரே"

என்பன குடவுலவியனார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலடிகள். குடவுலவியனாரின் இந்த அறிவுரைக்கேற்ப வேட்டுவ அரசர்கள் நிலத்தொடு நீரைச் சேர்த்து என்றும் நீங்காத புகழைச் சேர்த்துக்கொண்டார்கள் எனலாம்.

திரு.நந்தர் இந்நூலை எழுதியதன் பயனாய் இரண்டு நிகழ்வுகள் நடைபெற வேண்டுமெனப் பெரிதும் விழைகிறேன்.

பரமத்திக்கோட்டை உள்ள இடம் வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு அங்கு அக, புற ஆய்வுகள் செய்யப்படுவதன் வழி வரலாற்றுக்கு, குறிப்பாக அரையர் வரலாற்றுக்கு – ஒளியூட்டப்பட வேண்டும்.

இளையநாயக்கர் நினைவு அறக்கட்டளை ஒன்றனை நிறுவி அதில் வட்டியாய்க் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதி, இளையநாயக்கரின் மரபுரிமையரான இருக்கூர் தங்கவேல் இளையநாயக்கருக்கும் , அவர் மனைவிக்கும் அவர்கள் ஆயுள் வரை வளத்துடனும், நலத்துடனும் வாழ்ந்து வர ஆண்டு தோறும் ஒரு தொகை வழங்கப்படவேண்டும்; மீதித் தொகை வரலாற்றாய்வுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இவை நிறைவேறும் என்னும் நம்பிக்கையுடன் இந்நூலாசிரியர், 'வரலாற்றுக் களஞ்சியம்' தங்கம் விசுவநாதன் என்கிற நந்தரின் வரலாற்றுப் பணி என்றென்றும் வளர்பிறையாய் ஒளிவீசிச் சிறப்பதோடு அவர் புகழும் மேன்மேலும் மெருகேறிய வைரமணியாய்த் துலங்க வேண்டும் என்று உளம் குளிர்ந்து வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்

சு.செல்லப்பன்

அணிந்துரை

தொல்லியல் அறிஞர்
முனைவர் சொ.சாந்தலிங்கம்
தொல்லியல் அலுவலகம்,
236. திருச்செந்தூர் ரோடு,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி - 2.

மனிதகுலம் கடந்து வந்த பாதையே வரலாறு என்பது. மாமன்னர்களின் போர் வெற்றிகளும், வீர தீரப் பராக்கிரமங்களுமே வரலாறாகப் பேசப்பட்ட காலம் ஒன்று இருந்தது. ஆனால் அதே மாமன்னர்களின் "யாரங்கே?" என்ற குரலுக்கு ஓடோடி வந்து இட்ட பணிகளைச் சட்டென முடித்துப் பெயர் தெரியாமல், முகம் மறந்து போன எத்தனையோ பெருவீரர்களின் தியாகத்தை, சேவையை எண்ணிப்பார்க்கவும், எழுதிக்காட்டவுமான காலம் மாறி வருகிறது, இன்று. மாபெரும் சோழப்பேரரசு பெற்ற வெற்றிகளுக்குப் பின்னணியில் நின்று ரத்தம் சிந்தியவர்கள் எத்தனையோ பேர். இருக்குவேளிர், பழுவேட்டரையர், மழவரையர், முத்தரையர் என அவர்களது பட்டியல் நீளும். பாண்டியர்களின் எழுச்சிக்கும், வெற்றிக்கும், ஆட்சித் திறத்திற்கும் துணையாய் நின்றவர்கள் வரிசையில் காலிங்கராயர், பல்லவராயர், மாளவச் சக்கரவர்த்திகள், முனையதரையர், மாவலி வாணாதிராயர், சேதிராயர் எனப் பலர் அடங்குவர். ஆனால் இக்குறுநிலத் தலைவர்கள், சிற்றரசர்கள், அதிகாரிகளின் வரலாறுகள் வெளிச்சத்திற்கு வருவதில்லை. பேரரசர்களின் புகழ் வெளிச்சத்தில் இத்தகைய செயல்வீரர்களின் வரலாறுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன. பேரரசர்களின் மகுடங்களில் ஒளி வீசும் பல்வண்ணக் கற்கள் இத்தகைய வீரர்கள் சிந்திய வியர்வைத் துளிகளே என்றால் அது மிகையாகாது.

கொங்கு மண்டலத்தில் கி.பி.16 / 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு குறுநிலத் தலைவனின் வரலாறு கூறும் இந்நூல் அத்தகைய வியர்வைத் துளிகளின் வீரவாழ்வையும், ஈரநெஞ்சையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

பரமத்தியில் பாதுகாப்பான கோட்டையைக் கட்டிக் கொண்டு நாட்டு மக்களைப் பாதுகாக்கும் வேள்வியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட வேட்டுவகுலத்தில் உதித்த ஒரு வீர வேங்கை இளையநாயகனின் வரலாறு கூறும் நூல் இது. அரைய நாடு என்னும் சிறுநிலப்பகுதியில் நீண்ட காலம் ஆதிக்கம் செலுத்திய வேட்டுவர் தலைவர்களின் வரலாறு இந்நூலில் விளக்கப்படுகிறது. புராண காலத்துப் பிரகலாதனைத் தம் குல முதல்வனாகக் கொண்டு, திண்ணப்பன் என்னும் கண்ணப்பநாயனாரின் வழிவந்தவர்கள் என்று வேட்டுவர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

விசயநகர வேந்தர்களின் ஆட்சியின் போது, குறிப்பாகத் துளுவ மரபினர் ஆட்சி செய்த காலத்தில் அவர்களுக்கு அடங்கிய குறுநிலத் தலைவர்களாக வேட்டுவ அரையர்கள் அதிகாரம் செலுத்தியுள்ளனர். இவர்களில் முதல்வர் அல்லாள நாத இளையர் நாயக்கர் (கி.பி.1505) என்றும், இவர்களது ஆளுகையில் பரமத்தி, நாமக்கல், ஆறகளூர் போன்ற பகுதிகள் அடங்கியிருந்தன என்றும் அறிகிறோம். மதுரை நாயக்கர் ஆட்சியில் 72 பாளையக்காரர்கள் ஆட்சிக்கு உறுதுணையாக இருந்ததைப் போன்று கொங்குநாட்டுப்பகுதியில் பட்டக்காரர்கள் என்ற பெயரில் சில குறுநிலத் தலைவர்கள் துணைபுரிந்துள்ளனர். இவ்வகையில் அல்லாளநாத இளையநாயக்கன் (கி.பி.1505) அல்லாள இளையநாயக்கன் (1580 / 1610), இடும்பை இளையநாயக்கன் (கி.பி.1611/1621), இளையாநாயக்கன் (1622/ 1655) ஆகியோர் அரையநாட்டை ஆட்சி செய்த பட்டக்காரர்களாகத் தலைமையேற்று ஆண்டுள்ளனர். இவர்கள் திருமலை நாயக்கர் காலத்தில் அவருக்குப் பல வகையில் உதவி புரிந்ததைக் காண்கிறோம். முரட்டுக்குதிரையை அடக்கியது, கள்ளர்களை ஒழித்தது என்ற பல சாதனைகளைச் செய்து திருமலை நாயக்கரின் பெருமதிப்புக்கும் நட்புக்கும் உரியவராய்த் திகழ்ந்துள்ளனர். இந்த அரையநாட்டுத் தலைவர்கள் வலிமை குன்றிய நேரத்தில் திருமலைநாயக்கருக்கும் மைசூர் மன்னர்களால் கொங்கு நாட்டுப்பகுதியின் ஆட்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அரையநாட்டு இளையநாயக்கர்கள் மக்கள் நலப்பணிகளில் பெரிதும் கவனம் செலுத்தினர். இராசாவாய்க்கால் என்னும் முதல் வாய்க்காலைக் காவிரியிலிருந்து அமைத்து மக்களின் பயன்பாட்டிற்கு உரியதாக்கியுள்ளனர். இன்றும் அது பயன்பட்டு வருகிறது. இடும்பன் குளம் வெட்டியதும் இவர்களது சாதனையாகும். இந்நீர்ப்பாசனப் பணிகள் மூலம் வேட்டைக்குடிகள் வேளாண்குடிகளாக மாறிய ஒரு சமூக மாற்றத்தை ஆசிரியர் சுட்டிக்காட்டுவது

மிகப்பொருத்தம். பல கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்து, நந்தவனங்கள் அமைத்துப் பண்டாரங்களுக்கு மடம் கட்டிக் கொடுத்துப் பலவித ஆன்மீகப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக இவர்கள் தனியாகக் காசுகள் வெளியிட்டனர் என்பதை அறியும்போது சுயாட்சி பெற்ற அரசர்களுக்கு இணையாகச் செயல்பட்டனர் எனக் கருதத் தோன்றுகிறது.

வரலாறு எழுதுவதற்கு அடிப்படைச் சான்றுகளான கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள் ஆகியவற்றை முறையாகத் தொகுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. களஆய்வுகள் நேரடியான தகவலர்களோடு நேர்காணல்கள், இவ்வாய்வுக்கு வலிமை சேர்த்துள்ளன. அரையநாட்டுத் தலைவர்களின் வாரிசுகளையும் தேடிக் கண்டுபிடித்து இந்நூலில் அறிமுகப்படுத்தியுள்ளமை மேலும் பாராட்டத்தக்க முயற்சி.

கொங்கு நாட்டுப்பகுதி வரலாற்றோடு பின்னிப்பிணைந்த ஈரோடு புலவர் செ.இராசு, வரலாற்றறிஞர் இராசசேகர தங்கமணி, சமூகவியல் அறிஞர் நெல்லை நெடுமாறன், கல்வெட்டாய்வாளர் நாமகிரிப்பேட்டை துரைசாமி ஆகியவர்களோடு இந்நூலாசிரியர் கொண்டுள்ள உறவும், அவர்களது ஆய்வுகளின் தாக்கமும் இந்நூலில் பளிச்சிடுகின்றன. தரவுகளைப் பின்னிணைப்பில் கொடுத்திருப்பது எதிர்காலத்தில் ஆய்வாளர்களுக்குப் பயன்படும்.

இந்நூலாசிரியர் அரசுத் துறையில் பணிபுரிபவர் என்று அறியும்போது வியப்பு மேலிடுகிறது. இவரது வரலாற்று ஆர்வத்தைப் பாராட்டியே ஆக வேண்டும். முற்றிலும் தனது சுய முயற்சியிலேயே நந்தர் (எ) தங்கம் விசுவநாதர் இந்நூலை எழுதி வெற்றிபெற்றுள்ளார். ஒரு சிறிய நிலப்பரப்பைத் தேர்வு செய்து அதன் ஆட்சியாளர்கள், அவர்தம் சமூகப்பணிகள் என நுணுகி ஆராய்ந்து நூல் வெளியிடும் இத்தகைய முயற்சிகள் தொடர வேண்டும். தங்கம் விசுவநாதர் அவர்களது இப்பணி பாராட்டுக்குரியது. தமிழ் கூறும் நல்லுலகம் இவ்வாராய்ச்சி நூலை வரவேற்றுப் பயனடைய வேண்டும் என விழைகிறேன்.

சொ.சாந்தலிங்கம்

ஆசிரியர் பக்கம்

கொங்கு 24 நாடுகளில் அரையநாடும் ஒன்று. அரையநாடு என்பது அரையர் நாடு எனப்படும். அரையர் என்பது அரைசர். அரைசர் என்றால் அரசர். எனவே, அரையரும் அரசரும் ஒன்றே ஆகும். அரையநாட்டின் தலைநகரமாக இருந்த பரமத்திச் சீமையில் கோட்டையைக் கட்டி ஆட்சி புரிந்தவர் வேட்டுவர்கள் ஆவர். நீண்டகாலப் பாரம்பரியமிக்க வேடர்களின் வழி வந்த வேட்டுவர்களை, "இளையர் நாயக்கர்" என ஆறகளூர்க் கல்வெட்டு கூறுகிறது. இது, "வேடர் தலைவர்" என்பதை உணர்த்திக் காட்டுகிறது. வேடர் தலைவர் என்கின்ற வேட்டுவர்களின் சிறப்பான ஆட்சியின் மூலம் ஒன்றுபட்ட மக்களின் பெருமையையும், அதனால் ஏற்பட்ட வளர்ச்சியையும் இந்நூலின் வாயிலாக அறியலாம். அரையநாட்டின் குறுநில மன்னனைப் போல **இளையநாயக்கன்** ஆட்சி செய்திருந்தாலும், அவனுடைய படை செலுத்திய முறைகளைப் பார்க்கும் போது, சேதுநாடு, பாண்டியநாடு, சேரநாடு மற்றும் மைசூர் நாடு எனப்பரந்த நிலையைக் காண முடிகிறது. இந்நிலையில் ஒரு **பேரரசன்** போலவே இவருடைய ஆட்சியும் வீரமும் அமைந்துள்ளன எனத் தெரிகிறது.

கல்வெட்டுக்கள் வெட்டியது, பாடல்கள் பெற்றது, வீரத்திற்கு அடையாளமாகக் குதிரையை அடக்கியது, வள்ளலாய் மடம், கிராமங்களை வாரி வழங்கியது, சைவ மதம் தழைத்தோங்கப் பல கோயில்கள் கட்டியது, காவிரியில் இருந்து வாய்க்கால் வெட்டிப் பாசன வசதி செய்து கொடுத்தது எனும் சிறப்புகளைப் பார்க்கும் போது மேலே கணித்த கணிப்பு சரியாக இருப்பதை அறியலாம்.

காவிரி ஆறு கொங்கு நாட்டின் வழியாகச் சென்றாலும் அதனால் கொங்கு நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லாமல் இருந்தது. இதற்குக்காரணமாய் இருப்பது கொங்கு நாட்டில் ஓடும் காவிரி பள்ளத்தில் ஓடுகிறது, நிலம் மேடாக உள்ளது. எனவே தனது அறிவாற்றலைப் பயன்படுத்திய இளைய நாயகன் காவிரி ஆற்றில் தடுப்பணை ஒன்று கட்டி, வாய்க்கால் வெட்டி நீரை மேலேறச் செய்து கால்வாய்ப் பாசனத்திற்கு முதன்முதலாய்க் காவிரி ஆற்றைப் பயன்பட வைத்தான். இது வேட்டுவர் குலத்தினருக்குச் சூட்டப்படும் மணிமகுடமாய் இன்று ராஜா வாய்க்கால் சிறப்புடன் விளங்குகின்றது.

அரையநாட்டு வரலாறு சம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொண்டபோது, எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். பரமத்திக் கோட்டையை ஆய்வு செய்த போது, அங்கே விவசாயம் செய்து வரும் ராசப்பக் கவுண்டர் மகன் சாமியப்பக் கவுண்டர், அவரது

முன்னோர்கள் அவருக்கு அளித்த "கோட்டையைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை நினைவு கூர்ந்தது" மிகவும் பயன் உள்ளதாய் அமைந்தது.

இளையநாயக்கனின் கல்வெட்டுக் கள ஆய்வு சம்பந்தமாக வேலாகவுண்டம் பாளையம் சென்ற போது, களஆய்விற்கு உதவியவர்களை மறக்க முடியாது. அதேபோல, வெங்கம்பூர் கல்வெட்டு ஆய்வின் போது ஊரே ஒன்று சேர்ந்து உதவியதையும் மறக்க முடியாது.

இருக்கூர்ப் பட்டக்காரர் கூறியது கொண்டு, "மதுரையில் இருந்து தெற்கே 30 மைல் தொலைவில் இருக்கும் தம்பட்டர் பாறை"யை ஆய்வு செய்ய மூன்று நாட்கள் மதுரையில் முகாமிட்டிருந்த போதும், குறிப்பிட்ட இடத்தைக் கணிக்க இயலாத போது, இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களுடன் தொடர்பு கொள்ளத் தொலைபேசி மூலம் உதவி செய்த "இருக்கூர் கிராம நிர்வாக அதிகாரி" அவர்கள், மற்றும் அழைப்பித்த உடனே புறப்பட்டு வந்து உதவி செய்த திருச்செங்கோடு, குட்டிமேய்க்கன்பட்டி, "திரு. கணேசன்" ஆகிய இவர்களுக்கு நன்றி கூற வேண்டும். அதேபோல, பரமத்தி, வேலூர், இருக்கூர்ப் பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளும் போதெல்லாம் உடன் இருந்து பல உதவிகள் புரிந்த "கரிச்சிபாளையம் ஆசிரியர் திரு கணேசன்" அவர்களுக்கும் எனது நன்றியைக் கூற வேண்டும்.

திருச்செங்கோட்டு மலையில் துப்புரவுப் பணி செய்து வரும் சுப்ரமணி மகன் T.S அர்த்தநாரி பண்டாரம் அவர்கள் கண்பார்வை சற்றுக் குறைவானவர். ஆனால், திருச்செங்கோடு மலைக்கோயிலின் வரலாற்றைக் கூறுவதும், ஒவ்வொரு தூணிலும் உள்ள தெய்வச் சிலைகளின் சிறப்புக்களை மிகவும் பக்தியோடு சுட்டிக்காட்டிக் கூறுவதும் வியப்புக்குரிய அரிய செயலாகும். இவரது உதவிகளுக்கும் நன்றி கூற வேண்டும்.

இதேபோல மறக்க முடியாத ஒரு சம்பவத்தையும் நினைவுகூர வேண்டும். ஒரு முறை திருச்செங்கோடு மலைக்கோவில் அர்ச்சகர் விஜய் சுப்ரமணிய குருக்கள் அவர்களிடம் ஆய்வு சம்பந்தமாக உரையாடிக் கொண்டிருந்தபோது, இளையநாயக்கன் வாரிசான இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் அவர்களைப் பற்றிய பேச்சு எழுந்தது. அப்போது, அவரது கண்ணில் இருந்து பொங்கி வந்த நீரை அவரது கைகள் மறைத்தன. அழுகின்றாரா எனச் சந்தேகப்பட்டு வினா எழுப்பிய போது, "பல கோவில்களைக் கட்டி, தெய்வத் திருப்பணிகள் செய்த வேட்டுவத்தலைவனின் வாரிசு, முதல் பூசை உரிமை பெற்றுக் கொள்ளத் தனது பல்லக்கைத் தானே சுமந்து செல்லும் கொடுமையை நினைத்துக்கொண்டேன், என்னால் அடக்க முடிவில்லை" என நா தழுதழுக்கக் கூறிய அந்தணரின் கைகள் நடுங்கின. கண்ணீர் சொரிந்த விஜய் சுப்ரமணியம் குருக்கள், கண்ணப்பர் புராணத்தில் உள்ள சிவகோசராகக் காட்சியளித்தார். அங்கே, திண்ணப்பனால் அசுத்தப்படுத்தப்பட்டிருக்கும் இடத்தில் உள்ள குடுமியப்பராகிய இறைவனின் நிலை கண்டு கண்ணீர் சொரிந்தார் சிவகோசர். இங்கே, இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கரது நிலை கண்டு கண்ணீர் சொரிந்தார் விஜய் சுப்ரமணியம் குருக்கள்.

இதேபோல, நம்ப முடியாத ஆனால் நம்பியே ஆக வேண்டிய ஒரு அனுபவத்தையும் நினைவுகூர வேண்டும். இடும்பை இளையநாயக்கர் சமாதி உள்ள வேட்டுவம்பாளையத்திற்குக் கிராம நிர்வாக அதிகாரி அவர்களுடன் சென்றிருந்த போது, சின்னப்பக் கவுண்டர் குடும்பமே ஒட்டு மொத்தமாக, ஒன்று சேர்ந்து, ஒரே மாதிரியாகச் சமாதியைச் சக்தியுள்ள தெய்வம் என்று கூறியது ஆகும். இதனை எவர் சொன்னாலும் நம்ப இயலாது. ஆனால், ஒரு வேட்டுவரது சமாதியின் மகிமையையும், அவ்வேட்டுவர் குலத்தில் உதித்த இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கரின் குதிரையின் மகிமையையும் - ஒரு கொங்கு வேளாளக் கவுண்டர் அவர்களது குடும்பமே ஒன்று சேர்ந்து உறுதியாகக் கூறும் போது, அதனை முழுமையாக ஏற்க வேண்டியுள்ளது.

மேலும், கபிலர்மலைக் குருக்கள் குழந்தைசாமி அவர்கள் கூறிய "கோவில் கும்பாபிசேகம் போன்ற யாதொரு இறை நிகழ்ச்சியின் போதும் இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களை முன்னிலையில் வைத்துக் கொண்டால் தங்கு தடையின்றிச் சுபநிகழ்ச்சிகள் அனைத்தும் செவ்வனே நடந்து வருவது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய முக்கியமான செய்தியாகும்" என்பது, நிகழ்ச்சியை நடத்துபவர்களுக்கும், நமக்கும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய விசயமாகும். இவைகள் இருக்கூர்ப் பட்டக்காரரைப் பெருமைப்படுத்தக்கூடிய செய்திகளாகும்.

ஆய்வுக்குட்படுத்த இயலாத ஒரு செய்தியும் உண்டு. கல்வெட்டு ஆராய்ச்சியாளர் அறிஞர் திரு. துரைசாமி அவர்களது "அல்லாளபுரம் என்னும் ஊர் அரையநாட்டின் குறுநிலமன்னன் இளையநாயக்கனின் பெயரால் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவ்வூரை ஆய்வு செய்ய வேண்டும்" என்ற அறிவுரையை ஏற்று, வேலூர்ச் சரகம், வேலகவுண்டம்பட்டிக்கு அருகில் உள்ள புத்தூர் என்னும் ஊருக்கு மேற்கே சுமார் 3 கி.மீட்டர் தொலைவில் அல்லாளபுரம் என்னும் கிராமத்தைப் பலவாறு ஆய்வு செய்தும் பலன் ஏதும் பெற முடியவில்லை. மேலும், இதனை ஆய்வு மேற்கொள்வோர், அறிஞர் துரைசாமி அவர்களது அறிவுரையின்படி ஆய்வுகள் மேற்கொண்டால் சிறப்பான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு, கூழாங்கற்களுக்கிடையே தேடிக்கண்டு பிடிக்கப்பட்ட வைரத்தைப் பட்டை தீட்டி, ஜொலிக்கும் வைரமாக மாற்றிய, அதாவது, இந்நூலைச் சீர்படுத்தி, செம்மையுறச் செய்த பெருமை தொல்லியல் அறிஞர் பெருந்தகை **திரு. S. D. நெல்லை நெடுமாறன்** அவர்களையே சாரும்.

"அரையநாட்டு வரலாறு" என்னும் ஆராய்ச்சி நூலைப் படித்துப் பாராட்டியதோடு, அறிவுரைகளும், குறிப்புகளும் வழங்கியதோடு மகிழ்வுடன் இந்நூலுக்கு வாழ்த்தும் வழங்கிய **புலவர் செ. இராசு** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை கூறிக் கொள்கிறேன்.

தொல்லியல் அறிஞர் **S.இராமச்சந்திரன்** அவர்கள் தொலைபேசி மூலமாக, நுணுக்கமான வரலாற்றுக் கருத்துக்கள் பலவற்றை அளித்து உதவியது எனது

ஆய்வுக்கு மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. எனவே, அவருக்கு எனது மனமார்ந்த நன்றியை இதன் மூலமாக உரித்தாக்கி கொள்கிறேன்.

கல்வெட்டு ஆராய்ச்சியாளர், நாமகிரிப்பேட்டை அறிஞர் **திரு. வெ.இரா.துரைசாமி** அவர்களது குறிப்புகளும், பரமத்தி வேலூர், நாங்கள் இலக்கியம் **மா. சின்னு** அவர்களது அறிவுரைகளும் இந்நூலுக்குப் பயன் உடையதாய் அமைந்தன என்பதில் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

அரையநாட்டு வரலாறு பாண்டியர் திருநாட்டினராலும் அறியப்பட வேண்டும் என்ற எனது ஆவலின்படி, இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பெருமை தொல்லியல் அறிஞர் முனைவர் **சொ. சாந்தலிங்கம்** அவர்களைச் சாருகின்றது. இவை மனநிறைவையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் எனக்கு அளிக்கின்றன.

மேலும், இலக்கியங்களுக்கு விரிவான பொருள் நல்கிய திருச்செங்கோடு தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு), முனைவர் **திரு. செங்கோட முதலியார்** அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். எனது ஆராய்ச்சிக்கு எவ்விதத்திலும் சம்பந்தம் இல்லாதவராக இருந்த போதும், என் பணியையும் தன் பணியாய்த் தாங்கி ஆய்வு மேற்கொள்ள உதவிய எருமைப்பட்டி **திரு. B. Md. ஹனிபா** அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூல் வெளியிட, என்னைப் பம்பரமாய்ச் சுழல வைத்த, எங்கள் வரலாற்று ஆய்வுக் கழகத்தலைவர், முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், முனைவர் **சிலம்பொலி சு.செல்லப்பனார்** அவர்களுக்கும், வேலூர், நாங்கள் இலக்கியம் தலைவர் **செல்மா. காமராசு** அவர்களுக்கும், எனது வரலாற்று ஆராய்ச்சியின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துவரும் நாமக்கல் மாவட்ட வரலாற்று ஆய்வுக்கழகத் துணைத்தலைவர் கவியரசர் **திரு. தமிழன்பன் ப. முத்துசாமி** அவர்களுக்கும் மற்றும் வரலாற்று ஆய்வுக் கழகப் பொருளாளர் **திரு. எம். ஜி. அம்மையப்பன்** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அரையநாட்டு வரலாறு என்னும் இவ்வாராய்ச்சி நூலைப் பதிப்பித்த "**நந்தினி பதிப்பகம் மா மோகனவேல்**" அவர்களுக்கும் நன்றி கூற வேண்டும். மேலும், ஆய்வு நூல் உருவாக்கப் பணியில் ஏதாவதொரு வகையில் எனக்கு உதவியிருக்கக்கூடிய அத்துணை நல் இதயங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகட்டும்.

ஒரு நூல் வெளியிடுவது "சுகப்பிரசவம் மாதிரி" என்று அறிஞர் ஒருவர் கூறியது நினைவுக்கு வருகின்றது. குழந்தையைப் பார்த்தவுடன் தான் பட்ட வேதனையெல்லாம் மறைந்து மனநிறைவைப் பெறும் தாயைப் போல, "அரையநாட்டு வரலாறு" நூல் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நந்தர்

பொருளடக்கம்



நாமக்கல் மாவட்டம் வேலூர் சரகம் பரமத்தி என்னும் ஊரின் புறவழிச் சாலையில் உள்ள வழிகாட்டி இது, பரமத்திக் கோட்டையில் உள்ள கோட்டையண்ணன் கோவிலுக்குச் செல்லும் வழியைக் காட்டுகிறது



பரமத்திக் கோட்டையில் உள்ள கோட்டையண்ணன் சாமி

அரையநாட்டின் வரலாறு

I

பரமத்தி வேலூர்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் இருந்து வேலூர் செல்லும் சாலையில் 16 வது கி.மீட்டரில் பரமத்தி என்னும் ஊர் உள்ளது இதன் புறவழி நெடுஞ்சாலையின் இடப்புறம் உயரமான மண் திட்டு நீண்டு காணப்படும். இதுதான் அரையநாட்டின் குறுநில வேட்டுவ மன்னன் "இளையநாயக்கனும்" அவனது முன்னோர் களும் ஆட்சி செய்த மண் கோட்டையாகும். நீண்டகாலப் பாரம் பரியமிக்க பரமத்தி மண்கோட்டையில் ஆட்சி புரிந்த அரைய நாட்டு வேட்டுவச் சிற்றரசர்களின் வாழ்க்கை வரலாறு சுவை மிக்க, எழுச்சி மிகுந்த, ஆற்றல் நிறைந்த ஒரு வீர வரலாறு ஆகும்.

பரமத்தி பெயர்க்காரணம்

பரமுக்தி, பறமுக்தி என்னும் பெயர்கள்தான் பரமத்தி என்று ஆகி விட்டது எனவும் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும் பரமத்திக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

அல்லாள இளையநாயக்கனால் வெளியிடப்பட்ட கபிலமலைச் செப்பேடு "பறமுத்தி" என்று குறிப்பிடுகின்றது. ஈங்கூர் புலவனூர் பழனிச்சாமிக் கவுண்டரிடம் உள்ள, ஈஞ்சங்குலக் காணிச் செப்பேடு (காலம் கி. பி 1687) "பரமத்தி" என்று குறிப்பிடுகின்றது. நன்செய் இடையாற்றிற்கு "இராஜேந்திர சிங்க சதுர்வேதி மங்கலம்" என்ற பெயரும் உண்டு. இது போன்று பல இடங்களுக்குச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் முன்னொருசமயம் வழக்கில் இருந்துள்ளது புலவர் இரா. நாராயணசாமிநாயுடு அவர்களால் எழுதப்பட்ட திருச்செங்கோட்டுத் தலவரலாறு என்ற நூலில் பக்கம் 147 இல், கீழ்க் கண்ட செய்தி காணப்படுகின்றது.

"கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் துணை நாடுகளுள் ஒன்று பருத்திப்பள்ளி நாடு. இந்நாட்டின் தலைநகரமாகிய பருத்திப்பள்ளி ஒரு சிற்றூர். இங்குச் சான்றோர் குல நாடார்களே மிகுதியான வர்கள். பருத்திப் பள்ளி என்னும் சிற்றூர் இராச சிம்மன் என்னும் பாண்டிய அரசனால், 'இராச சிம்ம சதுர்வேதி மங்கலம்' என்ற பெயரில் பிராமணர் - களுக்குத் தானம் செய்யப் பட்டது"

மேற்கண்ட செய்தியில் இருந்து அறியப்படுவதாவது, "நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்களுக்கு, நாடாளும் மன்னரால் வழங்கப்பட்ட இறையிலி (வரி இல்லாத) இடங்கள் சதுர்வேதி மங்கலம் என்ற பெயரால் வழங்கப்பட்டன" என்பதாகும்.

"பரமுக்தி" என்பது மறுபிறவி எய்தாமல் ஒருவர் வீடு பேறு அடைவதைக் குறிக்கும் சொல் ஆகும். பறமுத்தி என்னும் பெயர் தான் நாளடைவில் பரமத்தி என மருவியிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

மாவிலி மன்னர்

"மாவலவர்" என்ற வேட்டுவப்பிரிவினர் "மாவிலி" என்ற அசுர மன்னர் பிரிவினைச் சார்ந்தவர்கள் என்று அறிஞர்கள் கருது கின்றனர். கொங்குவேளிர் பெருங்கதையில் வெள்ளை வேட்டுவர் என்று காட்டகத்து ஆட்சியாளரைக் குறிப்பிடுகின்றார். திருவேட்டுவர் என்று "கண்ணப்பர் திருமறம்" கூறுகிறது. வெள்ளை வேட்டுவர் ஆட்சியால் பெற்ற பெயர். வெள்ளை நாடர் என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் தொல்லியல் அறிஞர் திரு. நெல்லை நெடுமாறன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

"மாவிலி" வம்சத்தில் இரணியனின் புதல்வன் "பிரகலாதன்" இறை மாண்புடையவனாக வருணனை செய்யப்படுகின்றான். அசுரத் தன்மைகளில் இருந்து தன்னை நீக்கி மேம்பட்டவன் "பிரகலாதன்". எனவே வேட்டுவர்களின் வரலாறு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிரகலாதனில் இருந்து தொடங்கு கின்றது.

பிரகலாதனின் வழித் தோன்றல் கண்ணப்பநாயனார். இறைவருக்குக் கண்ணை இடந்ததினால் 63 நாயன்மார்களில் ஒருவராக உயர்வுற்றவர். வேடர் குலத்தலைவனான கண்ணப் பநாயனாரின் வழித்தோன்றல் அரையநாட்டின் ஆட்சியாளன் "இளையநாயக்கன்" ஆவான்.

காலவியல் ஆய்வு

பேராசிரியர் இராசசேகர தங்கமணியின் நூல் குறிப்புகளில் இருந்து "தென்னிலை பட்டக்காரருக்கும், மேல்கரை தலைய நாட்டுப் பட்டக்காரருக்கும் , அரையநாட்டுப் பட்டக்காரர் இளையநாயக்கனால் பட்டக்காரர் என்ற பட்டம் சூட்டப்பட்டது" என்பதை அறிய முடிகின்றது. மேலும் இவ்விரு பட்டக்காரர்களின் முன்னோர்களுக்கு, இளையநாயக்கனது முன்னோர்களால் பட்டக் காரர் என்ற பட்டம் சூட்டப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகின்றது

தென்னிலை பட்டக்காரர் வமிசமும், மேல்கரை தலையநாட்டுப் பட்டக்காரர் வமிசமும் கி.பி 1379 ல் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. இச்செய்தியின் படி இளையநாயக்கனும், இவனது முன்னோர்களும் அவர்களின் தலைவனாகின்றனர். எனவே, காலத்தால் இவர்களுக்கும் முற்பட்ட வர்களாக இளையநாயக்கனது முன்னோர்கள் கருதப்பட வேண்டியுள்ளனர். எனவே, இளையநாயக்கனின் மரபினர் முற் பட்ட அரையநாட்டின் பிற்கால ஆட்சியாளர் என்பதனையும், அரையநாட்டில் உள்ள வேட்டுவர்களின் ஆட்சி கி.பி. 1379 க்கும் முன்னரே வேரூன்றி இருந்தது என்பதையும் தெளிவாக அறிய முடிகின்றது

அரையநாட்டின் வேட்டுவ குல வரலாற்று ஆவணங்கள் கி.பி 1505 இல் இருந்து கிடைக்கப் பெறுகின்றன. இலக்கிய ஆதாரங்கள், கல்வெட்டு ஆதாரங்கள், செப்புப்பட்டய ஆதாரங்கள், வரைபடங்கள் என வரலாற்று மூலங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவைகளின் காலங்களோடு குறிப்புகளும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன.

கி.பி. 1505 இல் "அல்லாள நாத இளையர் நாயக்கரும்", வெம்பார் நாட்டில் இருந்து பிரிந்த முளைப்பார் நாட்டவரும் ஆறகளூர், ஸ்ரீதிருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலுக்கு மகர சங்கராந்தி காலத்திலே (தை மாதம்) திருவிளக்கு வைக்க ஏற்பாடு செய்தனர் என்று ஆறகளூர் கல்வெட்டு கூறுகிறது.

கி.பி. 1584 ஈஸ்வர ஆண்டு வைகாசித் திங்கள் 14 ஆம் நாள் மதியத்தன்று ஊர்த்தலைவர்கள் பலருடன் சேர்ந்து அரைய நாட்டில் உள்ள பல கோயில்களுக்கும், பல நன்கொடைகளை அல்லாள இளையான் வழங்கினான் என்று (முன்னொரு சமயம்

நடந்த சம்பவத்தை) வடகரையாற்றூர் மேல்முக கிராமம், ஜேடர்பாளையம் காவிரி அணைக்கட்டில் 22. 09. 1994 இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு கூறுகிறது.

கி.பி. 1584ஆம் ஆண்டு ஈஸ்வர வருடம், வைகாசி மாதம், 15ஆம் தேதி, திருச்செங்கோட்டில் ஸ்ரீஅர்த்தநாரீசுவர சுவாமியின் சன்னதியில், காமாட்சித் தம்புரான் என்பவருக்கு மடம் தர்மம் உண்டு பண்ணிக் கொடுக்கப் பட்டது என அல்லாள இளையான் செப்பேடு கூறுகிறது.

கி.பி. 1604ஆம் ஆண்டு காளயுக்தி வருடம், அல்லாள இளையா நாயக்கரிடமிருந்து கபிலக் குறிச்சி கிராமத்தை வள்ளுவர் குலத்துப் பெருமாள் தம்புரான் தானமாகப் பெற்ற செய்தியைக் கபிலர் மலைச் செப்பேடு குறிக்கிறது

கி.பி 1623 ஆம் ஆண்டில் இளையநாயக்கன், காவிரி நதியில் தடுப்பணை அமைத்து இராசா வாய்க்கால் அமைத்தான்.

கி.பி 1628 ஆம் ஆண்டில் இளையாநாயக்கன் தனது மண் கோட்டைக்குச் சக்தி கொடுக்க ஆண்டிகளை வைத்துப் பூசை செய்தான் என்பதைப் பண்டாரங்களுக்கு வழங்கப் பட்ட தாமிரப் பட்டயம் கூறுகிறது

கிபி 1643 ஆம் ஆண்டில் இளையாநாயக்கன் திருச்செங்கோட்டு மலை மேல் உள்ள நாகேஸ்வரர் கோவிலைக் கட்டினான் என்ப்தைச் சேலம் களஞ்சியம் (பக்கம் 93) கூறுகிறது.

கி பி 1643 இல் ஐப்பசித் திங்கள், 25 ஆம் நாள், திருச்செங்கோட்டு மலைக் கோவிலில் மைசூர் நஞ்சராயன் செய்த போர்க் கொள்ளைப் பொருட்களை, இளையாநாயக்கன் மீட்டான் என்பதைத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 263 கூறுகிறது.

கி.பி. 1653 இல், விசய வருடம் ஐப்பசி மாதம் கபிலர்மலைக் குழந்தைவேலவர்க்கு, வடகரையாற்றூரைச் சேர்ந்த வேட்டுவகுலத் தலைவர் இளையாநாயக்கன் வெங்கரை என்னும் கிராமத்தைத் தானமாகக் கொடுத்ததாக வேலாகவுண்டம்பாளையத்தில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

வரலாற்று வல்லுனர்களின் ஆய்வின்படி, கி.பி 1531 க்குப் பிறகே நாயக்க மன்னர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டனர் என்பதோடு கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடர்ச்சி வரை நாயக்கர்களின் ஆட்சி

நடைபெற்றது. பின்னர், திருச்சியைத் தலைநகராகக் கொண்டு சில பல ஆண்டுகள் ஆண்டனர் என்பது தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்களது நூல் குறிப்புகளில் இருந்து அறிய முடிகின்றது.

கோசனம் கோட்டைக்கு உரிமை படைத்த வேட்டுவர்கள் , விசயநகர ஆட்சியாளருக்கு அடங்கி ஆண்டுள்ளனர். கோசனம் கோட்டையை எதிரிகள் தாக்கிய போது, வேட்டுவர்க்காகச் சான்றோர் குலத்தவரான வெள்ளைக் குடையும் வெஞ்சாமரமும் உடைய தாழி சடைய மூப்பன் தலைமையில் போரிட்டு , அதில் வேட்டுவ ராசாக்கள் வெற்றி கண்டுள்ளனர் என்று, தொல்லியல் அறிஞர்கள் நெல்லை நெடுமாறன், எஸ். இராமச்சந்திரன், புலவர் செ. இராசு ஆகியோர், அண்மையில் கண்டறிந்த கோசனம் செப்பேடு கூறுகிறது. எனவே, வேட்டுவர்களின் வரலாறு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிரகலாதனில் தொடங்கி, இவரது வழித் தோன்றல்களான கண்ணப்பநாயனார், அரையநாட்டின் இளையாநாயக்கன், இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் என இக்காலம் வரை தொடர்கிறது.

வேட்டுவர் குலம் போற்றும் ஆவணங்கள்

ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், நடுகற்கள், இலக்கியங்கள், செவிவழிச் செய்திகள் வாயிலாக வேட்டுவரது வரலாறு அறியக் கிடக்கிறது எழுதுவதற்குத் தேவையான பனை ஓலைகள் எளிதில் கிடைக்கப் பெறுவதால், ஓலைகளையே அதிகம் பயன் படுத்தினர். இவைகள், ஒருசில நூற்றாண்டுகளிலேயே அழிந்து விடும் தன்மையுடையவை இவ்வாறு அழியும் மூல ஓலையை மீண்டும் வேறு ஓலையில் எழுதி வைப்பதும், செப்பேட்டில் பதிப்பதும் நடைமுறையில் உள்ளவையாகும். வேட்டுவர்க்குரிய ஓலைச்சுவடிகளும், பட்டயங்களும் நிறையவே கிடைத்துள்ளன. இவைகளுள், அல்லாள இளையான் செப்பேடு, கபிலர்மலைச் செப்பேடு, பண்டாரங்கள் செப்பேடு ஆகிய மூன்றும் பரமத்திக் கோட்டையில் ஆட்சி புரிந்த அரையநாட்டு ஆட்சியாளர்களின் செப்புப் பட்டயங்களாகும்.

கல்வெட்டுக்கள்

ஒருசில நூற்றாண்டுகளிலேயே அழிந்து விடும் தன்மையுடைதாய் ஓலைகள் இருப்பதால், நீண்ட காலம் நிலைத்து நிற்கும் பொருட்டுக் கற்பாறைகளிலும், பாறைத் துண்டுகளிலும் எழுத்துக்களைப் பொறித்தனர். கோயிலுக்குக் கொடுத்த

கொடைகளையும், கோயிலில் செய்த திருப்பணிகளையும், ஏரி, குளம் வெட்டியது, தானம் கொடுத்தது மற்றும் அரசனது ஆணைகளும் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. கல்லில் வெட்டப்பட்ட எழுத்துக்களைக் "கல்வெட்டுக்கள்" என அழைக்கிறோம். இக்கல் வெட்டுக்களினால் பண்டைய வரலாற்றைத் தெளிவாக அறிய முடிகிறது. இவைகளுள் வேலாகவுண்டன்பாளையத்தில் நடைபாதையில் உள்ள கல்வெட்டு, ஆறகளூர் திருக்காமீசுவரமுடையார் கோயில் கல்வெட்டு, வெங்கம்பூர்க் கல்வெட்டு, ஆகியவை பரமத்திக் கோட்டையில் ஆட்சி புரிந்த அரையநாட்டு ஆட்சியாளர்களின் கல்வெட்டாகும். ஜேடர்பாளையம் கல்வெட்டு பழைய நிகழ்வுகளைக் கூறும் புதிய கல்வெட்டாகும்.

மேலும், கொங்கு நாட்டில் கிடைக்கப் பெறும் வேட்டுவர்கள் பற்றிய பல கல்வெட்டுக்களில் அவர்கள் செய்த தெய்வத்திருப்பணிகளைப் பற்றியும், குளம், கிணறு, வாய்க்கால் வெட்டி நீர்நிலைகளை ஏற்படுத்தியது பற்றியும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டுக்களில் வேட்டுவர்களை மிகவும் உயர்வானவர்களாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

நடுகல்

கொங்கு நாட்டில் தன் ஆளுமையை நிலைநாட்டுவதற்காகப் பல மோதல்கள் நடைபெற்றுள்ளன இதில் வீர தீரச் செயல் புரிந்தவர்களுக்கு நினைவுச் சின்னமாகக் கல்வெட்டு பொறிக்கப்படுகிறது. நினைவுச் சின்னமான இக்கல்வெட்டை நடுகல் எனக் கூறுகிறோம் கொங்கு நாட்டில் வேட்டுவர்களைப் பற்றிய நடுகற்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு கிடைக்கப்பெற்றவைகளுள் திருச்செங்கோடு இராசபாளையம் குட்மேய்க்கன்பட்டி, அப்பச்சிமார் கோயில் அருகில் உள்ள நடுகல்லும் ஒன்றாகும். இது, வீர மரணம் அடைந்த குன்ன வேட்டுவரின் நினைவுச் சின்னமாகும்.

வேட்டுவர் குலம் போற்றும் நூல்கள்

வேடர், வேட்டுவர் பற்றிச் சில நூல்கள் இருந்தன. "குறு வேட்டுவச் செய்யுள்" "வடுக சந்தம்", "தமிழ் முத்தரையர் கோவை" ஆகிய வேட்டுவர்களைப் பற்றிய நூல்கள் மறைந்து போயின. இந்நூல்கள் கிடைக்கப் பெற்றிருப்பின் மேலும் வேடர், வேட்டுவர், மறவர் பற்றிய செய்திகளை அறிந்திருக்கலாம்.

குருகுல வம்சம் எனக் குறிக்கப் பெறும் வேட்டுவர்களின் புகழ் பாடும், "குரு குல காவியம்". "அப்பிச்சிமார் குறவஞ்சி"

"அப்பிச்சிமார் காவியம்" ஆகிய வேட்டுவர்களின் குலம் போற்றும் இலக்கியங்களில் வேட்டுவர்களின் வரலாறு அறியக் கிடக்கிறது. குருகுலம் என்ற சொல் வேட்டுவரோடு பொருத்திக் கூறப்படுவதை மனுதர்மத்தோடு பொருத்திப் பார்த்து உணர்ந்தால் கற்றறிந்தவர் என்று பொருள் படுவதாகத் தெரிகிறது. சங்ககால நிலையிலிருந்து பெரும் மாற்றத்தைப் பெற்று விட்ட கற்றறிந்த வேட்டுவரே குருகுல வேடர் என்று தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்கள் கருதுகிறார். அறநூல்களை உணர்ந்து மேம்பட்ட வாழ்க்கை உடையவராக அமைந்து விட்ட குருகுல வேட்டுவர் கொங்கு நாட்டில் உயர் நிலை பெற்று வாழ்ந்துள்ளனர்.

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, இராமப்பய்யன் அம்மானை, கபிலர்மலைக்கோவை, கொங்குமண்டலசதகம் ஆகிய இலக்கியங்கள் பரமத்திக் கோட்டையில் ஆட்சி புரிந்த அரைய நாட்டு ஆட்சியாளர்களைச் சுட்டிக்காட்டுகின்றன.


கொங்குநாடு

தமிழின் தொன்மையான தொகைப்பாடல்களான சங்க இலக்கியங்களில் பல இடங்களில் "கொங்கு", "கொங்கர்" என்னும் சொல்லாட்சிகள் குறிக்கப் பெறுகின்றன. இக்குடி பழந்தமிழ் நாட்டில் கொங்குப் பகுதியை ஆளுமை செய்த மலையரசர். கொங்கு வேளாளர் ஆவணங்களில், "கொங்கு வேட்டுவர்" என்று வேட்டுவர் சமுதாயத்தினர் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் போன்று கொங்கு வேளாளர், கொங்குப் பறையர், கொங்கு நாவிதர் என்று பல சமூகத்தினரும் கொங்கு நாட்டில் வாழுதல் பொருட்டு நாட்டினை இணைத்துத் தம் சமூகப் பெயரைக் குறித்துக் காட்டினர்.

"ஆகெழு கொங்கர் நாடு
கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்து
கொங்கர் படுமணி ஆயம்"

என்பன சங்க இலக்கியத் தொடர்கள்.

கொங்கு நாட்டு ஆவணங்கள் சிலவற்றில் வேட்டுவர்களைப் "பூர்வகுடி மக்கள்" என்று குறிப்பிடுகின்றனர். சில ஆவணங்களில் காளத்தி மலையிலிருந்து வந்தவராகச் சுட்டிக்காட்டப் படுகின்றனர். கொங்கர் என்பார் அரச மரபினர். கொங்கு நாட்டினை வேடராசாக்கள் ஆண்டபோது கொங்குராயன் என்று அழைக்கப்பட்டுள்ளார்கள்.



கொங்கு மண்டலம் வரைபடம்

"குலவு பரி சனர னைவருங்
கோதைவள நகருள்ள
குடிகளனை வோர்களுங் கொங்கி லெழு
கரை நாடரும்"

என்று திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை (செய்யுள் 189) கூறுவதால் கொங்கில் ஏழுகரை நாடு ஒரு பகுதியாக அமைந்திருந்தது என அறியக் கிடக்கிறது.

வடக்கில் பெரும்பாலையையும், தெற்கில் வைகாவூர் நாட்டுப் பழனியையும் (பழனிமலை), மேற்கில் வெள்ளியங்கிரி மலையையும், கிழக்கில் குளித்தலையையும் எல்லைகளாகக் கொண்டது கொங்குநாடு என்பர்.


மேச்சேரிக்கும் பெண்ணாகரத்திற்கும் இடையில் காணப்படும் பள்ளத்தாக்கில் இருக்கும் ஊருக்குப் பெயர் பெரும்பாலையாகும்.

கொங்குநாடு மலை வளம் உடையது. இங்குக் கொல்லிமலை, வைகைப் பொன்மலை, அலவாய்மலை, பழனிமலை, கொங்கணவர்மலை, சேர்வராயன் மலை, ஒதியூர் மலை, வராக மலை, தலை மலை, வெண்ணை மலை, சென்னி மலை, கஞ்ச மலை, வெள்ளி மலை, நாககிரி, ஆனைமலை ஆகியன சூழ்ந்து காணப்படுகிறது. இவ்வாறு சிறு சிறு குன்றுகளால் சூழப்பட்ட நிலப்பகுதி கொங்கு மண்டலம் என அழைக்கப்படுகின்றது

"கொங்கு" என்ற சொல்லுக்குத் "தேன்" என்பது பொருளாகும். "மலைகள்" சூழ்ந்த நாடு என்றும் பொருள் கொள்ளப்படும். இவ்வாறு, மலைகள் சூழ்ந்தும், அம்மலைகளில் தேன் நிறைந்தும் காணப்பட்டதாலும் "கொங்கு நாடு" (தேன் நாடு) என அழைக்கப் படுகின்றது. கொங்கு என்பதற்குக் காடு, பொன், மணம் போன்ற வேறு பொருள்களும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது ஏழ் கொங்கு என்ற வழக்கு உள்ளது எனினும், பிற்காலம் வடகொங்கு, தென்கொங்கு என்று நாடுகளைப் பிரிவினை செய்து அரச மரபினர் ஆண்டுள்ளனர். வட கொங்கில் வேட்டுவ இராசாக்களின் ஆதிக்கமும், அதிகாரமும், ஆளுகையும் வலுவான நிலையில் இருந்துள்ளதெனச் சில ஆவணங்களால் தெரிய வருகின்றது.

அரையர்கள் நாடு

இக்கொங்கு நாட்டில் பிற்காலத்தில் 24 நாடுகள் அடங்கியிருந்தன. அரையநாட்டின் கிழக்கே ஏழூர் நாட்டில் உள்ள ஆரைக்கல், மேற்கே மேற்கரை அரையநாடு, வடக்கே கீழ்க்கரைப்


KOLLI KURRAM
VADA KONADU
THATTAYA NADU
KONGU
SHERAYAR HILLS
CHERA NADU
DIVISIONS OF KONGU

அரையநாடு வரைபடம்

பூந்துறை நாடு , தெற்கே கிழங்கு நாடு இதன் நடுவில் உள்ள நிலப்பகுதிகளைப் பரமத்திச் சீமையைத் தலைநகராகக் கொண்டு இளையநாயக்கனும் அவனது முன்னோர்களும் ஆட்சி புரிந்தனர்

அரையநாட்டின் தலைநகரான பரமத்திக்குக் கிழக்கே திருமணி முத்தாறும், மேற்கே சோழசிராமணியும், வடக்கே திருக்கொடி மாடச்செங்குன்றம் என்கின்ற திருச்செங்கோடும், தெற்கே காவிரிக் கரையும் கொண்டு அரையநாடு அமைந்திருந்தது என்பதனை இவ்வரலாற்று மூலங்களின் வாயிலாக அறியலாம்.

இன்றைய நாமக்கல் மாவட்டத்தில் அரைய நாடு, இராசிபுரம் நாடு, வாழவந்தி நாடு ஆகிய நாடுகளும், துணைநாடுகளாகக் கீழ்க்கரை அரையநாடு, கீழ்க்கரைப் பூந்துறை நாடு, பருத்திப்பள்ளி நாடு, ஏழூர் நாடு, தூசூர் நாடு, விமலை நாடு ஆகியவை இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது பூந்துறை நாடு என்ற பகுதி முற்பட்டு சங்க இலக்கியத்தில் "புன்துறை" என்றழைக்கப்பட்டு வந்துள்ளது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். நாடு என்பது பிற்காலம் வந்திருக்கலாம். இந்நாட்டின் வடமுகம் பகுதியில் வேட்டுவர் ஆட்சி இருந்து வந்துள்ளது. இதன் மூலம் வேடஇராசாக்களின் ஆதிக்கம் நிலைநிறுத்தப்பட்டிருந்ததை அறியலாம்.

பருத்திப்பள்ளிநாடு

இந்நாட்டினையும் வேறு பகுதிகளையும் "நாடாள்வார் நாடு" எனக் கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. இந்நாட்டில் வேறு பல நாடுகளும் அடங்கியிருந்தன.

தூசூர் நாடு : இந்நாட்டின் பெயர் தூசிப் படையினர் பெயரால் அமைந்து இருக்க வேண்டும். தூசி என்பது காலாட்படையினரைக் குறிக்கும். வேடர்கள் பொதுவாகக் காலாட்படையில் இடம் பெற்ற **"இளையர்"** என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. எனவே தூசூர் என்பது தூசிப்படைக்கு வழங்கப்பட்ட ஊர் ஆகலாம். இதுவே பின்னர் தூசூர் நாடு என மாற்றம் பெற்றிருத்தல் வேண்டும்.

விமலை நாடு : புராண விமலை என்ற "சுரர்" குலத்து மரபிலே தோன்றிய பெண் பற்றி இதிகாசங்களில் குறிப்பிடப் படுகின்றது. இவரைப் பற்றிச் சான்றோர் குலத்தவரின் வலங்கை மாலை (16 ஆம் நூற்றாண்டு) குறிப்பிடுகின்றது. இந்நூல் கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அடையாறு நூலகத்தில் வலங்கைமாலை என்ற நூல் ஏடுகளால்

ஆனது உள்ளது. இந்த நூலை முனைவர் ஆ. தசரதன் பதிப்பித்து வருகிறார். விமலை என்ற சுரர் குலத்துப் பெண் பற்றிய செய்தியையும் இந்நூல் தருகின்றது.

அரையநாடு : இந்நாடு அரையர்களின் பெயரால் அமைந்ததாகும். அரையர் என்ற சொல் அரசரைக் குறிக்கும். அரச குலத்தவர் அரையர் என அழைக்கப் பட்டாலும் வேறு இனத்தவர்களும் அரையர் என்ற சிறப்புக்குரிய அடை மொழியைப் பெற்றுள்ளனர் என்று கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றது. கல்வெட்டுக்களில் அரையர் (அரசகுலம்) வெள்ளாள அரையர், வேட்டுவ அரையர், மருத்துவ அரையர், பள்ளி அரையர், பறைய அரையர், பல்லவ அரையர், மழவரையர், முத்தரையர், சோழியவரையர், கைக்கோள அரையர், மறவ அரையர், கள்ள அரையர், அகம்படிய அரையர், நட்டுவன் அரையர் போன்ற சொற்கள் காணப்படுகின்றன. எனவே, பல்வேறு அரையர்கள் என்ற நிலை இருந்துள்ளது. அரையர் என்ற சொல் அரசகுலத்தவரைக் குறிப்பிடும் என்றும், அதிலும் குறிப்பாக மருத்துவ இனத்தினர் மருத்துவ அரையர் என்றும், பள்ளி இனத்தவர் பள்ளியரையர் என்றும் சுட்டிக்காட்டப் படுகின்றனர் என்று தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்கள் தமது ஆய்வுக் கட்டுரையில் குறித்துள்ளார். இந்தியாவின் வடபகுதியில் உள்ள பாடலிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு, கி.மு 322 வரை மருத்துவ குலம் சார்ந்தவர்கள், பேரரசின் மன்னர்களாக (நந்த வம்சம்) ஆட்சி புரிந்துள்ளனர் என்கின்ற வரலாற்றுச் செய்தியின் அடிப்படையில் நோக்கும் போது தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்களது ஆய்வு மிகவும் பொருத்தமாகவே படுகின்றது. மேலும், பரமத்திக் கோட்டையில் உள்ள கோட்டையண்ணன் கோயிலின் குடிபாடுகளாக மருத்துவ அரையர், வேட்டுவ அரையர் இருப்பதையும் இக்குறிப்பில் சேர்த்துக் கொள்ளலாம். எனவே அரையநாடு என்ற இப்பகுதி வேட்டுவ அரையர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது என்பது தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்களது ஆய்வுக் கட்டுரையின் வாயிலாகத் தெரிய வருகின்றது.

பரமத்திக் கோட்டை அமைவிடம்

வேட்டுவர்களின் கோட்டை கொங்கு 24 நாடுகளில் பல இடங்களில் அமையப் பெற்றுள்ளன. சரம்பள்ளி, தென்பனை, காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் வேடர்களின் கோட்டை இருந்ததாகப் பாளையப்பட்டுக்களின் வரலாறு (தொகுதி 1, பக்கம் 1 இல்) குறிப்பிடப் பட்டுள்ளது. மேல்கரை தலையநாட்டில் (திண்டுக்கல் மாவட்டம்) "மருளப்பட்டிக் கோட்டை" இருந்ததாகக் கரூர் வரலாற்றுப் பேரவைத் தலைவர் திரு. ம. இராசசேகர தங்கமணி அவர்கள் எழுதிய நூற் குறிப்புகளில் இருந்து அறிய முடிகின்றது. ஈரோடு கோபி செட்டிபாளையம் கோசனம் அருகே உள்ள செல்லிபாளையம் பெருமாள் நாடார் என்பவரிடம் உள்ள கோசனம் செப்பேடு வாயிலாக, குருகுலத்து வம்சச் சிற்றரசர் பூலுவ வேட்டுவர் மகாகாளியண்ணக் கவுண்டர் கோசனம் கோட்டைக்கு உரிமை படைத்தவர் என அறிய முடிகிறது. எனவே "கோசனம் கோட்டை" வேட்டுவர்களுடையது. வேட்டுவகுலத் தலைவர்களில் ஒருவரான கோப்பண கவுண்டர் திருப்பூர்க் கோட்டையில் ஆட்சி புரிந்து வந்தார் என்பது ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங் காட்சியகத்தில் உள்ள "காடையூர் செப்பேட்டின்"வாயிலாக அறிய முடிகிறது. இதேபோல, பரமத்திச் சீமையில் நீண்ட கால பரம் பரியமிக்க வேட்டுவர்களின் கோட்டை அமையப் பெற்றுள்ளது. மணிகளும் (மாணிக்கக் கற்கள்) முத்துக்களும் ஒரு காலத்தில் திருமணி முத்தாற்றில் கண்டெடுக்கப் பட்ட காரணத்தால் திரு என்னும் அடைமொழி சேர்த்துத் " திருமணி முத்தாறு " என்ற சிறப்புப் பெயரைக் கொண்டது திருமணிமுத்தாறு,

ஏற்காடு மலையில் உற்பத்தியாகிச் சேலம் வழியாக வரட்டாறு, பொன்னி ஆறு, ஏழூர் ஆறு ஆகிய துணை ஆறுகளுடனும் மற்றும் பல ஓடைகளுடனும் ஒன்று கலந்து வரும் திருமணிமுத்தாறு பரமத்தி வழியாக வேட்டுவ ஆட்சியாளர்களால் மக்கள் வேளாண்மை செய்து பயிரிட்டு வாழ்வதற்காக வெட்டப்பட்ட இராசா வாய்க்காலுடன் கலந்து கூடுதுறை என்னும் இடத்தில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது.

பரமத்தியில் வடக்கு தெற்காகக் கரைபுரண்டு ஓடிய இத்திருமணிமுத்தாற்றின் மேற்கு ஆற்றுப் படுகையின் மீது பரமத்திக் கோட்டை அமையப்பெற்று இருந்துள்ளது என்பது ஆசிரியரின் கள ஆய்வால் தெரிய வருகின்றது.

ஏழ் ஏழ் நாடுகள்

தொல்காப்பியர் சூத்திரத்தில் ஏழுநாடுகள் பற்றிக் குறித்துள்ளார். எனவே, சேர சோழ பாண்டிய நாடுகள் ஏழு நாடுகள் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இதுவே, ஏழ் ஏழ் நாடுகள் எனச் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

இலக்கியம் காட்டும் பாடம் : முதன் முதலில் தோற்றம் பெற்றிருந்த பாண்டியர் பேரரசு ஏழ், ஏழ் நாடுகளைக் கொண்டதாகும். ஏழ் குறும்பனை நாடு, ஏழ் தெங்குநாடு, ஏழ் குணகரைநாடு, ஏழ் முன்பாலைநாடு, ஏழ் பின்பாலைநாடு, ஏழ் மதுரநாடு, ஏழ் குறும்பொறைநாடு ஆகியவை ஏழ் ஏழ் நாடுகளாகும்.

இந்நாடுகளின் தலைநகரம் கபாடபுரம் என்றும், இந்நகரம் இன்று பழையாறு (குமரி மாவட்டம்) என அழைக்கப்பட்ட பஃறுளியாறு என்ற பழைய ஆற்றின் கரையில் அமைக்கப் பட்டிருந்ததென அறிஞர் கூறுவர்.

கடலன்னையின் சீற்றத்தால் இந்நாடுகளுள் சில பகுதிகள் அழிந்த பின்னர், மிஞ்சியிருந்த சிலநாடுகள் , ஏழ் மதுர நாட்டின் அதாவது இன்றைய மதுரையில் வைகை நதியின் கரையில் பாண்டியர் ஆட்சியின் தலைநகர் உருவாகியது. இந்நதியின் பெயரால் பாண்டியன் தன்னை வைகை வள நாடன் என்றும், இவரைப்போலவே, சோழ வேந்தர்கள் காவிரியின் கரையிலிருந்த உறையூர், காவிரிப் பூம்பட்டினம் என்ற பூம்புகார் நகரங்களையே தம் தலைநகர்களாக முற்பட்டுக் கொண்டனர். பின்னர், பழையாறும் தஞ்சையும் தலைநகரமாக உதித்தன. சோழர்கள் காவிரியாற்றின் பெயராலேயே காவிரி நாடன், பொன்னி நாடன் என அழைக்கப்பட்டு வந்துள்ளனர் என்பது நம் இலக்கியங்கள் காட்டும் பாடங்களாகும்.

வரலாறு காட்டும் பாடம்

வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் ஆற்றங்கரையில் தான் குடியேறினர். நைல் நதிக்கரையில் எகிப்திய நாகரிகம் தோன்றியது. சிந்து சமவெளிப் பள்ளத்தாக்கினிலே தமிழரின் நாகரிகம் தோன்றியது.

கங்கையாற்றின் கரையில் பாடலிபுத்திரம் நகரில் மகத, மௌரிய, குப்தப் பேரரசுகள் தோன்றின. பாலாற்றின் கரையினிலே காஞ்சி மாநகரில் பல்லவர் பேரரசுகள் தோன்றின.

இம்மாபெரும் மன்னர்களின் அரசு தோற்றம் (தலைநகர்) போன்று, திருமணி முத்தாற்றுக் கரையினிலே பரமத்திச் சீமையைத்

தலைநகராகக் கொண்டு வேட்டுவ ராசாக்கள் கோட்டையைக் கட்டி ஆட்சி புரிந்துள்ளனர்.

திருமணிமுத்து நாடன்

பரமத்திக் கோட்டையைச் சுற்றிலும் அகலமான அகழி காணப்படுகிறது. அகழியைத் தோண்டிய மண்ணைக் கொண்டு கோட்டை கட்டப்பட்டுள்ளது. அரையநாட்டின் தலைநகரமாகப் பரமத்திச் சீமையை உருவாக்கினர். வேட்டுவர்களால் உருவாக்கப் பட்ட பரமத்திக் கோட்டை அக்காலத்திலேயே கொங்கு நாட்டில் மக்கள் அறியும் வண்ணம் தம் ஆட்சியைச் சிறப்பாகச் செய்து நல்ல ஆட்சியாளர் என்று பெருமைப் படுத்தப்பட்டுள்ளனர். இக்கோட்டையில் வேட ராசாக்கள் ஆகிய வேட்டுவர்கள் ஆட்சி செய்த வரலாற்றுச் செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பரமத்தியில் வடக்கு தெற்காகக் கரைபுரண்டு ஓடிய திருமணிமுத்தாற்றின் மேற்கு ஆற்றுப் படுகையின் மீது பரமத்திக் கோட்டை அமையப்பெற்றுள்ளதால், பாண்டிய, சோழ மன்னர்களைப் போன்று "**திருமணி முத்து நாடன்**" என்று அரையநாட்டு வேட்டுவ ராசாக்களை அழைப்பதும், புகழ்ந்துரைப்பதும் "அரையநாட்டுக்குத் தலைவன்" என்ற பொருளில் ஏற்புடையதாம்.

பரமத்திமேடு

மக்கள் வாழ்ந்த பகுதிகள் காலப்போக்கில் மறைந்து இன்று மண்மேடுகளாகக் காட்சி தருகின்றன. இவ்வகையினில் தான் சிந்து சமவெளியில் ஹாரப்பா, மொகஞ்சோதாரோ ஆகிய மேட்டுப்பாங்கான இடங்கள் ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்தன. அதேபோலத் தமிழகத்தில் ஆதிச்ச நல்லூர் (திருநெல்வேலி) , கோட்டைமேடு (கங்கை கொண்ட சோழபுரம்), பல்லவமேடு (காஞ்சிபுரம்), செங்கமேடு (தென்னாற்காடு) ஆகிய இடங்களில் உள்ள மண்மேடுகளில் அகழாய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. அதேபோலப் பரமத்திக் கோட்டை இருந்த இடத்தில் ஆய்வுக்கு அடிப்படையான மண்மேடுகள் கோட்டைச் சுவர்களாகக் காணப்படுவதை இன்றும் காணலாம்.

முன்பொரு சமயம் கட்டிடங்கள் நிறைந்த கோட்டையாக இருந்திருக்க வேண்டும். இதனை இங்கே விவசாயம் செய்து வரும் வேளாளர் ராசப்பகவுண்டர் மகன் சாமியப்ப கவுண்டர் அவர்களும் ஒப்புக் கொள்கின்றார். கோட்டையருகே

வெள்ளாளபாளையத்தில் குடியிருந்து வரும் இவர், "கோட்டையைச் சுற்றி அகழி இருந்ததாகவும், அது 30 அடி ஆழம் கொண்டது" என்பதாகவும் கூறுகின்றார். மேலும் "இந்த அகழியில் முதலைகள் நிறைந்திருந்ததாகத் தனது பாட்டனார் மாரப்ப கவுண்டர் அவர்கள் தனக்குக் கூறியுள்ளதாகவும்" கூறுகிறார். இவரிடமிருந்து கிடைத்த செவிவழிச் செய்திப் படிதான் கொண்டரசம் பாளையம் தியாகராசன் அவர்களிடமிருந்து தாமிரப்பட்டயம் தகவல் பெறப்பட்டது.

கோட்டைக்குள் கட்டிடங்கள் இருந்துள்ளன. இப்போது விவசாயம் செய்து வருகின்றனர். பரமத்திக் கோட்டை இருந்த இடத்தில் ஆய்வுக்கு அடிப்படையான மண்மேடுகள் கோட்டைச் சுவர்களாக இன்றும் காணப்படுகின்றன. மத்திய, மாநில அரசுகளில் தொல்லியல் துறைகள் மேலும் ஆய்வுகள் மேற்கொண்டால் வேறு பல வரலாற்றுத் தடயங்கள் கிடைக்கலாம்.

கோட்டை உட்புறம், மேற்பரப்புக் களஆய்வு

நீண்ட பாரம்பரியத்திற்குரிய பரமத்தி மண்கோட்டையின் நுழைவு வாயில் மேற்கு நோக்கிக் காணப்படுகின்றது. மேல வாசல் வைத்துக் கோட்டை உருவாகி இருப்பதால் ராசாக்களுக்கே உரியதாகின்றது. வேடர்கள் குரு குலத்திற்கு உரிமை கோரினர். அரசர் மக்கள் என்று பட்டம் சூடிக் கொண்டனர். அரசகுலத்துப் பிள்ளைகள் என்ற உரிமையுடையவராக வேறு பல ஆவணங்களில் அறியக் கிடக்கின்றது. எனவே, இக்கோட்டை வேடராசாக்களால் கட்டப் பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. வெடிவைக்கும் குழிகளையுடைய பாறைத் துண்டு ஒன்று தென்கிழக்கு மூலையில் உள்ள கோட்டைச் சுவரின் உச்சியில் காணப்படுகிறது. ஆபத்தை முன்கூட்டியே உணர்ந்து எச்சரிக்கை செய்வதற்காக இது அமைக்கப்பட்டிருக்க வேண்டும். கள ஆய்வில், நெருக்கடி காலத்தில் கோட்டையிலிருப்போர் தப்பிச் செல்லச் சிறிய வழி கிழக்கே இருந்ததாகத் தெரிகிறது

இக்கோட்டையின் நுழைவு வாயிலில் மண் குவியலுக்கிடையே, எஞ்சிய இரண்டு தூண்கள் மட்டும் நம்மை வரவேற்பனவாகக் காட்சி தருகின்றன. கோட்டையின் உட்பகுதியில் கோட்டையண்ணன் கோயில் கிழக்கு நோக்கியவாறு அமையப் பெற்றுள்ளது. இக்கோயிலின் மூலவர் ஆகிய கோட்டையண்ணன் தலைப்பாகம் மூலிகை கலந்த திருநீற்றினால் செய்யப்பட்டு உருண்டையாக்க் காட்சியளிக்கிறார்.


இக்கோட்டையண்ணன் இரும்புச் சங்கிலியால் தொங்கவிடப் பட்ட ஒரு மரப்பலகையில் ஊஞ்சலை உடலாகக் கொண்டு காட்சி தருகின்றார். இவரின் மீது வாசனை நீர் தெளிக்கப் படுகின்றது, மலர்கள் தூவப்படுகின்றன. 12 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோட்டையண்ணன் கோயிலில் மராமத்து வேலைகள் செய்யப்பட்டதாக அறியமுடிகிறது. மேலும், இக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் விநாயகர், ஆஞ்சநேயர், கன்னிமார்கள் சிலைகளும் பூசைக்குரியனவாகப் பூசிக்கப்பட்டு வருகின்றன. வெளிப்புறம் **காவல் தெய்வங்களின் சிலைகளும், கல்லினால் ஆன ஒரு நாயும்** நிறுவப்பட்டுள்ளன.

கோட்டையண்ணன் கோயில் அருகே உள்ள வெற்றிடத்தில் **6 கல் தூண்கள்** சாய்ந்த நிலையில் நின்று கொண்டுள்ளன. இது, இக்கோட்டையண்ணனுக்குப் பலியிடப்படும் ஆடுகளைத் தோலுரித்துத் துண்டுகளாக்கும் கூடமாகச் செயல் பட்டு வந்த இடம் எனச் செவிவழிச் செய்தியால் அறிய முடிகின்றது.

கோட்டையின் உட்புறம் தென்மேற்குப் பகுதியில் தரையில் கிடக்கும் ஒரு சிறிய பாறைத் துண்டில் **ஆஞ்சநேயர்** புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகின்றார். வழிபாட்டிற்காக வருகின்ற மக்கள் ஸ்ரீஆஞ்சநேயரையும் கற்பூரம் ஏற்றிப் பய பக்தியுடன் வணங்கிச் செல்கின்றனர். கோட்டையின் உட்புறம் வடகிழக்குப் பகுதியில் சிறிய பொய்கை இருந்ததற்கான அடையாளம் காணப்படுகின்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மண் கோட்டை, பகைவர்களாலும், கொள்ளையர்களாலும் சூறையாடப் பட்டதினால் இன்றைய தினம் சாதாரணமாகக் காட்சி தரு கின்றது. பரமத்திக் கோட்டையின் நான்கு புறங்களிலும் உயரமான மண் திட்டு நீண்டு காணப் படுகின்றது. ஓரிடத்தில் காணப்படும் மேடான இடம் மூலம் அவ்விடத்தில் ஏதேனும் வரலாற்றுச் சுவடுகள் இருக்குமென ஊகிக்கலாம். வரலாற்று ஆதாரங்களும் காலப்போக்கில் மறைந்து வெறும் மண்மேடுகளாகவும் ஆகியிருக்கலாம்.

பரமத்திக் கோட்டையில் அரசு அகழாய்வுப் பணி ஏதும் நடத்தப்பட்டதாக அறிய முடிய வில்லை. எனவே, தொல்லியல் ஆய்வுக்களமாகப் பரமத்திக் கோட்டையைக் கள ஆய்வு செய்து அதன்முடிவுகளை வெளியுலகிற்கும் கொண்டு வருவதோடு அதனை நினைவுச் சின்னமாக்க வேண்டியது அவசியம் என உணரலாம்.



பரமத்திக் கோட்டை வரைபடம்

கோட்டையின் சுற்றுப்புறம் மேற்பரப்புக் களஆய்வு

பரமத்திக் கிராமம், ஏ. ரிஜிஸ்டர், சர்வே எண் 195/2 , பட்டா எண். 2086 இல், 24. 18 ஏக்கர் பரப்பளவில் பரமத்திக் கோட்டை அமையப் பெற்றுள்ளது. இக்கோட்டை ஒரு சதுர வடிவில் அமையப் பெற்றுள்ளது.

இப்பரமத்திக் கோட்டை நுழைவு வாயிலின் எதிரே, சுமார் 100 மீட்டர் தொலைவில், நாமக்கல் வேலூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலை, வடக்கு தெற்காகச் செல்கின்றது. கோட்டையின் வடபுறத்தில் நாகர் புற்று உள்ளது. நாகர் புற்றைத் தாண்டிச்

சென்றால் கோட்டைக்கு வடக்கே ஒரு பர்லாங் தொலைவில் வடக்குத் திசையை நோக்கியவாறு, "அழகு நாச்சியம்மன்" கோயில் உள்ளது. இங்குள்ள அம்மன் சிலை பழமை வாய்ந்ததாகவும், மக்களின் வழிபாட்டுக்குரியதாகவும் உள்ளது. கோட்டை யண்ணனை வழிபடும் மக்கள் அழகுநாச்சியம்மனையும் வழிபடுகின்றனர். இடும்பன் குளம் ஏரியின் நீர் இக்கோயிலின் குறுக்கே தேங்கிய நிலையில் காணப்படுகின்றது.

பரமத்திக் கோட்டையின் பின்புறம், வடக்கு தெற்காக திருமணி முத்தாறும், தென் கிழக்கே இடும்பன் ஏரியும் காணப்படுகின்றன.



பரமத்திக் கோட்டையைச் சுற்றிலும் ஆழமான அகழி இருந்ததற்கான அடையாளம் காணப்படுகின்றது

இவ்வேரி, இடும்பன் குளம் என்று இளையநாயக்கனால் அழைக்கப் பட்டதன் காரணம் தம் முன்னோர் பெயரால் அழைத்தான் என, 3. 1. 2008 இல் பரமத்தி வேலூரில் நடைபெற்ற இளையநாயக்கன் நூல் வெளியீட்டு விழாவில், தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

இக் கோட்டையைச் சுற்றிலும் ஆழமான அகழி இருந்ததற்கான அடையாளம் காணப்படுகின்றது.

கோட்டையண்ணன் கோயிலின் குடிப்பாட்டு மக்கள்

இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களது கூற்றுப்படி, பரமத்திக் கோட்டையில் உள்ள கோட்டையண்ணன் இவர்களது குலதெய்வம் என அறிய முடிகின்றது. எனவே, வேட்டுவ ராசாக்கள் கோட்டையைக் கட்டி அங்குத் தங்களது குலதெய்வத்தை நிலை நிறுத்தினர் எனலாம். இக்கோயிலின் திருப்பணிகளுக்கு (12 ஆண்டுகளுக்கு) முன்பு கருவறையில் உள்ள விதானத்தில் "இளையநாயக்கர்" என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்த கல் ஒன்று காணப்பட்டதாகக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் நாமகிரிப்பேட்டை அறிஞர் திரு. துரைசாமி அவர்கள் கருத்துக் கூறி இருப்பதால், இளையநாயக்கரால் இக்கோயில் கட்டப்பட்டதாகவோ அல்லது புதுப்பிக்கப் பட்டதாகவோ அறியலாம்.

மேலும், வேட்டுவர், செங்குந்த முதலியார், வேட்டுவ மருத்துவர், வளையக்கார நாயக்கர், வண்ணார், பண்டாரம் ஆகிய ஆறு வகுப்பினரும் இக்கோயிலின் குடிப்பாட்டு மக்கள் என இக்கோயிலின் பூசாரி கோட்டையப்பன் மகன் தங்கராஜ் அவர்கள் கூறுகிறார். இதனை உறுதிப் படுத்திய இக்கோயிலின் அறங்காவலர் பழனிச்சாமிக் கவுண்டர் மகன் திரு. முத்துச்சாமி அவர்கள் கூறியதாவது, "வேட்டுவர்களுள் மூல வேட்டுவருக்கு மட்டுமே குடிபாடு உரிமையுள்ளது கோட்டையண்ணன் கோயில். வேம்ப வேட்டுவர் குலத்தினருக்குப் பெண்ணும் கொடுத்துக் குல தெய்வம் இல்லாதபடியால் குலதெய்வ உரிமையும் வழங்கி அவர்கள் கௌரவப்படுத்தப்பட்டுள்ளனர்" எனக் கூறுகிறார். வேம்பங்குல வேட்டுவர்கள் தங்களின் குல தெய்வமான கோட்டையண்ணன் கோயிலில் மூன்று வருடத்திற்கு ஒரு முறை பொங்கல் வைத்து, கிடா வெட்டி விழா எடுப்பது சிறப்பான நிகழ்ச்சியாகும்.

முதலியார் வகுப்பினரில், இக்கோயிலின் குடிப்பாட்டு மக்களாக இருந்த பங்காளிகளில் பெரும்பான்மையினர், தற்போது திருப்பூரில் இருந்து ஊத்துக்குளி செல்லும் சாலையில் மொரட்டுப் பாளையத்தில் கோட்டையண்ணனுக்குத் தனிக் கோவில் கட்டி 12 வருடமாகப் பூசித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

II

அல்லாள நாத இளையர் நாயக்கர் (கி.பி. 1505)

விசயநகர ஆட்சிக்கு
வேட்டுவ ஆட்சியாளர்கள் துணை புரிந்தனர்

விசயநகர ஆட்சியாளன் இம்முடி நரச நாயகன் என்பவன் பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டின் பல பகுதிகளை ஆண்டவன். இவனது பிரதிநிதி துலுக்க நாயக்கனாவான். அவன் நரலோகர் கண்டன் "மறைபுக்கார் காவலன்" என்று பட்டமிடுவதால் இவன் அரச குலம் அல்லாதவன் எனத் தோன்றுகின்றது. இவருக்கு வேட்டுவ அரசனான இளைய நாயக்கனின் முன்னோர்கள் படை உதவி செய்தனர். இதன் பொருட்டு ஆற்றூர் காணியுடையவராக அமைந்துள்ளனர். வேறு சில பகுதிகளிலும் இம்மரபு வேட்டுவர் ஆதிக்கம் செலுத்தி இருக்கலாம். விரிவான ஆய்வுக்குப் பின்னர், வேறு சில ஆதாரங்கள் கிடைத்த பின்னர்த் தெளிவாகலாம்.

சாளுவ அரசனை நீக்கி விட்டு அவன் படைத்தலைவன் துளுவ மரபினன் ஆட்சிக்கு வந்தான். அத்திம கிராமணி பேரனும், ஈஸ்வர ராச நாயகனின் புதல்வனுமான நரசநாயகன் என்ற படைத் தலைவன் துளுவ வம்சத்தவன். இவன், சாளுவ ஆட்சியை நீக்கித் துளுவ மரபு ஆட்சியை உருவாக்கினான். இவனது புதல்வனே பேரரசன் கிருஷ்ணதேவராயர் (கி.பி 1509 - 1529) ஆவார். விசயநகர ஆட்சிக்கு அரையநாட்டு வேட்டுவ ஆட்சியாளர்கள் உறு துணை புரிந்தனர் என்று அறியற்பாலதாம். "ஆமுத்த மால்யதா" என்ற தெலுங்கு நூலில் துளுவ அரசர்கள் பற்றிய விரிவான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

ஆறகளூர்க் கல்வெட்டு

இளையநாயக்கனின் முன்னோர்கள் பற்றிய செய்திகள் ஆறகளூர் கல்வெட்டில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. அரையநாட்டின் ஆட்சியாளர்களான வேட்டுவர் குடியில் கி.பி 1505 ஆம் ஆண்டு வாக்கில் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவர் அல்லாள நாத இளைய நாயக்கர் என்பவர் ஆவார். ஆறகளூர் கல்வெட்டில் காணி உரிமையுள்ள அல்லாள நாத இளையர் நாயக்கர் என, இளையநாயக்கனின் முன்னோர்களைக் குறிப்பதில்



ஆறகளூர் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயிலில் உள்ள அல்லாள நாத இளையர் நாயக்கரின் கல்வெட்டை, அக்கோயிலின் அர்ச்சகர் பார்வையிட்டுத் தெளிவு பெறுதல்

இருந்து, முற்பட்ட காலத்திலேயே ஆறகளூர்ப் பகுதியிலும் சில உரிமை உடையராக இம்மரபினர் இருந்துள்ளனர் என்று தெரிகிறது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆத்தூரில் இருந்து கோவிந்தம்பாளையம் செல்லும் வழியில், தலைவாசலில் இருந்து சுமார் 4 கி.மீட்டர் தொலைவில் , ஆறகளூர் என்னும் ஊரில் திருக்காமீச்சுவரமுடைய நாயனார் என்னும் பெயரில் திருக்கோயில் ஒன்று அமையப்பெற்றுள்ளது. இத்திருக்கோயிலின் கருவறையின் முன்மண்டபத் தென்புற அடித்தளத்தில் முளைவேட்டுவர் அல்லாள நாத இளையர் நாயக்கர் செய்த

திருப்பணிச் செய்திகள் அடங்கிய கல்வெட்டு (கி.பி.1505) காணப் படுகின்றது

கி.பி.1505இல் காணி உரிமையுள்ள முளை வேட்டுவர் வடகரையாற்றூர் அல்லாள நாத இளையர் நாயக்கரும், வெம்பார் நாட்டில் இருந்து பிரிந்த *முளைப்பார் நாட்டவரும் ஸ்ரீதிருக் காமீசுவரமுடைய நாயனார் சன்னதியில் உள்ள மண்டபத்தில் கூடி, எரமாஞ்சி துலுக்கண நாயக்கர் என்பவருக்கு நன்மை யுண்டாக வேண்டும் என்பதற்காக மகர சங்கராந்தி காலத்திலே (தை மாதம்) திருவிளக்கு வைக்க ஏற்பாடு செய்தனர்

மேலும், ஸ்ரீதிருக்காமீச்சுவரமுடைய நாயனார் ஆகிய மூலவர் சந்நிதானத்தில் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் நிலையில் உள்ள திரு நந்தா விளக்கு எரிக்கவும், பூசை நேரங்களில் எரியும் விளக்கிற்குக் கொடையளித்தவர் ஆற்றூர் காணி உரிமை பெற்ற முளைவேட்டுவர் "அல்லாள நாத இளையர் நாயக்கர்" என்ற செய்தியை ஆறகளூர் கல்வெட்டு கூறுகின்றது.

இத்திருக்கோயிலில் தீபம் ஏற்றி வைத்து, ஒளி பிறக்க வைத்தவர்கள் இளையநாயக்கனின் முன்னோர்களில் ஒருவரான "முளை வேட்டுவர் அல்லாளநாத இளையர் நாயக்கர்" அவர்கள் என்பதை ஆறகளூர் திருக்காமீச்சுவரமுடைய நாயனார் திருக்கோயிலின் கருவறையின் முன்மண்டபத் தென்புறத்தின் அடித்தளத்தில் உள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. ஆற்றூர்க் காணியுடையவர் என்று அல்லாள நாத இளைய நாயக்கரைக் குறித்திருப்பதில் இருந்து சில உரிமைகள் கொங்கு நாட்டில் இருந்துள்ளமை புலனாகின்றது.

திருக்காமீச்சுவரமுடைய நாயனார் கோயிலின் அர்ச்சகர் திரு. சபேச குருக்கள் அவர்களின் மகன் திரு இரவி குருக்கள் அவர்கள் கூறுகையில் இக்கோயிலுக்கு ஸ்ரீகாமநாதீஸ்வர சுவாமி திருக்கோயில் என்று தான் பெயரே தவிரத் . திருக்காமீசுவரமுடைய நாயனார் எனப் பெயர் இல்லை என உறுதிபடத் தெரிவித்தார். ஆனால், இத்திருக்கோயிலின் கருவறையின் முன்மண்டபத் தென்புற அடித்தளத்தில் உள்ள அல்லாள நாத இளையர்நாயக்கர் பற்றிய செய்திகள் அடங்கிய இக்கல்வெட்டில், "திருக்காமீசு வரமுடைய நாயனார்" எனத் தெளிவான எழுத்துக்கள் இருப்பதைக் கண்டு, ஆதியில் இக்கோயில் " திருக்காமீசுவரமுடையநாயனார்" என்ற பெயர் தாங்கியிருந்துள்ளது என்பதை ஒப்புக் கொண்டு, தான் தெளிவு பெற்றதற்கு மகிழ்ச்சி கொண்டார்.

---

* அடடவணை பககம் 182, எண் 37 காணக

இத்திருக்கோயிலின் ஆலயம் சுற்றும் பகுதியில், இறைவனின் அவதாரங்களான அஷ்ட பைரவர்கள் அமைந்திருப்பதும், பரிகாரம் செய்யும் தலமாக விளங்குவதும், இத்திருக் கோயிலின் சிறப்பு அம்சமாகும்.

III

அல்லாள இளையாநாயக்கர் (கி.பி. 1580-1610)

மதுரை நாயக்கர்கள்

கிருஷ்ணதேவராயர் (1509 - 1529), விசுவநாத நாயக்கரை (1529 - 1564) மதுரை ஆட்சியாளராக நியமித்தார். இவரைத் தொடர்ந்து மதுரையில் நாயக்கர் ஆட்சி நடைபெற்றது. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564 - 1572), வீரப்ப நாயக்கர் (1572 - 1595), இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1595 - 1601), முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் (1601 - 1609), முதலாம் முத்து வீரப்பநாயக்கர் (1609 - 1623), திருமலைநாயக்கர் (1623 - 1659), இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் (1659), சொக்கநாத நாயக்கர் (1659 - 1682), ஆகியோர் ஆட்சிக் காலங்களில் அரையநாடு மதுரை நாயக்கர்கட்கு உட்பட்டிருந்தது. நாயக்கர்கள் பாண்டியநாட்டை 72 பாளையப் பட்டுக்களாகப் பிரித்து ஆட்சி புரிந்தனர். இவர்களது ஆட்சிக்குட்பட்டே அரையநாடு இருந்தது. மேலும், கொங்கு நாட்டில், பாண்டிய நாட்டின் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட 64 பட்டக்காரர் களுள் பலரும் குறுநில மன்னராக ஆட்சி புரிந்தார்கள் என்பதும் தெரிய வருகின்றது.

அல்லாள இளையாநாயக்கர்

இளையநாயக்கனின் முன்னோர்களில் ஒருவரான அல்லாள இளையாநாயக்கர் என்பவர் பற்றிய செய்திகள் "அல்லாள இளையான் செப்பேடு" வாயிலாக அறிய முடிகின்றது. வேட்டுவர் சமூகத்தினரை "வாளரசர்" "வாளரச மணவாளர்" என்று சிறப்புடன் அழைக்கிறது. கொல்லிமலைக்கு உரிமை படைத்தவர்கள் என்றும் வேட்டுவர்களைக் குறிப்பிடுகின்றது. அல்லாள இளையான் செப்பேட்டில் சித்திர மேழிக்கொடியை அரையநாட்டு ஆட்சியாளர்கள் உரிமை பாராட்டி உள்ளார்கள். சித்திர மேழிக்கொடி படைத்த பெரியோர்கள் என வேட்டுவர்களைப் பெருமையுடன் குறிப்பிடுகின்றது. சித்திர மேழிக்கொடியை வேட்டுவ ஆட்சியாளர்கள் உரிமை கோரியதில் இருந்து, வேட்டுவர்கள் விவசாயம் செய்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டலாம். எனவே, வேடர்களான வேட்டுவ ராசாக்கள்

மிருகங்களை வேட்டையாடி உண்ணும் பழக்கத்தில் இருந்து விவசாயம் செய்து வாழ்பவர்களாகத் தங்களை மேம்படுத்திக் கொண்டனர் என்பதை அறிய முடிகின்றது.

*சிவராத்திரி கண்ட பெரியோர் என அல்லாள இளையூரன் செப்பேடு குறிப்பிடுகிறது.

கொல்லிகிரிக் குடையவர்கள் வேடர்களாகிய வேட்டுவர்கள் என அல்லாள இளையான் செப்பேடு குறிப்பிடுகின்றது. வல்வில் ஓரி கொல்லிமலையை ஆட்சி புரிந்தவர் என்பதும், வேட்டுவர்களில் சிலர், அதியமான், தொண்டைமான், சேனாவரையர் போன்ற பட்டப்பெயர்கள் தாங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சித்திரமேழி நாட்டார், சித்திரமேழிப் பெருக்காளர் என்போர் சித்திரமேழி நாடு என்ற சபை நடத்திய வேளாளர். இவர்கள் தங்களைப் பெரிய நாட்டார் என்று பெருமைப் பட்டுக் கொண்ட மரபினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்டாரங்களுக்கு மடம் கட்டிக் கொடுத்தது

கி.பி. 1584 ஆம் ஆண்டு ஈஸ்வர வருடம், வைகாசி மாதம், 15 ஆம் தேதி, குன்றத்தூர் துருக்கம் குன்னாடிக் கவுண்டர் , மோரூறு பொன்ன வேட்டுவரில் கீழக்கரைப் பூந்துறை நாட்டில் பாண்டிக் கோத்திரத்தில் பேரக் கவுண்டன், வேம்பங் கோத்திரத்தில் குமரக் கவுண்டன், சின்னாக்கவுண்டன், பரமத்திச் சீமை மூளை கோத்திரத்தில் அல்லாழி யிளையான் னாயக்கர், திருமலை னாயக்கரவர்கள், னாத கவுண்டர், முத்துக்காழிக் கவுண்டர், தலையநாடு குன்னாடு கோத்திரத்தில் வள்ளய கவுண்டர், மண்னாடு நீலியப்ப கவுண்டர், கெழங்குனாடு திருமலை கவுண்டர், குமாரசாமிக் கவுண்டர், பின்னும் கொங்கு மண்டலத்திலுள்ள வாழரச மணவாளரெலாங்கூடி, திருச்செங்கோட்டில் ஸ்ரீஅர்த்தநாரீசுவர சுவாமியின் சன்னதியில், காமாட்சித் தம்புரான் என்பவருக்கு மடம் தர்மம், அல்லாள இளையநாயக்கரால் உண்டு பண்ணிக் கொடுக்கப்பட்டது என அல்லாள இளையான் செப்பேடு கூறுகிறது.

குறிப்பு: *கண்ணப்பர் தொடர்பும், சிவராத்திரி உண்டு பண்ணின நிகழ்ச்சியும் திங்களூர் நொண்டி நாடகம் சுட்டிக் காட்டுகிறது. இந்நூல் திங்களூர் அருள் மலை முருகன் மீது அவினாசிப் புலவர் என்பவரால் பாடப்பட்டது. இந்நூல் பாடி, நடித்ததற்காக அவினாசிப் புலவருக்கு, திங்களூர் அப்பிச்சிமார் மடம் வேட்டுவர் சமூகத் தலைவர் ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள் பொன் கொடுத்துப் பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

ஸ்ரீ அர்த்தநாரீசுவர சுவாமியின் சன்னதிக்கு மேற்கு, விட்ணு தீர்த்தத்திற்குத் தெற்கு, துர்க்கையம்மன் சன்னதிக்கு வடக்கு, சுப்ரமணியசுவாமி மண்டபத்துக்குக் கிழக்கு, இதன் நடுவில் உள்ளது மடம். இம்மடத்தில் இருந்து கொண்டு ஸ்ரீ அர்த்த நாரீசுவர சன்னதியில் திருவிளக்கு எரிய வைக்கவும், திருமாலை கட்டி கொண்டு வரவும், இதற்குப் பல்லக்கில் வருபவர்கள் 21 பணமும், குதிரையில் வருபவர்கள் 5 பணமும், சேர்வைக்காரன் பணம் 5, நிலம் வைத்திருப்போர் ஏக்கருக்கு 2 வள்ளம் கம்பு, திருமணம் நடைபெறும் போது மாப்பிள்ளை வீட்டார் 1 பணமும், பெண்வீட்டார் 1 பணமும் மடத்துக்குக் கொடுக்க வேண்டும் எனக் காமாட்சித் தம்புரானுக்கு, 24 நாட்டு வேட்டுவப் பெருமக்கள் முன்னிலையில் அல்லாள இளையநாயக்கன் தர்ம சாசனப் பட்டயம் எழுதிக் கொடுத்தான்.

ஜேடர்பாளையம் காவிரி அணைக்கட்டில் உள்ள கல்வெட்டு

கி.பி 1584 ஈஸ்வர ஆண்டு வைகாசித் திங்கள் 14 ஆம் நாள் மதியத்தன்று ஊர்த்தலைவர்கள் பலருடன் சேர்ந்து அரைய நாட்டில் உள்ள பல கோயில்களுக்கும், பல நன்கொடைகளை அல்லாள இளையான் வழங்கினான் என்று வடகரையாற்றூர் மேல்முக கிராமம், ஜேடர்பாளையம் காவிரி அணைக்கட்டில் 22.09.1994இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு கூறுகிறது.

அல்லாள இளையாநாயக்கர் தனது காலத்தில் இன்னும் பல தெய்வத்திருப்பணிகள் மேற்கொண்டிருக்கலாம். மேலும் ஆய்வு செய்தால் தெரிய வரலாம்.

சமணர் குன்றைச் சைவமாக்கியது

பரமத்தியில் இருந்து 6 கி.மீட்டர் தொலைவில் உள்ள கபிலர்மலை சமணர்களின்

இருப்பிடமாகவும், சமணர்கள் வெளியேறிய பிறகு சமணச் சின்னமாகவும் இருந்து வந்தது. இவ்வாறு தோன்றுவதற்கு இடமாயிருப்பது கபிலமலையையடுத்து விளங்கும் "ஆறு நாட்டான்" மலையில் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் சேரலாதன் கல்வெட்டுஆகும். இங்கு கல்வெட்டு இருப்பதை அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். சொரசொரப்பான கற்பாறைகளைக் கல்படுக்கைகளாக வழவழப்பாக்கிச் சமண முனிவர்களுக்குத் தானமாக வழங்கியதை எடுத்துரைப்பதாகும். ஆறு நாட்டான் மலை என்ற சொல் "ஆறு நாட்டு வெள்ளாளரை"க் குறிக்கும். "ஆறு நாட்டார் மடம்" என்று வேளாள சமூகத்தினரின் மடம் சிதம்பரம் நகரில் உள்ளது.

பதிற்றுப் பத்து என்னும் சங்க நூலின் ஏழாம் பத்தில் உள்ள பத்துப் பாடல்களும், செல்வக்கடுங்கோ என்னும் சேரமன்னனைப் புகழ்ந்துரைக்கின்றன. கபிலர் பாடிய இப்பத்துப் பாடல்களையும் கேட்டு மகிழ்ந்த செல்வக்கடுங்கோ, நன்றாவென்னும் குன்றேறி நின்று, கண்ணுக்கெட்டிய தூரம் வரையுள்ள இடங்களை யெல்லாம் கபிலப்பெருமானுக்குத் தானமாக வழங்கினான். தானமாகப்பெற்ற இடங்களைக் கொண்டு, நன்றாவென்னும் குன்றில் வாழ்ந்து வந்த முனிவரின் பெயராலேயே கபிலர் மலை என அம்மலைக்குப் பெயர் வழங்கலாயிற்று.

இம்மலையில் கபில தீர்த்தம், கபிலக்கல் ஆகியவை உண்டு. மலையுச்சியில் அம்முனிவர் வாழ்ந்ததற்கான அடையாளமும் உண்டு. அண்மையில் உள்ள பாண்டமங்கலம் என்னும் பேரூரில் திருமால் கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆண்டு தோறும் நடக்கும் உற்சவத்தின் முன் கபிலருக்குப் பூசையிடுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது. கபிலருக்கு இம்மலையில் தொடர்பிருக் கிறது என்பதை முன்னாள் உயர்நீதி மன்ற நீதியரசர் அமரர். அய்யா ஆர். செங்கோட்டுவேலன் அவர்கள், கபிலமலைக்கோவை என்னும் நூலில் உள்ள தனது பதிப்புரையின் வாயிலாகக் குறிப்பிடுகின்றார்.

கபிலமலைக்கோவை என்னும் நூலின் பக்கம் 3இல் "கபிலர் மலையில் குழந்தைக் குமாரரைக் குலதெய்வமாகக் கொண்டு திருப் பணிகள் செய்தவர், இம்மலையையடுத்துள்ள வடகரையாற்றில் வாழ்ந்த அல்லாளன்" என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, சமணர் குன்றான கபிலர் மலையைச் சைவமாக்கியவன் அல்லாள இளையான் என்று தோன்றுகிறது எனினும், சமணர் குன்றைத் தான் சைவமாக்கினானே தவிரச் சமணர்களைத் துன்புறுத்தினான் என்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லை.

மேலும், அரையநாட்டில் உள்ள அர்த்தநாரிபாளையம், திருச்செங்கோடு மலை, பிள்ளைத் தின்னிக் கரடு ஆகிய இடங்களிலும் சமணப் படுக்கைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

நகர மாந்தர்கள் புகழ் பாடியது

> **"மல்லார் புயத்தன் வடகரை**
> **யாறையில் வாளரசன்**
> **அல்லாளன் சொற்றிரு மலையிளை**
> **யானா யகன் றனையாள்**
> **கல்லார மார்பர் குழந்தைக்**
> **குமாரர் கபிலை வெற்பில்**

வில்லார் நுதலும் விறல் வேந்தும்

மாளிகை மேவினரே!"

(கபிலமலைக்கோவை செய்யுள் 77 , பக்கம் 78)

செங்குவளை மலர்மாலையை மார்பில் அணிந்த குழந்தைக் குமாரரைத் தன் தெய்வமாகக் கொண்டு, பல திருப்பணிகள் செய்தவன் வடகரையாற்றூரில் பிறந்த அல்லாளன் பலம் நிறைந்த அழகான தோள்களை உடைய, வேட்டுவர் குலத்தலைவனும் (அல்லாளன்) வில் போல் வளைந்த அழகான நெற்றியையுடைய அவனது தலைவியும் கபிலர் மலையில் உள்ள விருந்தினர் மாளிகையினுள் நுழைந்தபோது, நகர மாந்தர்கள் இவர்களைப் புகழ்ந்து பாடியதாம் வாளரசர் மணவாளன் என்பதை வாளரசர் என்று கபிலமலைக்கோவை சுட்டிக்காட்டுகிறது

கபிலக் குறிச்சியைத் தானமாகப் பெற்ற வள்ளுவன்

கிபி 1604 ஆம் ஆண்டு காளயுக்தி வருடம் என்று கபிலர் மலைச் செப்பேடு குறிக்கிறது. பரமத்திச் சீமையில் உள்ள அல்லாள இளையானின் கோட்டையில் உள்ள சபையில் ஆனந்தநாத சந்தான கொங்கு சம்பந்த மூர்த்தி என்பவர் பொறுப்பில் இருந்தார் இவரது சீடர் வள்ளுவர் குலத்துப் பெருமாள் தம்புரான் என்பவர் ஆவார்.

பரமத்திக் கோட்டையில் அல்லாள இளையான் ஆட்சி செய்த போது, அவனது யானைகள், குதிரைகள் எல்லாம் கடுப்பு என்கின்ற கழிச்சல் நோய் ஏற்பட்டுப் பல மருத்துவர்களாலும் தீர்க்க முடியாமல் இருந்தன. இந்நோயைப் போக்க வேண்டும் என்று அல்லாள நாயக்கர் சாம்பவான் என்னும் குதிரை பிடிப்பவனிடம் கேட்டுக் கொண்ட படி, வள்ளுவர் குலம் சார்ந்த பெருமாள் தம்புரான், கபிலர்மலை முருகப் பெருமான் கோயில் சென்று வாக்குக் கேட்டு விபூதி வாங்கிப் போட, யானைகளும், குதிரை களும் எப்போதும் போல நல்ல நிலையை அடைந்தன

தன்னுடைய யானைகளும், குதிரைகளும் சுகமாகி விட்டதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற அல்லாள இளையநாயகன், கபிலக்குரிச்சியைச் சேர்ந்த வள்ளுவ குலத்தினன் பெருமாள் தம்புரானுக்கு , மலநாடு, மனனாடு, யிடைப்பளிநாடு, நல்லுறுக்கநாடு, தலையநாடு, தட்டயநாடு, ஆறுநாடு, பன்னீர் கிழங்குநாடு, வெங்கலநாடு, மேல்கரை அரையநாடு, கீழ்கரை பூந்துறை நாடு, பூவாணிநாடு,

பரித்திபுளிநாடு, சேலநாடு, ராசிபுறநாடு, வாழவந்தி நாடு, அரயநாடு, மேகரை பூந்துறைநாடு, தென்கரைநாடு, காங்கயநாடு, வடகரநாடு, வாரக்கநாடு, காஞ்சிஒடுவங்கநாடு, குறுப்பநாடு, மினனசுத்தி ஆறுநாடு, சோளவந்தாநாடு, சேர்காவடிக்காநாடு, அண்டநாடு, வய்யாபுரி நாடு ஆகிய 24 நாட்டாரும் அறிய, 32 கிராமத்து உறவு முறைகளும் கூடி , பல சிறப்புகள் செய்து, கபிலக்குரிச்சி என்னும் கிராமத்தைத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளான்..

மேலும், கபிலர் மலை மடம், திருச்செங்கோடு மடம், பழனி மடம் ஆகிய மூன்று மடங்களையும் வள்ளுவர் குலத்துப் பெருமாள் தம்புரான் என்பவருக்கு அல்லாள இளையான் எழுதிக் கொடுத்தான்.

கபிலர் மலையில் திருப்பணிகள்

அல்லாள இளையநாயக்கனின் ஆலோசனைப்படி, வள்ளுவர் குலத்துப் பெருமாள் தம்புரான், ஒரு இலட்சம் வராகன் செலவு செய்து, 100 கொத்தனார்களைக் கொண்டு, கபிலர்மலையில், மலைக் கோயிலையும், அதன் உச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயிலையும் மற்றும் தூய்மையான நீரினைக் கொண்ட குளம் ஒன்றிற்குக் கரை யையும் கட்டி வைத்தான்.



பெருமாள் தம்புரான் கபிலர் மலையில் செய்த திருப்பணி களுக்காக, விளை நிலங்களை அல்லாளன் தானமாக அளித்தான்.

மேலும், தைப்பூசத்தன்று தேர் உற்சவம் திருவிழா நடத்தவும், விழாவின் போது திருமஞ்சன நீரினை அந்தணர் கொண்டு வரவும், நடைக்கு அரைக்கால் பணம் கொடுத்த விபரமும் , கபிலர் மலைக் கோயிலுக்கு வரி நிர்ணயம் செய்ததும் கபிலர்மலைச் செப்பேட்டில் காணப்படுகின்றது.

வள்ளுவர் குலம் என்பவர்கள் காலம் காலமாக, மருத்துவத் தொழிலையும் ஜோதிடத் தொழிலையும் கற்றவர்கள். மயிலாப்பூர் வம்சா வழி வள்ளுவர் என்பவர்கள் இன்றும் நாமக்கல், கரூர் மற்றும் பல மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது வேலூர் கந்தசாமிக்கண்டர் கலைக்கல்லூரி முதுநிலை பேராசிரியரும் வள்ளுவர் குலம் சார்ந்தவருமான திரு. மா.அன்பழகன் அவர்களது வாயிலாக தெரியவருகின்றது.

வள்ளுவர் குலம்

கி.பி.6 ஆம் நூற்றாண்டு நூலான பெருங்கதை அரசரின் பெருநாள், மணநாள், முடிசூடும் நாள், போன்ற பெருநாட்களில் முரசு அடித்து அறிவிப்போர் "வள்ளுவர்" என்று கூறுகிறது. கி.பி 6 ஆம் நூராற்றாண்டு நூலான சீத்தளைச்சாத்தனாரின் மணிமேகலை (1 : 31)

"முரசுகடிப் பிகூஉ முதுக்குடி பிறந்தோன்"

என்று பழைமையான முரசடிக்கும் குடியில் பிறந்தவர் வள்ளுவர் என்று அடையாமிடுகிறது. பழந்தமிழ் நூலான புறப்பாட்டு நாட்டில் அரசனுக்கு அடங்கி வாழ்ந்து காட்டிய சில குடிகளைக் குறிப்பிடுகிறது "கடம்பன், துடியன், பறையன், பாணன்" என்றும் பட்டியலிட்டுக் காட்டுகிறது. பழந்தமிழ் மக்களில் பூர்வக்குடிகளில் பறையரும் அமைந்து இருந்தனர். பழைய குடியான பறையரை பிற்காலம் ஆதி திராவிடர் என்று அழைத்தனர். பூர்வமக்கள் என்று அறிந்து உணர்ந்தே முரசடிக்கும் முதுகுடி என்றார் போலும், பெருநாட்களில் முரசு கொட்டும் வள்ளுவரைப் போன்று பழந்தமிழ் பறையர் ஊரின் நன்மை தீமைகளில் முரசு கொட்டுவர்.

இலக்கியங்களில் முரசு கொட்டி அறிவிக்கும் பெருமைக்குரிய வள்ளுவர்கள் பறையர் குலத்தின் குருக்கள் ஆவார். சோதிடம் என்ற கலையில் வல்லவர்கள் வள்ளுவர் எனப்பட்டனர். தமிழில் கணக்கு என்பது எண் மற்றும் எழுத்தையும் சுட்டிக்காட்டுகிறது. எண்ணும் எழுத்தும் உணர்ந்த அந்தணரைப் போன்று நெடுங்கணக்கு, எழுத்து இவைகளில் தேர்ந்து சிறந்தவர்கள் வள்ளுவர் ஆவார். தமிழ் வருடத் தொடக்கமான சித்திரை திங்களில் மேதைகளான வள்ளுவரைச் சென்று வணங்கி அவர்தம் வாழ்த்தினைப் பெறும் வழக்கு கேரளநாட்டில் இருந்துள்ளது என்று தொல்லியல் ஆய்வாளர் S. இராமச்சந்திரன் கூறுகிறார்.

அந்த வழக்கத்தின் எச்சமாக கணி காணுதல் என்ற சொல் வழக்கு இன்றும் கேரளத்தில் உள்ளது.

திரு S. இராமச்சந்திரனால் கண்டறியப்பட்ட தரங்கம் பாடி ஓலை ஆவனத்தினை தமிழ்நாடு அரசு பதிப்பித்துள்ளது. இந்நூலில் "சமையன் புறஞ்சேரி" என்று வள்ளுவர் குடி அழைக்கப் பட்டதாக பறையர்சேரி பற்றிக் கூறுகிறது. சமயத்திருத்தல் நீதி பரிபாலனம் செய்தல் தொடர்புடையதாகும். மலைபடுகடாம் "சான்றோர் சமயத்திருக்கும் மண்டபம்" பற்றி குறித்து இருப்பதால் "சமையன் புறஞ்சேரி" பறையரின் நீதிக்கட்டுப்பாடுயுடைய அம்பலம் இருந்ததாக திரு S. இராமசந்திரன் கூறுகிறார்.

கி.பி. 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டில் அமைந்த திருநெல்லி (கேரளா) கல்வெட்டு "சொகிரத்துப் பருடையாரும் நியாய சேகராயின வள்ளுவரும் கூடிச் செய்த கச்சமாவது" என்பதிலிருந்து வள்ளுவரும் கேரள நாட்டில் சட்டங்களை வகுக்கின்ற அரசியல் சாசன நிர்ணயசபை போன்ற உயர் அமைப்பில் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது. கச்சமாவது நடைமுறை ஒழுங்கு படுத்தும் சட்டத்தைக் குறிக்கும்.

தண்ட நீதி முறைமைக்குரிய கச்சம் கேரள நாட்டில் "முழிக்களக் கச்சம்" என்று எண்ணற்ற கல்வெட்டுக்களில் குறிப்பிடப் படுகின்றன. கேரள தேச வரலாறு, மற்றும் திவான் பேஷ்கர் எழுதிய திருவாங்கூர் ஸ்டேற் மான்யூல் போன்ற ஆவணங்கள் "சத்திரிய கழகம்" என்று முழிக்களக் கச்சத்தை அடையாள மிடுகிறது முழிக்களக் கச்சதிலும் மாறுபட்ட வேறுபட்ட கச்சம் சொகிரத்துப் பருடையாரும் நியாய சேகரராயின வள்ளுவரும் செய்த கச்சமாகும் என்றுத் தோன்றுகின்றது. சட்ட முறைமை செய்த நீதி பரிபாலம் பற்றி தெரிய வில்லை எனினும் நியாயத்தார் என்று கோயில் குடிகளில் கல்வெட்டில் சிலரைக் குறிப்பிடுவதோடு நியாய சேகரரான வள்ளுவரைப் பொருத்திப் பார்க்கலாம் என்று தொல்லியல் அறிஞர் S. D. நெல்லை நெடுமாறன் கருதுகிறார்.

அந்தணரைப் போன்று அறிவால் மேம்பட்டு வாழ்ந்த வள்ளுவர்கள் உயர்நிலைப் பெறாமல் தாழ்ந்து விட்டதற்கான காரணங்கள் இதுகாறும் ஆராயப்பட வில்லை. சாத்திரங்களில் மேம்பட்ட பார்ப்பனரைப்போன்று நாடிஜோதிடம், கணக்கு போன்றவைகளில் வள்ளுவரும் சிறந்தோராக மிளிர்ந்திருந்தனர். வள்ளுவரில் ஓர் கிளையான பறையர் பற்றி எழுந்த பழமொழி பற்றி பார்ப்போம். "பாப்பானுக்கு மூத்த பறையன், கேட்பார் இல்லாமல் கீழ் சாதி ஆனான்" என்ற பழமொழி வழக்கில் உள்ளது. எனவே, வள்ளுவர்கள் அந்தணரைப் போன்று பண்டு எண்ணப்பட்டவர் என்பதில் ஐயமில்லை. வள்ளுவரும் பறையரும்

ஒருவரா? என்ற கேள்வி எழுகிறது. வள்ளுவரின் தொழிலுக்கும் பறையரின் தொழிலுக்கும் வேறுபாடு இருக்கிறதே என்பது சிலரின் வாதம். வள்ளுவர்கள் கணித்து கணிதம் சொல்லும் சோதிடக்கலையில் வல்லவர்கள் என்பதோடு நெசவுத்தொழிலும், வேளாண்மையும் செய்து வந்துள்ளார்கள்.

கல்வெட்டுக்களில் பறையர் மக்கள் பயிர்தொழிலோடு நெசவுத் தொழில் செய்து வந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். பயிர் தொழில் செய்யும் உரிமைக்கு சில சாதிகள் உரிமை பாராட்டிய போது பறையரும் உரிமை பாராட்டியுள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்த கல்வெட்டுக்களில் பிற சமூகத்தினரான பலர் கையெழுத்துப் போடத் தெரியாத நிலையில் பறையர் மிகத் தெளிவாக படிப்பு அறிவு உடையவர்களாக ஆவணங்களில் கையெழுத்துப் போட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்று நாட்டில் நெசவுத் தொழிலைப் பலரும் செய்து வருகின்றனர். காலத்தின் வளர்ச்சியில் மக்கள் மாறுதலைப் பெற்று விடுவது இயற்கையே. வள்ளுவ பறையர் என்ற கிளையே பறையுர் மரபினர்,. வள்ளுவர் என்ற மூலத்தில் உதித்தவர் என்று காட்டும். உயர்வும், தாழ்வும் செய்யும் தொழிலால் மட்டும் அல்ல பெற்ற அறிவாலும் ஏற்படுவது ஆகும். எல்லா சமூகத்திலும் உயர்ந்த கிளையும், தாழ்ந்த கிளையும் இருப்பது உணரத்தக்கதாகும். சமூக மாற்றங்கள் ஆய்ந்து அறியப்பட வேண்டிய ஒன்றாகும். கொங்கு நாட்டு சோழமாதேவி கல்லெட்டுக்களில் சிறப்பான சமூகமாக அடையாளம் காட்டப்படுவதுடன் “நாட்டுக் காமிண்டன்“ சூத்திரராயன் என்று பெருமைப்படுத்தப்பட்டவர் பறையர்களாகும். சோழர் காலத்தில் ஐந்தாவது வர்ணமான “பஞ்சமர்“ என்ற பிரிவினர் பறையர்களில் சேர்த்தப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. நான்காவது வர்ணமாகிய சூத்திரராயன் என்றே பெருமைப் படுத்தப்பட்டுள்ளனர். பறையர் என்பது மிகப்பெரிய இனக்குழுவாகும். அதன் உட்பிரிவினர் வள்ளுவர் குலத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். எனவே, இன்றைக்கு பறையர் குலத்தின் குல குருக்கலாக கருதப்படுகின்ற பறையர் சாதி உட்பிரிவைச் சார்ந்த வள்ளுவ குலத்தைச் சார்ந்தவர் தான் திருக்குறள் எழுதிய திருவள்ளுவப் பெருமான் என்பதில் ஐயமில்லை. காலக்கணிதம் வள்ளுவக் குலத்தினரிடம்தான் இன்றைக்கும் உள்ளது என்பதனை இதற்கு ஆதாரமாகக் கூறலாம்.

வள்ளுவப் பறையர் மேம்பட்ட குடியினராதலால் முற்பட்டே கேரள நாட்டில் அவர் பெயரால் வள்ளுவநாடு அமைந்திருந்தது உணரத்தக்கதாம். இந்நாட்டின் ஆட்சியாளராக வள்ளுவ நாடாழ்வான் நாட்டின் பெயரால் இருந்தார். நாஞ்சில் வள்ளுவன்

என்ற தலைவன் ஓடா பூட்கை உரவோன் என்று குறிப்பிடப் படுகின்றான் என்பதோடு மறவன் (வீரன்) நாடன் (தலைவன்) என்று அடையாளம் காட்டப்பட்ட நாஞ்சில் வள்ளுவன் என்ற மலையரசன் குலத்தினர். சேரரின் மரபு கிளையாகக் கருதப்பட்ட வள்ளுவ நாட்டின் ஆட்சியாளன் தன்னை வள்ளுவ நாடாழ்வான் பாண்டிய வேந்தர் குலத்திற்கும் உறவினன் என்பது கல்வெட்டில் அறியற்பாலதாம். எனவே, வள்ளுவர் குலத்தவர் பெயரால் நாடு அமைந்து இருப்பதும், அந்தநாட்டின் பெயரால் அரசமரபினன் அழைத்துக் கொண்டதும் வள்ளுவ இனத்தவரைப் பெருமைப் படுத்தும் செயலாம். சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கைலாய ஞான உலாவில் முழுமையான இரண்டு திருக்குறள் இடம் பெற்றுள்ளது.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு"

– குறள் 752

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

– குறள் 1101

சேர அரச குலத்தவர் இடையே வள்ளுவர் பெருமானுக்கு இருந்த செல்வாக்கு இதனால் புலப்படுகின்றது.

வள்ளுவர் என்ற சொல் மிகத்தெளிவாக அறிவும், ஆற்றலும் அறிந்து தெளிந்த மக்களைக் குறிப்பிடும். அம்மக்களில் அறியாமையுடைய பிரிவாக இயங்கிய மக்களை பறையர் என்று நாம் அன்று கருதினோம். ஆனால் வைணவ நூல்களில் "அரையர் சேவை" பற்றிக் குறிப்புகள் காணப்பெறுகிறது. பாட்டும் கூத்தும் செய்வித்தல் தொடர்புடையது அரையர் சேவையாகும். இது பறையர்கள் பற்றியது என்பது ஆவணங்கள் சொல்லும் பாடமாகும். உலகில் அனைத்தையும் அறிந்து தெளிந்து உணர்ந்த உரைத்த குறள்பா வள்ளுவர்க்குரியதாகும். உணர்ந்து சிறந்த தெய்வப்புலவனை தேவர் என்று உரைத்து திருவள்ளுவர் என்றனர். இத்தெய்வீகப் புலவர் குலமான வள்ளுவர் குலத்தில் உதித்த பெருமாள் தம்பிரான் என்ற இறைநெறிச் செல்வருக்கு சிறப்பு செய்து அறக்கொடை செய்தான் வேட்டுவர் குலத்தலைவன் அல்லாள இளையநாயக்கன். அறிவில் மேம்பட்ட வள்ளுவர் குலத்தினரை, அரையநாட்டில் தன் ஆளுமையின் கீழ் வைத்திருந் தான் என்கின்ற போது, அவர்களை உணர்ந்த அறிவு ஜீவியாக அல்லாள இளையாநாயக்கன் இருந்தான் எனலாம். எனவே, வள்ளுவ குலத்தினரைப் போல அறிவையும், ஆற்றலையும் அல்லாள இளையாநாயக்கன் பெற்றிருந்தான் என அறியற் பாலதாம்.

தொல்காசு தோற்றுவித்தவர்

கபிலமலைச் செப்பேட்டில், வேடராசாக்கள் தொடர்பில் தொல்காசு அச்சடித்து வழங்கியதாகக் குறிப்புள்ளது.

தமிழ் நாட்டில் தொல்காசு உருவாக்கியதாகச் சில ஆவணங்களில் உள்ள குறிப்புப்படி சான்றார்கள் பெருமைப் படுகின்றனர். பெருமைக்குரிய சான்றார்களைப் போன்று, வேட்டுவரும் தொல்காசு உருவாக்கியதைக் கபில மலைச் செப்பேடு வாயிலாக அறிய முடிகிறது. எனவே, தொல்காசுகளை வழக்கில் கொண்டு வந்தவர்கள் என்ற பெருமைக்குரிய மரபாக வேட்டுவர் சமூகம் அறியப்படுகிறது. பூர்வ காலத்திலேயே ஆட்சியைப் பெற்றிருந்த வேடர்கள் மரபு இவர்களாகலாம்.

முற்றுப் பெறாத இக்கபிலர்மலைச் செப்பேட்டில், திப்பு சுல்தான் குறிப்பிடப் படுகின்றான். காலம் பொருந்தி வரவில்லை. அல்லாள இளையநாயக்கனால் எழுதி வைக்கப்பட்ட ஓலைச் சுவடியைக் கொண்டு, திப்பு சுல்தான் காலத்தில் இச்செப்புப் பட்டயம் எழுதப்பட்டது எனப் பொருள் கொள்வது பொருத்தமாயிருக்கும்.

சைவ மார்க்கம்

ஆறுகுடி வெள்ளாளர் என்று அழைக்கப்படும் மக்களில் பலர் சமணராக இருந்து வந்துள்ளனர். எல்லாச் சமூகங்களிலும் பலர் அக்காலத்தில் சமணராக இருந்தனர். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் சைவ நெறிக்கு மாற்றம் செய்து , சைவ மதம் வளர அடிகோலினர். இந்நிலைக்குச் "செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள் தென்னர் குலப்பாவை" என்ற பாண்டிமாதேவி "மங்கையர்க் கரசியார்" பெரிதும் உதவினர். இதனால் சமணத்தைக் கை விட்ட அவரது கணவன் நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் சைவனாக மாறினான். சமண மதத்தைப் பின்பற்றிய பலரில் சிலர் மாறினாலும், சிலர் தொடர்ந்து இருந்து சமண மதத்தின் புனிதக் கொள்கைகளைத் தொடர்ந்து கடைப் பிடித்து வந்தனர். எண்ணிக்கை குறைந்தாலும் அவர் கொண்டிருந்த கொள்கைகள் குறைய வில்லை. சமண புத்த மதக் கொள்கைகளைப் பின் பற்றியே சைவ மதம் தழைத்தோங்கியது. உயிர்ப் பலி செய்தல் கூடாது என்ற சமண புத்த மதக் கொள்கைகள் பெரிதும் சைவ மதத்தில் கடைப்பிடிக்கப் பட்டன. சமண மதம் சாதாரண மக்கள் மத்தியில் பெரிதும் பரவியிருந்தது. இதனை மேலும் தடுக்கச் சைவ மதவாதிகள் புராணங்களைப் புனைந்து சமணத்திற்கு எதிராக எழுதினர். திருவால வாயுடையார் புராணம் வெப்புத் தீர்த்த படலம் (பா. 5) "சாதி முறை அறியாத சமணர் வழி ஒழிவித்தே" என்பதால், சமணக் கொள்கைகளைப் பின்பற்றிய மக்களை இழிவாகக் கருதினர் சைவர்கள் என்று புலனாகின்றது.

ஆறகளூர் கல்வெட்டு ஆதாரப்படியும், அல்லாள இளையான் செப்பேட்டுப்படியும் வேடர் ராசாக்களான வேட்டுவர்கள் தங்களைச் சைவ மதத்தில் அங்கீகரித்துக் கொண்டனர் என்பதை அறியலாம்.

அல்லாள இளையானின் முன்னோர்களான வேடராசாக்கள், காட்டு மிருகங்களை வேட்டையாடி அம்மாமிசங்களை உண்டு வந்தவர்கள். பின்னர், தங்களை விவசாயம் செய்யும் சைவ சமயத்திற்கு மாற்றிக் கொண்டனர். வேடர்களாக இருக்கும் போது அசைவ உணவை இறைவருக்குப் படைத்தவர்கள், தங்களை விவசாயிகளாக மாற்றம் செய்து கொண்ட பின்னர் அசைவ உணவை உண்டு வந்த போதும் சைவ மார்க்கத்தில் சென்றனர் என்பதில் வியப்பேதும் இல்லை.

வேடராசாக்கள் காட்டு மிருகங்களை வேட்டையாடி அசைவ உணவை உண்டு வந்ததில் பிழை ஏதும் இல்லை. ஏனெனில் காட்டு மிருகங்களிடமிருந்து மக்களைக் காப்பாற்றும் செயலைத்தான் வேடராசாக்கள் செய்து வந்தனர். உழவுத் தொழிலுக்கும் முற்பட்டது வேட்டையாடும் தொழில் என்பது குறிப்பிடத்தக்கது.

சைவ மதம் தழைத்தோங்கச் செய்த அல்லாள இளையாநாயக்கர்

சேக்கிழாரின் பெரியபுராணம் வாயிலாக, நீண்ட நாட்களாகக் குழந்தைப் பேறு இல்லாத, வேடர் குலத்தலைவர் நாகனுக்குக் குழந்தைப்பேறு பெறக் குமரக்கடவுளை வழி பட்டதாகவும், அதனால்தான் திண்ணப்பன் ஆகிய கண்ணப்பர் பிறந்தார் என்பதாகவும் கண்ணப்ப நாயனார் புராணத்தில் உள்ள குறிப்புகளைக் கவனத்தில் கொண்டால், அல்லாள இளையாநாயக்கர் கபிலர் மலையில் குமரக்கடவுளுக்குத் திருப்பணிகள் செய்ய அவனது முன்னோர்களான வேடர் குலத் தலைவர்களும் காரணமாயிருக்கலாம் எனக் கருதுவதற்கு இடமிருக்கிறது.

அல்லாள இளையான் செப்பேட்டில் அறநெறி வழிபாட்டினையுடைய சமணரைத் துஷ்டர் என்று குறிக்கப்பட்டு, சுப்ரமணியர் அசுரர்களை வென்றதை விசயநகரத்தோடு பொருத்திப் பார்க்கும் நிலையில் அசுரரைச் சமணர் என்று கூறியிருப்பது வியப்பைத் தரும் விசயமாகும். அல்லாள இளையான் செப்பேட்டின் துவக்கத்தில் சைவநெறியை வளர்க்கும் பாடல் அமைந்துள்ளது. இது சமணரை எதிர் கொண்டு சைவமதம் தழைத்தோங்கச் செய்ய திருஞானசம்பந்தர் பாடுபட்டதை நினைவு படுத்துகிறது. எனவே, திருஞானசம்பந்தருக்குப் பின்னர், அவரைப்போவே சைவ மதம் தழைத்தோங்கச் செய்தவன் அல்லாள இளையா நாயக்கன் எனலாம். இதனால் சைவ மதத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட்டது என்பதையும் அறியலாம்

IV

இடும்பை இளையாநாயகன் 1611 - 1621

இடும்பன் குளம் வெட்டியது

அல்லாள இளையாநாயக்கர் ஆட்சிப் பொறுப்புக்குப் பிறகு, கி.பி. 1611 ஆம் ஆண்டு இடும்பை இளையாநாயக்கன் பட்டத்துக்கு வந்துள்ளார்.

இருக்கூரில் தற்போது வாழ்ந்து வரும் "இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர்' அவர்களது வாயிலான செவிவழிச் செய்தியின் படி இளையநாயக்கனின் தந்தை இடும்பை இளையாநாயகன் என அறியப் படுகின்றது. எனவே, கி.பி. 1611 இல் அல்லாள இளையாநாயக்கர் ஆட்சிக்கும், கி.பி. 1622 இல் இளையாநாயக்கர் ஆட்சிக்கும் இடையில் "இடும்பை இளையநாயகன்" என்பவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளார். இவர் தான் இளையநாயக்கனின் தந்தை எனச் செவிவழிச் செய்தி மூலம் அறிமுகப்படுத்தப் படுகின்றார்.

வரலாற்று ஆதாரங்கள் எதுவும் இல்லாத போதும், பரமத்திக் கோட்டைக்குத் தென்கிழக்கே உள்ள இடும்பன் குளத்தில் ஏதேனும் திருப்பணிகள் செய்தவராக, அதனால் அக்குளத்திற்கு அவரது பெயர் வந்திருக்கலாம் என்னும் அடிப்படையில் ஆராயும் போது, அறிமுகமாக்கப்படுபவர் இடும்பை இளையநாயக்கன். எனவே, ஏதேனும் ஒரு வகையில் இடும்பன் குளத்திற்குத் தொடர்புடையவர் என்பதைத்தவிர வேறு தகவல் எதுவும் கிடைக்கப் பெற வில்லை. நாமக்கல் மாவட்ட, பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு அட்டவணை எண். 19 இல் உள்ள படி இடும்பன் குளம் ஏரியின் மொத்தக் கொள்ளவு 23. 94 மி. கன அடி ஆகும். மொத்தப் பாசனப் பரப்பு 58. 16 ஹெக்டேர் ஆகும்.

V

இளையா நாயக்கன் 1622-1655

இராசா :

கி.பி. 1622 இல் தனது இளம் வயதிலேயே அதிகாரத்திற்கு வந்த இளையாநாயக்கன் சுமார் 33 ஆண்டுகள் அரையநாட்டின் ஆட்சியாளனாக இருந்துள்ளான். இவனை ஆறை அல்லாள இளையான் என்றும், **இளையநாயக்கன்** என்றும், ஆறை

இளையாநாயக்கன் என்றும், திருமலை இளையா நாயக்கன் என்றும் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் செப்பேடும் கூறுகின்றன.. வடகரையாற்றூரில் பிறந்ததினால் ஆறை என்ற பெயர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் அல்லாளன் என்பது குடும்பப் பெயராகும். திருமலை என்று சொல்லக்கூடிய திருச்செங்கோட்டு மலையில் திருப்பணிகள் செய்ததினால் திருமலை என்ற பெயர் சேர்த்து வழங்கப்பட்டிருக்க வேண்டும். நன்செய் இடையாற்றில் உள்ள "இராசா கோயில்" "இராசா" என்னும் ஆட்சிக்குரியவனாக இளையநாயக்கனைச் சுட்டிக் காட்டுகிறது. அதேபோல, "இராசா வாய்க்கால்" என்பதும் "இராசா" என்னும் ஆட்சிக்குரியவனாகவே இளையநாயக்கனைச் சுட்டிக் காட்டுகிறது. திருமணிமுத்தாற்றின் மேற்கு ஆற்றுப் படுகையின் மீது பரமத்திக் கோட்டை அமையப்பெற்றுள்ளதால், பாண்டிய, சோழ மன்னர்களைப் போன்று பரமத்தி வேட்டுவ ராசாக்களின் வழி வந்த இளையநாயக்கனையும் "**திருமணி முத்து நாடன்**" என்று இந்நூலின் வாயிலாகப் புகழ்ந்துரைக்கப்படுகின்றது.

இளையநாயக்கனின் தாயின் பெயர் இடும்பச்சி, தந்தையின் பெயர் இடும்பை இளையான் என, அவரது வழித்தோன்றல் இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளைய நாயக்கர் அவர்கள் கூறு கிறார். இளையநாயக்கனின் மனைவியின் பெயர் இராசாயி எனச் சேலம் களஞ்சியம் (பக்கம் 239) கூறுகின்றது. கோட்டையில் ஆட்சி புரிந்த இளையநாயக்கனை இராசா என்று அன்போடு அழைத்த மக்கள், அதே போல இவரது இல்லத்தரசியாரை "இராசாயி" என்று அழைத்திருக்க வேண்டும் எனக் கருதுவதற்கும் இடமிருக் கிறது. வேடராசா என்னும் பழம் பெயரே "வேட்டுவ ராசா" என்றும், பின்னர் "ராசா" என்பதே சுருக்கமான பெயராகக் கொண்டிருக்க வேண்டும் எனப் பொருள் கொள்ளலாம். இவர்களது குலதெய்வம் பரமத்திக் கோட்டையில் உள்ள கோட்டையண்ணன் ஆகும்.

இளையநாயக்கன், இராசாயி இவர்களுக்கு இடும்பை இளையநாயக்கர் என்ற ஒரு மகனும் மற்றும் இரண்டு மகள்களும் இருந்தனர் என்பது செவி வழிச் செய்தியாக இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களின் வாயிலாக அறிய முடிகின்றது

இளையநாயக்கன் அரையநாட்டை ஆட்சி புரிந்ததினால் "இராசா".என்னும் பெயரால் அழைக்கப்பட்டான். நன்செய்

இடையாற்றுக் கோயில், இவரது பெயராலேயே "இராசா கோயில்" என்றும் இவரது மனைவி "இராசாயி" என்ற பெயரால் "இராசாயி அம்மன் கோயில்" என்றும், இக்கோயிலின் குடிப்பாட்டு மக்களால் இன்றும் அன்புடன் அழைக்கப் படுகிறது. அதே போல, இளையநாயக்கனால் வெட்டப்பட்ட வாய்க்காலுக்கு "இராசா வாய்க்கால்" என்ற பெயர் இன்றும் நிலை கொண்டிருக்கின்றது. .

கொங்கு நாட்டில் உள்ள வேட்டுவ ஆட்சியாளர்களில் "அரையநாட்டு ஆட்சியாளர்கள்" என்ற முறையில், வேட்டுவர்கள் "இராசா" எனப் பிறமக்களால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தொல்காசு அச்சடித்து நாணயமுறையை உருவாக்கியவர்கள் இளையநாயக்கரது முன்னோர்கள் என்ற படிக்கு "இராசா" என்னும் பெயர் பொருத்தமாகவே படுகின்றது நிலை பெற்ற ஆட்சியாளர்களே காசுகளை வெளியிட்டுள்ளனர். இதனால் இளையநாயக்கன் பரம்பரையினர் சில நூற்றாண்டுகள் இப்பகுதியில் நிலையான ஆட்சி புரிந்துள்ளனர் என அறியலாம்.

பட்டக்காரர்கள்

கலியுகாதி வருடம் 4730 வது பவ வருடம் (கி.பி 1628) பங்குனி மாதம் அசுவதி நட்சத்திரமும் அமர திதி சித்தியோகமும் பெற்ற சுப தினத்தில் இளையநாயக்கன் பரமத்திக் கோட்டையில் ஆட்சி புரிந்த போது, பண்டாரங்களுக்கு வழங்கப்பட்ட ஓலைச் சுவடியில் இருந்து எடுத்து எழுதப்பட்ட தாமிரப் பட்டயம் வாயிலாகச் செங்கண்டியாண்டி வகையறாவிற்குப் பட்டக்காரர் என்ற பட்டத்தை இளையநாயக்கன் வழங்கினான் என அறிய முடிகின்றது.

மேல்கரை தலையநாட்டின் (திண்டுக்கல் மாவட்டம்), பொருளூர் (ஒட்டன் சத்திரம் வட்டம், தேவத்தூர் குறு வட்டத்தில் பொருளூர் அமைந்துள்ளது) என்னும் ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பட்டக்காரர்கள் நல்ல பெரியாயிக் கவுண்டர் வம்சத்தவர்கள் ஆவர். இவர் தானம், தருமம் செய்வதிலே வள்ளலாக இருந்த படியால் இவருக்கு வள்ளல் பெரியாயிக் கவுண்டர் என்ற பட்டப் பெயர் உண்டு.

இவ்வமிசம் கி.பி. 1379 முதல் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளது. இவ்வாறு 13 தலைமுறைகள் பட்டக்காரர்களாக இருந்து ஆட்சி புரிந்துள்ளனர். இதில் 2 வது பட்டக்காரர் நல்ல பெரியாயிக் கவுண்டர் காலத்தில் மருளப்பட்டிக் கோட்டை கட்டப் பட்டது. இந்தத் தலைமுறையினருக்கும், தென்னிலை

கரூரில் இருந்து மேற்கே 30 வது கி.மீட்டரில் உள்ளது) பட்டக்காரர் (இவர்களுள் பகவதிக் கவுண்டர் என்பவர் ஈரோட்டில் புகழ் மிக்கவர், ஜவுளித் தொழில் செய்து வந்தவர்) தலைமுறையினருக்கும் கபிலர் மலையில் "இளையநாயக்கன்" முன்னோர்களால் பட்டக்காரர் எனப் பட்டம் சூட்டப்படுகின்றது என்ற செய்தியினைக் கரூர் வரலாற்றுப் பேரவைத் தலைவர் "வரலாற்று வித்தகர்" திரு. ம. இராசசேகர தங்கமணி அவர்கள் எழுதிய நூற் குறிப்புகளில் இருந்து அறிய முடிகின்றது.

இதே போன்று, ஆறுநாட்டான் மலை முருகன் கோயிலில் முழு உரிமை, முதல் மரியாதை பெறும் சாந்தப்படை கோத்திரம் வேட்டுவராகிய புகளூர்ப் பட்டக்காரர் செம்புலிங்க கவுண்டர் வம்சம் வழிவந்த முன்னோர்களுக்கும், இன்னும் பட்டக்காரர்கள் பலருக்கும் பட்டக்காரர் பட்டம் வழங்கும் தலைவனாக அரையநாட்டு ஆட்சியாளர்கள் இருந்து இருக்க வேண்டும். சாந்தப் படை வேட்டுவர் என்பவர்கள் பழமையான படையிலிருந்த வேட்டுவர் என்று தெரிகிறது. வேட்டுவ ராசாக்கள் மரபில் சாந்தப் படை வேட்டுவர் உயர்வானவர்களாகக் கருதப் படுகின்றனர். இது குறித்து மேலும் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஆறுநாட்டான் மலை பாலசுப்ரமண்ய கோயிலின் பரம்பரைக் குருக்கள், சுப்ரமணிய குருக்களின் மகன் துரைராஜ் குருக்கள் அவர்கள் கூறுகையில் "செம்புலிங்க பட்டக்காரர்கள் தான் இக்கோயிலில் முழு உரிமை, முதல் மரியாதை பெற்று வந்தனர் சுமார் 100 வருடத்திற்கு முன்னதாக ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்கள் அரையநட்டில் உள்ள இரும்புப்பாலம் கிராமத்திற்குச் சென்று விட்டனர். தற்போது, வேலாயுதம்பாளையம் சுப்பண்ண கவுண்டர் மகன் முத்துச்சாமி அவர்கள் பட்டக்காரராக இருந்து ஆறுநாட்டான் மலை முருகன் கோயிலில் முழு உரிமை, முதல் மரியாதை பெற்று வருகின்றார்" என்று கூறுகிறார். செம்புலிங்கப் பட்டக்காரர்கள் வாரிசு கண்டியண்ணக் கவுண்டர் மகன் துரைசாமிக் கவுண்டர் அவர்கள் இரும்புப் பாலத்தில் குடியிருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இளையநாயகன் "நாயக்கர்" எனப் பட்டம் பெற்றது ?

ஒருசமயம் திருமலைநாயக்கர் 64 பட்டக்காரர்களையும் பாண்டிய நாட்டிற்கு அழைத்திருந்தார். அதன்படி இருக்கூர்ப் பட்டக்காரர் இளையநாயகன் சென்றிருந்தான்.

திருமலை நாயக்கருக்குச் சொந்தமான குதிரை இலாயத்தில் முரட்டுக் குதிரை ஒன்று இருந்தது. பலமுறை போட்டிகள் வைத்தும் எவராலும் அக்குதிரையை அடக்க முடிய வில்லை. அடங்காத முரட்டுக் குதிரை என்பதற்காக அதற்குப் போடப் பட்டிருந்த தடைகளை அகற்றி விட்டுத் திருமலை நாயக்கரின் உத்தரவுப்படி, அக்குதிரை பட்டக்காரர்களின் பார்வைக்காக நிறுத்தப்பட்டது.

திருமலை நாயக்கர், 64 பட்டக்காரர்களையும் பார்த்து இக்குதி ரையை அடக்கும் வீரனுக்குத் தனது இராஜ்யத்தில் பாதியைக் கொடுத்து, இன்னும் வேண்டுவதையும் தருவதாகக் கூறினார். குதிரையின் அருகே செல்ல முயன்ற பட்டக்காரர்கள், அதன் உயரத்தையும், முரட்டு உருவத்தையும், பற்களை நெறித்துக் கொண்டு, முன்னங்கால்களை உயரத்தில் தூக்கி எதிரில் நிற்பவர்களைக் கனைத்துக்கொண்டே தாக்க வருவதையும், திடீர், திடீரெனப் பின்னங்கால்களால் பின்னால் வருபவர்களை உதைக்க உதறிக் கொள்வதையும் கண்ணுற்றவர்கள், அக்குதிரையின் பயங்கரமான வேகத்திற்கு முன்னால் நிற்க அஞ்சித் தூரத்தில் அனைவரும் ஒதுங்கிய போது, இருக்கூர்ப் பட்டக்காரர் "இளைய நாயகன்" இலாவகமாகக் குதிரையின் மீதேறிக் கொண்டார். ஆனால் குதிரை முரட்டுத்தனமாக உதறிக்கொண்டே பாய்ந் தோடியது. இதனைக் கண்ணுற்ற அனைவரும் இனி "இளைய நாயகன்" திரும்ப மாட்டான் என முடிவு செய்து கொண்டனர். ஆனால், முரட்டுக் குதிரையை முரட்டுத்தனமாகவே கையாண்டு, பின்னர் அதன் போக்கிலேயே போக விட்டு, தனது கட்டுப் பாட்டிற்குக் கொண்டு வந்த இளையநாயகன், அதற்காக மானா மதுரை வரை சென்று, மானா மதுரையில் உள்ள திருமலை நாயக் கரின் சகோதரி முறையுள்ள ஒருவரின் வீட்டிற்குச் சென்று, நடந்த விவரங்களைக் கூறித் தான் வந்ததற்கு அடையாளமாகச் சொம்பு ஒன்றைக் கேட்டு வாங்கித் தனது துண்டில் முடிந்து கொண்டு விரைவாக மதுரை திரும்பினான்.

எவராலும் அடக்க முடியாத அடங்காக் குதிரையைத் தோள் வலிமையாலும், அறிவு நுட்பத்தாலும் அடக்கி, லாவகமாகத் தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்த இளைய நாயகன், அந்தக் குதிரையின் மீதமர்ந்து பவனி வருவதைக்கண்ட திருமலை நாயக்கரும், பட்டக்காரர்களும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

இளையநாயகன் மானாமதுரை வரை சென்று திரும்பியதாகக் கூறினான். அதற்குள் மானா மதுரை சென்று திரும்ப இயலாது

என்ற படியால், இதனைப் பட்டக்காரர்கள் நம்ப மறுத்தனர். உடனே, தனது துண்டில் இறுக முடிந்து வைத்திருந்த திருமலை நாயக்கரின் சகோதரிக்குச் சொந்தமான சொம்பை எடுத்து அடையாளமாகக் காட்டினான் இளையநாயகன். சொம்பை வாங்கிப் பார்த்த திருமலைநாயக்கர் உறுதிப் படுத்திக் கொண்டு, "இந்தக் குதிரையில் மானாமதுரை வரை சென்று வந்து விட்டாயா!" என்று ஆச்சரியத்துடன் கூறி, இளையநாயகனை வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார்.

தனது வலிமை மிக்க குதிரையை அடக்கிய இளையநாயகனிடம், தனது குதிரையை அடக்கிய வீரத்திற்குப் பரிசாக என்ன வேண்டும் என்று, முறைப்படி கேட்டார் திருமலை நாயக்கர்.. சொத்து சுகம் எதுவும் வேண்டாம், வம்சாவளியினர் விளங்கும்படி, தன்னுடைய வம்சாவளியினருக்கு "நாயக்கர்" என்னும் பட்டப் பெயர் வேண்டும் என்று கேட்டான் இளையநாயகன். உண்மையில் தான் ஒரு வீரனை மட்டும் அல்ல, சிறந்த நண்பரையும் கண்டு விட்டதாக மகிழ்ச்சியுற்றார் மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கர்.

பெயர் எதை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், பெயரின் இறுதியில் நாயக்கர் என்ற பட்டப் பெயரைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி வணக்கத்துக்குரிய "நாயக்கர்" என்ற பட்டப் பெயரை வழங்கினார் திருமலை நாயக்கர்.

அன்று முதல் இளையநாயகன் "இளையநாயக்கர்" என்றழைக்கப் பட்டான். "நாயக்கர்" என்ற பட்டத்துடன் "இளையநாயக்கர்" என்று இளையநாயகனும், அவனது வம்சாவளியினர் அவர்களது பெயர்களுடன் நாயக்கர் என்ற பட்டப் பெயரையும் சேர்த்து இன்று வரையிலும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த வகையில் தான், வேட்டுவ இனத்தைச் சேர்ந்த "தங்கவேல்" ஆகிய இளையநாயக்கனின் வாரிசு "இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர்" என்றழைக்கப் பட்டு வருகின்றார்.

நாயக்கர் பட்டம் பெற்றது, ஓர் ஆய்வு

சேலம் மாவட்டம் , தலைவாசல் அருகே உள்ள கி.பி. 1505 ஆம் ஆண்டின், ஆறகளூர் கல்வெட்டு இளையநாயக்கனின் முன்னோர் பற்றிக் குறிப்பிடுகிறது. விசயநகரத்து ஆட்சியாளன் நரச நாயக்கர் என்பார் கிருஷ்ணதேவராயனின் தந்தையாவார். இக்கல்வெட்டில் சுட்டிக்காட்டப்படும் இளையநாயக்கனின் முன்னோர்களில் ஒருவரான, "முளை வேட்டுவரி அல்லாள நாத

இளையர் நாயக்கர்" என்பவர் ஆவார். இவர் "நாயக்கர்" என்ற பெயரில் காணப்படுகிறார் என்றால் , மதுரை திருமலை நாயக்கர் ஆட்சிக்கும் முற்பட்ட விசயநகரப் பேரரசின் போதே நாயக்கர் என இளையநாயக்கனின் முன்னோர்கள் அழைக்கப் பட்டுள்ளனர் என்பது வெளிப்படையாக அறிய முடிகிறது.

கி.பி. 1584 இல் வெளியிடப்பட்ட அல்லாள இளையான் செப்பேடு விசுவநாதநாயக்கர் மகன் வீரப்பநாயக்கரய்யனைக் குறிப்பிடுவதோடு, இளையநாயக்கனின் முன்னோரை "முளைக் கோத்திரத்தில் அல்லாழி இளையான் னாயக்கர்" என்று குறிப்பிடு கின்றது. மதுரை திருமலைநாயக்கர் அதிகாரத்திற்கு வந்தது கி.பி 1623 ஆகும்.

வேடர்கள் பொதுவாகக் காலாட்படையில் இடம் பெற்ற "இளையர்" என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. "நாயக்" என்பது படையில் ஒரு அந்தஸ்தைக் குறிக்கும் அதிகாரத்திற்குரிய சொல்லாக இருக்கிறது. படைத்தலைவர் எனவும் பொருள் கொள்ளலாம். கி.பி. 1505 ஆம் ஆண்டின், ஆறகளூர் கல்வெட்டு "முளை வேட்டுவரி அல்லாள நாத இளையர் நாயக்கர்" என இளையநாயக்கனின் முன்னோர் ஒருவரைக் குறிப்பதில் இருந்து முளை வேட்டுவர் குலத்தில் உதித்த அல்லாள நாதரென்பவர் **"வேடர் தலைவன்"** என்ற முன்னோர்களைக் குறிக்கும் பழமையான வழி வந்த உயரிய பொருள் கொண்ட சொல்லாக (இளையர் நாயக்கர்) வும் இருக்கலாம்.

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் கி.பி. 1510 இல் அமைத்த கல்வெட்டு (புதுக் 726) அகம்படிய வேளாள மரபிலே வந்த வழத்தூர் அரசு தீராதவினை தீர்த்தான் பல்லவராயர், தன்னை வீரநரசிங்கராய நாயக்கப் பல்லவரையன் என்று பெருமைப்படக் கூறிக் கொள்கின்றான். அரசு என்று உரிமை பாராட்டிய அகம்படிய வேளாளர்கள் அறந்தாங்கி, பெருங் கோளியூர், வழுத்தூர் "அரசு" என்று தம்மைக் கூறியுள்ளனர்.

விசயநகர ஆட்சியாளர் மரபிலே வந்த வீரநரசிங்கராய நாயக்கனின் கல்வெட்டு கி.பி. 1517 இல் திருவரங்குளத்தில் (புதுக்கோட்டை) அமைந்ததாகும். இம்மன்னர் சுவாமி வீரநரசிங் கராய நாயக்கன் என்று தன்னை அழைத்துக் கொள்கின்றான். இவனது பணியாளன் கமலாயபதி எனும் திருவாரூர் ஊரினன் தன்னை மொண்ணையனான வீரநரசிங்கராய /நாயக்க விழுப்பரையன் என்று பெருமைப் படுகின்றான். இவன் வேளாளர் குலத்தவன். தொல்லியல் அறிஞர் திரு. நெல்லை நெடுமாறன்

விழுப்பரையன் என்ற திருநாமத்தைச் சூடியவர்கள் வேளாளர் என்று பேரிளமையார் என்ற கட்டுரையில் இதனை உறுதிப் படுத்திக் குறிப்பிட்டுள்ளார். வீரநரசிங்கராய நாயக்கன் பெயரை வெள்ளாளரும் சூடினர் என்பது ஆட்சி பெற்று அவனின் உயர் பணி மகனான விழுப்பரையன் சூடி இருந்தான் என்பதாம்.

திருவரங்குளம் கல்வெட்டில் "வல்லநாடான் என்ற சோமகுல வீரவான் இராசகரத்துக்கு இறுத்துவரும் 20 பொன்னை திருத்தேர் எழுச்சிக்கும், திருநாள் செலவுக்கும் பயன் படுத்த ஆணையிட்டும் இதனை இராஜ மானியமாகவும்" வழங்கியுள்ளனர். (A R E 319 - 1914). இக்கல்வெட்டின்படி ஆட்சியாளரின் உயர்பணி அலுவலன் தன்னை நாயக்கன் என்று அழைத்தது போன்று கி.பி 1505 இல் அல்லாள நாத இளையநாயகன் தன்னை நாயக்கன் என்று அழைத்துக் கொண்ட படியால் அவனும், அவனது மரபினரும் நாயக்கரின் அன்பைப் பெற்றனர் என்று தோன்றுகின்றது.

நாயக்கர் என்ற திருநாமம் பல சமூகத்தவர்க்கும் இருப்பது ஆய்வுக்குரியது. "உத்திதிரக்கில் அயோத்தி மாநகரில் நாயக்கர் பட்டம் பெற்றவரான" என்று கருமாபுரம் செப்பேடு சான்றோர் குலத்தவரைக் கூறுகிறது. இவரின் நாயக்கர் பட்டம் முற்பட்டது. இவரைப் போன்று படையாட்சிகளான வன்னியர்களும் நாயக்கர் பட்டம் உடையவரே, குறிப்பாக இளையநாயக்கர் மரபினர் கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலேயே நாயக்கர் பட்டம் உடையவர் என்பதால் விசயநகர ஆட்சியாளர் பட்டம் நாயக்கர் என்று தெரிய வருகின்றது.

இதற்கு முன்னதாக இதனை ஆய்வு செய்த இராசண்ணன் அவர்கள் (சேலம் களஞ்சியம் பக்கம் 93 இல்) இளையநாயக்கன், மதுரை மன்னர் திருமலைநாயக்கரின் குதிரை இலாயத்தில் இருந்த ஒரு முரட்டுக் குதிரையை அடக்கிப் பட்டம் பெற்றான் என்று கூறுகிறார் இவை இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களின் வாயிலாகக் கிடைத்த செவிவழிச் செய்தியின் அடிப்படையில் இவ்வாறு கூறுவதாகத் தோன்றுகின்றது எனவே, கொடிய காட்டு மிருகங்களையும் வேட்டையாடி, அவைகளை அடக்கிக் கட்டுப்பட்டிற்குக் கொண்டு வந்த, வேடர்களின் வழி வந்த வேட்டுவக் குடியின், வலிமை வாய்ந்த இளையநாயக்கன், மதுரை **திருமலைநாயக்கரின் குதிரையை அடக்கி இருக்கலாம்.** அதனால் நாயக்கர் பட்டம் பெறப்பட்டது என்பது பிழையுடையதாக அறிய முடிகிறது.

கொள்ளையர்களை நாசம் செய்தது

மற்றொரு சமயம் 64 பட்டக்காரர்களும் மதுரையில் உள்ள திருமலைநாயக்கரின் சபையில் கூடியிருந்தனர். சபையில், திருமலை நாயக்கருக்கு அருகில் உள்ள சிம்மாசனத்தில் இளையநாயக்கர் வீற்றிருந்தார். மீதமுள்ள 63 பட்டக்காரர்களும், பட்டக்காரர் களுக்கென்றே ஒதுக்கப்பட்ட இடத்தில் வரிசையாக அமர்ந் திருந்தனர். தங்களை விட இளையநாயக்கருக்கு அதிக மரியாதை தரப்பட்டுள்ளதைக் கண்டு சிலர் கேள்வி எழுப்பினர். பட்டக்காரர்கள் அமர்ந்துள்ள வரிசையில்தான் இளையநாயக்கர் அமரவேண்டும் என்று கூறினர்.

மதுரையில் இருந்து தெற்கே 30 மைல் தொலைவுக்குச் சென்று வருபவர்களுக்குக் கௌரவம் அளிக்கப்படும் என்று கூறினார் திருமலை நாயக்கர்.

பட்டக்காரர்களும், மற்றவர்களும் "என்னாலாகாது உன்னாலும் ஆகாது, பக்கத்தில் அமர்ந்திருப்பவரையே அனுப்பச் சொல்லுங்க" என்று முடிவெடுத்துத் திருமலை நாயக்கரிடம் கூறினர். இளையநாயக்கர் உடனே தனது குதிரையில் புறப்பட்டுச் சென்றார். அந்த வழியில் வழிப்பறி செய்யும் கள்ளர்கள் மறைந்திருந்து திடீரெனத் தாக்குவதாகவும், அவர்களைப் பிடிக்கப் படையின ரோடு சென்றால் மலை மீதேறி அப்புறம் ஓடித் தப்பித்து விடுவதாகவும், தனியாகச் செல்பவர்கள், திரும்பி வருவது நடவாத காரியம் என்றும் மகிழ்ச்சி கொண்டனர் பலர்.

இளையநாயக்கர் தனது குதிரையில் புறப்பட்டு மதுரைக்குத் தெற்கே சென்றார். வழியில் திடீரெனத் தாக்க வரும் கள்ளர்களைத் தனது வாள் வீச்சால் நாசம் செய்து கொண்டே 30 மைல் தொலை வில் உள்ள தம்பட்டன் பாறை வரை சென்று, தம்பட்டன் பாறை என்னும் இடத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டார். அப்பகுதியில் இருந்த மக்கள் இளையநாயக்கரிடம் கேட்டு விபரம் அறிந்து, இதற்கு மேல் செல்ல வேண்டாம் என்று கூறித் தடுத்தனர். பின்னர், இளையநாயக்கர் வந்த வழியிலேயே திரும்பி வரும் போது மீண்டும் எதிர்ப்பட்டு வழிப்பறி செய்த கள்ளர்களைக் கொன்று குவித்துத் திருமலைநாயக்கரின் சபைக்குத் திரும்பினார்.

63 பட்டயக்காரர்களும் வாயடைத்து நின்றனர்.

(மேற்கண்ட 1. திருமலைநாயக்கரின் குதிரையை அடக்கிப் பட்டம் பெற்றது 2. கொள்ளையர்களை நாசம் செய்தது ஆகிய

இவ்விரு செய்திகளும் 03. 01. 2008 இல் பரமத்தி வேலூர் அரிமா சங்க வளாகத்தில் நடைபெற்ற விழாவின் போது, இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்கள் பேசியதன் (படம்) தொகுப்பாகும். அச்செய்தியை ஒழுங்கு படுத்தி இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களது ஒப்புதலுடன் இந்நூலின் வாயிலாக வெளியிடப்படுகின்றது)

தம்பட்டன் பாறை

இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களிடம் தம்பட்டன் பாறை விவரம் அறியும் பொருட்டு, அங்குச் செல்ல வழி விபரம் கேட்ட போது, தான் அந்த இடத்திற்குச் சென்றதில்லை எனவும், தனது முன்னோர்கள் கூறிய செய்தியைத் தான் ஞாபகம் கூர்ந்து, தான் கூறியதாகவும் தகவல் அளித்தார்.

இதன் உண்மை விவரம் அறியும் பொருட்டு தம்பட்டன் பாறை தேடி, மதுரைக்குத் தெற்கே அலைந்து திரிந்த போது, மதுரையி லிருந்து சாப்டூர் செல்லும் வழியில் சுமார் நாற்பத்தைந்து கி.மீட்டருக்கு அப்பால் (சாப்டூருக்கு முன்னதாக) உள்ள முனீஸ்வரன் கோயில் பிரிவு ரோடில் இருந்து, இரண்டு கி. மீட்டர் தொலைவில் உள்ள, தம்பட்டர் கல் எனப் பெயர் மருவிய தம்பட்டன் பாறையையும், ஊரையும், முனீஸ்வரன் கோயிலையும் திருச்செங்கோடு வட்டம், குட்டி மேய்க்கம் பட்டி, கந்தசாமிக் கவுண்டர் மகன். திரு. கணேசன் அவர்கள் நம்மை அழைத்துச் சென்று காண்பித்தார். .

தம்பட்டன் பாறையில் திரு. கணேசன் அவர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது , இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்கள் கூறியபடி தகவல் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், கள்ளர்களை ஒடுக்க இளையநாயக்கன் திருமலைநாயக்கருக்கு உதவியிருப்பது திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 114 இன் (பக்கம் 27) வாயிலாக அறிய முடிகிறது.

VI

இளையநாயக்கன் அமைத்த இராசா வாய்க்கால்

இராசா வாய்க்கால்

இராசா வாய்க்கால் வெட்டுவதற்கு முன்னதாக இதனைச் சுற்றியுள்ள பகுதிகள் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்திருக்க வேண்டும். காட்டில் உள்ள மரங்கள் வெட்டப்பட்டு அவை

மக்களின் தேவைக்கும், தடுப்பணை கட்டுவதற்கும் பயன் படுத்தப் பட்டிருக்க வேண்டும். எனவே, காட்டை அழித்து, மேடு 0பள்ளங்களைப் பாங்காக நிரவி, பாத்தி கட்டி, அதில் காவிரி நீர் பாய்ச்சி விவசாயத்தைப் பெருக்கி மக்களுக்குப் பசிப்பிணியைப் போக்கினான் இளையநாயக்கன் என ராசா வாய்க்கால் வெட்டிய செய்தியில் பொருள் அறியக் கிடக்கிறது.

கி.பி 1623 இல் பொங்கி வரும் காவிரியை இன்றைய, வடகரையாற்றூர் மேல்முக கிராமம், ஜேடர்பாளையத்தில் கல், மணல் மூட்டைகள், மூங்கில் மற்றும் வேறு பல மரங்களினால் ஆன தடுப்பணை ஒன்று கட்டி நீரைத் தடுத்துக் காவிரி ஆற்றின் வடகரை ஓரமாக 24 அடி அகலம் உள்ள வாய்க்காலை இளையநாயக்கன் அமைத்தான். அது பாண்டமங்கலம், பொத்தனூார் வேலூார் வழியாக நன்செய் இடையாறு வரை ஓடிக் கூடுதுறை என்னும் இடத்தில் திருமணிமுத்தாற்றில் கலக்கும் விதமாகக் காவிரி ஆற்றில் இருந்து 33. 60 கி.மீ தூரத்திற்கு இந்த வாய்க்கால் செல்கிறது. அரையநாட்டு இராசாவால் வெட்டப் பட்டதினால் இது "இராசா வாய்க்கால்" எனப் புகழ் பெற்றது.

கால்வாய்களின் சிறப்பு

இது பாண்டமங்கலம் அருகில் கொமாரபாளையம் வாய்க்கால் என்ற பெயரில், கிளை வாய்க்காலாகப் பிரிந்து 17. 40 கி. மீட்டர் தூரத்திற்குச் சென்று மணப்பள்ளியில் முடிகின்றது.

இடையாற்றில் இருந்து பொய்யேரி வாய்க்கால் என்ற பெயரில், மேலும் ஒரு கிளை வாய்க்காலாக இராசா வாய்க்காலில் இருந்து பிரிந்து, சுமார் 5 கி. மீட்டர் தூரத்திற்குச் சென்று திருமணி முத்தாற்றில் கலக்கின்றது.

இராசா வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், திருமணிமுத்தாறு, இவைகள் அனைத்தும் கூடுதுறை என்னும் இடத்தில் காவிரி ஆற்றில் கலக்கின்றன.

இராசா வாய்க்கால், கொமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால் ஆகிய வாய்க்கால்கள் பாசனங்களுக்காகப் பயன் படுகின்றன. இளையநாயக்கன்ால் அமைக்கப்பட்ட வடகரை யாற்றூர் மேல்முக கிராமம், ஜேடர்பாளையம் காவிரியாற்றில் இருந்த தடுப்பணை, இந்த வாய்க்காலுக்கு நீரை ஒழுங்குபடுத்தும் தடுப்பணையாக, 1952 இல் தமிழக அரசால் சிறந்த முறையில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

(1). மேட்டூரில் இருந்து கல்லணை வரை செல்லக்கூடிய காவிரி ஆற்றில் முதல் வாய்க்கால் என்ற பெருமையை இராசா வாய்க்கால் பெறுகிறது.

(2). தமிழ் நாட்டிற்குள் செல்லும் காவிரி ஆற்றில் இருந்து, முதன் முதலாக வெட்டப்பட்ட வாய்க்கால் என்ற பெருமை பெறுவது 17 ஆம் நூற்றாண்டு இராசா வாய்க்காலாகும்.

(3) மேட்டூரில் இருந்து கல்லணை வரையிலும் 17 பாசன வசதி பெறும் வாய்க்கால்கள் அமையப் பெற்றுள்ளன. இவைகளுள் தடுப்பணை உள்ள வாய்க்கால் இராசா வாய்க்கால் மட்டுமே ஆகும்.

(4) காவிரியாற்றில் இருந்து வருடத்தில் 365 நாட்களும் பாசன வசதிக்குப் பயன்படும் வாய்க்கால், நேரடியாக 5016 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வாய்க்கால், மூன்று போகங்களும் பயிர் செய்யப் பயன்படும் வாய்க்கால் ஆகிய பெருமைகளுக்குரியது "இராசா வாய்க்கால்" ஆகும்

(5) நெல், கரும்பு, வாழை, மஞ்சள், வெற்றிலை, தென்னை, கோரைப்புல் போன்ற பணப்பயிர்கள் பயிரிடப் பெரிதும் உதவுகிறது..

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை புகழும் இராசா வாய்க்கால்

ஆறை இளையா நாயக்கன்

"மூவருக்கு மகத்தியமா முனிவருக்கு மரசிருந்த
முன்னை யோர்க்குந்,
தேவருக்குந் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறைகொண் டாயே!
பூவிருக்கு முரமாயன் கடலடைத்தா னவன்வேடம்
புனைந்த வாறோ,
யாவருக்கு மிளையானே!
யல்லாள திருமலையா யீகை யோனே!"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 266:

செந்தாமரை மலர் மேல் வீற்றிருக்கின்ற பொன் மகளாகிய இலட்சுமி தேவியை, தன் மார்பு மேல் வைத்திருக்கக் கூடிய திருமால், திருப்பாற்கடலில் ஆதிசேசனின் மீது பள்ளி கொண்டிருக் கின்றான். அவன் நீர்வளம், நிலவளம், செல்வம் இவைகளை யெல்லாம் வழங்கி மக்களுக்கு அருள்புரிகின்றான்.

இளையநாயக்கனாகிய நீ, முழு முதல் தெய்வங்களான பிரம்மன், விஷ்ணு, சிவபெருமான் ஆகிய மூவருக்கும் மற்றும் அகத்திய மாமுனிவருக்கும், இதற்கு முன்பு அரையநாட்டை அரசு புரிந்த அரசர்களுக்கும், தேவர்களுக்கும் தன் போக்கிலிருந்து திரும்பாத காவிரியாற்றை, வாய்க்கால் ஒன்றை வெட்டித் திருப்பி, கொங்குப்

பகுதியில் ஏறி ஓடுமாறு செய்து, விவசாயத்திற்குப் பயன் படுமாறு செய்தாய். இது ,

திருமாலின் வேடத்தை இளையநாயக்கன் புனைந்து கொண்டு நீர்வளம், நிலவளம், செல்வம் இவைகளையெல்லாம் மக்களுக்கு வாரி வழங்குவதைப்போல உள்ளது.

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை (செய்யுள் 266) இளையநாயக்கனைத் திருமாலாக உருவகப்படுத்தி, அவனது புகழ் பாடுவது மிகவும் சிறப்பு அம்சமாகும்.

கவிஞர் கார்மேகம் புகழும் ராசா வாய்க்கால்

"வடமுக நின்று வரு காவிரியின்
வளத்தை யென்றும்
திடமுறு கொங்கிலும் பாசன மாகச்
செலப் பிரித்த
அடல் கொள் அல்லாளன் இளையான்
பெருக்கம் அமைந்து வளர்
வடகரை யாற்றூர் திகழ்வதுவுங்
கொங்கு மண்டலமே "

கொங்குமண்டல சதகம், கவிஞர். கார்மேகம், (பக்கம் 96, செய்யுள். 79).

வலிமையாக இருக்கக் கூடிய கொங்கு நாட்டிற்கு, வடதிசையில் இருந்து ஓடி வரும் காவிரி பாய்வதினால் கொங்குநாடு வளம் பெறுகின்றது. கொங்கு நாட்டில் வாய்க்கால் ஒன்றினை வெட்டி, விவசாயத்திற்குக் காவிரி நீரைப் பயன்படுமாறு செய்த அல்லாள இளையான், கொங்கு மண்டலத்திலேயே வளர்ச்சி பெறும் ஊராக வடகரையாற்றைத் திகழச் செய்கிறான் எனக் கார்மேகக் கவிஞர் இளையநாயக்கனையும், இராசா வாய்க்காலையும் புகழ்ந்து பாடுகின்றார்.

இராசா வாய்க்காலின் வடகரையாற்றூர் மேல்முக கிராமம் ஜேடர்பாளையத்தில் உள்ள தடுப்பணை, காவிரி ஆற்றில் இருந்து வாய்க்கால் செல்லும் தூரம், கொமாரபாளையம் வாய்க்கால், பொய்யேரி வாய்க்கால் ஆகிய இராஜா வாய்க்காலின் கிளைகள், அதன் தூரம், இராசா வாய்க்காலின் சிறப்பு அம்சங்கள் இவைகள் அனைத்தையும் ஆய்வு செய்து, நாமக்கல் மாவட்டப் பொதுப் பணித்துறைச் செயற்பொறியாளர், திரு. த. பைந்தமிழ்ச் செல்வன் அவர்களது ஒப்புதல் பெற்று, இந்நூலின் வாயிலாக மேற்கண்ட ஆய்வு அறிக்கை வெளியிடப் படுகின்றது.

இவ்வாறு, சிறப்பு அம்சம் பொருந்திய இராசா வாய்க்காலில் இருந்து, நேரடியாகவும், பம்புசெட் மூலமாகவும், நீரேற்றுப் பாசனம்

மூலமாகவும் மொத்தம் 16,170 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி இன்றும் பெறுவது முக்கிய அம்சமாகும்.

இராசா வாய்க்காலில் வன்னியரின் பங்கு

"இராஜா வர்ய்க்காலை வெட்டுவதற்கான தொழிலாளர்கள், வேறு பகுதியில் இருந்து குடி பெயர்ந்து நஞ்சை இடையாற்றில் குடியேறிய வன்னிய சமுதாயத்தினர் ஆவார்கள்" எனச் சேலம் களஞ்சியம் (பக்கம் 93 இல்) குறிப்பிடுகின்றது. சேலம் கலைக் களஞ்சியம் நூலை மேற்கோள் காட்டும், அய்யா மா.அன்பரசு அவர்கள், "பரமத்தியில் கரம்புக்காரர் தெரு என்று அழைக்கப்படும் பகுதியில் வாழ்ந்த வன்னியர் பிரிவைச் சார்ந்தவர்கள் இக்கால் வாயை வெட்டும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களைப் பேணிப் பாதுகாத்தார்கள்" எனத் திருமணிமுத்தாற்றுத் திருத்தலங்கள், பக்கம் 34 இல் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்பகுதி மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கக் கூடிய ராசாவாய்க்காலை வெட்டும் பணியில் பங்கு கொண்ட "வன்னியர்"களின் பணி போற்றுதற்குரியது.

VII

இளையநாயக்கனின் காலாட்படை

இராமப்பய்யன் அம்மானை இலக்கியம் கூறுவது

மதுரை விசுவநாத நாயக்கர் காலத்தில் பாளையப்பட்டு முறை உருவாக்கப் பட்டது. இதன்படி, மதுரை 72 கொத்தளங்களிலும், அவரது ஆட்சிக்குட்பட்ட 72 பாளையக்காரர்களும் காவல் புரிய வேண்டும் என்பது நடைமுறை. மேலும், அரசனின் போர்ச் செயல்களுக்கும் துணையாகப் பாளையக்காரர்கள் படைகளை அனுப்ப வேண்டும். இம்முறையில் திருமலை நாயக்கருடைய படைத்தளபதி இராமப்பய்யன், மதுரை நாயக்கரிடம் முரண்பட்டு எதிர்நடவடிக்கையில் ஈடுபட்ட இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத்தேவன் மீது படையெடுத்துச் செல்கின்றான்

இராமப்பய்யன் தன் தமையன் வைத்தியநாத ஐயனிடம் விடைபெற்றுக் கொண்டு பாளையக்காரர்கள் புடைசூழச் சடைக்கத்தேவன் மீது படை கொண்டு போருக்குப் புறப்படு கின்றான். அப்போரிலே பாளையக்காரர்களும், பலரும் கலந்து கொள்கின்றார்கள். இவ்வரலாற்றுப்போர் நிகழ்ச்சியைப் பற்றி இராமப்பய்யன் அம்மானை என்னும் இலக்கியம் விளக்கமாகக்

குறிப்பிடுகின்றது. இராமப்பய்யன் அம்மானை சென்னைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களாலும், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தாலும் வெளியிடப்பட்டது. இரண்டு பிரதிகளும் ஒரே செய்தியைக் குறிப்பிடுகின்றன. ஆயினும் சிறு சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. பாளையக்காரர்களின் பெயர்கள், ஊர்கள் இவைகளிலும் சிறு சிறு மாறுபாடுகள் உள்ளன.

இவற்றுள், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகப் பிரதியில் இளைய நாயக்கனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இளையநாயக்கன் தனது காலாட் படையுடன் போருக்குச் சென்றான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, திருமலைநாயக்கரின் படைத்தளபதி இராமப்பய்யன் இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத்தேவன் மீது படையெடுத்துச் செல்லும் போது, இளையநாயக்கன் தனது காலாட்படையுடன் சென்று , போரிட்டு வெற்றிக்குத் துணை நின்றான் என இதன் மூலம் அறியப் படுகின்றது

பாளையக்காரர்கள் இராமப்பய்யன் தலைமையிலே போருக்குச் செல்லும் போது, பாளையக்காரர் அல்லாத பட்டக்காரர் ஆகிய இளையநாயக்கன் தனது காலாட் படையினருடன் போரில் கலந்து கொள்கின்றார் என்றால், அது மதுரை திருமலை நாயக்கருக்கு - பரமத்தி இளையநாயக்கனுடைய வீரத்தின் மீதுள்ள நம்பிக்கை யையும், கள்ளர்கள், மறவர்களை அடக்குவதில் இவர்கள் அனைவருக்கும் உள்ள ஒற்றுமையையும் அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. **இந்த ஒற்றுமையினால் ஏற்பட்ட வலிமையினால், தன்நாட்டு மக்களுக்கு அண்டை நாட்டுப் பகைவர்களால் தீங்கு நிகழாமல் பாதுகாத்திட்டான் இளையநாயக்கன்.**

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை இலக்கியம் கூறுவது

மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த திருமலை நாயக்கர் (கி.பி. 1623 - 1659) காலத்தில், கள்ளர்களை ஒடுக்கிய செய்தி திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையில் (பக்கம் 27, செய்யுள் 114 இல்) குறிப்பிடப்பட்டுள்ளது. திருமலை நாயக்கரின் போர்ப் படைத்தளபதி இராமப்பய்யன். இவர், அரையநாட்டில் உள்ள திருச்செங்கோடு வந்து இறைவனைத் தொழுது படைநடத்தப்பட்ட குறிப்புக் காணப்படுகிறது.

“சோரரை (கள்ளர்) அடக்கினன், குருவியழகன் தலை துண்டித்தனன், பாண்டியரையும் பொறுமாற விட்டுச்

சடையக்கனை (மறவர் தலைவன்) அடக்கினான்" என்கிறது. கள்ளர் (சோரர்), சடையக்கன் (மறவர்) எனக் குறிப்பதில் இருந்து, பாண்டியன் என்பார் கள்ளர் மறவரிலும் வேறானவர் என்று தொல்லியல் அறிஞர் S. D. நெல்லை நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். எனவே, பாண்டியர்களான சான்றோர்களைத் துரத்தி விட்டுக் கள்ளரையும், மறவரையும் ஒடுக்கினார் திருமலை மன்னர் என அறியக் கிடக்கின்றது. இவ்வீரச் செயலுக்குத் தலைமைப் பொறுப்பேற்றுப் படையை நடத்திச் சென்றவர் தளவாய் இராமப்பய்யன். இவர் அரையநாட்டில் உள்ள திருச்செங்கோட்டிற்கு வந்து ஸ்ரீஅர்த்தநாரிசுவரரையும், செங் கோட்டு வேலவரையும் தொழுது புறப்பட்டான் என்பதில் சில வரலாற்றுச் செய்திகள் தெரிய வருகின்றது.

தென்காசியைத் தலைநகராகக் கொண்டு பாண்டியரில் ஒரு பிரிவினர் ஆட்சி செய்தாலும், பாண்டியர்கள் செயலற்றுப்போய் விட்டனர். மதுரை நாயக்கர்கள் ஆங்காங்கே கள்ளர் தொல்லை இருந்ததைக் கட்டுப்படுத்த முற்பட்டுள்ளார். எனினும் பாளையக் காரர்களாக மிளிர்ந்த மறவராகிய சேதுபதி, திருமலைநாயக்கரிடம் பகைமை பாராட்டி எதிர்கொண்ட போது அம்மறவரை வென்றிடக் கொங்கு நாட்டு வேட்டுவர்களைப் பயன் படுத்திய செய்திகளைப் பாளையப்பட்டு வம்சாவளி ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. எனவே, படை நடத்தப் புறப்பட்ட இராமப் பய்யன் படைகளைச் சேகரிக்கவே கொங்கு நாடு வந்தான் எனவும் கொங்கு நாட்டுப் படைகளுக்குப் பரமத்திப் பட்டக்காரனாகிய இளையநாயக்கனே தலைமை ஏற்று இருக்க வேண்டும் எனவும் தோன்றுகிறது. திருச்செங்கோடு அர்த்தநாரிஸ்வரர் கோயிலில் வந்து இராமப்பய்யன் வணங்கியது படை நடத்தி வெற்றி கொண்டதற்காக என்று குறிப்பிடப் படுவதால் இந்நிகழ்ச்சிக்கு இளையநாயக்கர் காரணமாகலாம்.

திருச்செங்கோடு திருப்பணிமாலையில் இராமப்பய்யன் யாரை யெல்லாம் வெற்றி கொண்டான் என்பதைக் குறித்தும் கூறுவதால், மீண்டும் திருச்செங்கோடு அர்த்தசாரிஸ்வரர் கோயிலுக்கு வந்து, இறைவரை வணங்கி வெற்றியைத் திருச்செங்கோடு பகுதியில் கொண்டாடினான் எனத் தோன்றுகின்றது. திருச்செங்கோடு இறைவனை வணங்கிப் படை நடத்திய இராமப்பய்யன் மீண்டும் வந்து அர்த்தநாரிஸ்வரரை வணங்கினான் என்றும், உதவிய கொங்கு நாட்டுப் படையாளருக்கு நன்றி வணக்கம் கொண்டான் என்றும் கருதுவதற்குப் பெரிதும் இடம் உண்டு.

கள்ளரை ஒடுக்கிட மதுரைத் திருமலைநாயக்கருக்கு, இளையநாயக்கன் உதவினான் என்ற ஆய்வின் படி, தன்நாட்டிலும், தன்மக்களுக்குக் கள்ளர்களால் தீங்கு நிகழாமல் தன்மக்களைப் பாதுகாத்தான் என்பது அறியக் கிடக்கிறது.

செப்பேடு கூறும் மறத்துக்கு (வீரத்திற்கு) வன்னியன்

"அறிவுக்கு அகத்தியன் பொறுமைக்குத் தன்மன் புகளுக்குக் குமணன் கொடைக்குக் கருணன் சத்தியத்திற்கு அரிச்சந்திரன் மறத்துக்கு வன்னியன் அழகுக்கு மன்மதன் வாளுக்கு அபிமன் பரிக்கு நகுலன் கரிக்கு உதையன் வில்லு விசையன் மல்லுக்கு வீமன்" என்பதாகக் கி.பி. 1584 ன் அல்லாள இளையான் செப் பேட்டில் வன்னியர்களைப்பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. அகத்திய மாமுனிவர், தருமர், குமணன், கர்ணன், அரிச்சந்திரன், மன்மதன், அபிமன்யு, நகுலன், உதையன், விசையன், பீமன் போன்ற உலகில் அனைவருக்கும் முன்னுதாரணமாய்த்திகழும் புகழ் பெற்றவர்களோடு ஒப்பிட்டு "வீரத்துக்கு வன்னியன்" என்ற குறிப்பு அல்லாள இளையான் செப்பேட்டில் காணப்படுவது பெருமைக் குரிய அம்சமாகும்.

இளையநாயக்கனின் முன்னோர்களால் (கி.பி. 1584 க்கும் முன்னரே) காலாட்படை உருவாக்கப் பட்டிருக்க வேண்டும் எனவும், அப்படையில் வன்னியர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதனையும், பின்னாளில், இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத் தேவன் மீது படையெடுத்துச் சென்ற போது இளையநாயக்கனின் காலாட்படையில் இவர்களும் சென்று வீரத்துடன் போர் புரிந்து வெற்றிக்கு வழி வகுத்திருக்க வேண்டும் எனவும் அறியக்கிடக்கிறது. மேலும், இது போன்று இன்னும் வேறு பல படைகளிலும் சேர்ந்து படையினராகிப் பின்னர்ப் படையைச் சிறந்த முறையில் நடத்தும் திறன் பெற்று, அதனால் "படையாட்சி" என்ற பெயரை நிலை நாட்டி இருக்கலாம் எனவும் தோன்றுகிறது. கல்லாடம் இலக்கியச் சான்றுகளின் படி "நாற்படை வன்னியராக்கிய பெருமான்" எனக் குறிப்பிடப் படுவதால் "இறைவனால் நான்கு விதப் படைகளிலும்" வன்னியர் இடம் பெற்றனர் என அறியலாம். கன்னிவாடிப் பட்டயத்தில் இவர்கள் "பள்ளி வெள்ளாளன்" என்று குறிக்கப் படுகின்றனர். நாகப்பட்டினம் செப்பேடு வன்னியர்களை "வேடர்" என அழைக்கிறது.

போர்க் கொள்ளையும் மீட்பும்

"சீர்மேவு கலியுக சகாத்தமா யிரமிசை
சிறக்குமைஞ் நூற்றறுபதின்
செல்லுமைந் தானதா ரணவருட மற்பிசைத்
திங்களிரு பத்தைந்தினிற்

கூர்மேவு வேலுடைய மகிசூரு நஞ்சயன்
கோதையந் தலமதனையே
கொள்ளைகொண் டேகினது கண்டுதய வாகியே
கொள்ளைபரி போனவகையிற்

பார்மேவ வேதனது புண்ணிய மெனச்சிறிது
பாலித்து நன்மை யுதவிப்
பட்சமுட னேசம்பு ரோட்சண நடத்தினன்
படிமீது புகழ்பெற்றனன்

தார்மேவு வாகைபுனை கண்ணப்பர் சேகரன்
தருமமே கனி நெஞ்சினன்
தருமருவு திருமலையல் லாளனிளை யான்மரபு
தருமந் தழைத்தேறவே"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 263

மைசூர் உடையார்களின் படைத்தலைவன் நஞ்சராயன் என்பவனாவான். இவன், கி.பி. 1643 இல், தாரண வருடம், ஐப்பசி மாதம், 25 ஆம் நாள், தன் வேல் படையுடன் வந்து, திருச்செங்கோட்டு மலைக் கோயிலில் உள்ள, அருள் மிகு ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் இறைவருக்குச் சொந்தமான பொன்னையும் பொருளையும் கொள்ளையடித்தான்.

மைசூர் நஞ்சையன் தனது வேல் படையினருடன் வந்து, இறைவருக்குரிய பெருட்களைக் கொள்ளையடித்து மைசூர் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றான் என்ற செய்தியைக் கேட்ட இளையநாயக்கன் தன்படையுடனே புறப்பட்டு நஞ்சராயன் சென்ற வழியறிந்து, அவன் சென்ற வழியிலேயே விரைந்து சென்று, அவன் படைகளைத் தடுத்து நிறுத்தி, நஞ்சராயனின் படையை வென்று, கொள்ளையடித்துச் சென்ற பொன்னையும் பொருளையும் மீட்டுத் திருச்செங்கோட்டு மலைக்குத் தன் படையினருடன் வெற்றி வீரனாகத் திரும்பி வந்தான்.

திருச்செங்கோட்டு மலையில் கொள்ளை போனதினால் ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்தெறிய, இம்மலை மீது தூய்மை

யாக்குவதற்குரிய சடங்குகளைச் செய்து, தான் பெற்ற வெற்றியைச் சிறப்பாகக் கொண்டாடினான். இறைவனின் பொருட்களை மீட்டுப் பெரும் புண்ணியம் சேர்த்த இளையநாயக்கன் வெற்றி மாலையைச் சூடியதினால் பெரும் புகழையும் பெற்றான்.

வேடராசாக்களின் முன்னோன் கண்ணப்ப நாயனார் தன் கண்களை இடந்து, இறைவருக்குக் கொடுத்ததினால் இறைவனின் அருள் பெற்றான் அதே போல, இப்பூவுலகில் உள்ள திருச்செங் கோட்டு மலை மீது, என்றென்றும் உமையொருபாகமாக வீற்றிருக்கும் ஸ்ரீ அர்த்தநாரீசுவரன் பறி கொடுத்த பொருட்களை, இளையநாயக்கன் மீட்டு வந்து, அவருக்குரிய பொருட்களை, அவரிடமே திருப்பித் தந்ததினால், இளையநாயக்கனும் இறை வனின் அருள் பெற்றான்.

ஒருவர் தமக்குரிய பொருளைப் பறி கொடுத்ததினால் படும் வேதனை அளவிடற்கரியது. பொருள் திரும்பக் கிடைக்குமா, கிடைக்காதா என்பதிலே மன உளைச்சலே வந்து விடுகின்றது. அப்பொருளை நல்ல முறையிலே மீட்டு உரியவரிடம் ஒப் படைக்கும் போது, பொருள் இழந்ததினால் தன்னையே இழந்தவர், இழந்த பொருளைத் தன் கண்களால் காணும் போது, பொருளை மீட்டுத் தந்தவரை நன்றியுடன் பார்க்கும் போது, உள்ளிருந்து வரும் வாழ்த்தொலி இனிமையிலும் இனிமையானது. அந்த வாழ்த்தைப் பெறுவதே பெரும் புண்ணியமானது.

பொருளை இழந்தவர் இறைவனாக இருக்கும் போது.... இறைவனின் அருள் பெற்றான் இளையநாயக்கன் என்றால், அது சரி தான். இறைவனை மகிழ்வித்ததினால் அருள் பெற்ற அல்லாள இளையநாயக்கனின் மரபு தழைத்தோங்க வாழ்த்துவோம் எனத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 263 இளையநாயக்கனை வாழ்த்துகின்றது..

இறைவனின் அருள் பெற்ற இளையநாயக்கன்

" அத்தர்திருச் செங்கோட் டரனடிக்கே யன்புசெய்யும்
எத்தலமெண் ணாறை இளையான்கேள் – இத்தலத்தே
வந்துகொள்ளை கொண்டான் மகிசூரா னீயதனைத்
தந்துகொள்ளை கொண்டாய் தவம்! "

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 264

அப்பனாய் அமர்ந்து அருள் செய்யும் திருச்செங்கோடு சிவபெருமானின் திருவடிக்கு அன்பு செய்யும் ஆறை இளையான் எத்தகையவன் என்றால், இத்தலத்தில் வந்து கொள்ளையிட்ட மைசூர் நஞ்சராயனைப் போரிட்டு வென்று, கொள்ளை போன இறைவனின் பொருட்களை மீட்டு வந்து, அதனை உரியவரிடம்

தந்தவன். இதன் பயனாகப் பெரும் தவம் செய்தால் என்ன புண்ணியம் கிடைக்குமோ, அந்தப் புண்ணியங்களை யெல்லாம் இளையநாயக்கன் பெற்றான்.

மைசூர் நஞ்சராயன் இறைவனின் பொருளைக் கொள்ளையடித் தான், நீயோ அந்தப் பொருளை இறைவனிடமே திருப்பித் தந்து இறைவனின் அருளைக் கொள்ளையடித்தாய் எனத் திருச்செங் கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 264 இளையநாயக்கனை நெஞ்சார வாழ்த்துகின்றது.

கள்வர் பயம் நீங்கியது – பெருவழி ஆய்வு

ஜேடர்பாளையம் வடகரையாற்றூர் மேல்முக கிராமம் அருகில் உள்ள காவிரியாற்றில் இளையநாயகனால் தடுப்பணை கட்டப்பட்டது. எனவே, இந்த இடம் காவிரியாற்றில் இருந்து நீரைப் பிரித்தெடுப்பதற்கு மட்டும் அல்லாமல் பரிசல் துறைக்கும் சிறந்த இடமாக விளங்கியிருக்க வேண்டும். இதனால் இந்த இடத்தில், காவிரியாற்றைக் கடப்பதற்குப் போக்கு வரத்துக்கள் எளிதாக்கப் பட்டிருக்க வேண்டும். நீர்வரத்து இல்லாத காலக் கட்டங்களில் பயணம் மிகவும் எளிதாகவே இருந்திருக்கும். எனவே, மலையாள நாட்டில் இருந்து கொண்டு வரப்படக்கூடிய மிளகு சீரகம் போன்ற வியாபாரப் பொருட்கள் இந்த வழியாகத்தான் வந்திருக்க வேண்டும் எனக் கருதுவதற்கு இடமிருக்கிறது.

மலையாள நாட்டில் இருந்து ஸ்ரீரங்கப்பட்டினத்திற்குச் செல்ல வேண்டிய மிளகு சீரகம் ஏற்றப்பட்ட மாட்டு வண்டியில் கொண்டு வரப்பட்ட பின்பாரக் கல்லினை மோகனூர் நவலடியான் என்று அத் தலவரலாறு வாயிலாக அறிய முடிகின்றது.

சங்ககாலத்திற்கு முற்பட்ட நாளில் இருந்தே வழிப்பறிக் கள்ளர்கள் அட்டகாசம் மிகுந்திருந்தது. தமிழகத்தில் வழிப்பறிக் கொள்ளைக்கு ஏதுவாகச் சாலைக்ளில் ஆள் அரவமற்ற நிலை, அக்காலச் சூழ்நிலை கொண்டிருந்தது. ஆனால் இளையநாயக்கன் கள்வர்களை அடக்குவதில் மாபெரும் வெற்றியைப் பெற்றவன் என்பதும், இவனது ஆட்சியில் கள்வர் பயம் இன்றி மக்கள் வாழ்ந் தனர் என்பதும், அவ்வாறு களவாடினாலும் அதைக் கண்டு பிடித்து விடுவான் என்ற பயம் கள்வர்களிடம் இருந்துள்ளது என்பதும் தெளிவு.

மைசூர் நஞ்சராயன் கொள்ளையிட்டதையே, மீட்டு வந்து வரலாற்றில் நீங்கா இடம் பிடித்த இளையநாயக்கனைக் கண்டு, கள்வர்கள் அஞ்சி, நடுங்கி ஒதுங்கியிருக்க வேண்டும்.

எனவே ஜேடர்பாளையம் பரிசல் துறையில் இருந்து பாண்டமங்கலம், வேலூர், நன்செய்இடையாறு, பாலப்பட்டி, மோகனூர் வழியாக ஸ்ரீரங்கப் பட்டணத்திற்குப் பெருவழி இளையநாயகனால் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும், இப் பெருவழியை நீண்ட பயணங்கள் செல்லக்கூடிய யாத்திரிகர்கள், வியாபாரிகள், மக்கள் ஆகியோர், கள்வர் பயம் இன்றிப் பாதுகாப்பாகச் செல்லப் பயன் படுத்தியிருக்க வேண்டும் என்பதும் தெளிவு.

மேலும், அரையநாட்டின் முக்கிய இடங்களான பரமத்தி சீமை, பரமத்தியில் உள்ள கோட்டை, கபிலர் மலை, திருச்செங்கோடு ஆகிய முக்கிய வழிகளில், வரலாற்றுச் சிறப்பு மிக்க இளைய நாயக்கனது காலாட் படை மற்றும் அவனது யானைகள், குதிரைகள் தங்கு தடையின்றிச் சென்று வரப் பெருவழிப்பாதைகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே, இளையநாயக்கன் காலத்தில் பெருவழிகள் இருந்துள்ளன என அறியலாம்.

ஆகவே, கொங்கு நாட்டில் வேறு சில பெருவழிகள் இருந்த போதும், பயணிகள், வியாபாரிகள், யாத்திரை செல்பவர்கள் தங்களது உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பாக அரையநாட்டின் வழியாகச் செல்லக்கூடிய இப்பெரு வழியைத்தான் நிம்மதியாகப் பயன் படுத்தியிருக்க வேண்டும் என்பது ஊகித்து அறியும் செய்தியாக உள்ளது.

VIII

இளையநாயக்கனின் தெய்வத்திருப்பணிகள்

திருச்செங்கோடு மலைக்கோவிலில் திருப்பணிகள்

இராமப்பய்யன் தலைமையில், இளையநாயக்கனின் காலாட் படையினரின் துணை கொண்டு இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத்தேவன் மீது படையெடுத்துப் புறப்படும் போதும், கள்ளரையும், மறவரையும் வென்ற பின்னர் அதற்கு நன்றி செலுத்தவும் திருச்செங்கோடு மலைக்கு இராமப்பய்யன் வந்துள்ளான். அவன் திருச்செங்கோடு மலையில் உள்ள செங்கோட்டு வேலவரையும், உமையொரு பாகராகிய ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரரையும் வணங்கிச் சென்றான் என்ற திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுளில் இருந்து, இந்நிகழ்ச்சிக்குப் பிறகு தான் இத்திருமலையில் நாகலிங் கேஸ்வரர் கோவில் கட்டப்பட்டது என அறியக் கிடக்கிறது.

திருச்செங்கோடு அரையநாட்டின் வடக்குப்புற எல்லையாகவும், இளையநாயக்கனின் ஆளுகையின் கீழும் இருந்தது. இங்குத் திருநாகேசுவரருக்குத் தனிக் கோயில் இளையநாயக்கனால் கட்டப்பட்டது. இத்திருக்கோயிலில் திருநாகலிங்கேஸ்வரர், இலிங்க மேனியில், சுயம்பு வடிவில் காட்சி தருகின்றார்.

ஆறை இளையநாய்க்கன்

"தேமேவு மரவகிரி நாகீசர் சந்நிதி
சிறந்தகற் பக்கிரகமுந்
திகழ்ந்த மண்டப மகாமண்ட பத்தினொடு,
தென்கோ புரத்தடிகளும்

பூமேவு நந்தவன வாவிமண் டபபூசைப்
புகழுமஞ் சாந்திரு விழா
பூசைபடி பதினேழு பயருகறி யமுது தாம்
பூலமா ளிகை கந்தமும்

மாமேவு மாசிவை யாசிசிவ ராத்திரி
மகாநவ மிதீபாவளி
மார்கழி யுடன்கார்த் திகைத் தீப பொரிசோம
வாரமும் பரி வட்டமும்

கோமேவு மாலைவடை காவேரி மஞ்சனம்
குலவத் தியான வொலியுங்
கொற்றமிகு மாறைவல் லாள னிளையானருள்
குமாரதிரு மலையுபயமே."

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 262

"ஏவிளம்பி வச்சரத்தே யேரகநா கீசருக்கு
மாவிளம்பக் கோயிலுமா மண்டபமும் ஷெ பூவிளம்பக்
கண்டா னல்லாளன் கருணையிளை யானாறைத்
தண்டாவு வாகையுறத் தான்!"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 267

தேன் நிறைந்த அரவகிரி என்னும் பாம்பு மலையில், நாகேஸ்வரர் திருக்கோவிலை இளையநாயக்கன் அமைத்தார். இக்கோயிலின் மூலவர் சுயம்பு வடிவில் கிழக்குத் திசை நோக்கிக் காட்சி தருகின்றார். இவர் வெண்மை நிறத்தில் காட்சி தருகின்றார். இக்கோயிலின் கருவறையையும், கருவறையை அடுத்த வெளி அறையையும், வெளி அறையின் வெளியில் உள்ள மகாமண்ட பத்தினையும், மகாமண்டபத்தின் நடுவில் அமையப்பெற்றுள்ள

நந்தி தேவனும், மகாமண்டபத்தினுள் தெற்குப் புறச் சுவரை யொட்டி 63 நாயன்மார்கள் உருவச் சிலைகளும், பண்டாரங் களுக்குப் பூக் கட்ட, சந்தனம் அரைக்க மண்டபமும் இளைய நாயக்கனால் அமைக்கப் பட்டவைகள் என அறியப் படுகின்றது.

திருநாகேஸ்வரர் திருக்கோயிலுக்குத் தென்புறத்தில் விநாயகப் பெருமானுக்கும் கன்னிமார்களுக்கும் எனத் தனிக் கோயிலும் இளையநாயக்கனால் கட்டப்பட்டவைகளாம்.

மேலும், திருச்செங்கோட்டு மலையில் பூக்கள் நிறைந்துள்ள நந்தவனத்தையும், திருக்குளம் ஒன்றினையும், தனது திருப்பணி களாக இளையநாயக்கன் செய்துள்ளார்.

இளையநாயக்கன் அமைத்த திருநாகேஸ்வரர் திருக்கோவில்

திருச்செங்கோடு மலையில் உள்ள இக்கோயில், ஸ்ரீஅர்த்த நாரீச்சுரர் நிருத்த மண்டபமாகிய ஆமை மண்டபத்தையொட்டித் தெற்குத் திசையிலும், ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் ஆலயத்துக்கு வடக்கிலும் இருக்கிறது அழகான சிற்ப வடிவங்கள் இத்திரு நாகேஸ்வரர் கோயிலின் கர்ப்பகிரகத்தைச் சுற்றிலும் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் கொங்கு நாட்டுச் சித்தர்கள் உட்பட 18 சித்தர்களின் சிலைகளும் காணப்படுகின்றன இவற்றுள் கல்லினால் செதுக்கப்பட்ட போகரின் உருவம், வீணையுடன் நாரதர், பாம்பாட்டிச் சித்தர் மற்றும் பெண்கள் ஆகிய சிற்பங்கள் குறிப் பிடத்தக்கனவாக உள்ளன.

கருவறைக்கு முன்புள்ள அர்த்தமண்டபத்தின் மேற்புறத்தில் கண்ணப்ப நாயனார் தனது ஒரு காலை இறைவனின் கண்ணில் வைத்துக் கொண்டு, அம்பால் தனது ஒரு கண்ணைப் பெயர்ப்பது போலப் புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது.

மகாமண்டபம் என்று சொல்லக்கூடிய முன்மண்டபம் பத்துச் சித்திரக் கற்றூண்களைக் கொண்டு அழகும், அமைப்புமாய் விளங்குகின்றது. இவற்றில் ஆறு தூண்கள் சிங்கம், யாழி, குதிரைகள் ஆகிய உருவங்கள் செதுக்கப் பெற்று அழகொழுகும் அதிசயத் தூண்கள் ஆகும்.

தரையில் நின்றபடி ஒரு வீரன் சிறுத்தையின் குரல் வளையைப் பிடித்தவாறும், மறு புறத்தில் ஒரு வீரப்பெண்மணியானவள் தரையில் நின்றவாறே சிறுத்தையின் பிடரியைப் பிடித்துக் கொண்டுள்ளவாறும், இவர்களுக்கு மேலே குதிரை மீதமர்ந்துள்ள வீரன் ஒருவன் சிறுத்தையின் தலையுச்சியில் தனது கூரான

வேலைப் பதித்தவாறும் நந்திக்கு இடப்புறம் உள்ள தூண் அமையப் பெற்றுள்ளது. தீயவைகளுக்கு எதிராக அரசனும் மக்களும் ஒற்றுமையுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதாக அமையப்பெற்றுள்ள இக்கல்தூண் நந்திக்கு இடப்புறம் காணப்படுகின்றது.

நந்திக்கு வலப்புறம் உள்ள தூண் பாயும் குதிரையின் மீது அமர்ந்து இரு வீரர்கள் போரிடுவது போலவும், சிங்க வாகனத்தின் மேல் உள்ள வீரன் யானையை அடக்குவதைப் போன்ற இரு தூண்களும், தும்பிக்கையுடைய யாளிகள், தங்களது முன் வாயில் நீண்டு தொங்கும் தும்பிக்கைகளைக் கீழே தொங்கவிட்டுத் தங்கள் கால்களின் கீழ் மிதி பட்டு, அஞ்சிப் படுத்திருக்கும் யானைகளின் நீண்ட தும்பிக்கைகளை வலியப் பிடித்து மேலே தூக்கும் பாவனை யில் செதுக்கிய இரண்டு சித்திரத் தூண்களுமாகக் கலையம்சம் பொருந்திய தூண்கள் மகாமண்டபத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றின் வேலைப்பாடுகள் கல்லிற் செதுக்கிய கவிதை போல் காணப்படுகின்றன. இம்மகாமண்டபத்தின் நடுவே, திருநாகலிங் கேஸ்வரருடைய நந்தி வாகனம் மிகுந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் உயிரோவியமாகக் காணப்படுகின்றது.

மகாமண்டபத்தின் விதானத்தில் அழகிய தாமரை மலரைச் சுற்றிலும், மேள தாள வாத்தியத்திற்கேற்பக் கன்னியர்கள் ஆடும் கோலாட்டம், நடனம் புடைப்புச் சிற்பமாகக் காட்சியளிக்கிறது.

இவ்வாறு காண்பவர்களின் கண்களைச் சுண்டி இழுப்பதாக அமையப்பெற்றுள்ள, பெருமை வாய்ந்த திருநாகேஸ்வரர் திருக்கோயில் முழுவதுமாக இளையநாயக்கனால் கட்டப் பட்டதாகும்.

மகா மண்டபத்தினுள் இருந்த 63 நாயன்மார் சிலைகளும், தெற்குத் திசையில் உள்ள, வெளிமண்டபத்தில் வரிசையாக வைக்கப் பட்டுள்ளன.

இதேபோலக் கன்னிமார் சிலைகளும் தனிக்கோயிலில் இருந்து கொண்டு போய் 63 நாயன்மார்களின் வரிசையிலேயே தனியாக வைக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தினுள் இருந்த திருஞானசம் பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் சிலைகளும் கன்னிமார்கள் இருந்த அறையில், தனிக் கோயிலுள் வைக்கப்பட்டுள்ளன.

திருவிழாக்கள்

இளையநாயக்கன் திருச்செங்கோட்டு மலைமீதினிலே பல திருப்பணிகளையும் செய்து, திருவிழா நடைபெறவும் ஏற்பாடுகள் செய்தார்.

மாசி மகம் திருநாளன்று உற்சவரை வெளிமண்டபத்தில் கொண்டு வந்து வைத்து, அபிசேகம், ஆராதனை செய்யும் மாசிமகம் விழாவும், வைகாசியில் விசாகத் திருவிழாவும், சிவராத்திரியன்று ஐந்து காலப் பூசைகளும், மகா நவமி நாளன்று பெருமாளுக்குரிய பூசைகளும், தீபாவளித் திருநாளன்று விசேச பூசையும், மார்கழித் திருநாட்களில் 30 நாள் கட்டளைகளும், கார்த்திகை மாதத்தில் பரணி தீபமேற்றியும், வைகாசி மாதம் தேர்த் திருவிழாவின் போது பரிவட்டம் கட்டுதலும், முக்கியத் திருவிழாக்களின் போது காவிரியாற்றில் இருந்து தீர்த்தம் கொண்டு வந்து இறைவர்களுக்குத் திருமஞ்சன நீராட்டி அபிசேகம் செய்வித்தும், சந்தனம் போன்ற உயர்ந்த வாசனைப் பொருட்களால் இறைவருக்கு அபிசேகம் செய்வித்தும், நந்தவனத்தில் பூத்துக் குலுங்கும் வாசனை மலர்களை இறைவருக்குப் பொருந்தும் படியாகப் போடச்செய்தும், பதினேழு படிகளில் பதினேழுவகைப் பயறுகள் மற்றும் காய்கறிகளைச் சேர்த்துத் தேவாமிர்தம் போல் உணவைத் தயார் செய்து இறைவருக்குப் படைத்தும், சப்த ஒலி முழங்க மறைபொருள் பாடல்களை இறைவன் முன் பாட வைத்தும், திருச்செங்கோட்டு மலையில் புகழ் பெற்றான் இளையநாயக்கன்.

திருப்பணி தொடர்புகள்

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 267 வாயிலாக இளையநாயக்கன் செய்த திருப்பணிகளும், தற்போது இத்திருப்பணிகளுக்குத் தொடர்பாக உள்ள பல செய்திகளும் கீழ்க்கண்டவாறு தொகுத்து வழங்கப்படுகின்றன.

நாக தீர்த்தம்

திருச்செங்கோட்டு மலை மீது, நாற்பது புண்ணிய தீர்த்தங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. தற்போது, ஒன்பது தீர்த்தங்கள் தான் காணப்படுகின்றன.

இம்மலைமீதமைந்துள்ள கோவில்களில் குடிகொண்டிருக்கும், விநாயகப் பெருமான், செங்கோட்டு வேலவர், நாகேஸ்வரர், ஆதிகேசவப் பெருமாள், அர்த்தநாரீஸ்வரர் மற்றும் இதரத்

தெய்வங்கள் அனைவருக்கும், தற்போது பாதுகாப்பாய் அமைக்கப்பட்டுள்ள இந்நாக தீர்த்தத்தில் இருந்து தான் நீரைக் கொண்டு சென்று புண்ணிய நீராடல் நடத்தப் படுகின்றது. நாக தோசம், திருமணத் தடை, புத்திர தோசம் உள்ளவர்கள் , இத்தீர்த்தத்தில் நீராடி விட்டுத் திருநாகேஸ்வரரை, இராகு காலத்தில் பாலாபிசேகம் செய்து வழிபட்டால் நாகம் சம்பந்தப்பட்ட எத்தகைய தோசங்களும் நீக்கப்பட்டுப் புண்ணியம் பெறுவார்கள் என்பது இத்தல மகிமையாகும்.

தற்போது, தெய்வங்கள் அனைவருக்கும் அபிசேகத்திற்காக மட்டும் உபயோகிக்கப் படும் இந்நாகதீர்த்தம் உள்ள கிணற்றின் சுற்றுப் புறங்களில் சுவரெழுப்பியும், மேற்புறம் முற்றிலுமாகச் சல்லடைக் கம்பிகள் போட்டும் பாதுகாக்கப்படுகிறது.

அன்னாபிஷேகம் நாகேஸ்வரர் வழிபாடு

ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் அசுபதி நட்சத்திர நாளன்று, உச்சிக்கால நேரத்தில் அன்னாபிசேகம் நடைபெறுவது இளையநாயகன் காலம் தொட்டுக் காலம் காலமாக நடை பெற்று வருகின்றது எனலாம்.

வேட்டுவக் கவுண்டர்கள் தங்களது குலம் அறுகு போல் வேரூன்றி , ஆல்போல் தழைத்து, மூங்கில் போல் நிமிர்ந்துநின்று நலம் பெற வேண்டி வருடம் ஒரு முறை திருநாகேசுவரருக்கு விரதம் இருந்து, அன்னத்தால் அபிசேகம் செய்து பூசை நடத்துவார்கள்.

சுமார் 25 படி அரிசிக்கும் அதிகமாகப் பக்தியுடன் அன்னம் தயார் செய்து திருநாகேசுவரர் திருமேனி முழுவதும் அன்னத்தால் நிறைக்க, திருநாகேசுவரர் அன்னாபிசேகத்தோடு காட்சியளிப்பார். திருநாகேசுவரருக்கு அருகில் அன்னத்தால் சிறு வடிவிலான ஒரு அன்னலிங்கம் வடிவமைக்கப்பட்டுத் திருநாகேசுவரருக்கும், அன்னலிங்கத்திற்கும் சிறப்பான அலங்காரங்கள் செய்யப்படும்.

ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள், ஸ்ரீ அர்த்தநாரீசுவரர், ஸ்ரீசுப்ரமணியர் ஆகியோருக்குச் சிறப்பான முறையில் அலங்காரம் செய்து, பூசைகள் செய்து வழிபடுவர்.

அதன்பிறகு திருநாகேசுவரருக்கும், அன்னலிங்கத்திற்கும் ஒரே நேரத்தில் விசேச பூசைகள் நடைபெறும். பூசை செய்யப்பட்ட அன்னலிங்கத்தைப் பாபநாச தீர்த்தத்தில் கரைத்து விட்டு வருவார்கள் வேட்டுவப் பெருமக்கள்.

திருநாகேசுவரர் திருமேனியில் நிறைக்கப்பட்ட அன்னத்தை எடுத்து விட்டு, மகாஅபிசேகம், கலச அபிசேகம் நடைபெறும். மகா தீபாராதனை முடிந்தவுடன் .திருநாகேசுவரர் திருமேனியில் அன்னாபிசேகம் செய்த அன்னத்தைப் பிரசாதமாக அனைவருக்கும் குருக்கள் கொடுப்பார். வேட்டுவப் பெருமக்கள் இப்பிரசாதத்தை உண்டு விரதம் பூர்த்தி செய்வார்கள்.

இவ்விதப் பூசைகளைத் தலைமுறை தலைமுறையாகத் திரு. நாககிரிப் பண்டிதரும், அவரது முன்னோர்களும் வேட்டுவக் குலத்தினருக்குக் குருவாக இருந்து இன்று வரையிலும் முன்னின்று சிறப்பாக நடத்தி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சோமவார பாலாபிஷேகம்

சோமவாரம் (திங்கட் கிழமை) இராகு காலத்தில் நாகேஸ்வரருக்குப் பாலாபிசேகம் செய்து வழிபடுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது

திங்கள் கிழமை நாட்களில் காலையில் இருந்தே பக்தர்கள் கூட்டம் திருநாகேசுவரர் சன்னிதானத்தில் நிறைந்து காணப்படும். பால் மற்றும் அபிசேகப் பொருட்களைப் பக்தர்களும் கொண்டு வருவார்கள்.

நந்தி வழிபாடு

மாதம் இருமுறை வரும் பிரதோச நாளன்று நந்திக்குரிய பூசை இளையநாயகனால் அமைக்கப்பட்ட திருநாகேசுவரருடைய நந்திக்கும் செய்யப்படுகிறது.

மேலும், கிராம மக்கள் தங்களது ஆடு, மாடுகளுக்கு நோய் ஏற்பட்டால் நந்திக்குப் பச்சரிசியை ஊறவைத்து, அதில் வெல்லம் ஏலக்காய், தேங்காய்த் துருவல் போட்டு நந்திக்குப் படையல் போட்டுப் பக்தர்களுக்குக் கொடுத்ததுபோக எஞ்சியவற்றை நோய்வாய்ப் பட்ட கால்நடைகளுக்கும் கொடுத்து வழிபடும் முறையும், தங்களது மாடு, கன்றுகள் விருத்தியாகவும் இவ்விதப் பூசைகள் செய்வது வேட்டுவ மக்களிடம் இன்று வரையிலும் நடைமுறையில் உள்ளது.

நந்தவனம்

இங்குறையும் தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்வதற்கும், பூ மாலை சூடவும் தேவையான மலர்களைச் சேகரிக்கப் பூக்கள் நிறைந்த நந்தவனம் ஒன்றும் இளையநாயகனால் அமைக்கப்

பட்டது. அரளி, பொன் அரளி, வில்வம், வெள்ளறுகு, செங்கழுநீர், செண்பகப் பூ ஆகிய ஆறு வகையான பூசைக்குரிய மலர்களைக் கொண்டது நந்தவனம்.

15 மடத்துப் பண்டாரங்களும், நாள்தோறும், நந்தவனத்தில் இருந்து பூக்களைச் சேகரித்து, மாலைகளாகத் தொடுத்தும், சந்தனக் கல்லில் சந்தனக் கட்டையை வைத்து அரைத்து, சந்தனங்கள் தயார் செய்து, தினம்தோறும் பூசைக்குதவ வேண்டும் என்பதும், இதற்காக நில புலன்கள் பலவற்றைப் பண்டாரங்களுக்குத் தானமாக இளையநாயகன் வழங்கினார் என்பதும் தெரிய வருகின்றது.

ஒரு முறை, சாணார் மடத்தில் தங்கி, கும்மிப்பாட்டு எழுதிக் கொண்டிருந்த புலவர் வீமண்ண கவிராயர் அவர்கள், பண்டாரங்களுடன் சேர்ந்து, மலையுச்சிக்குப் படிக்கட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார் அப்போது, சாணார் மடத்தைக் கவனித்து வரும் காசி மகன் பெரியான் என்னும் பணியாளர் பண்டாரத்திற்கும், புலவருக்கும் வார்த்தை முற்றியதில் புலவ்ரை அறைந்து விட்டார் பண்டாரம். உடனே,

> **"சாணார் மடப் பெரியான்**
> **சண்டாளன் காசி மகன்**
> **ஏனோ எனையடித்தான்**
> **ஈசனே நீ கேளாய்! "**

என்ற பாடலைப் புலவர் வீமண்ணக் கவிராயர் பாடினாராம். செவி வழிச் செய்தியாகக் கிடைக்கும் இந்நிகழ்ச்சிலிருந்து, சான்றார்களாகிய சாணார்களுக்கு மடம் ஒன்று திருச்செங்கோட்டில் இருந்ததெனவும், அம்மடத்தில் பண்டாரங்கள் பணியாளர்களாக இருந்தனர் எனவும், கும்மிப்பாட்டு புலவர் வீமண்ணக் கவிராயரால் எழுதப்பட்ட தென்றும் அறியலாம்.

சிவராத்திரி

சிவராத்திரி நாளன்று, 3 ஆம் காலப் பூசை வேட்டுவ சமுதாயத்தினருடையது திருநாகேசுவரருக்கும், ஸ்ரீஅர்த்தநாரீசுவரருக்கும், ஸ்ரீசெங்கோட்டு வேலவருக்கும் சிறப்பான முறையில் அபிசேகம், பூசைகள் செய்வர். இவைகள் இன்றும் வழக்கத்தில் உள்ளன.

கார்த்திகை தீபப் பொரி

கார்த்திகை மாதத்தில் தீப நாளன்று, பச்சை நெல்லை வறுத்துப் பொரியாக்கி, இனிப்புச் சேர்த்துச் சுவாமிக்கு நைய்வேத்தியம் செய்து, கார்த்திகை மாதக் கூம்பு (பெருமாளுக்குச் சொக்கப்பனை)

வைக்கும் இடத்தில் புண்ணியாசனம் செய்து, நைய்வேத்தியம் நடத்தி ஒளியைப் பற்றச் செய்வார்கள்.

சோமவாரக் கட்டளை

ஆடிமாதத்தில் வரும் எல்லாச் சோமவார நாட்களிலும் (திங்கட்கிழமை), வேட்டுவ சமூகத்தினர் அனைவரும் நாடும், வீடும் செழித்தோங்க, ஸ்ரீ அர்த்தநாரீசுவரப் பெருமானுக்கும், ஸ்ரீ ஆதிகேசவப் பெருமானுக்கும், ஸ்ரீசெங்கோட்டு வேலவருக்கும், ஸ்ரீநாகேசுவரப் பெருமானுக்கும், பெரியநந்திக்கும், 60 ஆம் படி சுப்ரமணிய பெருமானுக்கும் அலங்காரம், அபிசேகம், ஆராதனை செய்து இரவுக்குள் மலைக்காவலர் கோவில் வந்து சேருவார்கள்.

மறுநாட்காலை அதாவது செவ்வாய் அதிகாலை, நகரத்தில் உள்ள ஓங்காளியம்மனுக்கும், மேற்கு வாயில் முனியப்பனுக்கும், மலைக்காவலருக்கும் தனித்தனியாகக் கிடா வெட்டி, மலைக் காவலர் சன்னதியில் கம்பு இடித்துக் கொழுக்கட்டை தயார் செய்து, பொங்கல் வைத்துப் பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சி யையும் வைத்து, சிறப்பாகப் பூசையை முடித்து, அனைவருக்கும் அன்னதானம் செய்வார்கள். இச்சோமவாரக் கட்டளை நிகழ்ச்சி காலம் காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பரிவட்ட மரியாதை

வைகாசி மாதம் தேர்த் திருவிழாவின் போது, மண்டலக் கட்டளைகள் முடிவுற்ற பின்னர், 8 ஆம் நாளில் வேட்டுவக் குலத்தினர் மண்டபத்தில் உற்சவருக்குச் சிறப்பான பூசை செய்வார்கள். பூசை முடிந்த பின்னர், வேட்டுவர் மண்டபத்தில் உள்ள சுவாமி உற்சவர் முன்னிலையில் அச்சமூகத்தார் அனைவருக்கும் பரிவட்டம் கட்டும் நிகழ்ச்சி துவங்கும்.

வேட்டுவ மக்களின் குருவாகிய, திருச்செங்கோடு மலைக்கோவில் அர்ச்சகர் திரு. நாககிரி பண்டிதர் அவர்கள் (சின்னப்பா குருக்கள்) வேட்டுவர் பிரிவு மக்கள் அனைவருக்கும் மாலை போட்டுப்பரிவட்டம் கட்டி மரியாதை செய்வார். பரிவட்டம் கட்டிய அனைவரையும் தெப்பக்குளம் அருகில் உள்ள வேட்டுவ சமுதாய மடத்திற்கு மேள, தாளத்துடன் அழைத்துச் செல்வார்கள்.

வேட்டுவ குலத்தலைவன் இளையநாயக்கனால் தொடங்கப் பட்ட பூசை முறைகள், பரிவட்டம் நிகழ்ச்சி, தலைமுறை தலை முறையாக திரு. நாககிரி பண்டிதரும், அவரது முன்னோர்களும்,

வேட்டுவக் குலத்தினருக்குக் குருவாக இருந்து இன்று வரையிலும் முன்னின்று சிறப்பாக நடத்தி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இசையால் இறைவனை மகிழ்வித்தது

நாதஸ்வரம், தவில், ஜால்ரா, ஆர்மோனியம், தாரை, தப்பட்டை, பம்பை, உடுக்கை, உறும்பி, சிலம்பு, முரசு, நகார், சேகண்டி, மணி, அலாரி, சங்கு ஆகிய 16 வகையான உபச்சார பூசைகளுடன் சப்த ஒலி முழங்க இறைவன் முன் இசைத்து மகிழ வைத்தான் இளையநாயக்கன் எனலாம்.

திருக்கல்யாணம்

"சந்தியா தீபஞ் சதுரங்கந் தாம்பூலம்
நந்தியா தீபம் நடத்தினான் ஷெ புந்தியால்
எப்போது மாறை யிளையான் றிருமலையான்
தப்பாமற் சீர்த்திகொள்ளத் தான்"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 268

வடகரையாற்றூரில் பிறந்த இளையநாயக்கன் திருச்செங்கோட்டு மலை மீதினிலே, இறைவருக்குப் பூசைசெய்யும் போது தீபாராதனை காட்டுவதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தான். இங்குறையும் இறைவர்களுக்கு நந்தா தீபம் என்று சொல்லக் கூடிய அணையா விளக்கையும் ஏற்றி வைத்தான். வைகாசி விசாகம் நாளன்று சுவாமிக்கு யாகம் வளர்த்து அபிசேகம், ஆராதனை செய்வித்தும், மாங்கல்ய தாரணம் (திருமாங்கல்ய திருமணம்) செய்வித்தும் திருச்செங்கோட்டு மலை மீதினிலே பெரும் புகழ் பெற்றான் எனத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 268 இளையநாயக்கனின் புகழ் பாடுகின்றது.

60ஆம் சத்தியப்படிகள்

நாகர் பள்ளத்தில் இருந்து 300 படிகளுக்கு மேல் அதாவது, திருச்செங்கோடு மலையின் அடிவாரத்தில் இருந்து, படிகளின் வழியாக மலை உச்சிக்குச் செல்லும் வழியில், 550 படிகள் உயரத்தில் 60 சத்தியப்படிகள் உள்ளன..

இவை மற்ற படிகளிலும் சற்று உயரமானவை. இப்படிகளிள் இரு மருங்கிலும் விளக்கு ஏற்றுவதற்கு ஏற்றாற் போல் சிறு அகழ்கள் தோண்டப் பட்டுள்ளன.

மகுடேஸ்வரர் சன்னிதானத்தின் முன் ஆரம்பமாகும் இத்திருப்படிகள் 60 படிகளைக் கடந்த உடன் ஸ்ரீசுப்ரமண்யர் சன்னிதானத்திற்கு முன்னால் முடிவடைகின்றன.

தமிழ் வருடங்களான, 60 ஆண்டுகளைக் குறிக்கும் இத்திருப் படிகளின் மேல் கற்பூரம் ஏற்றிச் சத்தியம் செய்வது வழக்கம். அப் போது ஒருவர் பொய் பேசினால் இறைவன் தண்டனை தருவார் என்பது ஐதீகமாக நடைமுறையில் உள்ளது. இதனால் கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளின் போது இப்படிகளின் மீது உரிய பணமோ பொருளோ வைப்பதும், உண்மை என்று சொல்பவர் எடுத்துக்கொள்வதும் நடைமுறையில் இருந்து வருகிறது.

ஏழைகளின் நீதிமன்றமாகச் செயல்படும் இத்திருப்படிகளுக்குப் பிப்ரவரி மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை நண்பகலில், படி பூசை நடைபெறுகிறது. படிபூசையின் போது ஆயிரக் கணக்கில் கூடும் மக்கள் 60 படிகளையும் தேங்காய், பழம், பூ, மற்றும் பூசைப் பொருட்களை வைத்து நிரப்பி விடுவார்கள். அப்போது வெளியூரில் இருந்தும் வந்திருக்கக் கூடிய அடியார்கள் திருப்புகழ் போன்ற பாடல்களைப் பாடி 60 படிகளுக்கும் சிறப்பான வழிபாடு செய்வார்கள். ஆண்டு தோறும் இப்பூசை மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

சோமவாரக் கட்டளை: ஆடிமாதம் உள்ள எல்லாச் சோமவார நாட்களிலும் (திங்கட்கிழமை) வேட்டுவ சமூகத்தினர் அனைவரும் முக்கியத் தெய்வங்கள் அனைவருக்கும் செய்வதைப் போலவே, 60 ஆம் படி சுப்ரமணியப் பெருமானுக்கும் அபிசேகம், ஆராதனை சிறப்பான முறையில் செய்து வருகின்றார்கள்.

இந்த 60 கற்படிகளும், இதன் மேல் உள்ள முருகப் பெருமான் சிலையும் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள முளை வேட்டுவக் கவுண்டர்களால் அமைக்கப்பட்டதாகப் புலவர் இரா. நாராயண சாமிநாயுடு அவர்களின், திருச்செங்கோட்டுத் தல வரலாறு, பக்கம் 131 ல் காணப் படுகின்றது. முளை வேட்டுவர் குடியினனான இளையநாயக்கனின் முன்னோர்களால் அல்லது, இளையநாயக் கனின் மரபில் வந்த மோழைக் கவுண்டம் பாளைய நகரத்தாரால் இத்திருப் பணிகள் நடைபெற்றிருக்க வேண்டும் எனக் கருது வதற்குக் காலவரிசையும் பொருந்தி வருகின்றது.

ஆதிநாகேஸ்வரர் வழிபாட்டுக்குழு

திருச்செங்கோட்டு மலை மீது, இளையநாயக்கனால் அமைக்கப் பட்ட திருநாகேசுவரருக்கு, ஆதிநாகேஸ்வரர் வழிபாட்டுக் குழுவினரால் நடத்தப்படும் மாதாந்திர யாக பூசை, அபிசேக நிகழ்ச்சிகள் வேறு எங்கும் காண இயலாத மிகவும் அற்புதமான கூட்டு வழிபாடாகும்.

இவ்வழிபாட்டிற்கு வரும் பக்தர்களை இறைவனே அழைத்து, அதன்பேரில் வந்திருப்பதாகக் கருத்தில் கொள்ளப்படுவது இவ்வழி பாட்டுக் குழுவினரின் மதிப்பைப் பன்மடங்கு உயர்த்துகிறது.

ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமை நாளன்று இவ்வழிபாடு சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

திருச்செங்கோட்டில் இருந்து அதிகாலை வேளையிலேயே, மலைக்கோவில் அர்ச்சகருடன் பள்ளிபாளையம் புறப்பட்டுச் சென்று காவிரி ஆற்றில் பல குடங்களில் தீர்த்தம் எடுத்துக் கொண்டு, அதில் சன்னதிக்குத் தேவையான தீர்த்தங்களுடன் அர்ச்சகரின் குழு மலையுச்சியில் உள்ள சன்னிதானத்திற்குச் சென்று விடும். காவிரி தீர்த்தத்திற்குச் சென்று வந்த **ஆதிநாகேசுவரர் வழிபாட்டுக் குழுவினர்** திருச்செங்கோடு பஸ்நிலையம் அருகில் உள்ள பெரிய குளத்தின் கிழக்குக் கரையையொட்டி அமைந்துள்ள பத்திரகாளியம்மன் கோவிலை வந்தடைவார்கள்.

அதேபோல, மற்றொரு ஆதிநாகேசுவரர் குழுவினர் காலை 6 மணிக்கு முன்னதாகவே புறப்பட்டுத் திருச்செங்கோட்டு ஸ்ரீஅர்த்த நாரீசுவரர் மலையைச் சுற்றிலும் கிரிவலம் வந்து, திருச்செங்கோடு பஸ்நிலையம் அருகில் உள்ள பெரிய குளத்தின் கிழக்குக் கரையை யொட்டி அமைந்துள்ள பத்திரகாளியம்மன் கோயிலைச் சென்றடைவார்கள்.

காவிரித் தீர்த்தம் கொண்டு வந்த குழுவினரும், கிரிவலம் சென்று வந்த குழுவினரும் இணைந்து, பத்திரகாளியம்மன் கோவிலை வலம் வந்து, அங்கு அபிசேகம், ஆராதனைகள் செய்து வழிபடுவர். பின்னர், மண்விளக்கில் அம்பாள் அருள் பெற்ற ஜோதியை எடுத்துக் கொண்டு புறப்படுவார்கள்.

பத்திரகாளியம்மன் கோயிலிலிருந்து பால்குடம், தீர்த்தக் குடங்களுடன் ஜோதியையும் எடுத்துக் கொண்டு, மேள, தாள வாத்தியங்கள் முழங்க, பக்தர்களின் சரணகோசத்துடன் திருச்செங் கோட்டு மலைக் கோவிலின் படி வழியே சன்னதிக்கு நடந்து செல்வார்கள். படியேறிச் செல்லும் வழியில் திருநந்திக்குக் காவிரித் தீர்த்தம், பாலாபிசேகம் செய்தும், 60 அடி நாகருக்குத் தீர்த்தம், பாலாபிசேகம் செய்து மஞ்சள் குங்குமம் வைத்து வழிபாடு செய்தும், 60 ஆம் படி முருகருக்கும், அதற்கும் மேல் உள்ள ஆஞ்சநேயருக்கும், சன்னதியின் நுழைவு வாயிலில் உள்ள கணபதிக்கும் தீர்த்தம், பாலாபிசேகம், விசேச பூசைகள் செய்தும் சன்னிதானம் வந்தடைவார்கள்.

பின்னர் சந்நிதானத்தில் உள்ள விநாயகர், குருபீடம், தலவிருட்சம், சூரியனார், கன்னிமார்கள், 63 நாயன்மார்கள் ஆகியோரை வலம் வந்து வழிபட்டும், அர்த்தநாரீசுவரர், செங்கோட்டு வேலவர், திருநாகேசுவரர், ஆதிகேசவப்பெருமாள் ஆகிய அனைவருக்கும் தீர்த்தம், பாலாபிசேகத்துடன் அஸ்ட அபிசேகங்களும் செய்து விசேச பூசைகளையும் செய்து வழிபடுவார்கள்.

திருநாகேசுவரர் மகா மண்டபத்திலும், ஆமை மண்டபத்திலும் மதியம் 2 மணிக்கு மேல் நடைபெறும் யாகபூசையின் போது காவிரித் தீர்த்தம் மற்றும் 108 மூலிகைப் பொருட்களைக் கொண்டு யாகம் நடைபெறும். முன்னதாக வடமேற்கில் உள்ள குரு பீடத்தில் பூசை செய்து அருள் பெற்று இராகு காலத்தில் யாகத்தைத் தொடங்குவார்கள்.

யாகம் முடிந்தவுடன் அதாவது இராகு காலத்தில், யாகத்தில் வைத்த காவிரித் தீர்த்தத்துடன், பக்தர்கள் கொண்டு வரும் பால், தயிர், தேன், கரும்புச்சாறு, எண்ணெ, மஞ்சள் ஆகிய அனைத்துப் பொருட்களையும் வைத்துத் திருநாகேசுவரருக்கு அபிசேகம், ஆராதனை செய்வார்கள். திருநாகேசுவரருக்கு 100 குடங்களுக்கு மேல் பாலாபிசேகம் செய்யப்படும் என்பது சிறப்பான அம்சமாகும்.

பின்னர்த் தீப ஜோதி கூட்டு வழிபாடு நாகேசுவரர் சன்னதியிலும், அர்த்தநாரீசுவரரின் நிருத்த மண்டபமான ஆமை மண்டபத்திலும் நடைபெறும். இவ்வழிபாட்டின் போது, பக்தர்களுக்கு, மண்விளக்கு, திரி, எண்ணெ, கல்கண்டு, இலை, வெற்றிலைபாக்கு, பழம், ஊதுபத்தி, புஸ்பம், மஞ்சள் பிள்ளையார், எலுமிச்சைக்கனி, மஞ்சள் அரிசி ஆகிய பூசைப் பொருட்கள் அடங்கிய பையைப் பக்தர்களுக்கு இலவசமாக அளிப்பார்கள். இவ்வாறு 1008 நபர்களுக்கு வழிபாடு செய்யப் பூசைப்பொருட்கள் அளிக்கப்படும்.

வாழை இலையைத் தரையில் போட்டு, அதில் வெற்றிலை பாக்கை வைத்து, அதன்மேல் மஞ்சள் அரிசி (அட்சதை) வைத்து, அதன் மேல் மண் விளக்கு வைத்து, அர்ச்சகர் 108 திருவிளக்குகள் போற்றியைச் சொல்லச் சொல்லப் பக்தர்களும் 108 போற்றிகளைச் சொல்லி, அர்ச்சகர் செய்யும் பூசையைப் பார்த்துப் பக்தர்கள் செய்வர்.

யாகத்தில் வைக்கப்பட்ட காவிரித் தீர்த்தம், மற்றும் பக்தர்கள் கொண்டு வரும் அபிசேகப் பொருட்களால் திருநாகேசுவரருக்கு அபிசேகம், ஆராதனைகளும், மற்றும் 1008 திருவிளக்குப் பூசைகளும், இராகு காலத்தில் அதாவது, மாலை 4.30 மணியிலிருந்து 6 மணிக்குள் நடைபெறும் நிகழ்ச்சிகளாகும்.

இத்திருவிளக்குப் பூசையின் போது ஆயிரத்தெட்டு விளக்குகள் வைத்துப் பூசை செய்யும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். இப்பூசையில் கலந்து கொள்பவர்கள் உலகம் நலம் பெற வேண்டியும், தங்களது வாழ்க்கையில் இருள் அகன்று ஒளி வீச வேண்டும் எனவும் இக்கூட்டு வழிபாடு நடத்தப்படுகிறது.

பூசை முடித்து, வெள்ளிக் கவசத்தில் அருள் பாலிக்கும் திருநாகேசுவரரைத் தரிசித்து, இறைவனின் அருள் பெற்றுப் பிரசாதம் பெற்றுக்கொள்வார்கள். பொங்கல், புளியோதரை, பஞ்சாமிர்தம், பால் ஆகியன பிரசாதம் ஆகும்.

மேலும் ஆண்டு தோறும் ஆவணி முதல் ஞாயிற்றுக் கிழமை நாளன்று 1008 கலச அபிசேகச் சிறப்பு யாகபூசை ஆதிநாகேசுவரர் வழிபாட்டுக் குழுவினராலேயே நடத்தப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

இளையநாயகனால் கட்டப்பட்ட திருநாகேசுவரர் திருக்கோயில் நாட்டின் அமைதியையும், ஒன்றுபட்ட மனித சமுதாய வாழ்விற்கும், மக்களுக்கும் மன அமைதியையும் ஆதிநாகேசுவரர் வழிபாட்டுக் குழுவினர் வழியாகப் பெற்றுத் தருகின்றது என்றால் மிகையாகாது.

கொடுமுடி ஈஸ்வரன் சன்னிதானத்தில் திருப்பணி செய்தது

அரைய நாட்டு ஆட்சியாளன் இளையநாயக்கன் திருப் பாண்டிக் கொடுமுடியில் (கொடுமுடி ஈஸ்வரர் கோவிலில்) திருப் பணி செய்த விவரம் ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர்க் கல்வெட்டில் அமையப் பெற்றுள்ளது. இத்திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வர, இக்கோவிலின் பூசாரி விசுவநாத பண்டாரம் என்பவருக்குக் காணி நிலங்களை இளையநாயக்கன் தானமாக அளித்த செய்தியும் காணப்படுகின்றது. மேலும், இந்நிகழ்ச்சியின் போது உடன் இருந்த இளையநாயக்கனின்



ஈரோட்டில் இருந்து கொடுமுடி செல்லும் வழியில் வெங்கபூர் என்னும் ஊரில் உள்ள தன்னாசியப்பர் கோயில் எதிரே கிடக்கும் கல்வெட்டு, இளையநாயக்கர் கொடுமுடி ஈஸ்வரன் கோயிலில் செய்த திருப்பணிகளைக் கூறுகிறது

காரியதரிசிகள் செண்பக மணியக்காரர் மற்றும் தொரப்பக் கவுண்டர் ஆகியோரது பெயர்களும் வெங்கம்பூர்க் கல்வெட்டில் காணப்படுகின்றன.

மோழைகவுண்டம்பாளையம் நகர மக்கள் செய்த திருப்பணி

"பேறுறு கோதைநன் னாகேசர் தூபி பெருமையொடன்
றாறை யிளையா னமைத்தன னம்மர பாளர்களிற்
றேறிடு மோழை நகரா ரரும்பொரு டேடிச்சுதைக்
கூறு பணியும் பதிட்டையுஞ் செய்து கொடுத்தனரே!"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை (செய்யுள் 406)

பெருமையுறு கோதை மலையான திருச்செங்கோட்டின்கண், எழுந்தருளியுள்ள நல்ல நாகேசுரர் கோயிலில் தூபியை ஆறை இளையான் பெருமையுடன் அன்றே அமைத்துத் தந்தனன். அவன் மரபில் வந்தவர்களில் தேறிடும் மோழைக்கவுண்டம்பாளையம் என்னும் நகரத்தில் உள்ளவர்கள் , சுண்ணாம்புக் கூறாகிய பூசும் பணியையும், பதிட்டையும் செய்து கொடுத்தனரே

இளையநாயகனின் மரபில் வந்தவர்கள் மோழை கவுண்டம் பாளைய நகரத்தாருடன் இணைந்து திருச்செங்கோட்டு மலையில் உள்ள திருநாகேசுவரர் கோயிலில் பிரதிட்டைத் திருப்பணி செய்ததை இச்செய்யுள் விளக்குகிறது.

அரையநாட்டை ஆளுவோன் ஆகிய இளையநாயக்கனின் மரபில் வந்தவர்கள் தெய்வத்திருப்பணிகள் மேற்கொண்டது அற வழியில் சென்றதைக் காட்டுகின்றது இதில் ஆளுவோரின் குடும்பத்தாரால் மக்களுக்குத் தீங்கு நிகழாமல் பாதுகாத்திட்டது அறிய கிடக்கிறது.

கரூர் மாவட்டம் கரூர் வட்டம் வேட்டமங்கலம் புட்பவன ஈசுவரர் கோயிலில் உள்ள கி.பி 1227 இல் வீரராசேந்திரனின் 20 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பட்ட கல்வெட்டில், அரையநாட்டுத் துடுமலில் இருக்கும் காட்டு வேட்டுவரில் முத்தன் சன்கையேன் என்பவன் புட்பவன ஈசுவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்ததைக் குறிப்பிடுகிறது

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம் ஏழூர் பிள்ளையார் கோயில் இரண்டாம் சிங்கத் தூணில் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இக்கோயில் திருப்பணியின் போது வடகரையாற்றூர் புல்லை வேட்டுவர் திருநாடாழ்வானான வீரசிங்கன் செய்த திருப்பணிகளைக் கூறுகிறது. அரையநாட்டை ஆளுவோன் ஆகிய இளையநாயக்கனின் மரபில் வந்தவர்கள் மட்டும் அல்ல, அரையநாட்டு வேட்டுவக் குலப் பெருமக்களும் நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே தெய்வத்திருப்பணிகள் மேற்

கொண்டு அற வழியில் சென்றார்கள் என்பது இக்கல் வெட்டுக்களின் வாயிலாக அறியக் கிடக்கிறது

வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது

அரையநாட்டில் உள்ள பல கோயில்களுக்குப் பண்டாரங்கள் தான் பூசை செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர். அதன்படி, ஆறு விரல் அத்தியாண்டி என்பவரின் வகையினரைச் சார்ந்த வாரிசுகள் வெங்கரையம்மன் கோயில் உட்பட 32 கிராமங்களில் உள்ள கோயில்களுக்கும் பூசைசெய்து மணியடிக்கும் உரிமை பெற்றிருந்தனர்

இதன்படி **ஆறு விரல் அத்தியாண்டி** என்பவர் வெங்கரையம்மன் கோயில் உட்படச் சில கோயில்களில் பூசை செய்து வந்தார். அவர் பூசை செய்யப் போகும் போது, தன் பசு மாட்டின் மீதமர்ந்து தான் பயணம் செய்வார். தன் பசு மாட்டில் இருந்து கறந்த பாலைக் கொண்டுதான் தெய்வங்களுக்குப் பூசைகள் செய்வார்.

ஒருசமயம், வெங்கரையம்மன் கோயிலில் பூசைநடக்கும் போது ஆறு விரல் அத்தியாண்டி வருவதற்குக் கால தாமதமாகி விட்டது. பூசை மணியடிக்க வேண்டிய நேரத்திற்கு ஆறுவிரல் அத்தியாண்டி வராததால், அங்குக் குழுமியிருந்த பெரியோர்கள் வெளியூரைச் சேர்ந்த ஆண்டியை மணியடித்துப் பூசையை ஆரம்பிக்கக் கூறினர். அவரும் கோயிலுக்குள் சென்று மணியடிக்க ஆரம்பித்து விட்டார்.

அப்போது கோயிலுக்குள் நுழைந்த ஆறுவிரல் அத்தியாண்டி, வெளியூரைச் சேர்ந்த மாற்றான், கோயிலுக்குள் நுழைந்து பூசை மணியடித்ததைக் கண்டித்து வெளியூர் ஆண்டியின் காதை அறுத்து விட்டார். இந்த வழக்கு இளையநாயக்கரின் முன்னி லையில் விசாரணைக்கு வந்தது

இளையநாயக்கர், வழக்கைத் தீர விசாரித்துக் காதை அறுத்த ஆறுவிரல் அத்தியாண்டி, வெங்கரையம்மன் கோயிலில் உள்ள பூசை செய்யும் உரிமையில் கால் பங்கைக் காதறுபட்ட வெளியூர் ஆண்டிக்குக் கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கினார்.

வேலூரில் இருந்து ஜேடர்பாளையம் செல்லும் சாலையில், பாண்டமங்கலத்தை அடுத்துள்ள குப்புச்சிப்பாளையம் என்னும் சிற்றூரில் தான் வெங்கரையம்மன் கோயில் உள்ளது இக்கோயிலில் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படும் மிகவும் பழமை வாய்ந்த காளியம்மன் சிலை உள்ளது.

இக்கோயிலில், ஆறுவிரல் அத்தியாண்டிப் பண்டாரத்திற்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது இவர் இடது கையில் கோயில் மணியை அடித்துக் கொண்டு, வலது கையில் சாம்பிராணி போடும் தூபக்காலைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார். இச்சிலையை அடையாளம் காட்டிய, இக்கோயிலின் பரம்பரைப் பூசாரிகளுள் ஒருவரான ஆறுமுகம் பண்டாரம் மகன் இரவி பண்டாரம் அவர்கள், ஆறு விரல் அத்தியாண்டி பசு மாட்டின் மீதமர்ந்து வரும் செய்தியைக் கூறிக் கொண்டரசம் பாளையம் கேசி தியா கராசன் அவர்களிடம் இது சம்பந்தமான தாமிரப்பட்டயம் உள்ள செய்தியையும் கூறினார்.

பண்டாரங்களைக் கௌரவப்படுத்தியது

கிபி 1628 ஆம் ஆண்டில் இளையநாயக்கன் தனது மண் கோட்டைக்குச் சக்தி கொடுக்கத் தீர்மானித்தார். இளையநாயக்கனிடம் ஆலோசனை வழங்கிய பரமத்தி நாயக்கர் முத்தையன், வேல அய்யன், சேர்வைக்காரன் வெங்கடாசலம், தண்டக்காரர் பழனி, செல்லத்திருமண் மருத்துவர், குப்பன் தோட்டி, பெரியான் ஆகிய ஊர்த்தலைவர்கள் முனிக்குச் சக்தி கொடுக்க மண்பூசை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். அதன்படி காங்கேயம் நாட்டுப் புகழூரின் பொன்னாண்டி வகையறாவைச் சேர்ந்த, சித்தம்பூண்டி செங்கண்டியாண்டியின் மூன்றாவது மகன், திடுமல் பழனி யாண்டியைக் காவோடு எடுக்கச் சொல்லிக் காவோடு எடுத்துக் கோட்டையைச் சுற்றி வந்து, காவு கொடுத்துப் பூசையை முடித்துச் சக்திக்குத் தானமும் கொடுத்தார்கள்.

பூசையைப் போட்ட செங்கண்டியாண்டிப் பண்டாரத்திற்குப் பச்சைப் பவளம் பாஞ்சாலத் துப்பட்டியைப் போட்டு, செங்கண்டியாண்டியை இளையநாயக்கன் கௌரவப் படுத்தினார். பூசை செய்யும் போது உடன் இருந்த, மொளசி செப்புப் பண்டாரக் குருக்களுக்குக் காவித் துப்பட்டியையும், மற்றொரு பண்டாரத்திற்கு மஞ்சள் துப்பட்டியையும் வழங்கி அவர்களையும் இளைய நாயக்கர் கௌரவித்தார்.

செங்கண்டியாண்டியின் வகையறாவைச் சேர்ந்த, செம் பாண்டியின் பேரனும், சிதம்பர ஆண்டியின் மகனும் ஆகிய **கே. சி. தியாகராசன்** *முன்னாள் படைவீரர், சித்தம்பூண்டி கிராமம், கொண்டரசம் பாளையம், பரமத்தி வேலூர் தாலுக்கா அவர் களிடம் பெற்ற தாமிரப்பட்டயம் வாயிலாகவும் மற்றும் செவிவழிச் செய்தியின்படியும் இளையநாயக்கன் வழக்கை*

விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது, பண்டாரங்களுக்குத் துப்பட்டி கொடுத்துக் கௌரவப்படுத்தியது ஆகிய தகவல்கள் இந்நூலின் வாயிலாக வெளியிடப்படுகின்றன. ஓலைச் சுவடிகளில் இருந்து செப்பேடுகளில் பதிப்பிக்கப்பட்ட போது, மெய்கீர்த்திகள் பதிப்பிக்க வில்லை என்பதாக தெரிகிறது. எனவே, இச்செப்பேட்டில் மெய்கீர்த்திகள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

IX

சாதி மதப் பாகுபாடற்ற சமுதாயம் - ஒரு பொற்காலம்

அரையநாட்டின் குறுநில மன்னர்களான அல்லாள இளையா நாயக்கன்(கி.பி. 1580 - 1610), இளையநாயக்கன் (கி.பி. 1622 - 1655) ஆகிய இவர்களது காலத்தில், வேட்டுவ சமூகத்தாரும், இதர சமூகத் தார் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மிகச் சிறந்த தலைவர்களாக இருவரும் விளங்கினர்.

அல்லாள இளையான் செப்பேட்டில் காணப்படும் கபிலக் குரிச்சியைச் சேர்ந்த வள்ளுவர் மரபிலே தோன்றிய "பெருமாள் தம்புரான்" என்பருக்கு 24 நாட்டாரும் அறியப் பல சிறப்புகள் செய்து, கபிலக்குரிச்சி என்னும் கிராமத்தைத் தாரை வார்த்தான் அல்லாள இளையா நாயக்கன். மேலும் கபிலர்மலை மடம், திருச்செங்கோடு மடம், பழனிமடம் ஆகிய மூன்று மடங்களையும் பெருமாள் தம்புரான் என்பவருக்கு எழுதிக் கொடுத்தான். **"இதர சமூகத்தாரை அல்லாள இளையா நாயக்கன் எப்படி மதித்தான் என்பதற்கு ஆதாரமாய் இருப்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க கபிலர்மலைச் செப்பேடு ஆகும்"**

கி.பி 1628 ஆம் ஆண்டின் பண்டாரங்களிடம் உள்ள செப் பேட்டின் படி, இளையநாயக்கனிடம் ஆலோசனை வழங்கிய பரமத்தி நாயக்கர் முத்தையன், வேல அய்யன், சேர்வைக்காரன் வெங்கடாசலம், தண்டக்காரர் பழனி, செல்லத்திருமண் மருத்துவர், குப்பன் தோட்டி, பெரியான் ஆகிய ஊர்த்தலைவர்கள் முனிக்குச் சக்தி கொடுக்க மண்பூசை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இளையநாயக்கன் அவர்களின் ஆலோசனைப்படியே மண்பூசை போட்டு பண்டாரங்களுக்கு பாஞ்சாலத் துப்பட்டிகளை வழங்கி, பட்டக்காரன் என்ற பட்டத்தையும் வழங்கினான்.

கி.பி. 1584ன் "அல்லாள இளையான் செப்பேட்டில்" வன்னியர் களைப்பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. "மறத்துக்கு வன்னியன்"

என குறிப்பதாக அமையப் பெற்றுள்ளது. மேலும், இராசா வாய்க்கால் வெட்டும் பணிகளை வன்னியர் இன மக்களுக்கு வழங்கி, அவர்களையும் கௌரவித்தான்

வேட்டுவக் கவுண்டர், செங்குந்த முதலியார், மருத்துவர், வளையக்கார நாயக்கர், வண்ணார், பண்டாரம் ஆகிய ஆறு வகுப்பினரும் பரமத்திக் கோட்டையில் உள்ள கோட்டையண்ணன் கோயிலின் குடிப்பாட்டு மக்கள் என இக்கோயிலின் பூசாரி கோட்டையப்பன் மகன் தங்கராஜ் அவர்களின் வாயிலாக அறிய முடிகிறது இவர்கள் அனைவரும் ஒன்றுபட்ட குடிபாடுகளாக, ஒன்றுபட்ட சமுதாயமாக ஒற்றுமையுடன் இருப்பதை இன்றும் காணலாம். இதேபோன்று, வடகரையாற்றூரில் உள்ள வேட்டுவ குல மக்களின் குலதெய்வமான அல்லாளப் பெரியசாமி கோயிலில் மக்கள் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டுக் குடிபாடுகளாக இருப்பதை இன்றும் காணலாம்.

பண்டாரங்கள் தங்குவதற்கும், பூ கட்ட, சந்தனம் அரைக்க மடம் கட்டிக் கொடுத்தான் அல்லாள இளையநாயக்கன்.

வேட்டுவ ராசாக்களின் வரலாற்றில் அனைத்துச் சமுகத் தினரும் பெருமைக்குரியவர்களாக இருந்தனர் என்பதைத்தான் இவ்வரலாற்று நூல் தெளிவு படுத்துகிறது.

நாடாளுவோரால் குடி மக்களுக்குத் தீமை நிகழாமல் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் சாதிச்சண்டை, உட்பூசல் நிகழாமல் சமூக நீதி பாதுகாக்கப்படும்.

எனவே, வேட்டுவர்களது ஆட்சியில் அனைத்து இனத்தவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். சாதி மதப் பாகுபாடு அற்ற சமுதாயம் நிலை நிறுத்தப் பட்டது. அதனால், இன வேற்றுமைகள் எதுவும் இன்றி, மனித சமுதாயம் மேம்படுத்தப்பட்டது. அனைத்துச் சமூகத்தாரையும் சம அந்தஸ்துடன் நடத்திக் குடி மக்களுக்குள் தீமை நிகழாமல் பாதுகாத்த இவர்களது காலம் - ஒரு பொற்காலம் என்றால் அது சரிதான்.

வரலாறு இரத்தத்தினால் வரையப்படுகின்றது

வரலாறு என்றாலே அதில் போர்ச் செய்தி தான் காணப்படும். அதுதான் வரலாறு என்றும் நம்பப்படுகின்றது. மாபெரும் வீரர் அலெக்சாண்டர் இந்தியாவின் மீது.

படையெடுத்ததன் காரணமே இங்குள்ள செல்வங்களை அள்ளிச் செல்வதற்குத்தான். கஜினி முகமது இந்தியாவின் மீது 17

முறை படையெடுத்தான் என்ற வரலாற்றைக் காணுகிறோம். அவன் எதற்காகப் படையெடுத்தான்? கொள்ளையடிப்பதற்காகத்தான் படையெடுத்தான்.

எனவே வரலாறு என்பது போரிடுவதும், போர்க்கொள்ளை செய்வதும் என்பதாகத்தான் உள்ளது. போரில் பல்லாயிரம் உயிர்கள் போகும். இராசாக்களும் செத்தொழிவார்கள், மக்களையும் சாகடிப்பார்கள்.

"போர் சொர்க்கம் வழங்கும் வாய்ப்பு உள்ள போதெல்லாம் போர் மேற்கொள்க, அதுவே அரசருக்கு அறம்" என்று மனுநீதியும் கூறுகிறது.

எனவே வரலாறு என்பது இரத்தத்தில் தான் எழுதப்படுகின்றது ஆனால் வேட்டுவர் குலத் திலகங்கள் "அல்லாள இளையாநாயக்கன்", "இளையநாயக்கனின்" வரலாறு போர்ச் செய்திகளை விட ஆக்கப்பூர்வமான செய்திகளுடன், தெய்வதிருப் பணிகளையும் சேர்த்து மிகவும் தூய்மையானதாகக் காணப் படுகிறது.

மக்களுக்கு மனஅமைதியைப் பெற்றுத் தந்த வேட்டுவர்கள் – ஓர் ஆய்வு

அல்லாள இளையா நாயக்கன் வாள் வீச்சில் வல்லவன், மற்போர் புரிவதிலும் வல்லவன். மேலும், பல வீர விளை யாட்டுக்களிலும் சிறந்தவன். அதனால் வலிமையான தோள்களை உடையவன். இவ்வேட்டுவனின் வழி வந்த மாபெரும் வீரனான இளையநாயக்கன் மைசூர் நஞ்சையன் கவர்ந்து சென்ற பொன்னையும் பொருளையும் மீட்டு வந்தவன் என்பதைத் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை எனும் இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும், காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை இவைகளை எல்லாம் கொண்டிருந்ததினால் படையிலும் வலிமையானவன் என்பதை அறிய முடிகின்றது.

தனது காலாட் படையினரைக் கூட இளையநாயக்கன் நாடு பிடிக்கும் ஆசையில் பயன் படுத்த வில்லை. மதுரை நாயக்கர்களுக்கு நட்பு முறையிலோ அல்லது ஒப்பந்த முறையிலோ அல்லது கள்ளர்களை ஒழிக்க வேண்டும் என்ற கடமை உணர்வு கொண்ட நீதி வழியிலோ திருமலைநாயக்கருக்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளான்.

அரையநாட்டு ஆட்சியாளர்கள் கள்ளர்களை ஒடுக்குவதில் தங்களது வீரத்தைக் கொண்டு அதில் முழுவெற்றி பெற்றனர் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மக்கள் மன அமைதியுடன் வாழக் கள்ளர்களை ஒடுக்குவதுதான் சிறந்த வழி என்பதை ஆட்சியாளர்கள் மட்டும் அல்ல அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

"கும்பிட்டவரை வெட்டாத குருகுல வம்சம் வேட்டுவர்கள்" என்ற தொடர் அண்ணன்மார் காவியத்தில் காணப்படுகின்றது.

எனவே, வீராதி வீரனான இவனது செயல்பாடுகள், அண்டைநாடுகளை ஆக்கிரமிப்பதிலும், படையெடுத்துச் சென்று வெற்றிபெறுவதிலும், நாட்டை விரிவு படுத்துவதிலும் ஈடுபட்டுத் தன்னை எதிர்ப்பவர்களை எளிதில் வெற்றி பெறக்கூடியவனாகவும், மக்களை வாட்டி வதைப்பவனாகவும், சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டவனாகவும் வரலாறு படைத்திருக்க முடியும்.

ஆனால், மற்ற போர் வெறியர்களிடமிருந்து இளையநாயக்கனும் அவனது முன்னோர்களும் மாறுபடுகின்றனர். மேலும், பொதுப்பணிகள், தெய்வத்திருப்பணிகள் நிறைவேற்றப் பட்டன. கோட்டையைக் கட்டினர், ஏரியை அமைத்தனர். இதன் மூலம் மக்களை உழைக்க வைத்தனர், பாடுபட வைத்தனர். குறிப்பாக இராசா வாய்க்கால் வெட்டி மக்களின் நிலையை உயர்த்தினர். எனவே, நாட்டு மக்களின் நலனில் மட்டும் கவனம் கொண்டவர்களாக விளங்கியுள்ளனர்.

அரையநாடாகிய தன் நாட்டில் மட்டும் அல்ல, தொலை தூரங்களில் உள்ள கோயில்களிலும் தெய்வத்திருப்பணிகள் செய்த புகழை இளையநாயக்கனும், அவனது முன்னோர்களும் பெறுகின்றனர். கபிலர்மலை, திருச்செங்கோட்டு மலை ஆகிய இடங்களில் இவர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டு அதன் மூலம் மக்கள் மன அமைதியைப் பெறச் செய்தனர்.

பிற்கால மனித குல வரலாற்றில் மக்களின் நன்மையை மட்டும் கருத்தில் கொண்டு, அவர்களின் மேம்பாட்டுக்காக இடைவிடாது பாடுபட்டவர்களாக வேட்டுவர்கள் தோற்றம் அளிக்கின்றனர். எனவே, நீண்ட காலத்திற்கு முன்னரே மக்களை அமைதி வழிக்கு அழைத்துச் சென்று, நாட்டின் அமைதிக்கு வழி வகுத்தவர்கள் அரையநாட்டின் குறுநில மன்னர்கள்.

XI

மதுரை திருமலை நாயக்கர் வலு இழந்தார்

கெட்டிமுதலியின் வரலாறு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியிட்ட பாளையப்பட்டுக்களின் வரலாறு தொகுதி 1 இல் (பக்கம் 2 , 3) உள்ள கெட்டிமுதலியின் வரலாற்றை, அதில் உள்ள படியே கீழ்கண்டவாறு வழங்கப்படுகின்றது.

" மதுரை பாண்டிய சமஸ்தானத்துக்குக் கர்த்தராகிய திருமலை நாயக்கரவர்கள் துரைத் தனத்தில் அவரிடத்தில் காரிய கர்த்த யோக்கியமாய் இருந்த கொமாற என்றும் கெட்டி என்றும் ரெண்டு பேர் அண்ணன் தம்பிகள் ஊழியம் பண்ணிக்கொண்டிருந்த போது, அவாள் இடத்தில் ரொம்பவும் பிரியமாய் இருக்கும் காலத்தில் ஒரு நாள் ஆலயத்தின் மேற்படி நாயக்கரவர்கள் அப்பியங்கள் தானம் பண்ண பொண் ஆலயத்தில் அவருடைய கிரீடம் முதலான ஆபரணங்கள் இங்கே வச்சியிருக்கிறதே இந்த ஊழியம் பண்ணப்பட்ட தம்பியான கெட்டி என்பவன் ராசாவினுடைய கிரீடம் முதலான ஆபரணங்கள், வஸ்திரங்கள் தாவன கறிச்சுக்கொண்டு ராசாவினுடைய படுக்கையின் மேல் சாஞ்சிக் கொண்டு இருந்து அதுக்கு மேல் ராசாவினுடைய சிம்மாசனத்தில் நித்திரை பண்ணினான்.

அந்த சமயத்தில் ராசாவுக்கு ஊழியம் பண்ணிக்கொண்டிருந்த அண்ணனான கொமார யென்றகுறவன் முன்னதாக வந்து ராசாவுக்கு அனுடானத்துக்கு வேண்டிய விஸ்தாபரணங்கள் எடுத்து கொடுப்பதற்காக அரண்மனை முன்னுக்காக வந்தான்.

வந்த இடத்தில் இந்த தம்பியான கெட்டி, ராசாவினுடைய ஆபரணங்கள், வஸ்திரங்கள் முதலானதுகள் தறீச்சுக்கொண்டு சிம்மாசனத்தில் இருக்கிறதைப் பாராமல் தன்னுடைய ஊழியத்தில் சாக்கிரதையாயிருந்தான்.

திருமலை நாயக்கரவர்கள் அப்பியங்கண்ட ஸ்தானமான உடனே அரண்மனைக்குப் போகிற போது, தன்னுடைய ஆபரணங்கள் முதலானது ஊழியக்காரன் தறிச்சுக்கொண்டு சிம்மா சனத்தின் மேல் நித்திரை போகிறதைப் பார்த்து யெழுப்பாமல் வந்து விட்டார்.

திருமலை நாயக்கர் போசனத்துக்குப் போன சமயத்தில் தம்பியானவனைக் காணாமேயென்று தேடிக் கொண்டு வந்த

இடத்தில், தம்பி அலங்காரத்துடனே சிம்மாசனத்தில் இருந்ததைப் பார்த்து ரொம்பவும் மனசுக்கு விசனம் தோன்றி ராசா இது வழியாய் பார்த்துப் போயிருப்பார் என்றும், இனிமேல் ஆக்கினை பன்னிவிப்பார் என்றும் பயம் தோன்ற, தம்பியை எழுப்பி கிரீடம் முதலான ஆபரணங்கள் எல்லாம் அவ்விடத்திலேல கழட்டி விட்டுப் போட்டு, அண்ணன் தம்பி இரண்டு பேரும் மதுரையை விட்டுப் பராரியாய்ப் புறப்பட்டு வந்து, அமராவதி பட்டணத்து பாளையக்காரன் சீமையைச் சேர்ந்த காடையப்பேட்டைக்கு வந்து ஒரு நந்தவனத்தில் படுத்துக் கொண்டார்கள். அவாருடைய சிரமத்துனால் சூரியன் உதிச்சு பிரகாசமாகுற வரைக்கும் நித்திரை போய்க் கொண்டிருந்தார்கள்.

அந்த சமயத்தில் நாகசர்ப்பம் வந்து இந்த தம்பியான கெட்டி எனப்பட்டவனுக்கு நிழலாய் நின்றுகொண்டிருந்தது. அந்த சமயத்தில், அந்த நந்தவனத்திற்கு கர்த்தராகிய மருத்துவன் வந்து பார்த்து இந்த சர்ப்பம் தீண்டி இருக்கும் என்று மனசுக்குத் தோன்றி கை சப்தம் பண்ணினான். அந்த சர்ப்பம் போய் விட்டது.

இவாளை எழுப்பிய மருத்துவனுக்கு சந்தானம் இல்லாத படியினாலே அவர்களை அதறணை பண்ணி சேமலாபமா விசாரிச்சு, தன்னிடத்தில் வைத்துக் கொண்டு, தன்னுடைய வைத்தியத் தொழிலை கற்பிச்சுக் கொண்டு தன்னோடு வைத்துக் கொண்டிருந்தான்.

இப்படிக்கு மேற்படி தொழில் சௌக்கியமாய் இருக்கிற காலத்தில், அக்காலத்துப் பாளையப்பட்டுக்குக் கர்த்தரான வேடர் வமுசத்தில் அமராவதி பட்டினத்தில் குன்னவேடர் எனப் பட்டவனுக்கு முதுகு பொளவை வந்து உபத்திரமாய் பட்டுக் கொண்டிருந்தான். அந்த சமயத்தில் இந்த கெட்டி எனப்பட்ட பண்டித தொழில் செய்து வருபவன் அந்த பாளைய வேடனுக்கு மொகல் மாமுகம் அளைப்பிவிச்சு இலுப்புனாலே பக்ஷம் குடுங்கள் பண்ணி அந்த தகடுகளுக்கு துவாரங்கள் விட்டு அந்த மாமுசங்களையும் விச்சு அந்தயிலுப்புக் குடுக்கனும்.

முதுகிலே வச்சுக் கட்டி மூணுகட்டு கட்டினயெடத்தில் ரெனுமா ராச்சியாய் முதுகிலே துவாரம் இருந்து விழுந்து மூங்கில் கௌலினால் தான் அதினாலேயிருக்கப்பட்ட சியிகளையும் உறிஞ்சி உமிஞ்சி போட்டான். அதனாலே அந்த பாளையக் காரனுக்குச் சரீரம் சொந்தமாச்சுது.

அதுக்கு மேல் அந்த பாளையக்காரனுக்கு இந்த மருத்து வனிடத்தில் ரொம்பவும் சந்தோஷமாயி, இவனுடைய சேமலாபம் விசாரித்து ஒளுகுரான யென்ன பேரு பாதி பண்ண போரே யென்றும் எனக்குப் புத்திர சந்தானம் இருக்கிறது. ஆனாலும் என்னுடைய ராஜ்யத்துக்கு வடக்கே போகிறேன் என்று சொல்லி என்னுடைய சரீரத்தில் இருக்கப்பட்ட சீயை உறிஞ்சி ராச்சியம் பண்ணப்பட்ட படியினாலே நீ இன்று போல் "சீயாள கெட்டி" என பெயரும் கொடுத்து அமராவதி பட்டனத்துக்குச் சேர்ந்த ராச்சியங்களையும் கொடுத்து விட்டு தான் புறப்பட்டுப் போனான்".

கெட்டி முதலியோடு சமாதானம்

ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு அமராவதி பட்டினத்தை ஆட்சி புரிந்த சீயாளி கெட்டி முதலி, தலைவன் "வணங்காமுடிக் கெட்டிமுதலி" என்று பெயர் வைத்துக் கொண்டு மதுரைத் திருமலை நாயக்கர் ஆட்சிக்குக் கட்டுப்படாமல் தன் பெயரில் கல்வெட்டுக்கல் பொறித்தான். திருமலை நாயக்கர் தனது தளபதி இராமப்பய்யனை ஈரோட்டுக்கு அனுப்பி வணங்காமுடிக் கெட்டி முதலியை அடக்கும்படிக் கூறினார். இராமப்பய்யன் பலநாள் போரிட்டும் கெட்டிமுதலியை அடக்க முடிய வில்லை. தன் இயலாமையையும், கெட்டிமுதலியின் வீரம் பற்றியும் இராமப்பய்யன் கடிதம் கண்ட திருமலை நாயக்கர் "தம்மிடத்தில் ஊழியம் பண்ணப்பட்டவன்" என்ற அபிப்ராயத்தில் கெட்டி முதலியோடு சமாதானம் செய்து கொண்டான்

கட்டி முதலிகள் – ஓர் ஆய்வு

"வெள்ளாளரில் மேம்பட்ட தாரமங்கலத்து முதலிகள்" எனப்படும் கட்டி முதலிகள் பரம்பரை பற்றிப் பார்ப்போம்.

கி.பி.1289 யில் கொங்கு நாட்டை ஆண்ட சடையவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு (24/1900 A R E) "தாரமங்கலத்து முதலி கள் நீருணி இளையான் உடையப்பன்" என்ற வெள்ளாளத் தலைவன் பற்றிக் குறிப்பிடுகிறது. இதே கால அளவில் கிடைத்த மற்றொரு கல்வெட்டு "நீருணி இளையான். நல்ல உடையப்பன் தங்கள் பிதாக்கள் பேர் வைத்து இளைய பெருமாள் ஸ்ரீ லட்சுமண சதுர்வேதி மங்கலம் " என்று பெயரிட்டுள்ளனர். முற்பட்டு கொங்கான வீர சோழ மண்டலம் என்ற பெயர் அதற்கு இருந்தது தெரியவருகிறது (A R 25/1900). சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கி.பி.1290 இல் அமைந்த கல்வெட்டு இளையான் நல்ல உடையப்ப முதலியார் தோற்றுவித்த கோயில் "இளமீசுரர் கோயில்" என்று

அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. (AR 23/1900) முப்பவை சமுத்திரத்தில் குடியன் ஆண்டை பிள்ளையப்பன், குடியன் நக்கன் முதலி போன்றவர்கள் குறிப்பிட்ட ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

மேலே சொல்லப்பட்ட நீருணி இளையான் நல்ல உடையப்ப முதலி காலத்தில் கோயிற் குடிகளாக முப்பவைச் சமுத்திரத்தில் குடியன் நக்கன் முதலியை அறிகின்றோம். "நீருணி இளையான்" என்ற சொல் வேளாண்மை செய்த வெள்ளாளராக அவரை அடையாளம் காட்டும். வேளாளருக்கு இளந்தாரி மன்னர் என்ற பெயர் இருப்பதாக இலக்கியங்கள் அடையாளமிடுகின்றன. கிபி 18 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஈழ நாட்டு இலக்கியமான பஞ்சவண்ணத்தூது வேளாளத் தலைவனை இளந்தாரி வேந்தன் என்று குறிப்பிட்டுக் கூறிப் பெருமைப் படுகின்றது. "நீருணி இளையான்" என்ற திருநாமமிட்டு அழைக்கப்பட்டதற்கான காரணம் ஆராய்ச்சிக்குரியதாகும். தொண்டை மண்டல முதலிகள் என்பார் தொண்டமான் இளந்திரையன் மரபிற்கு உரிமை கோரிய வேளாண் மரபினர். கல்வெட்டுக்களில் வேளாண்குடி முதல்வன் என்று தம்மை அடையாளம் காட்டிப் பெருமைப் படுகின்றனர். இளைமையார், இளமக்கள், பேரிளமையார் என்ற சொற்கள் குறிப்பிட்ட சில மரபினர்களைக் கல்வெட்டுக்களில் காண்கிறோம். இளையர் என்ற சொல் சங்க காலங்களில் வேடர் வேட்டுவரைக் குறித்துக் கூறுகிறது. கோயிற் குடியிற் இடம் பெற்றிருந்த சிலரையும் குறிப்பிடுகின்றது. இச் சொற்களோடு வேளாளர்கள் தொடர்புடையவர். காரிகைக் குளத்தூர்க் குளத்துளான் திருச் சிற்றம்பல முடையானான பெருமானம்பியாரான பல்லவரையன் என்ற சோழனின் அமைச்சன் இளையவன் மரபிலே வந்ததாகக் கல்வெட்டில் சான்று உண்டு. மற்றொரு கல்வெட்டில் சிறு குளத்தூர் குடியினர் என்றும் அடையாளமிடப் படுகின்றனர். நீருணி என்பது குளம் என்பதாகப் பொருள் கொள்ளப் படும். நீர் நிறைந்த ஊருணி என்பதின் சுருக்கமே நீருணி ஆகலாம்.

கி.பி 13 ஆம் நூற்றாண்டிலேயே தாரமங்கலத்து முதலிகள் சிறப்பாக வாழ்ந்து தம் பெயரால் "இளமீசுவரம்" என்று பெயரிட்டுள்ளனர். இதுபோன்று ராமனின் தம்பி இலக்குவன் சூரிய குலத்தவரான சோழர்கள் தம்மை இராமனின் குலத்திற்கு உரிமை கூறிச் செப்பேடுகளில் குறிப்பிடுகின்றனர். பெருமாள் திருமொழி இராமனை உய்யக் கொண்ட வீரன் என்று குறிப்பிடு கின்றது. சோழர்கள் தம்மை உய்யக்கொண்டார் என்று

கூறிக்கொண்டனர்.கொங்குச் சோழர்களின் நிலங்களில் உய்யக் கொண்டான் மன்னறை என்ற பெயர் காணப்படுகிறது இராமனின் தம்பி இலக்குவன் அவனின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டதைப் போன்று இளையான் குடியாகிய தொண் டைமான்கள் தம்மை இலட்சுமணன் என்று கருதி இளையபெருமாளாகச் சதுர்வேதி மங்கலம் என்றார் போலும்

கொங்கான வீரசோழ மண்டலத்துப் பகுதியை ஆண்ட சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 15 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் பூவாணி நாட்டவரும், இந்நாட்டுத் தாரமங்கலத்துப் பகுதி முதலிகளில் நீருணி இளையான் நல்ல உடையப்பர், தங்கள் முதலியார் பேரால் வைக்கிற இளைய பெருமாள் அகரமான பிராமண பட்டர்களுக்கு இதய பூர்வ தானமாகக் கொடுத்த குளமானது, தமக்கு காணியான அமரகுன்றில் பற்றில் செயப்பெருமாள் ஏரி என்ற குளத்தையும், நீர் பாயும் நஞ்சை இவைகளைப் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கியுள்ளார். கிபி 13 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14 ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலும் அமரகுன்று (அமரகுந்தி) தாரமங்கலத்து முதலிகளின் ஆதிக்கத்தில் இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் அமரகுன்றி என்ற ஊர் தாரமங்கலத்து முதலிகள் வம்சத்தவர்க்கு உரிமையுடைய ஊராகும்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சி ஆண்டு 28 இல் “நாடுடைய கண்டிய தேவர்” என்ற ஒரு தலைவனைப் பாண்டியர் இப்பகுதிகளுக்கு ஆளுமைக்கு நியமித்துள்ளனர். நீருணி இளையான் நல்ல உடையப்பன் ஆண்ட பகுதிகளைக் கொடுத்ததாகத் தெரிகிறது. ஏனெனில், நாடுடைய தேவர் என்று சொல்வதாலேயே கண்டிய தேவர் அந்தப் பகுதியை ஆண்டதாகத் தெரிகிறது. கண்டிய தேவர் என்பவர் வேடர் ஆகலாம் (தென் இந்தியக் கல்வெட்டுச் சாசனங்கள் தொகுதி (VI / SII - எண் 30) இக்கால அளவில் வேளாளரான தாரமங்கலம் முதலிகள் ஆட்சியிலிருந்து நீக்கம் பெற்று இருந்தனரா? இல்லையேல், நாடுடைய கண்டியதேவரின் ஆளுமையில் இருந்தனரா தெரிய வில்லை. எனினும் வேடர்கள் அமரகுந்தியினைத் தலைமை யிடமாகக் கொண்டு ஆண்டதாக நாம் கருதலாம்.

பாண்டியர்களுக்குப் பிறகு போசள வீர இராமநாத தேவர் காலத்தில் ஆட்சி ஆண்டு 20 இல் தாரமங்கலத்து முதலிகள் நீருணி பெரிய இளமன் மற்றும் வேளாளர் மரபினர் வணங்காமுடி

முதலியார் மீண்டும் காணி உரிமை பெற்றதாகத் தெரிகிறது. தென் இந்தியக் கல்வெட்டுச் சாசனங்கள் (VI/SII - எண் 29)

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் சுட்டிக்காட்டப்படும் வீரவசந்தராயர் ஆட்சியாளர் ஆவார் தென் இந்தியக் கல்வெட்டுச் சாசனங்கள் (VI/SII - எண் 19). இவரது காலத்தில் இம்மடி இளம நயினா முதலியார் வணங்காமுடியின் நல்லுடையப்பர் தாரமங் கலம் பகுதியின் உரிமையாளராகக் குறிப்பிடப்படுகிறார். தாரமங்கலம் நல்பள்ளியான திருத்தோன்பட்டியைத் தம் மரபுப் பெயராக இளம் சமுத்திரம் என்று பெயர் மாற்றம் செய்துள்ளார். இளம் என்ற பெயர் இளம்தாரி மன்னர்களை உணர்த்திக் காட்டும்.

அச்சுதராயர் காலத்தில் (1529 - 1542) வணங்காமுடி முதலியார் நல்ல உடையப்பன் அவர்கள், புலிக் கொடிக்கு உரிமை கோருகிறார். மேலும், சிதம்பரத்தில் வணங்காமுடி மடம் என்று தம் திருநாமத்தால் ஒரு மடம் தோற்று வித்தார். (தென் இந்தியக் கல்வெட்டுச் சாசனங்கள் (VI/SII- எண் 19) இதே அச்சுதராயர் காலத்தில் தன்னை "இம்மடி கட்டி முதலியார்" என்று அழைத்துக் கொண்டார். தென் இந்தியக் கல்வெட்டுச் சாசனங்கள் (VI/SII - எண் 28).

கி.பி. 1545 இல் அமைந்த சதாசிவராயரின் இளமீசுவரர் கோயில் கல்வெட்டு "வணங்காமுடி சமுத்திரம் என்றும் நாமதேயம் பண்ணி" என்பதால் வணங்காமுடி என்ற பட்டத்தை இம்மரபினரில் ஒருவர் சூடினார் என்று தெரிய வருகின்றது. வெள்ளாளரின் சிறப்புப் பெயராக "வணங்காமுடி" என்ற பெயரைக் கருத முடிகிறது.

சீயாலகெட்டி முதலியார் என்ற மரபினன் கல்வெட்டு சேலம் மாவட்டம் இலவம்பட்டி எனும் ஊரில் இருந்து கிடைக்கிறது. இதன் காலம் கி.பி.1655 ஆகும். இக்கால அளவில் மதுரை நாயக்கர்கள், விசயநகர ஆட்சியாளர்களுக்கு விரோதமாகத் தனித்துச் செயல்பட்டனர். இலவம்பட்டி, இளவம்பட்டி என்பதன் திரிபுப்பெயராகும். "பூவாணியநாட்டிற்குச் செல்லும் பிரதான தலமான தாரமங்கலத்தில் வாழ்ந்திருக்கும் நாடு வாழி வெள்ளாழர் நிலங்கிழார் வணங்காமுடி வண்ணத்தடுக்கு, வாடாத மாலை புலிக்கொடி, வில்கொடி மகரக்கொடி, சிங்கக் கொடியும் மன்னர் வணங்கினாலும் தான் வணங்காத மத்ச குடோரி விருதும் படைத்து" என்பதால் இம்மரபினர் அரசமரபினருக்குரிய நாடு வாழி பட்டத்தைச் சூடிய வெள்ளாள நிலக்கிழார் பிரிவினர் என்று

தெரிகிறது. புலிக்கொடி (சோழன்), வில்கொடி (சேரன்), மகரக் கொடி (மீன் கொடியுடைய பாண்டியன்), சிங்கக்கொடி (ஈழ்ர் & அரசமரபினர்க்கே உரித்தது) ஆகிய கொடியுடைய அரசமரபினர் பிறரை வணங்கினாலும் தாம் எவரையும் வணங்காதவர் என்று கூறியுள்ளார். இக்கால அளவிலேயே மதுரை நாயக்கர்களின் பகைமை ஏற்பட்டிருத்தல் கூடும்.

எனினும் அமரகுந்தி ஆட்சியாளராகிய தாரமங்கலத்து முதலிகள் வெள்ளாள அரசர் என்றும் கி.பி.13 ஆம் நூற்றாண்டி லேயே இவர் சில பகுதிகளை ஆண்டமையாலேயே "இளைய பெருமாள்" இளமீசுவரம் என்று பெயரிட்டுக் கொண்டனர். கி.பி.13 ஆம் நூற்றாண்டில் சுட்டிக்காட்டப்படும் இம்மரபினர் பாண்டியர் ஆட்சிக் காலத்திலேயே தம் ஆட்சிப் பகுதியை வேட்டுவரிடம் இழந்து போய் கன்னடநாட்டினனான போசால மன்னரிடம் இப்பகுதிகளைத் திரும்பப் பெற்றுள்ளனர். சில இடங்களில் வேட்டுவ ராசாக்களிடமும் தம் நிலப்பகுதியை இழந்து இருத்தல் கூடும். பெரிய இடைவெளியில் ஆட்சி இல்லாத நிலை தெரிகிறது. வேறு கல்வெட்டுக்களோ, செப்பேடுகளோ இல்லாத நிலையில் வேறு கருத்துக் கொள்ள முடியாது. இருப்பினும் வெள்ளாள ஆட்சியாளர்கள் பிற ஆட்சியாளரால் நீக்கப்பட்டு வேடராகிய வேட்டுவர் ஆட்சி ஏற்பட்டு இருந்து பின்னர் ஏற்பட்ட மாற்றத் தால் விசயநகரத்தார் கெட்டிமுதலி மரபினரை அங்கீகரித்து வைத்து இருக்க வேண்டும். விசயநகரத்தார்க்கும் மதுரைத் திருமலை நாயக்கர்க்கும் ஏற்பட்ட மோதலில் கெட்டி முதலிகள் விசய நகரத்தாரோடு சேர்ந்து பகைமை பாராட்டி இருத்தல் கூடும். கெட்டிமுதலி என்ற திருநாமம் உடையவர்கள் என்று கூறப்படும் கெட்டி முதலிகளின் முன்னோர்களான நல்ல உடையப்ப முதலியார் சீயால கட்டி என்ற பெயரைப் பெற்றிருக்க வில்லை. ஆதலால் சீயால கெட்டி என்ற பெயர் அமரகுந்தியின் பழைமை யான ஆட்சியாளரால் தான் தரப்பட்ட பெயராகவே தெரிய வருகிறது.

> **" நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,**
> **தொன்னரும் கடும் திறன் கங்கன், கட்டி,**
> **பொன் அணி வல் வில் புன் துறை"**

அகநானூறு 44

சங்ககாலக் கட்டி "பல்வேற்கட்டி" என்று குறிப்பிடப்பட்ட வீரக் குடியினன். தொண்டமான் இளந்திரையன் குலத்திலே பிறந்த சோழரின் குமாரவர்க்கம் என்று கானாட்டு வரலாறு தொண்டை

மண்டல முதலிகளைக் கூறுகிறது. சீயால கட்டி முதலியார் தொண்டை மண்டல வேளாளர் என்று அறியப்படுகின்றது.

அகநானூற்றில் காணப்படும் கட்டி சங்க காலத்திற்குத் தொடர்புடையவர். "தொண்டை மண்டல முதலியார்" என்று பெருமைப்படும் இம்மரபினரைச் சங்ககாலக் கட்டி என்று பொய்யு ரைத்துக் கூறுவது பொருத்தமானதாகப்பட வில்லை. எனக்குத் தெரிய மைசூர் மாநிலத்தில் கட்டியென்று பலரும் பெயர் வைத் துள்ளனர். இந்திய அளவீட்டுத் துறை இயக்குனராக இருந்த தொல்லியல் அறிஞர் என்பார் திருநாமம் கட்டி என்பதாகும். எனவே, கட்டி முதலி என்பவர்கள் தொண்டை மண்டல வேளாளர் என்று பெருமைப் படுபவர்கள்.

பூர்வ குடியினரான வேடராசாக்கள் தாரமங்கலத்தில் ஆளுமைத்திறன் குறைந்திருந்த போது நீருணி இளையான் உடையப்பன் என்ற வெள்ளாள தலைவன் ஆட்சி பொறுப் பேற்றிருக்க வேண்டும். இதற்குப் பிறகு மீண்டும் வேடர்குலத் தலைவர்கள் ஆளும் திறன் பெற்று ஆட்சிப் பொறுப்பைத் திரும்பப் பெற்றிருக்க வேண்டும்.

புலவர் செ. இராசு அவர்கள் தனது ஈரோடு மாவட்ட வரலாறு (பக். 79,80 இல்) என்ற நூலில் "மைசூர் உடையார் மரபில் தொட்ட தேவராயர் (1659-1673) பட்டத்திற்கு வந்தார். அப்போது நாடு இழந்த விசய நகர மன்னன் மூன்றாம் சீரங்கன் மதுரை சொக்கநாத நாயக்கரிடம் (1659-1682) அடைக்கலம் புகுந்திருந்தான்" எனக் குறிப்பிட்டுள்ளார். இதேபோல, நாடு இழந்தவர்கள் அல்லது தோல்வியைத் தழுவியவர்கள் மீண்டும் ஆட்சி செய்யும் உரிமை யைப் பெறுவதற்காக அடைக்கலமாவார்கள். இவ்வழியில் கெட்டி முதலிகள் திருமலை மன்னரிடம் அடைக்கலமாகப் புகுந்து அவருக்கு ஊழியம் செய்யும் நிலையைப் பெற்றிருக்க வேண்டும்.

மருத்துவரிடம் , மருத்துவம் பயின்றதினால், எவராலும் தீர்க்க முடியாத பொலவு நோயைத் தீர்க்கும் ஆற்றல் பெற்று, அமரகுந்தி நாட்டுச் சிற்றரசனின் அல்லலைத் தீர்த்து மீண்டும் ஆட்சியுரிமை பெற்றிருக்க வேண்டும் எனலாம். கோயமுத்தூர் ஜில்லா, அந்தியூர் தாலுக்கா, சரம்பள்ளி கிராமம் கணக்குப்பிள்ளை அவர்களின் ஓலைச் சுவடி கையெழுத்துப் பிரதியைப் பதிப்பித்த தொல்பொருள் ஆய்வுத் துறை இதனை கூறுகிறது. எல்லா ஆவணங்களையும் ஆராய்ந்து அறிந்து உணர்வதோடு கல்வெட்டு ஆவணங்களுக்கே முக்கித்துவம் அளித்தல் அவசியமாகும்.

அரசியல் சூழ்நிலை மாறியது

அமராவதிப் பட்டினத்தை ஆட்சி புரிந்தவன் குன்னவேடன். குன்னவேடனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவன் சீயாளி கெட்டி முதலி "சீயாளி கெட்டிமுதலி" என்பவன், மதுரைத் திருமலை நாயக்கர் ஆட்சிக்குக் கட்டுப்படாமல் தன் பெயரில் கல் வெட்டுக்கள் பொறித்தான் எனவே, சீயாளி கெட்டிமுதலி திருமலை நாயக்கருக்குக் கட்டுப்பட வில்லை என்பது புலனாகிறது.

ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ள காடையூர்ப் பட்டயம் வாயிலாக, "திருப்பூர் கோட்டையில் ஆட்சி புரிந்த வேட்டுவகுலத் தலைவர் கோப்பண கவுண்டர் அவர்கள், மதுரைத் திருமலை நாயக்கருக்குக் கட்டுப்படாமல் இருந்ததால், திருமலை நாயக்க மன்னர் காடையூர் பெத்தான் காங்கய மன்றாடியாரைக் கொண்டு திருப்பூர் கோட்டையில் ஆட்சி புரிந்த வேட்டு வகுலத் தலைவர் கோப்பண கவுண்டரை வெற்றி கொண்டதாக" அறிய முடிகிறது. எனவே, கெட்டி முதலியைப் போலவே கோப்பண கவுண்டர் அவர்களும் மற்றும் அனைத்து வேட்டுவர்களும் ஒன்றிணைந்து திருமலை நாயக்கருக்குக் கட்டுப்பட வில்லை என்பது புலனாகின்றது.

இந்தகாலக்கட்டத்தில் பல குறுநில மன்னர்களைப் போல **இளையநாயக்கனும் மதுரைத் திருமலை நாயக்கர் ஆட்சிக்குக்** *கட்டுப்படாமல் தன் பெயரில் கல்வெட்டுப் பொறித்துள்ளான் இளையநாயக்கனது வேலாகவுண்டம்பாளையம் கல்வெட்டில் அரசரது பெயர் இல்லாமல் இருப்பது இதனை உறுதிப் படுத்துகிறது மேலும், இக்கல்வெட்டு தெய்வத்திருப்பணியைப் பற்றிக் கூறுவதால், திருமலை நாயக்கருக்கு அடங்கி, அவரது கட்டளைப்படி போர் நடவடிக்கையில் ஈடுபட விரும்பாமல், போரைத் தவிர்த்து அகிம்சை வழியில் இளையநாயக்கன் சென்றதாக அறியக் கிடக்கிறது..*

சீயாளி கெட்டி முதலி, திருப்பூர்க் கோட்டையில் ஆட்சி புரிந்த வேட்டுவகுலத்தவரான கோப்பண கவுண்டர் மற்றும் அரைய நாட்டு வேட்டுவக்குலத் தலைவர் இளையநாயக்கர் ஆகியோரது வரலாற்றிலிருந்து திருமலை நாயக்கர் "வேட்டுவர்களின்" ஆதரவை இழந்து விட்டதாக அறிய முடிகிறது. எனவே, மதுரை நாயக்கர்கள் வலுவிழந்து கொண்டிருந்தனர். மைசூர் உடையார்கள் ஏற்றம் பெற ஆரம்பித்தனர். திருமலை நாயக்கருக்கு உடல் நலம் குன்றியது. ஆங்காங்கே உட் பூசல்கள் தோன்ற ஆரம்பித்தன. நாட்டில் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டது.

கண்டீரவ நரசராசா காலத்தில், திருமலை நாயக்கர் உதவியோடு கெட்டி முதலியார் மைசூரார் பிடித்திருந்த டணாய்க்கன் கோட்டை மீது போர் தொடுக்கவே, மைசூர் உடையார் சாம்பள்ளியில் கெட்டி முதலியாரைத் தோற்கடித்துத் திருச்சி வரை சென்றதாக மைசூர் வரலாறு கூறுகிறது.

மண்ணில் புதைந்த இளையநாயக்கனின் கல்வெட்டு கி.பி 1653 - கள ஆய்வு

பரமத்தி வேலூரில் இருந்து ஜேடர்பாளையம் செல்லும் வழியில் பாண்டமங்கலம் சேவல்கட்டு மூலையில் இருந்து, இரண்டாவது கிலோ மீட்டரில் உள்ள வேலாகவுண்டம் பாளையம் என்னும் ஊரில் சாவடி உள்ளது. இதன் மேற்கே காணப்படும் தார்ச்சாலையின் நடுவே, ஒரு அடி உயரம், ஏழு அடி நீளத்திற்குப் பாறைத்துண்டு ஒன்று, தார்ச்சாலைக்கு மேலே திட்டாகக் காணப் படுகின்றது. இதன் மேல் சந்திரன் பிறை வடிவில் (சித்திர எழுத்து) காணப்படுகின்றது. மேலும் இளையநாயக்கனின் இக்கல்வெட்டில் தமிழ் எழுத்துக்கள் ஓரிரு எழுத்துக்கள் மட்டும் காணப்படுகின்றன. பூமிக்கடியில் தொடர்ச்சியாகச் செல்லும் பாறையில் மீதம் உள்ள எழுத்துகள் மறைந்துள்ளன. இப்பாறையின் மீது கற்பூரம் ஏற்றியும், திருவிளக்கு வைத்தும் மக்கள் வழிபட்டு வந்ததற்கான அடையாளம்



வெங்கரை, வேலாகவுண்டம்பாளையம் சாவடி அருகே உள்ள நடைபாதையின் மண்ணில் புதைந்த இளையநாயக்கரின் கல்வெட்டு

காணப்படுகின்றது. வழிபாடு தற்போதும் நடைபெற்று வருவதாக அறிய முடிகிறது.

மக்களின் கருத்தாய்வு

இவ்வூரின் 13 வது வார்டு கவுன்சிலர், அர்ச்சுனன் மகன் சீனிவாசன், மற்றும் இக் கல்வெட்டு அமைந்துள்ள இடத்திற்கு எதிரில் உள்ள கூரை வீட்டில் வசித்து வரும் 75 வயது மூதாட்டி யான கண்ணுப்பிள்ளை, இவர்கள் உட்பட மேலும் பலர் ஒன்று சேர்ந்து பாறைத்துண்டைச் சுத்தப்படுத்திப் படம் எடுக்க உதவி புரிந்தனர்.

மூதாட்டி இக்கல்வெட்டைப்பற்றிக் கூறுகையில், ஆழமாகப் பாறை இருப்பதாகவும் அதன்மீது உள்ள எழுத்துக்களைத் தான் பார்த்திருப்பதாகவும் கூறினார். இது பற்றிச் சீனிவாசன் அவர்கள் கூறுகையில் அந்த இடத்தில் பூமிக்கடியில் பெரும்பாறை இருப் பதாகவும், அந்தப்பாறையின் மேற்பகுதியில் உயரமாக உள்ள திட்டில் பெரிய எழுத்துக்களுடன் கல்வெட்டு இருப்பதாகவும், அதில் உள்ள எழுத்துக்கள் நன்றாக இருந்ததாகவும், அவைகள் ஒவ்வொன்றும் பெரிய வடிவில் இருப்பதாகவும், இதன் மீது தார்ரோடு போட்டு விட்டார்கள் என்றும் கூறினார்.

நடைபாதையாகி விட்ட கல்வெட்டு

இதனை ஆய்வு செய்கையில், கல்வெட்டு பொறிக்கப்படும் போது, பலரும் பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடிய வகையினிலே, அனைவரும் கூடும் இடத்தில் இருந்த பாறையின் மீது எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருக்க வேண்டும் அப்போது இருந்த நிலப்பரப்பு இயற்கையின் சூழலில் படிப்படியாக உயர்ந்திருக்க வேண்டும்.

எனவேதான் தற்போது அந்தப்பகுதி முழுவதும் உயர்ந்து காணப்படுகின்றது.

பாறையின் இருபுறமும் குடியிருப்புகள் பெருகிய போது, குடியிருப்புகளுக்கிடையே மேலும் மண்போடப்பட்டுத் தார்ச்சாலை போடப்பட்டு மக்கள் நடைபாதைக்காகப் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

மக்கள் இப்பாறையின் மீது கற்பூரம் ஏற்றியும், திருவிளக்கு வைத்தும் வழிவழியாக வழிபட்டு வந்திருக்க வேண்டும். எனவேதான், வழிபாட்டிற்காக ஒரு அடி உயரம், ஏழு அடி நீளத்திற்கு இளையநாயகனின் கல்வெட்டு உள்ள பாறை முழுவதுமாக மூடப்படாமல், தார்ச்சாலைக்கு நடுவே திட்டாகத் தற்போது காணப்படுகிறது.

கல்வெட்டுச்செய்தி

விசய வருடம் ஐப்பசி மாதம் (கி.பி. 1653 இல்) கபிலர்மலை குழந்தைவேலவர்க்கு வடகரையாற்றூரைச் சேர்ந்த வேட்டுவகுலத் தலைவர் இளையநாயக்கன், வெங்கரை என்னும் கிராமத்தைத் தானமாகக் கொடுத்ததாக வேலாகவுண்டம்பாளையத்தில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இந்தப் புண்ணியத்தை விக்கினம் பண்ணியவர் காராம் பசுவைக் கங்கைக் கரையிலே கொன்ற பாவத்திற்கு ஆளாவார்கள். கல்வெட்டுப் பொறித்தவர் அத்திக்காரர்.ஆவார்.

இளையநாயக்கனால் கி.பி. 1653 இல் இக்கல் வெட்டு பொறிக்கப்பட்டதாக கல்வெட்டைப் படியெடுத்து, அதில் உள்ள செய்தியை இந்நூலுக்கு வழங்கிய கல்வெட்டு ஆராய்ச்சியாளர் நாமகிரிப்பேட்டை அறிஞர் திரு. துரைசாமி அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்.


இக்கல்வெட்டில் உள்ள செய்திகளில் பேரரசுகளின் பெயர் பொறிக்கப்படவில்லை..

இக்கல்வெட்டினைப் பாதுகாக்க வேண்டியது அவசிய மாகின்றது.

இளையநாயக்கனின் மார்பில் பாய்ந்த வேல்

மதுரை நாயக்கர்கள் வலுவிழந்து கொண்டிருந்தபடியால், அவரது மேலாண்மையை ஏற்றுக் கொண் டிருந்த இளையநாயக்கனும் வலு விழந்தான். நாட்டில் குழப்பமான அரசியல் நிலை காணப்பட்டது.

"இளையநாயக்கன் கோடந்தூர் மணிவேல் என்பவரால் கொல்லப் பட்டார். நஞ்செய் இடையாற்றில் இராசா வாய்க்கால் அருகில் உள்ள இராசா கோயிலில் கொன்றவர், கொல்லப்பட்டவர் ஆகிய இருவருக் கும் சன்னதிகள் உள்ளன" என்று சேலம் களஞ்சியம் (பக்கம் 93 இல்) என்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.



இளையநாயக்கனின்
மார்பில் பாய்ந்த வேல்

இறந்தோர்க்கு நினைவிடமாக நடுகல் எடுப்பது நம் நாட்டில் நடைமுறையிலிருந்த இறைவழிபாட்டு வணக்கமாகும். இதன் வழி இறந்தவர்களைப் போற்றி வணங்க இப்பகுதி மக்கள் ஏற்பாடு செய்து, அவர்களுக்குச் சன்னதிகள் உருவாக்கியுள்ளனர்.

பழமை வாய்ந்த இத்திருக்கோயில், அரையநாட்டின் ராசா ஆகிய இளையநாயக்கனைக் குறிக்கும் விதமாக "இராசாக் கோயில்" என அழைக்கப்படுகின்றது இக்கோயிலில் உள்ள இளையநாயக்கன் கற்சிலையை, மக்கள் அனைவரும் தெய்வமாகப் போற்றி வணங்கி வருகின்றனர்.

"இளையநாயக்கனைக் கொல்வதற்கு மணிவேல் பயன்படுத்தியதாகக் கருதப்படும் மிகப்பெரிய வேல் இப்பொழுதும் இளையநாயக்கனின் சிலை எதிரே (சேலம் களஞ்சியம் (பக்கம் 239) நடப்பட்டுள்ளது. கொன்றவர், கொல்லப்பட்டவர் ஆகிய இருவருக்கும் சன்னதிகள் உள்ளன" என்கின்ற போது, அக்கால முறைப்படி வென்றவருக்கு இப்பகுதி உரிமையாகி விட்டது என்பதை அறிய முடிகிறது.

ஈரோடு மூக்கறுப்புப் போர்

மைசூர் கண்டீரவ நரசராசாவின் தளபதி ஹம்பையன் ஈரோட்டுப் பகுதிக்குப் படையெடுத்து வந்தான். திருமலைநாயக்கர் நோய்வாய்ப் பட்டிருந்த போது இப்போர் நடை பெற்றது. மைசூர்த் தளபதி ஹம்பையன் ஈரோட்டுப் பகுதியில் தோல்வியுற்ற மதுரை நாயக்கர் படையை மூக்கரிய அரசன் கண்டீரவன் ஆணையிட ஹம்பையனோ இளையோர், முதியோர், பெண்கள், சிறுவர், சிறுமியர், மூக்குகளையும் அரிந்து கண்டீரவனுக்கு அனுப்பி வைத்தான். வரலாற்றில் இது "ஈரோடு மூக்கறுப்புப் போர்" என்றே கூறப்படுகின்றது.

அரையநாட்டின் வேட்டுவர் குலத்தலைவன் இளையநாயக்கன், மதுரைத் திருமலை நாயக்கருக்குப் படை உதவி செய்த போது மாபெரும் வெற்றி பெற்ற மதுரை நாயக்கர், ஈரோடு மூக்கறுப்புப் போர் நிகழ்வுக்கு, இளையநாயக்கன் இல்லாததும் வேட்டுவர்களின் துணை இல்லாததும்தான் காரணம் எனலாம். இளையநாயக்கனின் மறைவுக்குப் பிறகு வேட்டுவர்கள் செயலிழந்து விட்டனர். அவர்களின் ஆளுமைத் திறனும் குறைந்து விட்டது.

ஈரோடு மூக்கறுப்புப் போரினால் முற்றிலும் நிலை குலைந்து போன மதுரைத் திருமலை நாயக்கர் இரகுநாதசேதுபதியை

வேண்ட, அவர் 25,000 வீரர்களோடு வந்து மைசூர்ப் படையை ஈரோட்டில் தோற்கடித்தார். தொடர்ந்து படைநடத்திச் சென்ற திருமலை நாயக்கரின் இளையசகோதரர் குமாரமுத்து நாயக்கர் சீரங்கப்பட்டினம் வரை சென்று பழிக்குப் பழியாக மைசூரார் மூக்குகளை அரிந்தார். இது ஒருவரை ஒருவர் அவமானப் படுத்திச் செய்த செயலாகும்.

இரகசிய அறை / இராசா கோயில் ஆய்வு

இராசாக்கோயிலில் உள்ள முருகன் சன்னிதானத்தில் ராசாவிற்கு வலது புறம் உள்ள சுவரின் கீழ் உள்ள மூலையில் சுமார் இரண்டடி நீளமும், அரையடி உயரமும் கொண்ட சிறிய இரகசிய வழி ஒன்று உள்ளது. அதனுள் நுழைந்து சென்றால் ஆறு அடி நீளம், மூன்றரை அடி உயரம், ஒரு அடி ஒன்பது அங்குலம் அகலம் கொண்ட இரகசிய அறை அமையப்பெற்றுள்ளது. வெளிப் புறத்தில் இருந்தோ அல்லது அருகில் இருந்தோ கன்னிமார் சுவாமி இராசா சுவாமி ஆகிய இவ்விர்ண்டு சன்னதிக்கும் இடையில் இரகசிய அறை இருப்பதை எவராலும் எளிதில் கண்டு பிடிக்க இயலாத படிக்குக் கட்டிட சாஸ்திரம் பயின்ற கட்டிடக்கலை வல்லுனரால் மிகவும் நேர்த்தியாக இக்கட்டிடம் கட்டப் பட்டுள்ளது.

இந்தக் குறிப்பிட்ட கட்டிட அமைப்பின் மொத்த உயரத்தைக் கணக்கில் கொண்டு நோக்கும் போது, மற்றொரு சுமார், 6 அடி நீளம், 3 அடி 6 அங்குலம் உயரம், 1 அடி 9 அங்குலம் அகலம் கொண்ட இரகசிய அறை முன்னர்க் கூறிய இரகசிய அறைக்கும் மேலே உள்ளது என ஊகிக்கலாம்.


இரண்டு அடுக்குகளாகக் காணப்படும் இதன் கீழ் அடுக்கின் உட்புறம் வெற்றிடமாகவும்,


அடியில் மண் தரையாகவும், இருக்கின்றது. இதன் மேல் அடுக்கு யாரும் காண இயலாத படிக்குச் சுற்றிலும் கருங்கல் அடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கோயில் வேட்டுவர் தலைவரின் நினைவகமாக இருந்தது (சேலம் களஞ்சியம் பக்கம் 239 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) என்ற கோணத்தில் பார்த்தோமானால் இளையநாயக்கன் சம்பந்துப் பட்டவைகள் இவ்விடத்தில் மறைவாக வைக்கப் பட்டிருக்கலாம்.

இவைகள் யாராலேனும் அப்புறப்படுத்தப்பட்டிருந்தால் வெற்றிடமாகவும் இருக்கலாம்.

நன்செய்இடையாறு இராசாகோயில், இரகசிய அறையை விளக்கும் வரைபடம்





1-2-3 ↦ ராஜா முருகன் இராசாயி
4 ↦ கன்னிமார் ஸ்வாமிகள்
5 ↦ ரகசிய அறை
6-7-8-9 ↦ நுழைவு வாயில்கள்
10 ↦ ரகசிய அறைக்குள் நுழையும் வழி
11-12 ↦ ரகசிய இரண்டு அடுக்குகள் உள்ள அறையின் உயரம் 3அடி 6"
13 ↦ ரகசிய அறையின் நீளம் 6 அடி
14 ↦ ரகசிய அறையின் அகலம் 1 அடி 9"
15 ↦ ரகசிய இரண்டு அடுக்குகளின் மேல்பாகம்

இந்தக்கோயில் இன்று கொங்கு வேளாளர் பிரிவினருக்குச் சொந்தமாக உள்ளது.

உயிரை விட மானமே பெரியது

பரமத்திக் கோட்டை சூறையாடப் பட்டபோது, இப்பரமத்திக் கோட்டையில் இருந்தவர்கள் தப்பியோடினர். அப்போது, கோட்டையில் இருந்த இரு குமரிகள் தங்களது உயிருக்கும், மானத்திற்கும் பயந்து தப்பியோடினர். ஆனால், தப்ப இயலாத சூழ்நிலையில் இரு குமரிகளும், தங்களுக்கு "உயிரை விட மானமே பெரியது" என நன்செய் இடையாற்றுக்குத் தென்கிழக்கே தீயில் இறங்கி உயிர் விட்டனர். இந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள மூங்கில் காட்டு ஐயனார் கோயில் அருகே, இக்குமரிகளின் தாயார் கொல்லப்பட்டார்.

குமரிகள் இறந்த அதே இடத்தில், இரு "வேட்டுவர் இராஜ குமாரிகளுக்கும்" ஒரு சிறிய கோயில் எழுப்பிக் குமரிஅம்மன் என்னும் பெயரில் தெய்வமாக வணங்கி வந்தனர், நன்செய் இடையாற்று மக்கள்.

இன்றும் இப்பகுதியில் உள்ள "வன்னியர்" சமூகத்தைச் சார்ந்த மக்கள், இப்பெண் தெய்வங்களைக், "கொமராயி" என்று அன்புடன் அழைத்து, முறைப்படி வழிபாடுகள் செய்து, இக்கோயிலையும் பராமரித்து வருகின்றார்கள்.

இப்பெண்தெய்வங்கள், இப்பகுதியைச் சேர்ந்த பலருக்கும், திருமண வைபோகங்களுக்குச் சென்று வர நகைகளைக் கொடுத்து உதவியுள்ளதாகக் கதை ஒன்றும் செவிவழிச் செய்தியால் அறிய முடிகின்றது.

இக்கோயிலில் உள்ள இரு பெண் சிலைகளையும் தெய்வமாக வணங்கி வரும், இப்பகுதி மக்களான "வன்னியர்" குல மக்களிடமிருந்து பெறப்பட்ட செவிவழிச் செய்தி ஆகும்.

XI

இளையநாயக்கனின் வழித்தோன்றல் - ஓர் ஆய்வு

வழித்தோன்றல் அறிமுகம்

அரையநாட்டில் உள்ள வேட்டுவர்களின் ஆட்சி கி.பி. 1379 க்கும் முன்னரே வேரூன்றி இருந்தது என்பதையும், இப்பழமை வாய்ந்த ஒரு குறு நில மன்னனின் வாரிசு, அதாவது வேட்டுவ

இனத்தலைவன் இளையநாயக்கனின் வாரிசு இதுவரை கண்டு பிடிக்கப் படாமல், அதாவது வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தப் படாமல் இருந்ததை, இப்போது கண்டு பிடிக்கப் பட்டு, அவரை வெளி உலகிற்கு இந்நூலின் வாயிலாக அறிமுகப் படுத்தப்படுவது இவ்வரலாற்று நூலின் சிறப்பு அம்சமாகும். இளையநாயக்கனுக்கும் முன்பாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள அவனது முன்னோர்களில் ஒருவர் "அல்லாள நாத இளையர்நாயக்கர்" என்பவராவார். அவரது காலத்தில் இருந்து, கணக்கில் கொண்டால், கி.பி. 1505இல் இருந்து கி.பி 2008 வரை சுமார் 503 ஆண்டுகளுக்கு முந்தைய வேட்டுவ இனத்தலைவர் அல்லாள நாத இளையர்நாயக்கர் ஆவார்.

இம்மாபெரும் வேட்டுவ குலப் பாரம்பரியமிக்க வம்சாவளியில் வந்தவராகவும், இளையநாயக்கனின் வாரிசாகவும், கபிலர் மலையில் அம்புசேவை, பரிவேட்டை செய்யும் உரிமையைப் பெற்றவராகவும், இருக்கூர்ப்பட்டக்காரராகவும் வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தப் படுபவர் "இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இடும்பை இளையநாயக்கர்" அவர்கள் ஆவார்.

இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இடும்பை இளையநாயக்கர் அவர்களைப் பற்றிய தகவல்களை அவரிடமேயிருந்தும், அவரது துணைவியார் அவர்களிடமிருந்தும், கபிலர் மலையில் பூசை செய்து வரும் அய்யர்களிடமிருந்தும், இருக்கூர்ப் பொதுமக்களிட மிருந்தும், பல இடங்களில் இருந்தும் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் நடைமுறையில் இவருக்கு வழங்கப்படும் சலுகைகள், நடை முறையில் உள்ள பழக்க வழக்கங்கள், இவருக்கு வழங்கப்பட்டுள்ள பூசை செய்யும் உரிமைகள் இவைகள் அனைத்தும் இந்நூலின் வாயிலாக அறியலாம்.

பட்டாபிசேகம்

இளையநாயக்கனது தலைமுறையினர் பட்டக்காரராக வாள் எடுத்துக் கொள்வது இருக்கூர் என்னும் ஊரிலாகும். இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கரவர்கள் தமது 33 ஆவது வயதில் பட்டக்காரராக வாள் பெற்றுக் கொண்டார். இருக்கூரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தவர் கபிலர் மலைக் கோயிலின் அர்ச்சகர் திருவாளர் சுப்ரமணிய குருக்களாவார். இதனைச் சுப்ரமணிய குருக்களின் மகன் திரு. குழந்தைசாமி குருக்கள் அவர்களும், ஸ்தானிகர் தேவேந்திர குருக்கள் அவர்களும் மற்றொரு ஸ்தானிகர் பாலசுப்ரமணியம் குருக்கள் அவர்களும் உறுதிப் படுத்துகின்றனர்.

கபிலர் மலைக் கோயிலில் தற்போது, பெரிய ஐயர் என்று அழைக்கக் கூடிய அர்ச்சகர் பரம்பரையினர் ஒருவரும், ஸ்தானிகர் இருவரும் இக்கோயிலின் பூசை செய்யும் உரிமை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"கோயில் கும்பாபிசேகம் போன்ற யாதொரு இறை நிகழ்ச்சியின் போதும் இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களை முன்னிலையில் வைத்துக் கொண்டால் தங்கு தடையின்றிச் சுபநிகழ்ச்சிகள் அனைத்தும் செவ்வனே நடந்து வருவது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய முக்கியமான செய்தியாகும்.

மேலும், முதல் பூசை பெறும் உரிமை பெற்ற இருக்கூர்ப் பட்டக் காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்கள் பூசைக்குரிய நேரத் தைச் சொல்லி விட்டால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே வந்து விடும் பண்புள்ளவர்" எனக் கபிலர் மலைக் கோயிலின் அர்ச்சகர் குழந்தைசாமி குருக்கள் அவர்கள் கூறுவது குறிப் பிடத்தக்கதும், இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இடும்பை இளையநாயக்கர் அவர்களை பெருமைப்படுத்தக் கூடிய செய்தியா கவும் உள்ளது.

இளையநாயக்கனின் வம்சா வளியில் வந்த பட்டக்காரர்கள்

இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்கள் நினைவு கூர்வது.

1. இளையநாயக்கனின் தந்தையார் இடும்பை இளையாநாயக்கர். 2. இளையநாயக்கனின் மகன் இடும்பை இளைய நாயக்கர். 3. இவரது மகன் தங்கவேல் திருமலை நாயக்கர். 4. இவரது மகன் இடும்பை இளைய நாயக்கர். 5 இவரது மகன் முத்துத் திருமலை நாயக்கர். 6. இவரது மகன் குமரவேல் திருமலை நாயக்கர். 7. இவரது மகன் தங்கவேல் இளையநாயக்கர்.

தனது மூதாதையர்கள் கூறிய செவிவழிச் செய்தியின் படி, தனக்கு முந்தைய பட்டக்காரர்களை நினைவுகூர்ந்து தகவல் கூறும் இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர் கள் இளையநாயக்கனின் வாரிசுகளை வரிசையாக நினைவுகூர இயலாதெனக் கூறுகின்றார். நம்மில் பலருக்குத் தகப்பனார், பாட்ட னார் பெயர்களை மட்டுமே நினைவுகூர இயலும். பாட்டனாரின் பாட்டனாரையோ அல்லது அவரது பாட்டனாரையோ நினைவுகூர்வது சாத்தியமாகாது.

அரசர் கொல்லப் பட்டு விட்டார் என்றால் அவரின் வாரிசு ஓடி ஒளிந்து கொள்வது இயல்பு. அப்படி ஓடி ஒளிந்து கொள்பவர்கள் தங்களை வெளிக் காட்டிக் கொள்ள முடியாத

இறுக்கமான சூழ்நிலை தான் நிலவும். இந்நிலை மாறி சகஜ நிலைக்குத் திரும்பிய பின்னரே வெளி உலகிற்கு வர இயலும். அதற்கான காலவரையைக் கூற இயலாது.

ஆனால் சூழ்நிலை சகஜமாகிய பின்னர், வாரிசு என்னும் உரிமையினால் எந்த விதமான பலனும் கிடைக்கப் போவதில்லை என்கின்ற நிலைப்பாடு உள்ளதாக வைத்துக் கொள்வோம். மேலும் யாரிடம் போய்த் தான்தான் இளையநாயக்கனின் வாரிசு என்பதைச் சொல்வது. அப்படிச் சொல்லியிருந்தாலும் எத்தனை பேர் புரிந்து கொள்வார்கள் புரிந்து கொள்பவர்களால் என்ன செய்ய முடியும்.

மேலும், பரமத்திக் கோட்டை சூறையாடப் பட்ட போது, பரமத்திக் கோட்டையில் இருந்த இளைய நாயக்கனின் வம்சாவளியைச் சேர்ந்த இரு குமரிகள் தங்களது உயிருக்கும், மானத்திற்கும் பயந்து தப்பியோடினர். ஆனால், தப்ப இயலாத சூழ்நிலையில் இரு குமரிகளும், தங்களுக்கு "உயிரை விட மானமே பெரியது"- என நன்செய் இடையாற்றுக்குத் தென்கிழக்கே தீயில் இறங்கி உயிர் விட்டனர். இவர்களது தாயார் கொல்லப்பட்டார்.

இந்தச் சூழ்நிலையில் தப்பிப் பிழைத்த இளையநாயக்கனின் வாரிசுகள், அடிப்படைக் கல்வி அறிவைக் கூடப் பெற்றிருக்க முடியாது. இதுதான் இளையநாயக்கனின் வாரிசுகளின் நிலையாக இருக்கும் என்னும் பட்சத்தில்,

தனது மூதாதையர்களான இளையநாயக்கனின் வாரிசுகளை வரிசைப்படுத்திக் கூற வில்லை என்ற காரணத்திற்காக இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களை உதாசீனப் படுத்தி விடக்கூடாது.

மேலும், அம்முன்னோர்களின் பெயர்கள், இளையநாயக்கனின் பெயரையும் திருமலை நாயக்கரின் பெயரையும் சார்ந்து ஒரே மாதிரியாகத்தான் தொடர்ச்சியாக வரும்.

எனவே தோராயமாக 20 அல்லது 25 க்கும் மேற்பட்ட பல தலைமுறைகள் வாழ்ந்து வந்திருக்க வேண்டும் எனவும், இவர்களில் மூத்த மகனாக உள்ளவருக்கு மட்டுமே, "இருக்கூர் பட்டக்காரர்" என்ற இளையநாயக்கனின் வாரிசு உரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அறியலாம்.

இடும்பை இளைய நாயக்கர்

இருக்கூர்ப் பட்டக்காரர் வம்சத்தில் உள்ள "இடும்பை இளைய நாயக்கர்" அவர்களது சமாதி உள்ள இடத்திற்கு வழி கேட்டறிந்து

செல்லும் போது, கபிலர்மலை, வேட்டுவம்பாளையம், கருப் பண்ணகவுண்டர் மகன் திரு. நடேசன் (பரமத்தி கிராம நிர்வாக அதிகாரி) அவர்கள், நம்மை அழைத்துக் கொண்டு, இருக்கூரில் இருந்து பாண்டமங்கலம் செல்லும் வழியில் இருக்கும் கானாங் காட்டிற்குச் சென்றார்.

வடக்கு செல்லப்பம்பாளையம், கானாங்காடு என்னும் இடத்தில் உள்ள இடும்பை இளையநாயக்கர் சமாதியையும், ஓங்கி நெடிது வளர்ந்துள்ள வில்வ மரத்தையும் வணங்கி விட்டு, அந்த இடத்தின் உரிமையாளரிடம் தகவல் சேகரித்த போது கிடைத்த பரபரப்பான செவிவழிச் செய்தியினைக் கீழ்க்கண்டவாறு வழங்குகிறேன்.

இருக்கூர்ப் பட்டக்காரர் "இடும்பை இளைய நாயக்கர்" என்பவரது சமாதி உள்ள இடத்தில் மிகப் பெரிய வில்வமரம் ஒன்று இருந்தது. இந்த இடத்தை விலைக்கு வாங்கிய சின்னப்ப கவுண்டர் அவர்களின் தோட்டத்தைக் குத்தகைக்கு எடுத்திருந்த ரங்கம்பாளையம் அத்தி என்பவர் வில்வ மரத்தை வெட்டினார். அப்போதே அவரது கழுத்தும் முகமும் வீங்கி விட்டன. மண்ணாங் கட்டி மாரியம்மன் வந்து இரண்டொரு நாளில் இறந்து விட்டார்.

10 வருடத்திற்கு முன்னால் வில்வமரம், மின்சாரக் கம்பிகளின் மீது மோதுகிறது என்பதற்காக, மின்சார வாரியம், கம்பியாளர் ஒருவர் கிளைகளை வெட்டினார். மேற்படி சம்பவத்தைக்கூறி, இதனை வெட்ட வேண்டாம் என்று சின்னப்பகவுண்டர் தடுத்தார். ஆனால் அதனையும் மீறிக் கிளைகளை வெட்டக் கொடுவாள் இரண்டாக உடைந்து விட்டது. கை கால் நடுக்கத்துடன் கீழே இறங்கி வந்தவர், நாளை வந்து வெட்டுகிறேன் என்று சொல்லிச் சென்றவர், இரண்டு மூன்று நாளில் இறந்து விட்டார்.

சின்னப்ப கவுண்டர் அவர்களது மனைவி நல்லம்மாள் அவர்கள் கூறுகிறார் "இந்த இடத்தை வாங்கியதில் இருந்தே எங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சமாக் கஸ்டம் வர ஆரம்பித்து விட்டது. பல இடத்துல வாக்குக் கேட்டோம். எல்லா இடத்துலயும் ஒரே மாதிரியா அந்த இடத்துல சக்தி இருக்கறதா அதற்குப் பூசை செய்யும் படி சொன்னாங்க. நாங்க சமாதி தானே என்று, ஏனோ தானோ என்றிருந்து விட்டோம். எங்க வாழ்க்கைல கடைசிக் கட்டத்துக்கு வந்துட்டோம். அப்புறமாத்தான் அந்த இடத்துல கற்பூரம் வெச்சிச் சாமி கும்பிட்டோம். இருந்த கஸ்டம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா விலக ஆரம்பித்து விட்டது" என்றார்

இவர்களது மருமகள் சித்ரா அவர்கள், "எனக்குத் திருமணமாகி வந்தப்ப 20 பவுன், காரு, பணம் எல்லாம் சீராக் கொடுத்தனுப்பினாங்க ஆனா இங்க ஆடு, மாடு சேதாரம், குடும்பத் தொல்லைகள் சிறுகச் சிறுக ஆரம்பித்து, ஒரு சூழ் நிலையில் பெரிய பெரிய தொல்லைகள் வந்து விட்டன. கைலிருக்கறதையும், நான் கொண்டு வந்ததையும் எல்லாவற்றையும் இழந்தப்பச் சாமி சொன்னபடி கற்பூரம் வெச்சிக் கும்பிட்டோம். இன்னிக்கு எங்க தெய்வமாக் கும்பிடறோம். ஒரு இடத்துக்கு போறதுனா கூடக் கற்பூரம் வெச்சிச் சாமி கும்பிட்டுத்தான் போவோம். வீடு கட்டி நல்லா இருக்கறம்னா அது இந்தத் தெய்வத்தோட மகிமையினாலத்தான்" என்று, இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கருடைய முன்னோர்களின் சமாதியைத் தெய்வமாகக் குறிப்பிடுகின்றார்..

சின்னப்ப கவுண்டர் "தெற்குப் பக்கம் தலைவாசல் வைத்து வீடு கட்டிட்டோம். சாமி வடக்குப் பார்த்து இருக்கு, 5 வருசத்துக்கு முன்னாடி எருமை தள்ளிக் கீழே விழுந்தப்ப எனது இடது கை முடியாமல் போய் விட்டது. நாமக்கல் மணி ஆஸ்பத்திரி போய் எக்ஸ்ரே எடுத்துப் பாத்தோம். மணி சொன்னார் இங்கெல்லாம் முடியாது கோயமுத்தூர் தான் போகணும்னு.

அடுத்த நாள் காலை 8 மணிக்குக் கோயமுத்தூர் போவ வீட்டிற்கு வெளியே ரோட்டில் நின்று கொண்டிருந்த போது, இருக்கூர்ப் பட்டக்காரருடைய குதிரையை வெங்கரையம்மன் கோவிலுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். "உங்களோட இடத்துல நாங்க வீடு கட்டிட்டோம். உன்னையக் கவனிக்கலேன்னு எங்களுக்கு இடஞ்சல் பண்ணிக்கிட்டு இருக்கறயே, எனக்கு நல்லது பண்ணிக் கொடு, உனது இடத்தைச் சுத்தம் செய்து கட்டிடம் கட்டிக் கற்பூரம் வைத்துக் கும்பிடறோம்" என்று குதிரையிடம் கண்ணீர் விட்டுக் கதறி அழ,

திடீரெனக் குதிரை அருள் வந்து கீழே விழுந்து இரண்டு மூன்று முறை மண்ணில் புரண்டது. குதிரை எழுந்து நின்று சாணம் போட்டது. உடனே சின்னப்ப கவுண்டர் நன்றாக உள்ள வலது கையினால் குதிரையின் சாணத்தை எடுத்துக் கை வராமல் இருந்த இடது கை முழுவதும் நன்றாகத் தடவினார். உடனே, இடது கை சுகமாகத் தொடங்கி, அப்போதே நன்றாகி விட்டது.

"40,000 ரூபாய் செலவு செய்து வேட்டுவக் கவுண்டர் பட்டக்காரருடைய சமாதியைக் கட்டி, அய்யரை வைத்துப் புண்ணியாசனம் செய்தேன். எனது வீட்டு வாயிற் படியையும் வடக்கு நோக்கி மாற்றிக் கட்டி விட்டேன் . இன்னிக்கும் கற்பூரம் ஏற்றிக் கும்பிடாமல் எங்கும் போக மாட்டேன்" என்றார்

சின்னப்ப கவுண்டர் மகன் சண்முகம் அவர்கள் கூறுகையில் "இந்த இடத்தில் குதிரைகளின் குளம்புகளும், எலும்புகளும் மிகுதியாகக் கிடந்தன" என்று கூறுகிறார்.

மேற்படி விசாரணையின் போது, பரமத்தி கிராம நிர்வாக அலுவலரும் உடன் இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இருக்கூர்ப் பட்டக்காரர் வேட்டுவ குலம் சார்ந்தவர். அவரது இடத்தை விலைக்கு வாங்கிய சின்னப்ப கவுண்டர் கொங்கு வேளாளர் இனம் சார்ந்தவ்ர் ஆவார்.

கொங்கு வேளாளர்களில், ஒரு குடும்பமே வேட்டுவக் கவுண்டர்களின் சமாதியைத் தெய்வமாக வணங்கி வருவது வியப்புக்குரியதாக உள்ளது. நல்ல ஒற்றுமை உணர்வையே வெளிப்படுத்துகிறது என அறியலாம்.

சமாதியில் தெய்வமாக இருப்பவர் இளையநாயக்கனின் வம்சா வளியில் வந்த நான்காவது பட்டக்காரரான "இடும்பை இளைய நாயக்கர்" என, இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்கள் கூறுகிறார்.

இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர்

பரமத்திக் கோட்டையில் ஆட்சி புரிந்த வேட்டுவக் குலத் தலைவன் இளையநாயக்கரின் வாரிசு "இடும்பை தங்கவேல் இளையநாயக்கர்" அவர்கள் தற்போது கபிலர் மலையின் அருகில் உள்ள இருக்கூரில் ஒரு சாதாரண வீட்டில் வசித்து வருகின்றார்.

இவர்களின் வம்சாவளியினருக்கு "இருக்கூர்ப் பட்டக்காரர்" என்ற பட்டப் பெயரும் உள்ளபடியால் தற்போது இருக்கூரில் வசித்து வருபவர் "இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளைய நாயக்கர்" என்றழைக்கப்பட்டு வருகின்றார். இவரது துணைவியார் திருமதி இரத்தினம் என்பவர் ஆவார். இத்தம்பதியினர் வயது முதிர்ந்த நிலையில் இருக்கூரில் உள்ள ஒரு சாதாரண வீட்டில் வசித்து வருகின்றனர். வயது முதிர்ந்த தனது கணவரைக் கண்கண்ட தெய்வமாக மதித்து நடக்கும் திருமதி. இரத்தினம் அம்மையார் அவர்கள் தனது கணவரின்

பெயரைக்கூட உச்சரிக்கத் தயங்கும் உத்தமியாக வாழ்ந்து வருகின்றார்.

இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கருக்கு ஒரு சகோதரி மட்டுமே உடன் பிறந்தவர். அவர் சில வருடங்களுக்கு முன்னமே இறந்து விட்டார்.

இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கருக்குப் பங்காளிகள் இருவர். முத்துச்சாமி அவர்களது மகன் திரு. E. M. கணேசன், ஓய்வு பெற்ற ஆசிரியர் அவர்கள், பழனிச்சாமி அவர்களது மகன் திரு. E. P. சிதம்பரம் (விவசாயம்) அவர்கள், ஆகிய இவர்களும் இருக்கூரில் தான் வசித்து வருகின்றனர்.

இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களுக்கு நேரடியாக வாரிசு இல்லாததால், அடுத்த வாரிசு யார் என்பதை அவர்தான் முடிவு செய்ய வேண்டும்.

இது பற்றிக் கபிலர் மலைக் கோவில் அர்ச்சகர் திரு. குழந்தைசாமிக் குருக்கள் அவர்கள் கூறுகையில்"இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் யாரை வாரிசு என நியமனம் செய்கின்றாரோ, அவரே முழு உரிமையும் பெற்றவர் ஆகிறார்" எனக் கூறுகிறார்.

முதல் பூசை உரிமை பெறும் பட்டக்காரர்

விஜயதசமி நாளன்று அரச குலத்தவர் ஆயுதங்களைத் தூய்மைப் படுத்தி மாலையிட்டு வணங்குவர். படைக்கருவிக்கு மாலையிட்டுப் பூஜிப்பது இலக்கியத்திலும், கல்வெட்டுக்களிலும் இடம் பெற்றுள்ளன. விஜயதசமி திருநாள் பற்றி அறிஞர் திரு. S.இராமச்சந்திரன் அவர்கள் விரிவான செய்திகளை "வலங்கை மாலை" என்ற நூலில் எழுதியுள்ளார்.

கபிலர்மலையில் அம்பு சேவை

புரட்டாசி மாதம், நவராத்திரி 9 நாட்கள் முடிந்து, அதாவது ஆயுத பூசைக்கு மறுநாள், விஜயதசமி தினத்தன்று மன்னர் மற்றும் குறுநில மன்னர் பரம்பரையினர் வேட்டைக்குச் செல்வது, "அம்புப்பயிற்சி" செய்வது அல்லது "அம்புசேவை" மற்றும் "பரி வேட்டை" ஆகிய பெயர்களில் வழக்கத்தில் உள்ள நிகழ்ச்சியாகும்.

விஜயதசமி தினத்தன்று குதிரை ஏறுதல், யானை ஏறுதல், வாள் பயிற்றி, வில் பயிற்சி இவைகள் செய்வது அரசனின் தகுதிகள் காட்டும் பயிற்சிகள் ஆகும். கபிலர் மலையில் ஆண்டு தோறும்

புரட்டாசி மாதம் ஆயுத பூசைக்கு மறுநாள் அதாவது, விஜயதசமி தினத்தன்று, இளையநாயகனின் வாரிசுகளுக்குத் திருவிழாவினைப் போல"அம்புசேவை" நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கத்தில் இருந்து வருகின்றது. விஜயதசமி தினத்தன்று இளையநாயக்கர் வாரிசு இருக்கூர்ப் பட்டக்காரர் அவர்களை இருக்கூரில் இருந்து கபிலர்மலை வரை பல்லக்கில் வைத்து அழைத்து வருவார்கள். இவரைக்கோயில் சார்பாகப் பூரண கும்பத்துடன் வரவேற்று மாலை, மரியாதையுடன் கோயிலுக்கு அழைத்துச் செல்வார்கள்.

இருக்கூர்ப் பட்டக்காரர் அவர்களது முன்னிலையில், கபிலர் மலை மேல் உள்ள மூலவர் ஸ்ரீமுருகப்பெருமானுக்கு அபிஷேகம், அலங்காரம் செய்து ஆராதனைகள் நடை பெறும். தரிசனம் முடிந்த பின்னர், உற்சவரையும், இருக்கூர்ப் பட்டக்காரரையும் மலைமேலிருந்து கீழே அழைத்து வருவார்கள். உற்சவரைக் குதிரை வாகனத்தில் வைத்துக் கபிலர் மலைக்கு வடக்கே கபிலக்குறிச்சிக்குச் சமீபமாக அழைத்துச் செல்வார்கள். அங்கே உள்ள மைதானத்தில் புண்ணியாசனம் செய்து, வாழைமரத்திற்குத் துண்டு, வேட்டி கட்டி "அம்பு சேவை" நிகழ்ச்சி நடைபெறும். இருக்கூர்ப் பட்டக்காரர் அவர்களின் அம்பு சேவையை முடித்துக் கொண்டு, உற்சவருடன் கபிலர் மலையை வலம் வருவார்கள். பின்னர், மலைமீதுள்ள கோயிலுக்குள் அழைத்துச் செல்வார்கள்.

கபிலர் மலை மீதுள்ள மூலவர் ஸ்ரீசுப்ரமணியருக்கு ஆராதனை செய்து, இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை இளையநாயக்கருக்கு மாலை போட்டு முதல் மரியாதை செய்வார்கள். இந்நிகழ்ச்சி இன்றும் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. பின்னர், பூசைமுடித்து வரும் இருக்கூர்ப் பட்டக்காரரைக் கபிலர் மலைக்கோயிலின் ஸ்தானிகர் திரு. பாலசுப்ரமணிய குருக்களின் இல்லத்திற்கு அழைத்துச் செல்வார்கள். மறுநாள் காலை குருக் களின் இல்லத்தில் இருந்து மீண்டும் பல்லக்கில் வைத்து இருக் கூரில் உள்ள அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று விடு வார்கள்.

அரையநாட்டின் குறுநில மன்னர் அல்லாள இளையா நாயக்கனில் தொடங்கிய இந்நிகழ்ச்சி, இன்றுவரை மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இளையநாயக்கனுக்குப் பிறகு அவரது வாரிசுகளைக் கௌரவப் படுத்தும் "அம்பு சேவை" நிகழ்ச்சி பழங்கால நிகழ்ச்சிகளை நினைவுகூரும் அம்சமாகும்.

மேற்கண்ட தகவல்கள் இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கரிடம் இருந்தும், கபிலர்மலை கோயில் குருக்கள் குழந்தைசாமி அவர்களிடமிருந்தும் பெறப்பட்டன. "பரிவேட்டை" என்பது கள்ளர்களைக் கண்காணித்தல் அல்லது கள்வர்களை வேட்டையாடல் எனவும் பொருள் கொள்ளப் படுகின்றது.

"வெம்மறவர் குலத்து வந்த
வேட்டுவச் சாதியார் போல்"

(பெரிய புராணம் 756)

வேட்டுவர் காட்டு மிருகங்களை வேட்டையாடுவதால் கொடும் செயல் மிக்க மறவர் குலத்தில் வந்தவர் என்று பெரிய புராணம் கூறுகின்றது. தனுர் வேதக் கலையினை முறையாகப் பயின்று வில் வித்தையில் தேர்ச்சி பெற்ற அரச குலத்தவரை விட , பிற்கால வேடர்கள் மிகச்சிறப்பாக வில் வித்தைக் கலையைப் போற்றி வந்ததோடு , அரச மரபினரைப் போல வில் விழா எடுத்தனர்.

"வில் விழா எடுக்க என்று
விளம்பினான் வேடர் கோமான்"

என்று பெரிய புராணம் கூறுவதால் வேட்டுவர் விழா எடுத்தனர் என்பதை அறியலாம். சங்க இலக்கியத்தில் "மழவர்" என்ற வேடர் மரபினர் வில் விழா எடுத்தனர் என்ற குறிப்பும் உண்டு. அம்பு சேவையும் "வில்விழா" தொடர்புடையதாக நாம் கருதலாம்.

இருக்கூர் மாரியம்மன் கோயில் திருவிழா

இருக்கூரில் மாரியம்மன்கோயில், காளியம்மன் கோயில் பண்டிகைகள் ஆண்டுதோறும் பங்குனி மாதம் நடைபெறுகின்றன. பொங்கல் இடும் நாளன்று இக்கோயிலின் பூசாரி, இவ்வூரின் கிராமத்தோட்டி மற்றும் முக்கியஸ்தர்கள் இருக்கூரில் உள்ள இடும்பை இளையநாயக்கரின் இல்லத்திற்கு வந்து பொங்கலிடும் சருவத்திற்குப் பொட்டு வைத்து ஆரம் போட்டுத் தேங்காய் உடைத்து மேள தாளத்துடன் இளையநாயக்கரின் வாரிசு பட்டக்காரரைக் கோயிலுக்கு அழைத்துக் கொண்டு செல்லுவர். அங்கே முதல் பொங்கல் இவர் வைக்க அதன் பிறகே ஊர்மக்கள் அனைவரும் பொங்கல் வைப்பார்கள்.

வெங்கரையம்மன் கோயில் திருவிழா

வெங்கரையம்மன் கோயிலில், புரட்டாசி மாதம் கடைசி 11 நாட்களுக்குத் திரு விழா நடைபெறுவது வழக்கமாகும்.

இத்திருவிழாவின் இரண்டாம் நாள் வெங்கரையம்மன் கோயிலில் இருந்து, பண்டாரம் சாமி பிரசாதத்தை இருக்கூர்ப் பட்டக்காரர் இல்லத்திற்குக் கொண்டு வந்து தருவார்.

திருவிழாவின் 6 ஆம் நாள் இரவு .கோயில் சாவடியில் எண்ணை அளவு நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்ச்சி முடிந்தவுடன் வெங்கரையம்மன் கோயிலில் முதல் உரிமை, முதல் மரியாதை பெறும் மூளை வேட்டுவக்குலத்தில் உதித்த பரமசிவக் கவுண்டர் மகன் திரு. செல்வராஜ் முப்பாட்டுக்காரர் அவர்களது வீட்டிற்கு ஊர் பெரியதனக்காரர்களும், பொது மக்களும் வருவார்கள். முப்பாட்டுக்காரர் வீட்டில் அனைவரும். சாமி கும்பிட்டு முடித்தவுடன், குதிரை துலுக்கல் நடைபெறும். இதன் பிறகு “அம்மை அழைப்பு“ நிகழ்ச்சி துவங்கும். இந்நிகழ்ச்சியின் போது, கபிலர் மலையைச் சுற்றி வருவார்கள். அம்மலையின் பின்புறமுள்ள வெங்கரையம்மன் கோயிலில் அபிசேகம், ஆராதனை, குதிரை துலுக்கு நிகழ்ச்சி நடைபெறும். அதன் பின்னர் கொளக்காட்டுப்புதூரில் உள்ள எடச்சியாயி கோயிலிலும், வெங்கரையம்மன் கோயிலில் உள்ள பத்திரகாளியம்மனுக்கும் அபிசேகம், ஆராதனை செய்து, குதிரை துலுக்கு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும். இருக்கூர்ப் பட்டக்காரர் இல்லத்துக் குதிரை மேற்கண்ட நான்கு இடங்களிலும் துலுக்குவது சிறப்பு அம்சமாகும்.

அம்மை அழைப்பு என்பது “குதிரை துலுக்கு“ என்பதாகும். “அம்மை அழைப்பு“ நிகழ்ச்சிக்கு மறுநாள், வெங்கரையம்மன் கோயில் பண்டாரம், சாமி பிரசாதத்தை இருக்கூர் கொண்டு சென்று “இருக்கூர்ப் பட்டக்கார”ருக்கு வழங்குவது வழக்கத்தில் உள்ள நடைமுறையாகும்.

இதரப் பூசை உரிமைகள்

வேலூர் மாரியம்மன் கோயில், செல்லாண்டியம்மன் கோயில், புதுப்பாளையம் மாரியம்மன் கோயில், பாண்டமங்கலம் பெருமாள் கோயில், மாரியம்மன் கோவில், குச்சிப்பாளையம் செல்லாண்டியம்மன் கோயில், பிலிக்கல்பாளையம் முருகன் கோயில் ஆகிய கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறும் முக்கியத் தினங்களில் முதல் பூசை செய்யும் உரிமை இன்றும் இருக்கூர்ப் பட்டக்காரர் வம்சத்தவர்களுக்கே உள்ளது. மேலும், பட்டக்காரர் அவர்களது குதிரை சில முக்கியக் கோயில்களின் திருவிழாக்களுக்கும் அழைத்துச் செல்லப் படுகின்றது.

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கரிடமிருந்து செவிவழிச் செய்தியாகப் பெறப்பட்டன..

கபிலர் மலையில் பரம்பரைப் பழக்க வழக்கம்

காலம் தோறும் நின்று நிலைக்கக் கூடியவை பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகும். அந்த வகையில் இளையநாயக்கனின் வாரிசுகளுக்குக் கபிலர் மலையில் இன்றும் நடைமுறையில் உள்ள பழக்க வழக்கங்கள் அம்புசேவை, பரிவேட்டை நிகழ்ச்சியாகும் கபிலர் மலையில் மட்டும் அல்ல அரையநாட்டில் இருந்த அத்துணை கோயில்களுக்கும் முதல் உரிமை பெற்றிருக்க வேண்டும். காலப்போக்கில் இவையனைத்தும் ஏதேனும் ஒரு வகையில் மாற்றம் பெற்றிருக்க வேண்டும்.

பெரிய புராணம் வாயிலாகப் பரம்பரைப் பழக்க வழக்கம்

"பொத்தப்பி" நாட்டில் உடுப்பூர் என்ற ஊரில் வேடர் குலத் தலைவனாக இருந்தவர் நாகன். இவரது மனைவியின் பெயர் தத்தை. இவர்களுக்கு நீண்ட நாட்களாகக் குழந்தைப்பேறு இல்லை. குழந்தை வரம் வேண்டிக் குமரக் கடவுள் கோவில் சென்று வழி பட்டனர். நேர்த்திக் கடனாகச் சேவற்கோழியையும், மயிலையும் உயிரோடு விட்டு வணங்கினர். இதன் பயனாகத் தத்தை கருவுற்றாள். இவர்களுக்குத் திண்ணென்று குழந்தை பிறந்ததினால் திண்ணப்பன் என்று பெயர் வைத்தனர். குழந்தை விளையாடு வதற்கு யானைத் தந்தங்களினால் வேலியமைத்துச் சிங்கக்குட்டி, புலிக்குட்டி, கரடிக்குட்டி இவைகளை உயிரோடு வேலிக்குள் விட்டுத் திண்ணப்பனை விளையாட வைத்தனர். திண்ணப்பன் 16 வயதினை அடைந்த போது, அவரது தந்தை நாகனுக்கு வயதாகி விட்டது. அவரால், முன்போல வேட்டைக்குச் செல்ல இயல வில்லை. எனவே, காட்டு மிருகங்களின் எண்ணிக்கை கூடி விட்டதைச் சுட்டிக் காட்டி , வேடர் தலைவன் நாகனை ஓய்வு பெறும் படியும், அவனது வாரிசு திண்ணப்பனை வேடர் குலத் தலைவனாக்கும் படியும், வேடர் குலத்தினர், வேடர் தலைவரை வேண்டினர்.

வேடர் குலத்தினரின் நியாயமான கோரிக்கையை உடனே ஏற்றுக் கொண்ட நாகன், தனது மகன் திண்ணப்பனை வேடர் குலத் தலைவனாக்கினான். குல வழக்கப் படி, வேடர் தலைவன்

வேட்டைக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு வேட்டைக்குச் செல்லும் திண்ணப்பனோடு காடனும், அனுபவம் வாய்ந்த நாணனும் அனுப்பி வைக்கப் பட்டனர்.

இவர்கள் விரித்த வலையை அறுத்துக் கொண்டு காட்டுப் பன்றி ஒன்று ஓடியது. அதனை வெகு தூரம் துரத்திச் சென்று அடித்துக் கொன்றான் திண்ணப்பன். காட்டுப்பன்றியை எடுத்துக் கொண்டு வந்த திண்ணப்பனோடு, அனுபவம் வாய்ந்த காடன் சேர்ந்து கொண்டான். இருவருக்கும் ஏற்பட்ட தாகத்தைத் தீர்த்துக் கொள்ள ஓடையை நோக்கிச் சென்றனர். வழியில் குறுக்கிட்ட ஒரு மலையை நெருங்கிய போது குளிர்ந்த காற்றும், இனிய நறுமணமும் வீசியது.

திடீரென ஏற்பட்ட மாறுதலுக்கு என்ன காரணம் எனக் காடனைக் கேட்டான் திண்ணப்பன். மலையுச்சியில் குடுமித்தேவர் இருப்பதாகக் காடன் கூறினான். காடன் சொன்ன உடனே திண்ணப்பன் ஓடுகின்றான் மலையுச்சிக்கு. அப்போது அவனுக்கிருந்த தண்ணீர்த் தாகம் மறைந்து விட்டது, இறைவனின் மீது ஒரு விதத் தாகம் ஏற்பட்டு விட்டது.

இறைவனைக் கண்ணால் கண்டவுடன் ஓடிச்சென்று கட்டிக் கொள்கின்றான், பக்திப் பரவசத்துடன் உச்சி மோந்தான், மகிழ்ச்சியடைந்தான்.

தனியாகக் காட்டுக்குள் இருக்கிறாரே, இவருக்கு என்ன செய்வது என்று காடனைக் கேட்கின்றான். காடன் கூறுகின்றான் எனக்கும் ஒன்றும் தெரியாது. ஆனால் உனது தந்தையுடன் ஒருமுறை நான் வந்திருந்த போது அந்தணர் ஒருவர் நீரைத் தெளித்து, மலர்களைப் போட்டு, உணவு படைப்பதைப் பார்த்திருக்கிறேன் என்றான்.

திண்ணப்பன் ஓடிச்சென்று பன்றிக் கறியைப் பதப் படுத்தி ஒரு இலையில் எடுத்துக் கொண்டான். மலர்களைக் கொய்து தலையில் செருகிக் கொண்டான். மற்றொரு கையில் வில்லையெடுத்துக் கொண்டு மீண்டும் மலையுச்சிக்கு ஓடி வருகின்றான்

இறைவனின் முன் கிடந்த பூசை மலர்களைத் தனது செருப்புக் காலால் ஒதுக்கித் தள்ளுகின்றான். வாயில் இருந்த நீரை

இறைவனின் மீது உமிழ்கின்றான். இலையில் இருந்த கறியைக் கடித்து எலும்பை நீக்கி, ருசி பார்த்து நல்ல இறைச்சிகளை இறைவன் முன் நீட்டுகின்றான். இறைவன் அவ்வுணவை மறைத்தார்.

இதற்குப் பின்னர், வழக்கமாகப் பூசை செய்யும் அந்தணர் வருகின்றார். அங்கே இரைந்து கிடக்கும் எலும்புத் துண்டுகளைப் பார்க்கின்றார். அசுத்தமான சூழ்நிலையில் உள்ள இறைவனின் நிலை கண்டு செரிந்த கண்ணீருடனே அந்த இடத்தைச் சுத்தப் படுத்துகின்றார். எலும்புத் துண்டுகளை அப்புறப்படுத்தும் போது கோபம் ஏற்படுகின்றது. தனக்கேற்பட்ட கோபத்தில், யார் அந்த மூடன், யார் அந்தத் தீண்டத்தகாதவன்என்று திட்டிக்கொண்டே இறைவனின் இடத்தைக் கண்ணீருடன் சுத்தம் செய்கின்றார்.

இவ்வாறு ஐந்து நாட்கள் கழிகின்றன.

ஆறாம் நாள் இரவில், அந்தணரின் கனவில் தோன்றிய இறைவன் "இளம் பருவத்தில் என்மீது படும் முருகனின் காலடியை விட, திண்ணப்பனின் செருப்படி சிறந்தது. கங்கையை விட இவனது வாயிலிருந்து என் மீது உமிழக் கூடிய நீர் புனிதமானது, பிரம்மனும் திருமாலும் என்னைப் பூசிக்கும் போது போடக்கூடிய மலர்களை விடத் திண்ணப்பனின் தலையிலிருந்து போடக்கூடிய மலர்கள் உயர்ந்தவை

வேதியர் வேள்வியில் அவிர்ப்பாகமாக எனக்குப் படைக்கும் பங்கினை விடத் திண்ணப்பன் சுவைத்துப் பார்த்து எனக்குக் கொடுக்கக் கூடிய ஊன் இனிப்பானது.

மறைகள் கற்ற முனிவர்கள் மகிழ்ந்துரைக்கும் மந்திரங்களை விடத் திண்ணப்பன் முகம் மலர, மனம் மகிழ, அன்பில் நெகிழ்ந்து, என்னைத் தவிர வேறு எதனையும் அறியாத அவனது மொழிகள் எனக்கு நல்லவை,

யாரை நீ மூடன் என்று சொல்லுகின்றாயோ, யாரை நீ தீண்டத் தகாதவன் என்று சொல்லுகின்றாயோ அவனது பக்தியை மறைந்திருந்து பார்" என்று சொல்லி மறைந்தார்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து கொண்ட அந்தணர், மலையுச்சிக்கு விரைந்து வழக்கம் போல இறைவருக்குச் செய்ய

வேண்டிய பூசைகளையெல்லாம் செய்து முடித்து விட்டு, மறைவாக ஓரிடத்தில் நின்று கொண்டு, நடக்கப் போவதை மறைந்திருந்த வாறே கவனித்தார்.

திண்ணப்பன் மகிழ்ச்சியுடன் ஓடி வந்து இறைவனைக் காணுகின்றான். அப்போது இறைவனின் ஒரு கண்ணில் இருந்து குருதி கொட்டியது. தான் பார்த்ததினால் குருதி சொட்டியதோ, இல்லை யாரேனும் இறைவருக்குத்தீங்கு செய்து விட்டார்களோ என்று, வில்லை எடுத்துக் கொண்டு அங்கும் இங்கும் பார்க்கிறான். ஒருவரும் இல்லை. அந்தணர்

ஒளிந்து கொள்கின்றார்.

ஓடிச்சென்று மூலிகையைப் பறித்து வந்து இறைவனின் கண்ணில் பிழிகின்றான். ஆனால், குருதி பெருகுகிறது. அப்போது "ஊனுக்கு ஊன் மருந்து" என்னும் தனது முன்னோர்கள் கூறிய மருத்துவ முறை ஞாபகத்திற்கு வர , அம்பை எடுத்துத் தனது ஒரு கண்ணைப் பிடுங்கிக் குருதி கொட்டிய இறைவனின் கண்ணின் மீது அப்புகின்றான். அது சரியாகப் பொருந்தியது, குருதி வருவதும் நின்றது.

கண்ணைப் பிடுங்கிய இடத்தில் இருந்து திண்ணப்பனுக்குக் குருதி கொட்டுகின்றது, ஆனால் இறைவனின் கண்ணில் இருந்து கொட்டிய குருதி நின்று விட்டதற்காக ஆடுகின்றான், பாடுகின்றான், மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கின்றான். ஆனால், அந்த மகிழ்ச்சி நீண்ட நேரம் நிலைக்க வில்லை.

இறைவனின் மற்றொரு கண்ணில் இருந்து குருதி சொட்டியது.

இறைவனின் மற்றொரு கண்ணில் இருந்து வழியும் குருதியையும் நிறுத்துவதற்காகத், தனது அம்பை எடுக்கின்றான். தனது மற்றொரு கண்ணையும் எடுத்து விட்டால் இறைவனின் கண்மீது சரியாகப் பொருத்த முடியாதே என்பதால், அடையாளமாகத் தனது செருப்புக் காலைக் குருதி பொங்கும் இறைவனின் கண்ணில் வைத்துக் கொண்டு, அம்பைக் கண்ணின் அருகே கொண்டு செல்கின்றான். அப்போது இறைவனின் திருமேனியில் இருந்து ஒரு கரம் நீண்டு , திண்ணப்பனின் கைகளைத் தடுத்து நிறுத்தி, "நில்லு கண்ணப்ப, என் அன்புடைய கண்ணப்ப" என்று அசரீரியாய் ஒலித்தது.

திண்ணப்பன் அன்று முதல் கண்ணப்பன் ஆனான்.

கண்ணப்பன் வேடர் குலத்தலைவன். வேடர் என்பவன் வேட்டுவன்

இளையநாயக்கன் வேட்டுவர் குலத் தலைவன். அவர் வழியில் வந்தவர் தான், இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர்.

1584 இல் வெளியிடப்பட்ட அல்லாள இளையான் செப்பேடு பக்கம் 151 இல்,"காவலவர், பூவலவர், மாவலவர், வேடர், வேட்டுவர்" என்று வேட்டுவர்களை வரிசைப்படுத்தி, அவர்கள் கண்ணப்பநாயனார் வழித் தோன்றியவர்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இளையநாயக்கனைக் கண்ணப்ப நாயனாராகப் போற்றும் பாடல்

"அண்டர்தொழுங் காளத்தி யப்பருக்குக்
கண்கொடுத்தா யதிர்ந்துவீழும்,
மண்டபமுந் தாங்கியநற்
சிவகோசன் றனக்குமுத்தி வருவித்தாயே,
கொண்டனிக ரானகொடை யல்லாள
திருமலையா ஆற்றூர் வாழ்வே
தண்டமிழ்சே ரிளையானே துட்டர் கண்டா
நறுவாகைத் தாமத்தோனே."

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 265

கைமாறு கருதாமல் கருமேகம் மழை பொழிகின்றது. அந்தக் கருமேகத்திற்கு நிகராகப் பொருளை வாரி வழங்குபவன் இளையநாயக்கன். அவன் வடகரையாற்றூரில் வாழ்பவன், அவ்வூரின் மக்களுக்கு வாழ்வாகவும் விளங்குபவன். அவன் குளிர்ச்சியான தமிழ் பேசுபவன். கெட்ட குணத்தாரை அழிப்பதிலே வெற்றி பெற்றதினால், வெற்றி வாகை மலரைச் சூடிக் கொண்டிருப்பவன், அவன் கண்ணப்பனாய் இருந்து இறை வனுக்கே கண் கொடுத்தவன், அதனைக்கண்டு அதிர்ந்து விழுந்த சிவகோசருக்கும் முக்தி கிடைக்க வைத்தவன் எனத் திருச் செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 265 இளையநாயக்கனை மிகவும் புகழ் பாடுகின்றது.

இளையாநாயக்கன் வழித்தோன்றலின்
இன்றைய நிலை (கூரைவீடு)

பரமத்திச் சீமையில் உள்ள வேட்டுவர்களின் கோட்டையில் இருந்து கொண்டு அரைய நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் இளைய நாயக்கனின் முன்னோர்கள். இவனது வழித்தோன்றல் இருக்கூர்ப்


பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர். இன்று, இவர் மிகவும் சாதாரணமான சிறிய வீட்டில் வாழ்ந்து வரும் அவலம் காண்பவரின் கண்களில் நீரைக் கசிய வைக்கிறது.

இருக்கூர் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர் அவர்கள் மழை பெய்தால் ஒழுகும் கூரை வீட்டில் தான் 01. 08. 2007 ஆம் ஆண்டு வரை வாழ்ந்து வந்துள்ளார்.

இருக்கூர் மாரியம்மன் கோயில் தர்மகர்த்தா திரு. தேவராஜ் அவர்கள் (செஞ்சுடையாம் பாளையம்) இருக்கூர்ப் பட்டக்காரர் அவர்களது, மழை பெய்தால் ஒழுகும் கூரை வீட்டினைக் கண்டு மனமிரங்கிப் போதுமான நிதி வசூல் செய்து, தானே முன்னின்று அடித்தளங்களுக்கு மண் போட்டு நிரவியும், பழுதடைந்த வீட்டைப் புதுப்பித்தும், மேற்கூரையை அகற்றி விட்டு அட்டை போடச் செய்தும் வீட்டைப் புதுப்பித்து உள்ளார். இதற்காக, வேட்டுவம்பாளையம் கருப்பண்ண கவுண்டர் மகன் நடேசன் அவர்களும் 5,000 ரூபாயை வழங்கியுள்ளார். இவர்கள் அனைவரின் உதவியினாலும், தற்போது இளையநாயக்கர் வாரிசுகள் வாழ்ந்து வந்த வீடு ஓரளவு புதுப்பிக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வழித்தோன்றலை வாழ்த்துவோம்

காவிரியில் அணை கட்டி அரையநாட்டிற்கே நீர் வழங்கிய இளையநாயக்கனின் வழித்தோன்றல், இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர் , இன்றும் தன் வீட்டிற்குத் தேவையான தண்ணீரையும், தனது குதிரைக்குத் தேவையான புல் லையும் கூடப் பாடுபட்டுப் பெறவேண்டிய நிலைதான் தற்போது உள்ளது. இளையநாயக்கனின் வாரிசுகளைக் கபிலர் மலை "அம்பு சேவை" நிகழ்ச்சிக்காகப் பல்லக்கில் அழைத்துச் செல்வது வழக்கம். அதே வழியில், இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர் அவர்களைப் பல்லக்கில் அழைத்துச் செல்வதும் வழக்கம். ஆனால், பல்லக்கைச் சுமப்பவர்கள் கடந்த 20 வருடங்களாக வரத்தவறியதால், தனது பல்லக்கைத் தானே தனது குதிரை வண்டியில் போட்டுக்கொண்டு கபிலர்மலைக்குச் சென்றுவிடுவார் இவர். கபிலர்மலை ஐயரிடம் , தனது அரசபரம்பரையினரின் பல்லக்கைத் தனது குதிரை வண்டியில் தான் கொண்டு வர முடியும் எனவும், இதைத்தவிரத் தனக்கு வேறு வழியில்லை என்பதையும் தெரிவித்து விட்டார்.



பல்லக்கு

அம்பு சேவை நிகழ்ச்சிகளுக்குப் பல்லக்கில் சென்று வந்த இளையநாயகனின் வழிதோன்றல், இப்போது பல்லக்கை வண்டியில் வைத்துக் குதிரையை ஓட்டிக்கொண்டு செல்லும் நிலைதான் உள்ளது. எவராலும் அடக்க முடியாத பாண்டியனின் குதிரையை அடக்கிய மாபெரும் வீரனின் வழித்தோன்றல், இன்று குதிரையைக் கோயிலின் திருவிழாக்களுக்குக் கொண்டு போகும் நிலைதான் உள்ளது.

அரையநாட்டு மக்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்த இளையநாயக்கரின் வழித்தோன்றல் இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர் அவர்களின் துணைவியார் திருமதி இரத்தினம் அம்மையார் அவர்கள், இந்த நவ நாகரிகக் காலத்திலும் வசதியின்றி , மண் அடுப்பில் விறகைப் பற்றவைத்து, ஊதாங்குழலால் அடுப்பை ஊதிச் சமைக்கும் பரிதாப நிலை தான் இன்றும் நிலவி வருகின்றது.

அரையநாட்டின் இவ்வீரவரலாற்றை எழுதி முடித்து அச்சுக்காகக் கொடுத்த பின்னர், இத்தம்பதியினரைப் படம் எடுப்பதற்காகக் கரிச்சிப்பாளையம், மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. கணேசன் மற்றும் ஜேடர்பாளையம் ஈசன் ஆகியோருடன் சென்ற போது, எங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று உரையாடியவர்கள் படம் பிடிக்கக் காமிராவை வெளியே எடுத்த

போது திருமதி இரத்தினம் அம்மையார் அவர்கள் வீட்டிற்குள் சென்றவர் வெளியே வரவே இல்லை. எவ்வளவோ வற்புறுத்தியும் படம் எடுக்க ஒப்புக் கொள்ள வில்லை எனவே, வேட்டுவ இனத்தலைவரின் வழித்தோன்றல்“இருக்கூர்ப்பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர்“ அவர்களை மட்டும் படம் பிடித்துக் கொண்டோம்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அரசால் வழங்கப் பட்ட கலர் டிவி ஒன்று, இத் தெய்வீகத் தம்பதியினருக்கும் இலவசமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

கபிலர்மலை வேட்டுவர் மடம் சார்பாக 5,000 ரூபாய் மின் வசதிக்காக வழங்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது மின் இணைப்புப் பெற்றுள்ள இத்தம்பதியினரின் வாழ்க்கையில் இப்போதுதான் ஒளி பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது என்று சொல்லலாம். அரையநாட்டின் குறுநில மன்னர் இளையநாயக் கரது வாரிசான, இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர் அவர்களுடைய பொருளாதார நிலைதான் தாழ்ந்து போய் விட்டதே தவிர, கௌரவம், ஒற்றுமை, பண்பாடு, உள்ளத்தூய்மை, அன்பு இவைகள் எதுவும் சற்றும் குறையாமல் மிகவும் உயர்ந்தே காணப்படுகின்றார்.

இளையநாயக்கனின் வாரிசு என, இந்நூல் ஆசிரியர் ஆகிய என்னால், வெளியுலகிற்கு இருக்கூர்ப் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே மக்களின் கவனம் இவர் பக்கம் திரும்பி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது காலத்தின் கோரப் பிடியால் நிலை தாழ்ந்து போனாலும் மிகவும் கௌரவமாகக் குடும்பம் நடத்தும் வேட்டுவ அரசப் பரம்பரையின் வம்சா வழியினரான இருக்கூர்ப் பட்டக்காரர் இடும்பை தங்கவேல் இளையநாயக்கர் இரத்தினம் அம்மையார் ஆகிய இத் தெய்வீகத் தம்பதியினரையும், இவர்களது வாழ்த்தைப் பெறத் தினம் இருக்கூர் வந்து போகும் மக்களையும் நாமும் வாழ்த்துவோமாக.

XII

இளையநாயக்கனின் ஆட்சி

சோழப்பேரரசன் கூறும் நல்ல ஆட்சி எது?

தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான் அவர்கள் அருளிய பெரியபுராணத்தில், நல்ல ஆட்சி எது என்பதை மனுநீதிச்சோழன் வாயிலாக விளக்குகின்றார்.

சோழப்பேரரசன் மனுநீதிச்சோழனின் தவப்புதல்வன் வீதிவிடங்கன். இளவரசுக்குரிய கலைகளையெல்லாம் கற்றுத் தேர்ந்தவன், மிகச் சிறந்த சிவ பக்தன். நாள்தோறும் திருவாரூர்ச் சிவபெருமானை வணங்குதலை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

நாள்தோறும் வழிபாட்டிற்குச் செல்கின்ற வீதிவிடங்கன், அன்றும் தேர் ஏறித்

திருக்கோயிலுக்குப் புறப்பட்டான். கன்றுக் குட்டி ஒன்று துள்ளி ஓடி வந்து வீதிவிடங்கன் ஓட்டிச்சென்ற தேரின் பின் சக்கரத்தில் விழுந்தது. கன்றின் மீது சக்கரம் ஏறியதால் கன்று அதே இடத்தில் இறந்து விட்டது. இறந்து போன கன்றினைக் கண்ட வீதிவிடங்கன் கண்ணீர் விட்டுக் கதறியழுதான். தன் கன்று தேர்க்கடியில் சிக்கி உடல் நொறுங்கிக் கிடப்பதைக் கண்டு பொறுக்க முடியாத தாய்ப்பசு அம்மா என்று கதறியழுதது.

மனுநீதிச் சோழன் தன் அரண்மனை வாயிலில் ஆராய்ச்சிமணி ஒன்றினை அமைத்திருந்தான். ஆட்சியில் குற்றம் குறையிருந்தால் யாரும் மணியை அடிக்கலாம் என்றும், அக்குறையை மன்னரே தீர்ப்பார் என்றும் அறிவித்திருந்தான்.

அது வரை யாரும் அடிக்காததினால் தூங்கிய மணி என்றழைக் கப்பட்ட ஆராய்ச்சி மணியைத் தாய்ப்பசுவானது தன் கொம்பால் இழுத்து அடித்தது. அதன் ஓசையைக் கேட்டு மனுநீதிச் சோழன் ஓடோடி வந்தான்.

அங்கே கண்ணீரோடு பசு ஒன்று நிற்பதைக் கண்டு அமைச்சரிடம் என்ன நடந்தது என்று விசாரித்தான். இளவரசன் சென்ற தேர் ஏறிக் கன்று இறந்ததினால், தாய்ப்பசு வந்து மணியடித்தது என்றார் அமைச்சர்.

என் அரசாட்சியில் இப்படி ஒரு தீங்கு நேர்ந்து விட்டதே. இந்தப் பசுவின் கண்களில் அருவி போல நீர் வருகிறதே, இதைக் கண்டுமா என் உயிர் போக வில்லை என அரசன் கதறினான். இளவரசனைக் காக்க வேண்டும் என்பதற்காக அமைச்சர்கள்

மன்னருக்குச் சாதகமாகப் பேசினார்கள். அப்போது, மனுநீதிச் சோழன்“நல்ல ஆட்சி எது?” என்று கூறுகின்றான்.

நல்ல ஆட்சிக்கு அடையாளமாகத் தனது மகன் வீதிவிடங் கனைக் கன்று இறந்த இடத்தில் படுக்கச் சொல்லித் தானே இரதத்தைச் செலுத்திக் கொன்று நீதியை நிலை நாட்டினான் சோழப் பேரரசன் மனுநீதிச்சோழன்

சோழப்பேரரசன் மனுநீதிச்சோழன் நல்ல ஆட்சி எது எனக் கூறியதாவது.

1 நாடாளுவோரால் குடி மக்களுக்குத் தீமை நிகழாமல் பாதுகாக்க வேண்டும்.

2. ஆளுவோரின் குடும்பத்தாரால் தீங்கு நிகழாமல் பாதுகாத்திட வேண்டும்.

3. தனது படையினரால் தீங்கு நிகழாமல் பாதுகாத்திட வேண்டும்.

4. திருடர்களால் தீங்கு நிகழாமல் பாதுகாத்திட வேண்டும்.

5. அண்டை நாட்டுப் பகைவர்களால் தீங்கு நிகழாமல் பாதுகாத்திட வேண்டும்.

இந்த 5 வகைத் துன்பங்களையும் நீக்குபவனே நல்ல ஆளுவோன், அதுவே நல்ல ஆட்சி என்று மனு நீதிச் சோழனின் வாயிலாகச் சேக்கிழார் கூறுகின்றார்.

மனுநீதிச்சோழன் கூறிய 5 வகைத் துன்பங்களையும் நீக்கியவன் வேட்டுவர் குலத் தலைவன், அரையநாட்டு ஆட்சியாளன் ஆகிய இளையநாயக்கன். அதனை இந்நூலின் வாயிலாக அறியலாம். எனவே, அவனே நல்ல ஆளுவோன், அவனது ஆட்சியே நல்ல ஆட்சி என்பதை அறியலாம்.

ஒப்பீட்டு ஆய்வு

ஒப்பிட்டுப் பார்க்காமல் ஆராய்ச்சி செய்ய முடியாது ஆராய்ச்சி முழுவதும் இது கலந்து விடுகின்றது. எனவே, இளையநாயக்கனின் வரலாற்றை ஆராயும் போது ஒப்பிட்டுப்பார்க்க வேண்டியது மிகவும் அவசியமாகின்றது. “குருகுலம்” என்ற சொல் வேட்டுவ ரோடு பொருத்திக் கூறப்படுவதை மனுதர்மத்தோடு ஒப்பிட்டால், “குருகுல வேட்டுவர்” என்பவர்கள், “கற்றறிந்தவர்கள்” “அறநூல்களை உணர்ந்தவர்கள்” எனவே, மேம்பட்ட வாழ்க்கை உடையவர்கள் என்பதை அறியலாம்.

"கோட்டமில் என் குலமைந்தன் திண்ணன் எங்கள் குலத்தலைமை யான் கொடுப்பக் கொண்டு பூண்டு, பூட்டுறுவெஞ் சிலைவேடர் தம்மைக் காக்கும் பொறுப்புரிமை புகுகின்றான். அவனுக்கென்றும், வேட்டைவினை எனக்குமே லாக வாய்த்து வேறுபுலங் கவர்வென்றி மேவு மாறு காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக் காடுபலி ஊட் " டென்றான் கவலை இல்லான்". கண்ணப்ப நாயனார் செய்யுள் 50.

"காட்டு மிருகங்களிடமிருந்து மக்களைக் காக்கும் பொறுப்பு வேடர்களுடையது எனக் கண்ணப்ப நாயனார் செய்யுள் 50 கூறுகிறது"

காட்டு மிருகங்கள் நிறைந்திருந்த காலக் கட்டத்தில் வேடராசாக்கள் காட்டு மிருகங்களை வேட்டையாடி அதன் எண்ணிக்கையைக் குறைத்து மனித இனம் வளர்ச்சிக்கு முக்கியப் பணி செய்துள்ளனர்.

வேடராசாக்களின் வழிவந்த அரையநாட்டு வேட்டுவர்கள் குளம், இராசா வாய்க்கால் வெட்டி நீர் நிலைகளை ஏற்படுத்தி , விவசாயத்தைப் பெருக்கி மனித வள மேம்பாட்டிற்காக அரும் பாடுபட்டுள்ளனர். மேலும், கோயில்களைக்கட்டி அதில் குடிப்பாட்டு மக்களைச் சேர்த்து, தெய்வத்திருப்பணிகள் பலவும் செய்து, பரமத்தி நாட்டில் மக்கள் வாழ்விடங்களை நிறுவி அரும் பெரும் சாதனை புரிந்துள்ளனர். ஆகவே,

> **"காடு கொன்று நாடாக்கி**
> **குளம் தொட்டு வளம் பெருக்கி**
> **கோயிலொடு குடிநிறுவி"**

எனச் சங்க இலக்கியம் கூறும் அரசர் வழியில் மக்களை நல் வழிப் படுத்தி மன அமைதி பெற வழி வகுத்தவர்கள் வேட்டு வர்கள். இவ்வகையில் மிகவும் சிறந்த தலைவனாக இளைய நாயக்கன் தோன்றுகிறான்.

கொங்கு நாட்டின் பன்முக மாட்சியை விளக்கும் வரலாற்று நூலாகிய "கொங்கு மண்டல சதகம்" பாடிய "ஜினேந்திரன்" என்ற கார்மேகக் கவிஞர் விஜயமங்கலம் "சமணர்".

கார்மேகக் கவிஞர் ஜினேந்திரன், இராசா வாய்க்காலை வெட்டிய இளையநாயக்கனைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் கொங்கு மண்டலச் சதகத்தில் பதிவாகியுள்ளன. சமணர்கள் வேட்டுவ அரசனைப் புகழ்ந்துரைப்பதில் இருந்து , சைவ மதத்தைப் பின் பற்றிய இளையநாயக்கன் எல்லா மதத்தினரையும், எல்லா

இனத்தவரையும் மதித்து ஆட்சி செய்து வந்துள்ளான் என அறியக் கிடக்கிறது. எனவே, இளையநாயக்கன் சிறந்தவன், உயர்ந்தவன் என்பதை ஒப்பீட்டு ஆய்வு வாயிலாக இவ்வரலாற்று நூல் உறுதிப் படுத்துகின்றது.

சமூகங்களின் வாழ்வியலில் மாபெரும் மாற்றமும் மறுமலர்ச்சியும் தோன்றி மக்களோடு மக்களாக நல்லாட்சி செய்த இளையநாயக்கனின் புகழ் நிலைத்து நிற்கட்டும் வேட்டுவர் நம் நாட்டில் கட்டி ஆண்ட கோட்டைகள் ஏராளம். எனினும் அழிந்துபோன பரமத்திக் கோட்டையை வெளியுலகிற்குக் கொண்டு வருவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்..

XIII

துணைக் குறிப்புகள்

1. ஆறகளூர்க் கல்வெட்டு, எண் 51

இடம் : ஊர் / ஆறகளூர்

திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில்

கருவறையின் முன்மண்டபத் தென்புற அடித்தளம்.

அரசர் : விசயநகரர், இம்முடிநரசநாயக்கர்.

காலம் : கி.பி. 1505

மொழி : தமிழ்

க.ஆ.அ. : 420 / 1913

செய்தி : திருக்காமீசுவரடைய நாயனார் திருக்கோவிலுக்குச் சூரிய சந்திரர் உள்ள காலம் வரை திருநந்தாவிளக்கு எரிக்கவும், சந்திவிளக்கு எரிக்கவும் கொடையளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. துலுக்கணநாயக்கரின் திருமேனிக்கு நன்மை உண்டாகும் பொருட்டு ஆவன செய்யப்பட்ட இவ்விளக்குகள் எரிய ஆற்றூர்க் காணியுடைய அல்லாள நாத இளையநாயக்கர் என்பாரும் முப்பாரு நாட்டினரும் இணைந்து நாள்தோறும் நாழிக் கொட்டை அளித்தமை,

கல்வெட்டு :

1. ந்ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன் அரியராயவிபடந் பாஷைக்கு தப்புவராய கண்டந் வூராய கண்டந்

2. கண்டனாடு கொடாதான் பூர்வ தகஷிண பச்சிம உத்தர சது சமுத்திறாதிபதி கசவேட்டை கண்டு அருளிய ஸ்ரீ

3. வீரபிறதாப தேவராய மகாராயர் மேதிநி மீசுர கண்டந் கட்டாரி சாளுவ தமராய இம்மடி நரசாணாயக்கர் பிறுதி

4. வி இராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1427 இதன்மேல் செல்லா நின்ற குறோதன சம்வத்சர

5. த்து மகர நாயற்று பூர்வபகஷத்து திரித்கையும் ஆதித்த வாரமும் பெற்ற அவிட்டத்து நாள் மலாடாகிய ஜந

6. நாள வளநாட்டு மகதை மண்டலத்து ஆற்றுார் கூற்றத்து ஆறகழூர் நயினார் திருக்காமீசுவரமுடைய நயினார்த் திருக்கோயிலுக்கு திருநுந்தா விளக்கு சந்தி விளக்

7. குக்கும் நரலோகர்கண்டன் வயிர... நாராயணன் மறைபுக்கார் காவலன் சாடிக்காறர் கண்டந் ஸ்ரீமது எறமாஞ்சி துலுக்காணனாயக்கர் திருமேனிக்கு ஸகலபாக்கியமும்

8. உண்டாக வேணும் என்று துட்டர் கண்டந் துட்டர் நெட்டூரன் ஆற்றுார் காணி உடை முளைவேட்டுவரி அல்லாள நாத இளையர் நாயக்கரும் ஆற்றுார் நாட்டவரும் வெண்பார் நாட்டில் வேறு பிறிந்த முலைப்பாரு நாட்டவரும்

9. ஆறகழூர் திருக்காமீசுவரமுடைய நயினார் சன்னதியிலே குறைவற கூடி இருந்து மகாசங்கிறாந்த புண்ணிய காலத்திலே எங்கள் நாட்டில் ஊர் வழியிலே ஏற்க நாழி கொட்டை ஆக திருவிளக்கு எண்ணைக்கு கட்டளை பண்ணிக் குடுத்தோம்,

10. இந்த தன்மம் சன்திறாத்யவரை நடத்திக் கடவோம் ஆக இந்த தருமத்துக்கு யாதொருத்தரும் அகிதம் பண்ணினவர்கள் கங்கை கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போக கடவர்க(ள்)

11. ஆகவும் இவை நாட்டவர் பணியால் நாட்டு கணக்கு ஆற்றுார் நாட்டு வேளாளர் எழுத்து.

2. ஜேடர்பாளையம் காவிரி தடுப்பணையில் உள்ள கல்வெட்டு

இளையநாயக்கனால் அமைக்கப்பட்ட வடகரையாற்றூர் மேல்முக கிராமம், ஜேடர்பாளையம் காவிரியாற்றில் உள்ள தடுப்பணை கி.பி. 1952 இல் தமிழக அரசால் சிறந்த முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது

ஜேடர்பாளையம் காவிரி அணைக்கட்டில் 22. 09. 1994 ம் ஆண்டில் தமிழக அரசால் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் உள்ள தகவல்கள் கீழ்க் கண்டவாறு காணப்படுகின்றன.

....

"வடமுக நின்று வரு காவிரியின் வளத்தையென்றும்
திடமுறு கொங்கிலும் பாசனமாகச் செலப் பிரித்த
அடல்கொள் அல்லாளன் இளையான் பெருக்கம் அடைந்து வளர்
வடகரையாத்தூர் திகழ்வதுவுங் கொங்கு மண்டலமே"

கார்மேகக்கோன் கொங்கு மண்டல சதகம்

கி.பி 1584 ஈஸ்வர ஆண்டு வைகாசித் திங்கள் 14 ம் நாள் மதியத்தன்று இளையநாயகர், ஊர்த் தலைவர்கள் பலருடன் சேர்ந்து கோயிலுக்கு நன்கொடைகள் வழங்கியது, இராசா வாய்க்கால் வெட்டிப்பாசன வசதி செய்தது, பரமத்திச் சீமையை ஆண்டது, திருச்செங்கோடு மலையில் திருநாகேஸ்வரர் கோவிலுக்கு அர்த்த மண்டபம், மகாமண்டபம் கட்டியது, கொள்ளை போன போது வெகு தூரம் துரத்தி நகைகளை மீட்டது ஆகிய மேற்கண்ட தகவல்கள் இக்கல்வெட்டில் இருந்து கிடைக்கப்பெறுகின்றன.

....

3. வெங்கம்பூர் கல்வெட்டு

1967 ஆம் ஆண்டில் வெங்கம்பூர் என்னும் கிராமத்தில் இளைய நாயக்கனின் கல்வெட்டு காணப்பட்டதாகக் கூறிய புலவர் இராசு அவர்களின் செய்தியின்படி, வெங்கம்பூர் சென்று ஆய்வு மேற்கொண்டதில் இக்கல்வெட்டு கண்டறியப் பட்டது.

ஈரோடு மாவட்டம், ஈரோட்டில் இருந்து கொடுமுடி செல்லும் வழியில் சுமார் 35 ஆவது கி.மீட்டரில் வெங்கம்பூர் என்னும் சிற்றூர் உள்ளது. வேட்டுவர் குல மக்கள் நிறைந்த இவ்வூரின் நடுவில் உள்ள தன்னாசியப்பர் கோவிலின் எதிரில் உள்ள வழுவந்தராயக் கவுண்டர் மகன் தங்கவேல் அவர்களுடைய வீட்டிற்கு முன்னால் ஒரு பாறைத்துண்டு காணப்படுகின்றது.

சுமார் அரை அடி தடிமன் உள்ள இப்பாறையின் மேற்புறம் 12 அங்குலமும், அடிப்புறம் 21 அங்குலமும், 52 அங்குலம் உயரத்தையும் கொண்டதாக உள்ளது.

இப்பாறைத் துண்டின் முன்புறமும், பின்புறமும், பக்கவாட்டின் ஒரு புறமும் ஆக மொத்தம் மூன்று புறங்களிலும், இளைய நாயகனைப் பற்றிய செய்திகள் அடங்கிய எழுத்துக்கள் காணப்படுகின்றன.

விமானப்படையில் அதிகாரியாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற சுமார் 80 வயதுக்கும் மேல் உள்ள திரு. தங்கவேல் அவர்கள் கூறுகையில் இது காலம் காலமாக இங்கேயே கிடப்பதாகத் தகவல் கூறினார். இதனைப் படம் பிடிக்கப் பலர் உதவிய போதும், இதன் விவரம் யாரும் அறிந்திருக்க வில்லை.

இதனைப் படியெடுத்து, இதற்குரிய பொருளையும் அளித்தவர் திரு. துரைசாமி அவர்கள். கல்வெட்டு ஆராய்ச்சியாளர், வரலாற்று ஆய்வுக் கழகம், வெள்ளக்கல்பட்டி, நாமகிரிப்பேட்டை, நாமக்கல் மாவட்டம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. மண்டலேஸ்ரன் அரி
3. ராயன் விபடந் மூ
4. வராய கண்டன் திரு
5. மலைத...(னாயகாரன்) செ
6. சாக்(கு) நாத நாயக்கர
7. ய்யனவர்கள் காரிய
8. த்துகு கறதரான அரு
9. ....வாரவர்ரயர்
10. காரியத்துக்கு கந்தர
11. ஈன ஏறரெட்டியார்
12. வர்கள் முற்தி எற் வீ வராத
13 செயராய ஸ்ரீ....
14. வொ......ல் அரை
15. ய சாட்டில் திருமலை இ
16. ளையா நாயக்கரய்
17. யள் காரியதுகு கற்
18. தரான ச் செண்

19. மணியக்காரன் தொ
20. ரப்ப கவு...ணுடன் ரையக
21. ட்டளை. ருவரும்
22. ம....ளைவரும்னம..
23. ல் ல்...திருப்பாண்
24. (டு க் கொடுமுடியி
25. ல் முந்தி வ பநாத
26. சு......வரமு
27. ர .. கு......
28.....நடுவித்த
29. யம் பூசை
30. கு..கயளை
31. கு......விசுவ
32. நாத பண்
33. டாரத்தின்
34. பா....ம்..
35. ரா....ய....
36. ரளையலை..
37. ல் விட்ட
38. ..ர..ண்
39. டும்..டா..
40. ரை ப்பா கி..
41. ந் விட்டா
42. ர்கள் ......
43. ம் கெங்கை
44. ரையில்
45. பசு தான
46. லிங்க பிறதி
47. .. பண்ணின
48. வண்....
49. இந்த தன்மத்
50. து ...ப
51. ண
52. ண
53........
54. ......
55........
56.........
57........
58. காரா
59. ம் பசு
60.........
61......
62. சு கொ
63. ண்ண
64. தொஷ
65. தில்எ
66. ...ச்

4. வேலாகவுண்டம்பாளையம் கல்வெட்டு

வேலாகவுண்டம்பாளையம் கல்வெட்டு: இதுநாள் வரையிலும் ஆவணங்கள் எதிலும் வெளியிடப்பட வில்லை. இதனை முறைப்படி படியெடுத்துள்ள கல்வெட்டு ஆராய்ச்சியாளர் அறிஞர் திரு. வெ. இரா. துரைசாமி, நாமக்கல் மாவட்ட வரலாற்று ஆய்வுக் கழகம், நாமகிரிப்பேட்டை, நாமக்கல் மாவட்டம் - அவர்கள், கல்வெட்டில் உள்ள செய்தியினைத் தான் சேகரித்து வைத்துள்ள, அவரது நூல் குறிப்புகளில் இருந்து எடுத்து இந்நூலுக்கு வழங்கியுள்ளார்.

கி.பி. 1653 இல், விசய வருடம் ஐப்பசி மாதம், இளையநாயக்கர், கபிலர்மலை குமாரருக்கு, வெங்கரை என்னும் கிராமத்தைத் தானமாக வழங்கினார். இந்தப் புண்ணியத்தை விக்கினம் பண்ணியவர்காராம் பசுவை கங்கைக் கரையிலே கொன்ற பாவத்திற்கு ஆளாவார்கள். கல்வெட்டு பொறித்தவர் அத்திக்காரர் ஆவார்.

இது, இளையநாயக்கனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும்.

இடம் / ஊர் : வேலாகவுண்டம்பாளையம் சாவடி அருகே உள்ள நடைபாதை, வெங்கரை, வேலூர் சரகம், நாமக்கல் மாவட்டம்

காலம் கி.பி. 1653

அரசர் இளையநாயக்கர்

I. வெங்கரை விட்டது

II. விசைய
வருட
அற்பிசைமீ
இளை
யனாயக்
கர் குழ
ந்தை
வேல
ற்கு

III. இந்த புண்(ணிய)
த்தை விக்கிந
ம் பண்ணின
வர் காராம் பசுவை
கெங்கைக் கரை
யிலே கொன்ற
பாவத்திலே போகவும்

IV. அத்திக்காரன்

5. அல்லாள இளையான் செப்பேடு

1991 இல் கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள் என்ற நூல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் புலவர் இரா. ராசு அவர்களால் வெளியிடப்பட்டது.

கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள் என்ற நூலில், இப்பட்டயம் பற்றிக் கட்டுரை வாசித்து, இதழிலும் எழுதியர் முனைவர் ஏ. சுப்ரமணியம் ஆவார்.

எண்.40. "அல்லாள இளையான் செப்பேடு" பற்றிய தகவல்கள், பக்கங்கள் 151, 152, 153, 154, 155 இல், கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றன.

....

கி. பி. 1584 ம் ஆண்டு இச்செப்பேடு வெட்டப்பட்டது. பாடலுடன் தொடங்கும் இச்செப்பேடு வேலவர் மெய்க்கீர்த்தியை முதற்கண் விரிவாகக் கூறுகிறது. அடுத்து விசய நகர அரசர் புகழ்ச்சிப் பகுதி உள்ளது. மீண்டும் திருச்செங்கோட்டுப் புராணச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

காவலவர், பூவலவர், மாவலவர், வேடர், வேட்டுவர் என்ற வேட்டுவர்கள் கண்ணப்ப நாயனார் வழித் தோன்றியவர்கள். அவர்களுக்குப் பல பட்டப்பெயர்கள் உள்ளன. வேளாண்மையில் ஈடுபட்டு வேட்டுவர்கள் மேழிக்கொடியும் படைத்துக் கொண்டனர்.

வேட்டுவக்குலப் பெருமக்கள் காமாட்சித் தம்பிரான் என்பவருக்கு மடம் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். அதன் செலவுகட்கு யார் யார் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. இப்பணி தொடர்ந்து நடைபெறவேண்டும் என்ற தம் விருப்பத்தையும் தெரிவித்துள்ளனர்.

மூலம்

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

அருளா லாதிநந்திகேசுபர னனுக்கிறகித்துத் திரேத துவாபரக் கலியுக கிறேதா யுகத்துக்கு விறுமா அற்சனை பண்ணுகையில் விறும்மகிரியும் விறும தீர்த்தமும் விறுமீசுரருமானவர். திறேதாயுகத்துக்கு விஸ்ட்டுணுகிரியும் விஸ்ட்டணுதீர்தமும்

விஸ்ட்டுணுயீசுவரருமானவர். துவாபர யுகத்தில் துற்கை அற்சனை பண்ணுகையில் துற்கைகிரியும் துர்கதீற்தமும்ந் துற்கீசுரருமானவர். கலியுகத்துக்கு நாக அற்சனை பண்ணுகையில் னாககிரியும் னாகதீற்த்தமு னாகீசபரருமானவர்.

யிப்படி அனேகஞ் சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவர் தேவன் தெய்வசிகாமணி தேவதேவோர்த்தமந் தேவதாசாரப்பூமன் பத்தர்ப்பிரியன் பத்தவத்சல பாற்பதிவல்லவன் பார்பதிமனோகரன் பார்பதினாயகன் முத்திக்குவித்து முக்கணீசுபர னின்றகோல மழகிய நிமலன் நேரமொரு பஞ்சவற்ன்னப் பிரகாசன் திருமுகவோவன் தெண்டாயுத அஸ்த்தன் சம்புத்தீவில்த் திராவிட தேசத்தில் தொன்ட மண்டலத்தில் காஞ்சி மாநகரில் திருக்கம்பை யாத்திலே பார்பதா தேவி அற்தபாகம் பெறவேண்டி அரிய தபசு பன்னுகையில் அப்போது காட்சி கொடுத்தருளிய அற்தனாரீசுபரருடைய தம்பிரானார் அவருடைய ஸ்ரீமன் குமாரராகிய விப்பிறப்பிரியந் விசுவமூற்திச் சவபாலன் சறவனபவன் குக்கடத்துசுவன் குங்குமவண்ணன் கெவ்ரி திருமகன்க் கெணபதிசகோதரன் சுரலோக லட்சாதி லட்சம் தேவர் சிறைமீட்ட தேவர் சேனாபதி யீகரைப் பகட்டரக்கர் பட்டிடப் பதைக்க வீறு கொக்கரித்து மறக்கனீத்து குக்குடத் துவசத்தினன் சக்கிற வட்டமேட்டிரட்டிக் தாவிச் சிறகாலடிக்குந் தோகைப் பிறதாப துரங்கன் வள்ளி தெவியானை மனோகரன் சிறுட்டிக்கும் விறுமனை சிரசு'திண்டாடக் குடுமியை நெட்டை வாங்குங் குமரர் கண்டீரவன் துஸ்ட்ட சமணரை வெட்டிக் கழுமிசை வைத்தப் பிறமண்ணிய சுவாமியார் திருவுளப்படுக்கி.

சவ்விதிரி மன் மகா மண்டலேசுபரன் தேினி மீசுர கண்டன் ஒருக்குடைக்கீளுலகமுழு தாண்டவன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதான் எம்மண்டலமுந் திறைகொண்டருளிய ராசாதி ராசன் ராசபரமேசுபரன் ராசமார்த்தான்டன் ராசாக்கள் தம்பிரான் கண்டர்கண்டன் கட்டாரிச் சாளுவன் துட்டர் கண்டன் துட்டர்மோகந் தவிழ்த்தோன் துஸ்ட்டநெட்டுரன் பாஸைக்குத் தப்புவராய கண்டன் மூவராய கண்டன் ஒட்டிய சுரதானன் துலுக்கர்தள விபாடன் அசுகூபதி கசபதி நரபதி நவகோடி நாராயணன் பூறுவ தெஸ்சன பஸ்சிம்ம உத்திர சத்த சமுத்திராதிபதி ராச நாராயனண் ராசகேசரி ராசபுங்கவன் ராச மனோ பயங்கரன் ராச கோலாகலன் ரணமுக சுத்த வீரன் அறிவுக்கு அகத்தியந் பொறுமைக்குத் தன்மன்

புகளுக்குக் குமணன் கொடைக்குக் கருணன் சத்தியத்திற்கு அரிச்சந்திரன் மறத்ததுக்கு வன்னியன் அழகுக்கு மன்மதன் வாழுக்கு அபிமன் பரிக்கு நகுலன் கரிக்கு உதையன் வில்லு விசையன் மல்லுக்கு வீமன் பதினெட்டுப் பொம்மையும் பார சங்கிலியும் படைத்த ராச தேவேந்திரன் அஸ்ட்டபோக துரந்திரன் சேரன் சோழ பாண்டியப் பிறதிஸ்ட்ட சாரியன் சத்த சாகரமும் மொரு

குடைக்கீழுலகமுழுதாண்டவன் ஸ்ரீ கட்டாரிச் சாழுவன் உத்துங்கராயர் கட்டாரிராயர் விருப்பாட்சிராயர் நரசிங்க ராயர் பிரவிடதேவமகா ராயர் தேவமல்லிகாஸ்சுணராயர் சசாசிவதேவமகாராயர் வீரவசந்தராயர் ராமதேவராயர் ஆனைகொந்தி வேங்கிடபதிராயர் சீரங்கராயர் பிரிதிவி ராச்சியபாரம் பண்ணியருளா நின்ற விக்கிறாமாற்கப் பிறதாப வீறலட்சுமி விசையலட்சுமிவாசரான விசுவனாத னாயக்கர் வீரப்பனாயக்கரய்யனவர்கள் னாழில்,

விசையநகரம் பெநுங்கொண்டை, சந்திரகிரி, திருப்பதி, திருக்காளத்தி, காஞ்சிபுறம், படைவீடு, திருவனாமலை, தேவக்காபுரம், செஞ்சி, வளுதிலன்பட்டிச்சாவடி,தஞ்சாவூர், திருவாரூர், திருவிடைமருதூார், திருக்கு குடந்தை, திருவையாறு, சீரங்கம், திருச்சிராபழி, திருவானைக்காவல், மதுரைக்கடுக்காடு, ராமேசுரம், கொங்குதாராபுரம், மலையாளம், கொச்சி, ஈழ மார்ப்பாணப் பட்டண மற்றுமுண்டாகிய அன்பத்தாறு தேசம், பதிநெட்டு யுகமாவது முதலாகிய யுகம் அனந்தியனென்கிர யுகம் அந்த யுகத்தில் பரந்தோன்றிச்சு, ரண்டாவது அற்புதனென்னும் யுகத்தில் ஆகாச தோன்றிச்சு, மூன்றாவது தீவாரசனென்னும் யுகத்தில் சந்திராதிந்தந் தோன்றினர். னாலாவது த்ராசனென்னும் யுகத்தில் காற்றுத்தோன்றிற்றது. அஞ்சாவது தண்டசனென்னு யுகத்தில் நெருப்பு தோன்றிற்றது, ஆறாவது வின்னசனென்னு யுகத்தி மழை தோன்றிச்சு. ஏழாவது வினாயகனென்னு யுகத்தில் விளைவு தோன்றித்தது. எட்டாவது அயபுதனென்னு யுகத்தில் வித்தை தோன்றிச்சு. ஒன்பதாவது மையுதனென்னு யுகத்தில் வேதம் தோன்றித்து, பத்தாவத மணமீரணனென்னு யுகத்தில் தன்மந் தோன்றிச்சு,.பதினோராவது மணியாரணன் என்னு யுகத்தில் சோதிரிசம் தோன்றித்து, பதிமூன்றாவது அலங்கிதனென்னு யுகத்தல் சந்திராதித்தர் பொருந்தினர், பதினாலாவது அரவிந்தனென்னு யுகத்தில் மற்ச கூற்ம பொருந்தினர்,

பதினஞ்சாவது கிறேதா யுகத்தில் தேவசுரர் பொருந்தினர், பதினாறாவது திறேதா யுகத்தில் இராமர் பொருந்தினர், பதினேழாவது துவாபுர யுகத்தில் தன்மர் திரியோதனர் பொருந்தினர், பதினெட்டாவது கலியுகத்தில் கலியன் பிறந்த யின்னாள் வரையும்,

னாலு வேதமும் ஆறு சாத்திரமும் பதினெட்டு புராணமும் யிருபத்தெட்டுத்தேய வியாகமும் துமுப்பத்திரண்டு அறமும் அறுவத்துனாலு கலைக்கியானமும் உள்சமையமாறு பிறசமையமாறு விழங்கபடாடிநின்ற சோம சூரிய வ்ங்கிஸ மானவந் அழுதிராசாச் சூரன் மகன் ஆதினாறாயணந் மகன் விறுமர் விறுமர் மகன் வீறரு மகன் மாரீசந் மகன் காசிபன் மகன் ஆதித்தன் மகன் சினியன் மகன் நயதிரியன் மகந் போச வாகனந் மகன் துந்துமி ராசன் மகன் திறிச்சங்கு மகன் அறிச்சந்திரன் மகன் லோபிதாவிசனன் மகன் நளன் மகன் இருமூச்சியந் மகன் பொன்னுருவி மகன் பரிதாபி மகன் அமிற்தன் மகன் அனந்தராசன் மகன் மத்தகுரிச்சினன் மகன் சேவின் திருயுருமகன் ராகுமகன் மீரேசன் மகன் அரன் மகன் திசரதன் மகன் ராமர் மகன் லவனன் மகன் விருது மகன் நீளகோபாலன் மகன் நந்தகோபாலன் மகன் வாசுதேவன் மகன் கிருஸ்ராயர்மகன் மன்மதன் தலமுறை முப்பத்தாறும் புறத்த இன்னாள் வரைக்கும் தேவரிஸி , விஸ்ணுரிஸி, விறுமரிஸி தேனியே அஸ்டமாசித்தர் நவனாத சித்தர் கலியான சித்தர் இருக்கப்படா நின்ற போமீசை மாமுனி பாதலோக மாமுனி துருவாசமுனி கண்டலாமாமுனி தவமுனி கோமுனி வனச மாமுனி மகாமுனி கவசமாமுனி னுாதமாமுனி அகத்திய மாமுனி பிறலவிச மாமுனி,

சகன் சனந்தன் சனக்குமாரீசர் சாத்தி அக்கினி தெரிசினிகள் விசுவாமுத்திர மாமுனி சோமாக்கினி மாமுனி அரவாசமாமுனி பரஞ்சோதி மாமுனி கணணாதர் விறும கணனாதர் வீரகணனாதர் சிவயோக கணனாதர் ஞானகலியாணர் அஸ்ட்ட மாசித்தர் கணனாதர் ஆந்திரமாசித்தர் கலியாணர் அதிசெய ஞானசித்தர் கலியாணர் ஆகாசஞானசித்தர் கலியாணர் அம்பிறகசித்தர் கலியாணர் பிலவேச ஞானசித்தர் கலியாணர் அனுமீசர் றிடைக்காடர் தவமுனி மழைமுனி வியாக்கிரம பாத முனி பதஞ்சலி மாமுனி இப்படியதாக் கொத்த னாற்பத்தென்னாயிறம் இருஸிகளுக்கு மறுபதினாயிறம் முனிவர்களும் முப்பத்தினாலாயிரம்ங் கணனாதர்களும் னாற்பத்தினாலாயிரம்

ஆதி அந்த வயிரவர்களுட ஆயிருங்கெருட காந்துறுவர்களும் முப்பத்தி முக்கோடி தேவர்களும் ஆகாசவருண நந்திவாகன ஒருகோடி கண்ணுள்ளவர்கள் ளொரு கோடி பேர் ஆய்ரங்கண்ணொரு கோடி பேர் ஈசுபரனுக்குஒரு னொடிப் பிறமாணம் யிப்படியாக்சொத்த ரிஸபாவாகன வேதசாத்திற புராண ஆகமும் ஆதிவேதனாகி விறையில்லாத வித்தாகி ஞான சுருபமாயி ஞான பரனாய சிவப்பிறகாசனாயி சிற்சருபனாய நீடுள்ள நிற்குணனாய நிராமயமாய நிர்மலனாய துரிய ரத்தனாய சச்சுதானந்த சுருபனா யறியாதவனுமா யிதர்க்கு மெட்டாதவனுமா யிழிந்த விடத் தனுகாதவனுமாயி மூன்று நடுவிறுதிவ் வியாதனுமாயி காடிக் குமாரன் கூழிகொட்ட கூகை பாசாசு தெபாக்கெண தாளமொத்த துறிசனக் கூழை கொட்டபாரியாய் நீழிய கச்சை கட்டய்யரா வேலெடுத்த யோத்தீரன் னாகிரி வேலாதசுவாமி திருவிளத்தில்

காவலற்பூவலவர், மாவலவர், வேடர், வேட்டுவர் கங்கையைத் தரித்த கடவுளாற்கு எச்சமிட்டு கண்ணையிடந்து சாத்தி முத்தி பெத்த கண்ணப்பனான பெரியோர் காளஸ்திரி மலைகாவலர் செம்பொற் சிலை கொண்டு வில்வத்திலேறியே சிவறாத்திரி கண்ட பெரியோர் சித்திர புத்திரர் சீமைக்குடைய பெரியோர் சேவுகத்துக்கும் உடையபேர் கொங்குதேசத்துக் குடைய பெயர் கொளவர்கள் கற்றவர்கள்,

கொல்லிகிரிக் குடையவர்கள் வற்றிய னாடுதனிலே வாசகங்கூறி வைத்துக் கொண்ட பெரியவர்கள். வங்கக் கடலொலி கைவர கைமாலை புயத்தோர் சித்திரமேழிக் கொடிப் படைத்த பெரியோர், வாகிருது சொன்னவரை வாயைக் கிழித்திடும் வெற்றி வாளரசர் மணவாழரெண் பெரியோர், குன்றத்தூர் துருகம் குன்னாடிக் கவுண்டர் , மோரூறு பொன்ன வேட்டுவரில் கீகரை பூந்துரைனாட்டில்பாண்டிக் கோத்திரத்தில் பேரக் கவுண்டன் , வேம்பங் கோத்திரத்தில் குமரக் கவுண்டன், , சினாக்கவுண்டன், பரமத்திச் சுமை மூளை கோத்திரத்தில் அல்லாழி யிலையான் னாயக்கர் , திருமலை னாயக்கரவர்கள் , னாத கவுண்டர், முத்துக்காழிக் கவுண்டர், தலையநாடு குன்னாடு கோத்திரத்தில் வள்ளய கவுண்டர், மண்னாடு நீலியப்ப கவுண்டர், கெழங்குனாடு திருமலை கவுண்டர், குமாரசாமிக் கவுண்டர், பின்னுங் கொங்கு மண்டலத்திலுள்ள வாழரச மணவாளரெலாங்கூடி,

திருச்செங்கோட்டில் கலியுக சகாப்பிற்தம் 4685 க்கு மேல் செல்லாநின்ற ஈசுர வருஷம் வைய்யாசி மாதம் 15 ந் தேதி

பூர்ணமும் விசாக நட்செத்திரமும் பெத்த சுபதினத்தில் காமாட்சித் தம்பிரானுக்கு மடதர்மம் உண்டு பண்ணிக் கொடுத்து , மடம் னாககிரியின் மேல் அற்தனாரீசுபர சுவாமியார் சன்னதிக்கு மேற்கு , விஷ்டுனு தீர்த்தத்துக்குத் தெற்கு,துற்கை அம்மன் சன்னதிக்கு வடக்கு , அமரமணியார் மண்டபத்துக்கு கிழக்கு. யிது நடுவில் மடம் யிதிலிருந்துக் கொண்டு அற்தனானீசுபர சுவாமி சன்னதியில் திருவிளக்கும் திருமாலைக் கட்டிக் கொண்டு வரவும். யிதுக்கு வற்தனை பல்லக்கு பிறபுக்கு னாகறம் பணம் 21, குதிரையேறிய பிறபுக்கு னபகறம் பணம் 5 , பண்ணைய குடிக்கி ஏறுக்கு கம்பு வள்ளம் 2, கலியாணத்துக்கு மாப்பிள்ளை வீடு னாகறம் பணம் பென் வீடு னாகரம் யிந்த மேறைக்கி நடப்பிவிச்சி குடுக்கிறோமென்று ளாங்கள வருங்கூடி யெழுதி குடுத்த மற்ம சாசனப் பட்டையம் . யிந்தப் படிக்கு சந்திராதித்த ருள்ளவரைக்கும் மலையுள்ளகாலத்துக்கும், நிலையுள்ள தன்மமாயி கட்டளை யிட்டது . யிந்த தற்மம் தேசஞ் சீர்மை நாடு எங்கிலுண்டாகிய வாழரசர் மணவாழந்தற்ம பரிபாவணம் பண்ணி நடப்பிச்சிக் கொண்ட பேர்கள் யிந்திராதி போகமும் அனுபவிச்சு சந்திராதித் தருள்ளவறைக்கும் சாயுச்சிய பதவியிலிருப்பார்கள். யிந்த தற்மத்துக்கு விகாதம் பண்ணின பேர் கெங்கைக் கறையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள்.

நட்டகல் விட்ட சூலம் . நீடு கல்வெட் டெல்லை
வட்டமா லயங்கள் தோறு மகுதேவர் தான தற்மம்
யிட்டிடை பண்ணி மெத்த யிடஞ்சலே செய்பு வாற்க்கு
குட்டனோம் நரகந் தன்னில் குழிப்பது தின்னாந் தாே

6. கபிலமலைச் செப்பேடு

1991 இல் கொங்குநாட்டுச் சமுதாய ஆவணங்கள் என்ற நூல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் புலவர் இரா. ராசு அவர்களால் வெளியிடப்பட்டது.

எண்.75. "கபிலமலைச் செப்பேடு" பற்றிய தகவல்கள், பக்கங்கள் 310, 311, 312, 313, 314, 315 இல், கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றன.

....

கபிலக்குறிச்சியில் ஒரு வீட்டிலிருந்து நாமக்கல் தாசில்தார் மூலம் பெற்று மைய அரச தொல் பொருள் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப்பிரிவினர் இச்செப்பேட்டைப் படி எடுத்துள்ளனர்.

கபிலமலையில் உள்ள வள்ளுவர் குலப் பெருமாள் தம்புரானுக்குக் கபிலமலை, திருச்செங்கோடு, பழனி மடங்களை எழுதித் தந்து பல கொடைகளை விட்டதை இச்செப்பேடு கூறகிறது.

கபிலமலையில் மலைக்கோயில், உச்சிப்பிள்ளையார் கோயில், பால்வாவி கட்டப்பட்ட விவரமும், தைப்பூச விவரமும், விழாவின் போது திருமஞ்சன நீரினை அந்தணர் கொண்டுவர ஏற்பாடு செய்ததும், நடைக்கு 1/8 ரூபாய் கொடுத்த விவரமும், கபிலமலைக் கோயிலுக்கும் திருமடத்திற்கும் வரி நிர்ணயம் செய்த விவரங்களும் விரிவாகக் கூறப்படுகின்றன.

வேட்டுவர் சமூகத்தைச் சேர்ந்த அல்லாள இளையா நாயக்கன் திப்புவின் காலத்தில் செய்த பல கொடைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. வரி கொடுக்காவிட்டால் தண்ணிக்கிணற்று மறியல், தலைவாசல் மறியல், வீடு மறியல் என்பது இச்செப்பேட்டில் அறியப்படும் புதிய செய்தியாகும்.

1604 ஆம் ஆண்டு இச்செப்பேடு எழுதப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. திப்பு சுல்தானும் கூறப்படுகிறார். காலம் பொருந்திவரவில்லை. இச்செப்பேடு முற்றுப்பெறாமல் உள்ளது.

மூலம்

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

மகாமண்டலீசுறன் அரியதள விபாடன் பாஸைக்கு தப்புவறாயர் கண்டன் மூவறாய கண்டனாடு கொண்டு கொண்டநாடு குடாத பெருமாள்

எம்மண்டலமும் முத்திரி கொண்டருளிய றாசாதிராசன் றாசபரமேசுபரன் றாசமார்த்தாண்டன் புங்கவன் றாசகேசரி வங்களர் சிங்களர் மறாட றொட்டியர் சோனகர் சீனகர் பரிசாரர் குச்சரர் அரிலையாளர் மஸ்தகொடாரி பூலோகம் புறந்த னாளில் அசுபதி கெசபதி நரபதி நவகோடி நாறாயணன் உத்திர தெஸ்சன பூறுவ பச்சிம சமுத்திறாதிபதி சேரன் சோழன் பாண்டியன் வல்லாள றாய பயங்கறன் யீள முதலாய லங்காபுறியும் வாழால் வழிதிறந்த பெருமாள் மதியாத மன்னர் மதியாத மகுடஞ் சிறந்த பதி சூறரைக் கொள்ளும் பறசுறாமன் அஸ்டதிக்கு மனோகர பயங்கரன் மொகங்கண்டு முறிபட்டோடுவார் கண்டன் நறலோக கண்டன் நாகசக்கிறவறுத்தி நறலோக சூரியன் துலுக்கதழ விபாடன் கெசத்தழ விபாடன் துலுக்கற்மோகந் தவிள்ர்த்த ஒட்டியதள விபாடன் ஒட்டிய மோகந்தன் கெகதள விபாடன் கெசபட்டறாயன் வேண்டியருளிய,

நரசிங்கறாயர், வசந்தறாயர், விருப்பாச்சிறாயர், பிறவிடதேவ்றாயர், மகாதேவறாயர், ஆனகுந்திறறாயர், சீறங்கறாயர், கரிமேலுதையன் பரிமேல் நகுலன் வில்லில் விசையன் சொல்லில் தருமன் சாத்திரத்துக்குச் சகாதேவன் தோளுக்கு வீமன் பிறப்புக்குப் பூமாதேவி அறிவுக்கு அகஸ்தியன் தவசுக்கு வசிட்டன் நிலைக்குச் சந்திரன் பிறுமா விட்டுணு குத்திறன் விளங்கும் பூறுவபூறுவமென்று சொல்லப்படா நின்ற பூதலம் யீரேளு லோகமும், அதல விதல சுதல நிராதல தராதல மகாதல பாதாள பூலோகமென்று கீளேழுலோகமும், மேலேழுலோகமும், பூலோகம் புவலோகம் சௌலோகம் தவலோகம் சத்தியாலோகம் காலோகம் சிவலோகமென்று சொல்லப்படாநின்ற பதினாலு லோகமும், யிறுனூத்தி யிறுபத்தினாலு புவனமும், அயிறத்தித் தொன்னூற்று ஒன்பது றியப்படை வீடும் சக்கிரவாழகிரியும் சமுத்திரமு தீயும் பூமியைத் தாங்கப்படா நின்ற அஸ்டகெசங்களும் ஆயிரமிதழ்பூண்ட புண்டரிகம் வாம்......... முற்தனம் அஞ்சனம் பொடியும் செந்தம சாறுபய சுப்பிறதீபம் அஸ்டகெசங்களும் அஸ்டதிக்குப் பாலகூறும் அஸ்ட நாகமும் வேறு முதலாய அறியப்படாநின்ற பதிநெட்டு யுகமாவது,

முதலாகி ஆனந்தநெம்பது அறையில் தோன்றியது. இரண்டாவது அற்புதனென்னு முகத்தில் ஆகாச நச்செத்திறா தோன்றியது. மூன்றாவது தயாறதனென்னு முகத்தில் சந்திற சூரியன் தோன்றியது. னாலாவது தறாமுகத்தில் காற்று தோன்றியது.

அஞ்சாவது தண்டகனென்னு முகத்தில் நெறுப்பு தோன்றியது. ஆறாவது விண்ணவரென்னு முகத்தில் மலை தோன்றியது. ஏளாவது வினாயகனெனு முகத்தில் .... தோன்றியது. எட்டாவது மையுகனெனு முகத்தில் மநு தோன்றியது. ஒன்பதாவது மையூகனெனு முகத்தில் வேதம் தோன்றியது. பத்தாவது மகாவிதன, பதினோராவது விசுவாசனெனு முகத்தில் சந்திராதித்தன், பனிரண்டாவது மணியநெனு முகத்தில் சோதிறிஸி, பதிமூன்றாவது ஆங்கிற தண்டகன் விமான், பதினாலாவது அரவிந்தன் யுகத்தில் தற்மம், பதினஞ்சாவது கிரேதா யுகத்தில் தேவசூறன், பதினாறாவது திரேதா யுகத்தில் மொறசு றாவணந், பதினேழாவது துவபற யுகத்தில் தற்மபுத்திரந் திரியோதனன், 18 வது கலியுகத்தில் கலியந்,

னாலா வகையிலும் நாலு வேத ஆறு சாஸ்திரம் பதினெண் புராணம் இறுபத்தெட்டு தெய்வாசாரம் முப்பத்திரண்டு அறமும் அறுபத்து னாலு கலக்யாணமும் அகசமயம் பிறசமயம் ஆறு பஞ்சபூதங்களும் அஞ்சு மண்டலமும் மூன்று அறதநம் சாலோக சாமீப சாறூப சாயிச்சியமெநு நாலு பதமும் தேவரிஸி பிரமரிஸி விஸ்ணரிஸி முனியேசுபரன் பரமலோக மாமுனி துற்வாசமாமுனி கமண்டகமாமுனி கசமாமுநி நாரதமகாமுனி விட்டிணமாமுனி கவுதமாமுனி கவுணியமாமுனி திவ்வியமாமுனி அகஸ்தியமாமுனி பிறசமாமனி அறவாசமாமுனி பிறஞ்சோதிமாமுனி யுக.................. இப்படி நாற்பத்தெண்ணாயிரம் ரிஸியும் அறுபத்தாறாயிர முனியேஸ்பரரும் யிருபத்திநாலாயித் தெண்பது கோடி ருத்திரரும் ஆயிரம் கெருடகாந்தருவரம் முப்பத்தி முக்கோடி தேவர்களும் முகம்முள்ளவர்கள் கோடி பேறுகள் கோடி பெருங்கோளுக்கு சமாநமாகிய சதிரர்கோடி யிப்படியாகொத்த பதிநொறு கோடி பேற் பிறந்திருக்கிறபொளுது,

செற்றுர் கொடி நெநம் அப்படி யெளுந்திறுக்கப்படாநின்ற யீஸ்பரன் வேத சாஸ்திர புறாணங்களும் ஆதிதேவனாகிய விரையில்லாத வித்தாகிய ஞானரூபமாகிய நிர்குணணாய் முப்பிறகாசநாய் நிர்ஞான பிறதனனாய் நிர்மயனாய் நிர்மலமாய் துரியசிதனாய் சச்சிதாநந்தனாய் அணுவுக்கணுவாய் அறுளுக்கு யெட்டாதவனுமாய் அளித்தவிடத்தில் அமுற்தந் தரித்தவருமாகிய அணுவுக்கணுவாய் நடுவில் விறுத்தில்லாதவருமாய் ஆகம சாஸ்திர புறாணத்தாலே பிறுமா விட்டுணுவாலே காண்டற்கரியும் எறும்புக்கடை ஆனைத்தலை என்பத்து நாங்கு உயிர்க்கும் கோடி செந்துகளில் சறுவாயறுமாக்கள் செய்கிற மந்திரங்களுக்குத் தக்க

மரங்களுண்டாக்கிவிக்கவும் கற்த்தாவாயெழுந்தருளிய கயிலாச மாயேந்திராதி பாகமும் மும்மூற்த்தி பார்வதி யிறுதரானாகிய அகிலாண்டகோடி விறுமாண்டநாயக நேரமொரு பஞ்சப் பிரகாச பத்திப்பிறியாத கோலமாகிய மகாதேவர் புத்திறனாகிய சரவணபுவ சண்முகப் பிறதாபன் குமரி திருமகன் கெணபதி சகோதரன் குக்குடதுவசன் தேவதேவன் தெய்வலோக நாயகன் தேவகண்ட கோகனகச் சிறமாகுட்டி குடிமையை நெட்டைப் போக்கி கோல் சிலும்பதம் கொடுத்த குமாற கண்ட சூரன் பக்கரைப் பதட்டிய படைக்களத்தில் கொக்கரித்த குக்கிடங்கொடிக் குமாரன் கூளி கொட்கை பசாசுகள் கொக்கரித்தாள மொதத்துசன் சூரமாறத்தக்குபாறிய நிளிய கச்சை கட்டிப் பார்வேலெடுத்து சேவுகன்,

தென்ம்பளணிமலைப் பன்றிமலை காவலன் ஆறிலங்கு வய்யாபுரிநாடன் உத்தண்ட குமாறன் உத்தண்ட தெவியானை மிண்டன் கிறுவித குமாற சூரன் சூரனைக் காய்ந்த சூரகாலந்தகன் தெவியானை மனோகரன் வள்ளிமணவாளந் மயில்வாகனந் குங்குமவண்ணந் பன்னிரு புயத்தோளன் கடல் சூர வேல்தனை விடுத்தோன் யெண்ணாயிரம் சமணரைக் கழுவில் லேற்றிவைத்தோன் ஆண்பனையை பெண்பனையாக்கி வைத்தவன் அடல்சூரரை நீருள் அடித்தவன் சண்டப் பிறசண்டன் வண்டற்கொருமிண்டன் சிவசமய பரிபாலகன் ஏடெளுதி வைத்தவன் எதிரிலை யேற விட்டவன் திருமயிலுறு சிவசேன செட்டியார் மகட்குத் திருமணஞ் செயிது வைத்தவன் ஆறிலொன்று கடமைகொண்டு பிறிதிவிராச்சியம் பண்ணாநின்ற காலத்திலே,

கலியுக சகற்த்தம் 4705 க்கு மேல்ச் செல்லாநின்ற காலையுத்தி வருசம் கொங்கு மண்டலத்துச் சேந்த குன்றத்தூர் வட்டத்தில் கீழ்கரை அரைய னாட்டுத் தராதிபதியான கபிலமலையில் குமர குருபரன் குக்குடத் துவசன் தேவசேனாதிபதி செந்திகந்தன் செட்டி திருமால் மருகன் யேளு வருதி சுவற வேல்விட்டவன் சமண குலைகாரன் சமந்த னாயகன் சூரசங்கார சுப்பிரமண்ணியன் அன்னக் கொடியுவானோர் பறங்குன்றும் திருவேறகமும் திருத்தணிக் குன்றும் சீறலைவாயும் திருச்செந்தூறும் மற்றுமுண்டான குன்று தோறாடி குளந்த வேலாயுதர் எளுந்தருளியிருக்கிற கபிலமலையில் குளுந்த நிளலும் கவுந்த மாரிசியும் அடையும் வடபாரிசத்தில் காசி கோத்திரத்தில் உத்தம பரிபாலகர் தெய்வீகமான பால்வாவியும் கட்டுவித்து சுனையும்

காணாத சுனை நாகம் தபசு பண்ணினதும் பசுவு மோச்சம் பண்ணினது யிப்படி தேவதன்மையாயிறுக்கப்பட்ட குளந்த வேலாயுதருடைய கிறுபா கடாசத்தினாலே கபிலை மலையில் தைப்பூசம் திருவிழாவில் பெறும் தம்புறா அறுமுக கடவுள்க்கு முதல்ப்பூறாதனம் கவிலமலையும் முதல் புறாதனம் குளந்தை வேலாயுத சாமிக்கு பூசை நடத்தி வந்தது.

ஆயிரமாலை குளந்தை வேலு பண்டாரம் பிறமாதி வருசம் வய்யாசி மாதம் 10 தேதி யிதுற் கிராமம் மேற்படி மலைக்கோவில்க் கட்டினது விபறம். கலியுகம் பிறந்த வருசம் .... சொல்லாநின்ற காலத்திலே பெருமாள் தம்புறான் 100000 விறாகன் செலவளித்து திறுப்பணிவேலை கட்டிவைத்து நூாறுக் கொத்தர்களை விட்டு தெய்வமன பால்வாவியும் வெட்டி வைத்து உச்சிப்பிள்ளையார் கோவில் கட்டி வச்சது. காவேரி கறயில் விபுதி பிட்டிது ரெண்டு செப்புக்குடம் உண்டு பண்ணி பூசைக்கி பிறாமணப் பிள்ளை அழைப்பிவைத்து பூசை பண்ணும்படி செயிது தீற்த்தம் பிறசாதத்துக்கு விட்காடு செய்ப்பூமி விபறம். உள் சோதித்தத் தாறிக்காரன் காடு, தெய்வமான் பால்வாவி வெட்டிவித்து அகபோ.............. விட்டது. யிந்தப்படிக்கு பெருமாள் தம்புறானுக்கு டிபு சுல்தான் னாழையிலே பறமுத்தி அள்ளாழ யிளையா நாயக்கர் மானிபம் செயிது வயித்தார்கள். பெருமாள் தம்புறான் குளந்த வேலாயுத சாமிக்கி திருமஞ்சனகொடம் செலம் யெடுக்கிறது. 3 பிறாமணப் பிள்ளை அளைப்பிவச்சி அள்ளாழ யிழையா நாயனாறுக்கு தெரியப்பண்ணி பிறாமணப் பிள்ளை வசம் திருமஞ்சனம் கொடம் கொண்டு வரும் படி பண்ணி வைச்சாற்கள்.

யிதக்கு தைப்பூசத்துக்கு சுவாமி ரத உச்சிதமாகிறபோது பெருமாள் தம்புறானுக்கு நடையொன்றுக்கு அரைக்கால் ரூபாயி வீதம் சேந்தது. யிவற்களுக்கு குடுக்கும் படி மூவேளுயிறபத்தொறு தலைமுரையில் வைத்தாற்கள். பூமியாகாசம் சந்திர சூரியன் உள்ள வரையில் நடத்தி வரும் படி செய்து யிந்த தற்மம் யாறாவது அபகடம் செய்த பேற்கள் மகாவிஸ்ட்ணுவுட ராமபானத்துக்கு ராவணேஸ்பரன் பட்டபடியாவார்கள். சுப்பிறமன்னியற் சூலாயுதத்துக்கு சூறாதிகள் பட்டபடி ஆவார்கள். தறுமறுடனே யெதுத்த திறியோதனந் பட்டபடி யாவாற்கள் யென்று பட்டம் பெறுத்த அள்ளாழ யிழய நாயக்கற் முன்பாக பத்தும்பறியும் யெளுதி வயித்தார்கள். தீற்த்த தெரிசினை பிறற்சாதமுங் கொடுத்து மலையில் கெறட கம்பத்தில் முன்பாக யிறுந்து கொண்டு திறுநீறு குடுக்கும்படி செய்து வய்த்தார்கள். சகலரையும் றச்சிக்கும் பெரிய யாக சாதிக்கி செயமடம் கட்டி வச்சு

அவறவற் நடத்தும்படியாய் தைய் பூசம் திருவிழாவில் மணிமண்டபதியிலுங் அள்ளாழ யிளைய னாயக்கற் முன்பாக ஆனந்தனாத சந்தான கொங்கு சமுந்தமூற்த்தி சிஸ்யனாகிய வள்ளவரில் பெருமாள் தம்புரானுக்கு மலையில் மடவாலையுண்டுபண்ணி குடுத்த படியினாலே,

நீதிக்கிலாபமாகிய விருதுபெற்ற பெரியோர் சங்கத்தை வெண்ணவர் வெள்ளானை மேலேறி அந்தி முற்சறிந்த பெரியோறாகிய அண்டரண்ட பகிரண்ட முப்புரமெரிக்கையில் காலகாலனை கபாலறுத்திரனை கயிதொளுத பெரியோராகிய காவேரி வளநாடு மிகவாள வேதநாறதனைக் கண்டு உபதேசம் செய்த பெரியோர் ....தொல்காசு வப்பபுடன் ராசசேரிகண்ட பெரியோர்கள்............ .... மெச்சவே காவி புணர்ந்த பெரியோர் பாடி அறு மாம்பரைக் கனகமுடிச் சோழனை கனகவிதங் கொண்ட பெரியோர் வங்காழ தேசம் யிறுந்து வாதவாறன காஞ்சி விறுதாசலத்தில் யிறுந்து வந்தவர் பறமுத்திக் கோட்டை அள்ளாழ யிழய நாயனார் அதிகாரத்துக்கு வந்த போது ஆனைக்கு குதிரைக்கு கடுப்பு யெடுத்து கொண்டு யிருகுறபோது அந்த கடுப்பு நிறுத்திறதுக்கு மறுந்துனால் தீறாமல் பெருமாள் தம்புரானை அளைபிவயிது யிந்த ஆனை குதிரை உபத்ரியம் நிறுத்தி வைக்க வேணுமென்று குதிரை பிடிக்கப்பட்ட சாம்பான் கறுதுவே யென்று பெருமாள் தம்புறானார் அருமை சாதினம் எளுதி குடுத்து வந்து கேள்க்க அப்பெருமாள் தம்புறான் சுப்பிறமணிய சுவாமியாறிடத்தில் வந்து வாக்குவறம் வாங்கி விபூதி போட ஆனை குதிரை கால்நடை யுள்ளதெல்லாம் தாம் பெத்த மேனிபோலே யெளுந்திரிந்தது.

அதற்காக முப்பதிமுக்கோடி தேவர்கள் தேவர்கள் அரிய கிம்புறு கின்னற விதியா விதியாதற அரிய அப்பர் சுந்தற மாணிக்கவாசகற் அரிய பதிநெட்டு விறுது உள்ளவர் ஆயிர சி............ வெள்ளைகுடை விஞ்சாமற வெங்கலப் பெறணியிறவது பொன் காறு கச்சி காவி புனந்த வெள்ள குதிரை துத்தி யிறுவதுபொன் மொளுகு கூடாரம் யிந்த சூரியபானும் விறுது உள்ளவர் நாலு முலைக்கும் நாலுயுறுக்கு தடி பூவு திரப்பிஞ்சி தீர்க்காயுதிர பழமுதிர் யென்று முற்சந்த பெரியோர் சீறங்கறாயர் திறுப்பதி ஆழ்வராயிநின்ற பெரியோர்க்கு மேகரெ பூந்துறை நாடு, காங்கய நாடு, பொங்கலூாற் நாடு, வாறக்கனாடு, வய்யபுரி நாடு , மனநாடு, தலையநாடு, தட்டயநாடு, பூவானி நாடு, அறய நாடு, வொடுவங்கநாடு, கிழங்குநாடு, நல்லுறக்க நாடு, வடகரெ நாடு, வாழவந்திநாடு, சொக்கவபாறநாடு, றாசிபுறம்

நாடு, குறுப்பநாடு, கொங்கநாடு, கீல்கரெ பூந்துரைநாடு, ...
சேலம் நாடு, பாப்பினி நாடு, வேளூமநாடு, வழவரிநாடு, கீழ்கரெ அறயநாடுதனில் யுள்ள யிறுபதுநாலுநாடே முப்பத்திரண்டு ஊறு கபில குரிச்சி கிறாம பெறுமாள் தம்புரானுக்கு தாரையேந்தி விட்டதுயென்று அரியுமிடத்து,

சிலவுக்கு வருசம் ரெண்டு விறாகன் குடுப்பது கவலமலை மடம் திருச்செங்கோடு மடம் பெறுமாள் தம்புரான் பெரியூறு பத்து பொன் சின்ன வூறு அஞ்சிபொன்னு க.கம்பு யெட்டு வள்ளம், கொட்டமுத்து வள்ள றண்டு, மாப்பளை வீட்டு மூனு பணம், பெண் வீட்டு றண்டு பணம், அரிசி வள்ளம் ஒன்று,

அதுவுள்ளசமாநம் குடுக்கவும். மேல் மிறாசு குருவு வெத்திலை நடத்தவும், அதின்வோற் முறபிவெத்திலை சுப்பிரமணியசுவாமி சொல்படிக்கியுண்டான பட்டயம் யிவாரவரி குடுக்கப்பட்டது. கொங்க சம்பா செளியசம்பா அனெமுகசம்பா குதிரெமுகசம்பா புலிமுகசம்பா தெலுங்கசம்பா. நம் சந்தா யிந்தபடிக்கி வறமானம் குடுக்காமல் போனால் தன்னிகிணறு மரியல் தலவாசல் மரியல் வீடுமறியல் யிந்தபடிக்கி சாதாறாசெயிது வச்சது வேறம்.............. மூணுவள்ள அரிசியு பருப்பு தகுந்த சமரம் குடுக்கவும். பட்டயம் நலிக்கி குதிரைக்கி கொல்லு யெறுது பில்லு சீக்கிரம் அள்ளாள யிளயா நாயக்க அரிவார், அயிறமலை படைராம அரிவார், குழந்தவேல் பண்டாரம் அரிவார், பள்ளயிடும் பண்டார அரிவார், கபிலைமலையிலே யிநூர் பெறும் தம்புறனார் யெளுதி குடுத்த திறுவாசகம்.

பறமுத்தி அள்ளாழ யிளய நாயக்கன் யெழுதி குடுத்தான். கபிலமலை ஆண்டவர் துணை. கயிலாசபதி துணை. அறுணாசல யீசுபரர் துணை. சந்திற சூரியர்றுள்ளவரைக்கு யிந்த தற்ம நடத்தி வறவும். யிந்த தற்மத்துக்கு அகித செய்தால் காறாம்பசுவு கொன்ன தோஸத்தில் போவர். காசியில் பட்டயம் பொய்யென்று சொல்லப்பட்ட பேற்கள் பாவத்தில் போவர். யிந்த பட்டயம் காதினால் கேட்ட பேற்கள் கீள் கோத்திரம் வளந்து யிறுப்பார். குருபாதம் துணை.

நாடு மலநாடு, மனனாடு, யிடைப்பளிநாடு, நல்லுறுக்கநாடு, தலையநாடு, தட்டயநாடு, ஆறுநாடு, பன்னீர் கிழங்குநாடு, வெங்கலநாடு, மேல்கரை அரையநாடு, கீழ்கரை பூந்துறை நாடு, பூவாணிநாடு, பரித்திபுளிநாடு, சேலநாடு, றாசிபுறநாடு, வாழவந்தி நாடு,அரயநாடு, மேகரை பூந்துறைநாடு, தென்கரைநாடு,

காங்கயநாடு, வடகரநாடு, வாரக்கநாடு, காஞ்சிஒடுவங்கநாடு, குறுப்பநாடு, மினனசுத்தி ஆறுநாடு, சோளவந்தாநாடு, சேர்காவடிக்காநாடு, அண்டநாடு, வய்யாபுரி நாடு 32 கிராமத்து வுரமுரயாக கூடி கபிலுகுரிச்சி கிறாமம் தாரை விட்டது. சற்காறவன் பெருமாள் தம்புறானுக்கு மடத்து சிலவு வருஸத்தில் விராகன் 2, பெரிய வூறுக்கு பணம் 10, சின்ன வூறுக்கு பணம் 5,8 வள்ள கம்பு 3வள்ள அரிசி, முத்து வள்ள 2, பட்டயம் கண்ட நாளில் குரிதக்கி கொள், எறுதுக்கு பில்லு, கலியாணத்து வற்தனை மாப்பிள்ளை வற்தனை பணம்3, பொன் வீட்டுக்கு பணம்2, அதுகுள் மிராசான 8வள்ள அரிசி, குறுவெத்திலை, மடத்து வெத்திலை, பண்டாரி வெத்திலை, மடத்து பண்டாரத்துக்கு குடுக்குரது.

திருச்செங்கோடு மடம், கவலைமலைமடம், பளனிமடம் யிது மூணும் கவிலைமலையிலிருக்கும் திருவள்ளுவருக்கு யெளுதிக் குடுத்தார்கள். கொங்கசாம்பான், சோளிய சாம்பான், கட்டிகாற சாம்பான், வடக்கத்தி சாம்பான், கிளக்கத்தி சாம்பான், புலிமுகசாம்பான், ஆறுநூறு பெரிய பேரிவரயில் கொங்கன் காணி. தன்னிதுரை மரியல், தலைவாசல் மரியல், வீடுமரியல்..............................

7. பண்டாரங்களின் செப்பேடு

கலியுகாதி வருடம் 4730 வது பவ வருடம் பங்குனி மாதம் அசுவதி நட்சத்திரம் அமர திதியும் சித்தியோகமும் பெற்ற சுப தினத்தில் திருமலை நாயக்கர் இளையநாயகர் பரமத்திக் கோட்டையில் ஆட்சி புரிந்த போது, பண்டாரங்களுக்கு வழங்கப்பட்ட ஓலைச்சுவடியில் இருந்து எடுத்து எழுதப்பட்ட செப்புப்பட்டயங்கள் இரண்டு.

செங்கண்டியாண்டியின் வகையறாவைச் சேர்ந்த, செம்பாண்டியின் பேரனும், சிதம்பர ஆண்டியின் மகனும் ஆகிய, கே.சி. தியாகராாசன், முன்னாள் படை வீரர், சித்தம்பூண்டி கிராமம், கொண்டரசம் பாளையம், பரமத்தி வேலூர் தாலுக்கா அவர்களிடம் இத்தாமிரப் பட்டயம் உள்ளது. 39 சென்டி மீட்டர் நீளமும், 20 சென்டி மீட்டர் அகலமும் கொண்ட தாமிரப்பட்டயம் ஒன்று. 31 சென்டி மீட்டர் நீளமும், 23 சென்டி மீட்டர் அகலமும் கொண்ட தாமிரப்பட்டயம் ஒன்று, ஆக இவ்விரு பட்டயங்களும் இளையநாயகன், பரமத்திச் சீமையை ஆட்சி புரிந்ததை வெளிப்படுத்தும். இத்தாமிரப் பட்டயத்தில், காதையறுத்த ஆறுவிரல் அத்தியாண்டியை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியதையும், செங்கண்டியாண்டி தனது மகன் பழனியாண்டியைக் காவோடு எடுத்துக் காவு கொடுத்து மண்பூசை செய்ததையும், பூசைசெய்த செங்கண்டியாண்டி வகையறாவிற்குப் பட்டக்காரர் என்ற பட்டத்தை வழங்கிய செய்தியும், பண்டாரங்களுக்குத் துப்பட்டிகள் வழங்கிய செய்தியும் காணப்படுகின்றன. இச்செப்பேட்டில் மெய்கீர்த்திகள் காணப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஓலைச்சுவடியில் இருந்த வாசகங்களைச் செப்புப் பட்டயங்களில் எழுதிய போது, மெய்க்கீர்த்திகள் சேர்க்காமல் விட்டு விட்டதாகக் கே.சி. தியாகராாசன் அவர்களால் கூறப்படுகிறது.

கலியுக சகாப்தம் துவக்கம்	கி. மு 3101
தற்போது நடைபெறும் ஆங்கில ஆண்டு	கி பி 2008
தற்போது நடைபெற்று வரும் கலியுகாதி வருடம்	5109
பட்டயத்தில் உள்ள படி கலியுகாதி வருடம்	4730
	 379

கி.பி 2008 ல் கணக்கிடும் போது, 379 வருடங்களுக்கும் முன்னதாக நடந்துள்ள, மேற்படி சம்பவங்களை இத்தாமிரப் பட்டயம் வாயிலாக அறிய முடிகின்றது

....

தாமிரப் பட்டயத்தில் உள்ள செய்தி:

இன்னிழ மதித, கலியுகாதி வரஷ்ய நாலாயிரத்தி எழுணுத்தி முப்பது பவ வருஷம் பங்குனி மாதம் பதி நாலாம் தேதி அஷ்பதி நச்சத்திரமும் அமரதிதி சித்தியோகமும் பெற்ற சுபதளத்தில், இளைய நாயக்கர் ஆட்சியிலே (பாலாவித்) பொன்னாட்டிண்டிக்கு மகன் இரண்டு பேர் மூத்தவன் பெயர் பெரியகாளி ஆண்டிக்கு மணல்நாடு இடப்பிச்சி நாடு. இந்த இரண்டும் பழனிபூதமட்டும் முநூதின பாக்கு வெத்தலை. இளையவன் சின்ன காளி ஆண்டிக்கு கீழ்கரை அரையநாடு முப்பத்தி இரண்டு கிராமமும் கிழங்கு நாடு காளி ஆச்சி அழக நாச்சியம்மனுக்கும். செங்கண்டி ஆண்டி மகன் புள்ளா ஆண்டி. புள்ளாண்டி மகன் செங்கண்டியாண்டி (இடை ஆத்தில் குடியிருந்தவன் மூத்தவன் இருந்தான் முருகன் ஆண்டி) வடகரை ஆத்தில் குடி இருந்தவனுக்கு மக்கள் மூன்று பேர். 1.திருமலைஆண்டி, 2.ஆறுவிரல் அத்தி ஆண்டியை , சித்தம் பூண்டியில் குடிவைத்தார்கள். 3. பழனிஆண்டி, திருமலை ஆண்டி, தடுமலில் குடி இருந்தார்கள்.

வேலா ஆண்டி அரணிகிரி நரசிங்பட்டவனும் இருந்தான். லச்சுமசிங்க நாயக்கன் அதிகாரத்திஅுல வடகரை ஆத்தூரில் மண் பூஜை போட்டது. சிலப்பாண்டி பொகழூர் கண்டி ஆண்டிக்கு ஆள் விட்டு கட்டி வந்து கீழ்க்கரை , மேல்க்கரை சித்தம்பூண்டி அத்தி ஆண்டிக்கு சேதி கேட்டு குப்பிச்சி கவுண்டரைக் கூப்பிடச் சொன்னான். குன்னமலை மாரப்ப கவுண்டன் சீரப்பள்ளி, குப்ப கவுண்டர் சொன்னான், இந்த கவுண்டர்களை கூட்டிவரச் சொன்னார்கள். எல்லா கவுண்டர்களும் துலையூர் வந்தார்கள். பரமத்திக்கு துரையும்,

நாலு கிராமத்து கவுண்டர்களும், ஆண்டியும் பரமத்திக்கு வந்தார்கள். துரையைக் கண்டு எல்லா விபரமும் சொன்னார்கள். துரை பட்டக்கார வம்சம், நாலு கிராமத்து கவுண்டர்கள், இந்த ஆண்டிகளுக்கு ஆறுபட்டக்காரர் என்று கேக்கும் போது இந்த நாலு கிராமத்து கவுண்டர்களும் , சொன்ன விபரம் ஆகசம் உள்ள மட்டும் பூமி உள்ள மட்டும், சந்திர சூரியன் உள்ளளவும்,

1, பரமத்தி நாயக்கர் முத்தையன், வேல் அய்யன், சேர்வைக்காரன், வெங்கடாசலம் , செங்கோடன், தண்டக்காரன் பழனி, செல்லத்திருமன் நாவிதன் , குப்பன் தோட்டி, பெரியான் எல்லோரும் கூடித்திருமலை இளையநாயக்கர் நாளையில் சிம்மாசனம் ஆளுகையில் எல்லோரும் கூடியிருந்ததைக் கண்டு, என்ன காரணம் என்று இளைய நாயக்கர் கேக்கிரபோது முனிச்சக்தி கொடுக்க , மண்பூசை போட்டால் நிற்கும் என்று சொன்னார்கள்.

அதன் பிறகு இடை ஆற்றிலே, கருங்கண்டியாண்டி கிட்டே ஆள் அனுப்பிக் கருங்கண் ஆண்டி வந்து நாயக்கரைக் கண்டு நமஸ்காரம் பண்ணினான். இந்த மண் பூசை ஆக வேண்டுமென்று கேட்கும் போது ஐயா, எங்களுக்குப் பெரியவன், சித்தம் பூண்டியில் செங்கண்டி ஆண்டி அவன் மகன் பழனி ஆண்டி இரண்டு பேரையும், கூட்டிவந்தால், மண்பூசை நடக்கும் என்று சொன்னான். அப்போது,,,

நல்லதென்று சித்தம்பூண்டிக்கு ஆள் அனுப்பி வரச்சொன்னார் கள், சித்தம்பூண்டியிலிருந்து செங்கண்டி ஆண்டி பரமத்திக்கு வந்து நாயக்கரைக் கண்டு பேட்டி பணிந்தான், அப்போது துரை அவர்கள்சொன்ன விபரம், மண்பூசை ஆகவேண்டும், நீ முப்பத் திரண்டு கிராமத்திற்குக் கானியாளன் அல்லவோ, நீ மண் பூசை நேமிக்க வேண்டும் என்று துரை கேக்கிரபோது செங்கண்டி ஆண்டி நல்லதென்று சொன்னான். அதற்கு மண் பூசை சிலவு செய்ய பொன் அடப்பு பிடித்துச் செல்லும் தளவாடம் எல்லாம் வாங்கி மண் பூசை போட்டு , நாட்டு ஆண்டிகளை எல்லாம் வர பூசையில் முத்து சக்கரத்தையும் முன் வைத்து சக்தி

சன்னிதானத்திலே சித்தம்பூண்டி செங்கண்டி ஆண்டியை வைத்து அவன் மகன் பழனி ஆண்டியை காவோடு எடுக்கச் சொல்லி, 2காவோடு எடுக்கச்சொல்லி, 3 காவோடு எடுக்கச்சொல்லி, காவோடு எடுத்துக் கோட்டையை சுத்தி வந்து, காவு கொடுத்து, பூசையை முடித்து சக்திக்குத் தானமும் கொடுத்தும். 1.பச்சை பவல பாஞ்சல துப்பட்டி, சித்தம்பூண்டியானுக்கும். 2. செப்புக் குருக்களுக்குக் காவித்துப்பட்டியும். 3. பண்டாரிக்கு மஞ்சள் துப்பட்டியும் கொடுத்து, நல்லது பண்ணி நாயக்கர் ஊர் போய்ச் சேர்ந்தார். இந்தப் பூர்வம் அறியவும், கோட்டையம்மன் லச்சிப்பார். அங்காளம்மன் லச்சிப்பார், வெங்கரையில் காது அறுத்ததற்காகக் கால் பங்கும் , சிலவு பண்டாரி தணத்திற்க்காக ஆறு கிராமம். 1.சோளகிராமணி. 2. இளம்பிள்ளை. 3. குரும்பல மகாதேவி. 4. சேலூர். 5. கொந்தாலும். 6. இருக்கூர்.

(சித்தம் பூண்டியார் எந்த எந்த இடத்திற்கு நியாயம் தீர்க்க போனாலும் அவ்விடம் வரவேண்டியது மேலே உள்ளவர்கள்)

சோழகிராமணியான் தேவார ஆண்டி, சித்தம் பூண்டியான் எந்த எந்த இடத்திற்குப் போனாலும் நீ அந்த இடத்திற்கு வரவேண்டியது.

(கோட்டையில் நடந்தவை குறிப்பு)

நடந்தையிலே இருந்த அலகராண்டி ஒரு தப்பிதம் பண்ணிப்போட்டு வந்து யாருகிட்டேயோ சேர்ந்தான் சாமி, அவன் வர வேண்டும், மாவுருட்டியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு மாவுருட்டி விபரம் எல்லாம் உத்தரவு ஆகி உள்ளது, அவர் அவர் எல்லை அவர் அவர்களுக்கு என்று சொன்னார்கள், தப்பிச்ச அப்புறம் வேறு பேச்சு இல்லை, மாவுருட்டி கிராமம் வேறு எதுவும் இல்லை ஒன்று தான்,

பாத பூசை ஏழு கூரையும் சித்தம்பூண்டி பட்டக்காரணுக்கு கல்யாணத்தில் பண்டாரி தனம், சோளசிராமணி தேவா ஆண்டி, அவங்க பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள், சித்தம்பூண்டி யாருக்கு சகலமான முந்தின பாதிக்கு வெற்றிலையும் முப்பத்தி இரண்டு கிராமத்துக்கும் காணியாளன் மண்பூசை சக்தி சித்தம் பூண்டியானுக்கு உண்டானது என்று சொன்னார்கள், நாங்கள் வரமாட்டோம் என்பதற்கும் , மண்பூசை பண்ணியது யாரவன் என்று கேட்டார்கள், புகழூர் கண்டி ஆண்டி.

புகழூர் கண்டி ஆண்டியைக் கூட்டி வந்து பரமத்தியில் துரை அவர்களும், கவுண்டர்களூழ கேட்டார்கள். ஆண்டிகளில் யாரவன் காரியக்காரன் என கேட்டார்கள். 1சிலம்பு ஆண்டியைக் கட்டி வைத்தும் 2 கண்டி ஆண்டியைக் கட்டி வைத்து அடிக்கிற போது புகழூர் கண்டி ஆண்டி சொல்கிறான். சுவாமி நான் என்ன செய்வேன் சுவாமி நான் வரமாட்டேன் என்று சொன்னேன். வழிய வந்து வரசொல்லி இப்படி படராப்பலே பண்ணி வைத்தான் பாவி, நான் என்ன செய்வேன் சாமி, நான் ஒரு எழும்புக்கும், ஒரு சொப்பு கல்லுக்கும் வந்தேன் சாமி இனி மேல் அந்த கெட்டவனுடன் வருவது இல்லை. இந்த கெட்டவனுடன் வரமாட் டேன் சாமி, எங்கள்ன பெரியவர்கள் சொல்லியிருப்பார்கள், எங்களுக்கு மணல் நாடு, இடப்பச்சி நாடு பழனி பூதம் மட்டும், முந்தின பாக்கு வெத்திலை எங்களுக்கு சுத்தம் பூண்டியானுக்கு கீழ் கலையிலும், முந்தின பாக்கு வெற்றிலை அவன் எடுத்துக் கொள்வான், நான் இங்கே வந்தது என் பெரிய தப்பிதம் என்று புரிய வைத்துவிட்டான். சிலம்பு ஆண்டியும் புரிய வைத்தான். துரை ஆறு அடி மரத்துக்கு சமம் என்றாதால் உண்மையானது.

பூந்துரை நாடு மொளசி பழனிக்குருக்கள் ஊஞ்சலூர் வேலு பண்டாரம், பரமத்திக்கு பலநாடும் அத்தி பண்டாரம் ராசிபுரம்

நாடு, காவிபண்டாரம் திடுமல் தாண்டவா ஆண்டி மனையக்கா நாய் இருந்து பரமத்தி கோதண்டராமசாமி, முன்னலே ஏழு கோடு கிழித்து கோட்டில் தீ வைத்து தேவா ஆண்டி தலையில் திருநீர் போட்டு கேட்டதில் நான் பொய் செல்கிறதில்லை முரைப்பிடிக்கிரவன், திங்கிரலன் சித்தம் வேண்டினான் என்று சொன்னார்கள். சித்த பூண்டியானும் பரமத்தி வந்தான் என்றும் சொன்னான்.

---

8. கபிலர்மலைக்கோவை

கி.பி. 1639 இல், கபிலர்மலைக்கோவை என்னும் அகப் பொருளிலக்கியச் செய்யுளை ஓலைச் சுவடிகளில் எழுதியவர், கவிராயர். பிள்ளைப் பெருமான் சிறை மீட்டான் அவர்கள் ஆவார்.

கி.பி. 1970 இல், வித்வான். வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் இவ்வோலைச் சுவடியைப் பரிசோதித்து, எழுதிய நூல் கபிலமலைக் குமாரர் வருக்கக் கோவை.

இவ்வரிய செயலைச் செய்வதற்கு முழுமுதற் காரணமாய் அமைந்தவர் நீதியரசர் அமரர் ஆர். செங்கோட்டுவேலன், முன்னாள் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி அவர்கள்.

நீதியரசர் அமரர் ஆர். செங்கோட்டுவேலன் அவர்களது இளவல், டாக்டர் ஆர். பழனிவேலன் எம். பி. பி. எஸ் பர்வதவர்த்தினி எம். எஸ்சி அவர்களது இனிய திருமண விழாவின்போது,

"கபிலமலைக்கோவை" என்ற நூல் 1. 09. 1973 இல் வெளியிடப்பட்டது. "கபிலமலைக்கோவை" என்னும் நூலில், பக்கம் 78 இல், இளையநாயகனின் புகழ் பாடும் செய்யுள் 77.

"மல்லார் புயத்தன் வடகரை
யாறையில் வாளரசன்
அல்லாளன் சொற்றிரு மலையிளை
யானா யகன் றனையாள்
கல்லார மார்பர் குழந்தைக்
குமாரர் கபிலை வெற்பில்
வில்லார் நுதலும் விறல் வேந்தும்
மாளிகை மேவினரே!"

கபிலர்மலைக்கோவை - செய்யுள் 77.

9. கொங்கு மண்டல சதகம்

கொங்கு நாட்டின் பன்முக மாட்சியை விளக்கும் வரலாற்று நூலாகிய "கொங்கு மண்டல சதகம்" என்ற நூலில், இளையநாயகனைப் புகழ்ந்து பாடும் பாடல் உள்ள செய்யுள், 79, பக்கம் 96 ஆகும். இதனை இயற்றியவர் "ஜினேந்திரன்" என்ற கார்மேகக் கவிஞர் விஜயமங்கலம் "சமணர்".

"வடமுக நின்று வரு காவிரியின்
வளத்தை யென்றும்
திடமுறு கொங்கிலும் பாசன மாகச்
செலப் பிரித்த
அடல் கொள் அல்லாளன் இளையான்
பெருக்கம் அமைந்து வளர்
வடகரை யாற்றுார் திகழ்வதுவுங்
கொங்கு மண்டலமே"

கொங்கு மண்டல சதகம் , செய்யுள் 79.

10. திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை என்ற நூல் திரு. சதாசிவம் பண்டிதர் அவர்களால் முதல் பிரதி எழுதப்பட்டு, முத்துச்சாமிக் கோனார் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டுச் சீர்திருத்தத்துடன் கிபி 1913 ம் ஆண்டு வெளியிடப்பட்டது. விலை 8 அணா. இவ்வுரை நூலில், வேட்டுவக்குலத் தலைவனும், குறுநில மன்னனுமான இளையாநாயக்கன் என்னும் அரசன், தெய்வத் திருச்செங்கோட்டு வெற்பின்கண் அமைந்துள்ள ஆலயத்திற்குத் செய்த திருப்பணிகளும், அவன் புகழும் பற்றிப் பாடியுள்ள பாக்கள் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை வரிசை எண் 262, 263, 264, 265, 266, 267, 268 ஆகும். மேலும் இவனது மரபில் வந்தவர்கள் செய்த திருப்பணிகளைக் கூறுவது வரிசை எண். 406 ஆகும்.

ஆறை இளையநாய்க்கன்

"தேமேவு மரவகிரி நாகீசர் சந்நிதி
சிறந்தகற் பக்கிரமுந்
திகழ்ர்த்த மண்டப மகாமண்ட பத்தினொடு,
தென்கோ புரத்தடிகளும்

பூமேவு நந்தவன வாவிமண் டபபூசைப்
புகழுமஞ் சாந்திரு விழா
பூசைபடி பதினேழு பயருகறி யமுது தாம்
பூலமா ளிகை கந்தமும்
மாமேவு மாசிவை யாசிசிவ ராத்திரி
மகாநவ மிதீபாவளி
மார்கழி யுடன்கார்த் திகைத் தீப பொரிசோம
வாரமும் பரி வட்டமும்

கோமேவு மாலைவடை காவேரி மஞ்சனம்
குலவத் தியான வொலியுங்
கொற்றமிகு மாறைவல் லாள னிளையானருள்
குமாரதிரு மலையுபயமே."

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 262

....

"சீர்மேவு கலியுக சகாத்தமா யிரமிசை
சிறக்குமைஞ் நூற்றறுபதின்
செல்லுமைந் தானதா ரணவருட மற்பிசைத்
திங்களிரு பத்தைந்தினிற்

சூர்மேவு வேலுடைய மகிசூரு நஞ்சயன்
கோதையந் தலமதனையே
கொள்ளைகொண் டேகினது கண்டுதய வாகியே
கொள்ளைபரி போனவகையிற்
பார்மேவ வேதனது புண்ணிய மெனச்சிறிது
பாலித்து நன்மை யுதவிப்
பட்சமுட னேசம்பு ரோட்சண நடத்தினன்
படிமீது புகழ்பெற்றனன்

தார்மேவு வாகைபுனை கண்ணப்பர் சேகரன்
தருமமே கனி நெஞ்சினன்
தருமருவு திருமலையல் லாளனிளை யான்மரபு
தருமந் தழைத்தேறவே"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 263

....

" அத்தர்திருச் செங்கோட் டரனடிக்கே யன்புசெய்யும்
எத்தலமெண் ணாறை இளையான்கேள் - இத்தலத்தே
வந்துகொள்ளை கொண்டான் மகிசூரா னீயுதனைத்
தந்துகொள்ளை கொண்டாய் தவம் ! "

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 264

....

"அண்டர்தொழுங் காளத்தி யப்பருக்குக்
கண்கொடுத்தா யதிர்ந்துவீழும்,
மண்டபமுந் தாங்கியநற்
சிவகோசன் றனக்குமுத்தி வருவித்தாயே,
கொண்டனிக ரானகொடை யல்லாள
திருமலையா ஆற்றூர் வாழ்வே
தண்டமிழ்சே ரிளையானே துட்டர் கண்டா
நறுவாகைத் தாமத்தோனே."

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 265

....

"மூவருக்கு மகத்தியமா முனிவருக்கு மரசிருந்த
முன்னை யோர்க்குந்,
தேவருக்குந் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறைகொண் டாயே !
பூவிருக்கு முரமாயன் கடலடைத்தா னவன்வேடம்
புன்னந்த வாறோ,
யாவருக்கு மிளையானே ! யல்லாள திருமலையா
யீகை யோனே!"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 266

....

"ஏவிளம்பி வச்சரத்தே யேரகநா கீசருக்கு
மாவிளம்பக் கோயிலுமா மண்டபமும் ஷெ பூவிளம்பக்
கண்டா னல்லாளன் கருணையிளை யானாறைத்
தண்டாவு வாகையுறத் தான்!"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை செய்யுள் 267

....

"சந்தியா தீபஞ் சதுரங்கந் தாம்பூலம்
நந்தியா தீபம் நடத்தினான் ஷெ புந்தியால்
எப்போது மாறை யிளையான் றிருமலையான்
தப்பாமற் சீர்த்திகொள்ளத் தான்"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, செய்யுள் 268.

....

இளையநாயகனின் மரபினர் செய்த திருப்பணிகள்
மோழைக் கவுண்டம்பாளையம் வேட்டுவர்கள்

" பேறுறு கோதைநன் னாகேசர் தூபி பெருமையொடன்
றாறை யிளையா னமைத்தன னம்மர பாளர்களிற்
றேறிடு மோழை நகரா ரரும்பொரு டேடிச்சுதைக்
கூறு பணியும் பதிட்டையுஞ் செய்து கொடுத்தனரே!"

திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை (செய்யுள் 406)

11. இராமப்பய்யன் அம்மானை

திருமலை நாயக்கருடைய படைத்தளபதி இராமப்பய்யன் , இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத்தேவன் மீது படையெடுத்துச் செல்கின்றான்.

இராமப்பய்யன் தன் தமையன் வைத்தியநாத ஐயனிடம் விடைபெற்றுக் கொண்டு பாளையக்காரர்கள் புடைசூழச் சடைக்கதேவன் மீது படை கொண்டு போருக்குப் புறப்படுகின்றான். அப்போரிலே 72 பாளையக்காரர்களும் கலந்து கொள்கின்றார்கள்.

இவ்வரலாற்றுப்போர் நிகழ்ச்சியைப் பற்றி இராமப்பய்யன் அம்மானை என்னும் இலக்கியம் விளக்கமாகக் குறிப்பிடுகின்றது.

இராமப்பய்யன் அம்மானை என்னும் இலக்கிய நூல் தஞ்சைச் சரஸ்வதி மகால் நூலகத்தால் வெளியிடப்பட்டது இந்நூலின் 7 ஆம் பக்கதில் இளையநாயகனின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. இதன் 6 மற்றும் 7 ஆம் பக்கத்தில் உள்ள செய்தி கீழ்க் கண்டவாறு அமையப் பெற்றுள்ளது.

....

தாம்பூலம் கொடுத்தல்

அடைக்காயும் வெள்ளிலையும் அன்புடனே தானீந்து
"தம்பி அரவானே வீரர் தார் வேந்தே போய் வாரும்"
நின்று விடை வாங்கி நொடிக்கு முன்னே தான் மீண்டு

சாமந்தர்களை அழைத்தல்

கொலுவுச் சவடி தனிலே வீற்றிருந்தா ரம்மானை

சாமர்களை அழைத்தல்

"மாப்பிள்ளைக் கொண்டப்பையா வாருமென வழைத்து
சத்திரி வீரஅய்யா தார்வேந்தே வாருமென்று
தலையர்க் கொண்டப்பய்ய தனையுமே வாருமென்று
மன்னர் புலியே மண்டுருப் பாபய்யனே
விருது சொல்லி வெட்டி வரும் வேட்டை புரந் தளவாய்
போர்க்களத்தில் நின்று பெரும் படை ராசாவே
நரபாலர் கொண்டாடும் நாகமா ராசாவே
பொட்டிமுக் குள பேத்து ராசர்ப் பெரும் படையும்
இராவழி பட்டையுறும் நல்லபடை மன்னரும்

மா தவ ராசாவு மன்னர் பெரும் படையும்
எல்லையற்ற சேனைபடை எல்லோரை யுங்கூட்டி
மாப்பிள்ளைக் கொண்டப்பய்யா வாருமென வழைத்து
தேவர்கள் போற்றுந் திருப்பூவ ணந்தனிலே
போயிரங்கும்" மென்றான் புகழ்பெரிய ராமய்யனும்

பாருலகி லுள்ள பாளையக் காரரெல்லாம்
சேரவங்கே நின்று திரை போல் தான் கூடி
அனுப்பி விடுவேன் அடுக்குடனே நீ போகாய்
பாளையக்காரர் பல்பேரு மெத்தவுண்டு "

பாளையக்காரர்கள் பெயர்கள் சொல்லி அழைத்து அழைத்துவரச் சொல்லல்

ஆரார் வருவார்கள் ஆண்டவனே இப்பொழுது
நத்தத்து லிங்கயனும்நல்லதொரு மன்னவரும்
திருமலைப் பூச்சியனுஞ் சேனைவெள்ள மத்தனையும்
மாம்பூண்டி லக்கியனு மன்னவர்க ளத்தனையும்
முள்ளிப்பாடி யிலிருக்கும் முத்தய்ய நாய்க்கனும்
ஈரோடு தன்னி லியல் பான மின்னாட்டில்
இரவும் பகலு மிருந்து பொருங்கெட்டியும்
சேராரை வென்ற சிங்கஞ் சேலத்தான் தன் படையும்
பட்டத்து னாய்க்கன் பரிவார மத்தனையும்
இளையா னாயக்க னியலான காலாளும்
கொட்டத்து ரெட்டி குமார பாக்கியங்களுடன்
அடர்ந்து சமர் பொருதும் அரியலூர் மழவராயன்
தோறாத வாசகனுந் தும்பிச்சி நாய்க்கனும்
கட்ட பொம்மு தன்படையுங்கனத்த புகழ் மன்னவரும்
ஆண்டு கொண்டான் வன்னி அவனுடைய காலாளும்
தென்காஞ்சி மூக்கை சிவிலி ராமன் தன் படையும்
முருக்கு நாடு தனில் மூவரையன் தன் படையும்
கலங்காத கண்டன் கனத்ததொரு காலாளும்
தொட்டப்ப நாய்க்கனும் தோறாத வாசகனும்
பாவளி மூக்கை பரிவார மத்தனையும்
மதவானை தன்மூக்கை மன்னவர்க ளத்தனையும்
மேல்முகத் தும்பிச்சி வீரன் அவன் காலாளும்

ஏழு மடையி லேறிச் சின்னான் காலாளும்
அம்மைய நாய்க்க னடுத்த பெரும் படையும்
முனைச்சமரில் நின்று பொரும் மூக்கிலணை பூசாரி
கொப்பனாய்க்கன் குறித்ததொரு காலாளும்
குறிக்கொண்டப்ப னாய்க்கன் கூட்டப் பெரும்படை
க........ யனாய்க்கன் கனத்தபுகழ்க் காலாளும்
நல்லம்ம னாய்க்கன் வல்லபடைவீரர்களும்
யெல்லாரையுங் கூட்டியிப்போ வரவிடுவேன்
மாப்பிள்ளைக் கொண்டப்பய்ய மன்னவனே நீபோகாய்
போகிறேனான் னென்று பொருந்த விடை வாங்கி

XIV

பின்னிணைப்பு - 1

முன்னாள் தலைவர், தஞ்சை, தமிழ்ப்பல்கலைக்கழகம் கல்வெட்டு தொல்லியல்துறை, ஈரோடு புலவர் செ. இராசு அவர் களால் கண்டு பிடிக்கப்பட்டு, இந்நூலுக்கு வழங்கப்பட்ட கல்வெட்டுக்கல், செப்பேடுகள் இவைகளை ஆய்வு செய்துஅதன் சிறப்பு அம்சங்களைக் கீழ்கண்டவாறு தொகுத்து வழங்கப் படுகின்றது.

....

கல்வெட்டுக்களில் காணப்படும்

வேட்டுவர்களைப் பற்றிய சிறப்பு அம்சங்கள்

வெள்ளை வேட்டுவர் பற்றி அறிந்துள்ளோம். கீழ்க் காணப்படும் அட்டவணையில் உள்ள வேட்டுவர் பற்றிய கல்வெட்டுக்களில் வெள்ளை, வெண்கொற்றர் என வேட்டுவர்கள் அழைக்கப்படுவதைக் காணலாம். வெண்கொற்றர் என்ற சொல் வெள்ளை தொடர்பினை வலியுறுத்தக் கூடும். தம்மை ஆட்சியாளர் என்று அரசராக அடையாளம் காட்டுவதற்காகவே வேட்டுவர் தம்மைவெள்ளைகள், வெண்கொற்றர் என்று கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டுள்ளதாக தோன்றுகிறது.

நாடாழ்வான் பட்டம் அரச குலத்திற்கு உரியதாகும், எனினும் வேட்டுவர் போன்ற பலரும் நாடாழ்வான் என்று அழைத்துக் கொள்வதில் தங்களை பெருமைபடுத்திக் கொண்டுள்ளனர்.

குருகுல வம்சம் எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் வேட்டுவர்கள் அறநூல்களை உணர்ந்த அறிஞர் நிலை பெற்றோர் எனத் தோன்றுகின்றது.

வேட்டுவர்களை வேளான் என குறிப்பிடப்படுவது சிறப்பு அம்சமாகும்.. வேட்டுவர்கள் தங்களை வேளான், வேளான்வேள் என்று அடையாளமிடுவதால் சிற்றரசர் நிலை பெற்றோர் அவ்வாறு கூறினார் போலும்.

அரையநாட்டு வேட்டுவரில் நாடாழ்வான் என பட்டம் புனைந்திருப்பதும், அவர் செய்த திருப்பணிகளைப் பற்றியும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது.

வேட்டுவப் பெருமக்களில் மேம்பட்ட சிலர் பல்லவரையர், அதியமான் என்று பட்டம் புனைந்து வாழ்ந்துள்ளதாகக் கல்வெட்டுக்களில் காணப்பெறுகிறது. இதுபோன்று போத்தன், தேவன், பிள்ளை, கவுண்டர் என்றும் வேட்டுவர் தம்மை அழைத்துள்ளனர் என்று கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும், காடுகளை அழித்து வேளாண் தொழில் செய்த வேட்டுவர்கள் நீர் நிலைகளை உண்டாக்கக் கிணறு, குளம், வாய்க்கால் ஏற்படுத்தினர் என்பதைச் சில கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகிறது.

சங்க காலங்களில் கூத்துக் கலையில் வல்ல கூத்தர் குறிக்கப் பெறுகின்றனர். தில்லையில் நடனமாடும் நடராசரைப் போல, வேட்டுவர் சமூகத்தினரின் கல்வெட்டுக்களில் கூத்தன், ஆனந்த கூத்தன் என்பன போன்ற செற்றொடர்கள் காணப்படுகின்றன

வேட்டுவக் குல மகளிரும் தெய்வத் திருப்பணிகள் செய்துள்ளனர் என கல்வெட்டுக்களில் காணப்படுவது மிகவும் போற்றுதலுக்குரிய அருஞ்செயலாய் உள்ளது.

சைவ நெறி மார்க்கத்தைத் தழைத்தோங்கச் செய்த வேட்டுவப் பெருங்குடி மக்கள், கோயில் கருவரை, முன்மண்டபம், அர்த்த மண்டபம், நிலைக்கால்கள், சந்தியா தீபம், நந்தா தீபம் அமைத்துக் கொடுத்தமை மற்றும் கோயில்களில் திருப்பணிகள் செய்த விவரமும் பல கல்வெட்டுக்களில் விரிவாகக் காணப்படுகின்றன.

அட்டவணை

வேட்டுவர் குலக் கல்வெட்டுகள்				
வரிசை எண்	குலம்	காலம்	இடம்	குறிப்பு
வெள்ளை, வெண்கொற்றோர்				
1	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1216, வீரராசேந்திர தேவனின 9 ஆம் ஆட்சியாண்டு	கோவை திருப்பூர பெருமாநல்லூர் உத்தமசோழீசுவர முடையார் கோயில்	ஒத்தனூரான பெரும்பழனம் ஊரில் இருக்கும் பூலுவ வேட்டுவரில் மேற்சேரி வெள்ளைகளில் இராசன் நிறையுடையோனான தொண்டைமான் ஈஸ்வரன் , விநாயகர் கோயில் திருப்பணி செய்து சந்தியா தீபமும் வைத்தான்
2	காவலர் வெண்கொற்றர்	கி.பி 1292, விக்கிரமசோழனின் 19 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயிலில் உள்ள கலவெட்டுஈரோடு	வேட்டுவர் காவலன் வெண்கொற்றரில் சோனாப் பல்லவரையன் மனைவி செங்கூத்தாண்டி சந்தியா தீபம் வைத்தார்
3	காவலர் வெண்கொற்றர்	கி.பி 13 ஆம் நூற்றாண்டு	ஈரோடு காங்கயம் அகிலாண்டபுரம் அகத்தீசுவரர் கோயில்	வேட்டுவர் காவலன் வெண்கொற்றரில் செய்யாழ்வி சூரிய தேவன் ஆன தொண்டைமான் என்பவர் கருவறைத் திருநிலை கால்களை அமைத்தார்

நாடாழ்வான்

4	புல்லை வேட்டுவர்	கி.பி 1246, இராசக்க தேவனின் 30 ஆம் ஆட்சியாண்டு	நாமக்கல் அரங்கநாதப் பெருமாள் கோயிலில் சாரம் கீழ்பகுதியில் காணப்படுகிறது	புல்லை வேட்டுவர் நற்காவிரி நாடாழ்வான் தேசி ஆளப்பிறந்தான் மும்முடிச் சோழச் சக்கரவர்த்தி ஆன அரங்கராயர் வேதநாயகப் பெருமாளைப்பிரதிட்டை செய்து அளித்த கொடையை குறிப்பிடுகிறது.
5	காவலர் குறும்பிள்ளர்	கி.பி 1292, விக்கிரமசோழ னின் 19 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவர ர் கோயிலில் உள்ள கல்வெட்டு	வேட்டுவர் காவலன்குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அகளங்க நாடாழ்வான் மனைவி அவினாசியாண்டி சந்தியா தீபம் வைத்தது

குருகுல வம்சம்

6	குருகுல வம்சம்	ருத்ரோத்காரி வருடம் ஆவணி 6	ஈரோடு, பெருந்துறை, கொடுமணல்கணபதியாளையம் செல்லாண்டியம்மன் கோயில்	குருகுல வம்சம் ஒட்டப்பாளையம் வேட்டுவக் கவுண்டர்கள் செல்லாண்டியம்மன் கோயில் திருப்பணி செய்தனர்.
7	குருகுல வம்சம்	கி.பி.1187, வீரசோழனின் 19ஆம் ஆட்சியாண்டு	கோயமுத்தூர் உடுமலைப்பேட்டை கடத்தூர் மருதீசுவரர் கோயில் கருவறை வலது நிலை	கோயில் அதிகாரம் செய்வார்களில் பெருங்குடி உடையானான திருநீற்றுப் பெற்றான் சுந்தரவானந்தக் கூத்தரான வீரசோழக் குருகுலராயன் நிலைகால் கொடை

வேளான், வேளான்வேள்				
8	கரைய வேட்டுவர்	கி.பி 10 ஆம்நூற்றாண்டு , இராசகேசரி	நாமக்கல் திருச்செங்கோடு கொக்கராயன் பேட்டை பிரமீசுவரமுடைய ார் கோயில்	திருவகழிமங்கலம் கரையவேட்டுவர் காளிப்பிடாரன் ஆகிய கரைய வேளாண் மாடுகளை மீட்டான். அதற்காக அவனுக்கு நிலம் கொடையாக அளிக்கப் பட்டது.
9	பூவாணி வேட்டுவர்	கி.பி. 1203 , மூன்றாம் குலோத்துங்கன் 25 ஆம் ஆட்சியாண்டு	கரூர் பசுபதீசுவரர் கோயில்	மருதங்க வேளாண் என்பவர் , சிவாலயத்திற்கு 3 கழஞ்சு பொன் கொடை கொடுத்தார்.
10	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1228, வீரராசேந்திர தேவரின் 21 ஆம் ஆட்சியாண்டு	கோவை கோயில்பாளையம் காலகலேசுவரர் கோயில்	கவையன் புத்தூர் வேட்டுவன் பூலுவன் மயிலரில் வேளாண்வேள் பெரிய பிள்ளை என்பவன் கோயிலில் மூன்று தீபங்கள் வைத்தான்

11	காவலர் குறும்பிள்ளர்	கி.பி 1293, விக்கிரமசோழனின் 20 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டுஈரோடு	செயங்கொண்ட வேளானும அவனது மகனும் சந்தியா தீபம் வைத்தது
அரையநாட்டு வேட்டுவர் திருப்பணி செய்தமை				
12	காட்டு வேட்டுவர்	கி.பி. 1227, வீரராசேந்திர சோழனின் 20 ஆம் ஆட்சியாண்டு	கரூர் வேட்டமங்கலம புட்பவண ஈஸ்வரர் கோயில்	அரைய நாட்டுத் துடுமல் காடடு வேட்டுவரில் முத்தன் சக்கையன் என்பவர் கோயிலில் சந்தியா தீபம வைத்தான்.
13	புல்லை வேட்டுவர்	கி.பி 13 ஆம் நூற்றாண்டு	நாமக்கல் ஏழூர் பிள்ளையார் கோயிலில் உள்ள சிங்கத்தூண்	புல்லை வேட்டுவரில் வடகரையாற்றூரான் கூத்தாடுந்தேவன் இருங்கோளனான வலங்கை மீகாமன் தூண் கொடுத்ததும் வளரந்த அம்மத திருவநாடாழ்வானான வீரசிங்கன் செய்த திருப்பணிகளைக் கூறுகிறது.

பல்லவரையர், அதியமான்				
14	காவலர் குறும்பிள்ளர்	கி.பி 1203, குலோத்துங்க சோழனின் ஏழாவது ஆட்சியாண்டு	ஈரோடு பெருந்துறை ஈங்கூர் குட்டைத் தோட்டம் (இப்போது ஈரோடு கலைமகள் பள்ளி அருங்காட்சியகத் தில் உள்ளது)	வேட்டுவர் காவலன் குறும்பிள்ளரில் யோத்தன் செய்யான் ஆல குலோத்துங்கப் பல்லவரையன் அய்யநார் படிமத்தை அமைத்தார்
15	காவலன் வளவர்	கி.பி 1211, வீரராசேந்திர சோழனின் 4 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் முத்தூர் சோழீசுவரர் கோயில்	வேட்டுவர் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவராயன் மகன் சிங்கனான அங்கராயன் பெரிய நாச்சியம்மன் கோயிலில் சந்தியா தீபம் வைத்தது
16	பூலுவ வேட்டுவர்	கி.பி.1221 , வீரராசேந்திர னின் 14 ஆம் ஆட்சியாண்டு	திண்டுக்கல் ,பழனி,கீரனூர் யோலீஸ் நிலையம் அருகில் உள்ள கல்	கீரனூரார் வேட்டுவர் பூலுவன் செய்யர்களில் வீமன் வீமனான அணுக்கப் பல்லவரையன் குறிக்கப் பெறுகிறார்.

17	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1228, வீரராசேந்திர தேவனின் 21 ஆம் ஆட்சியாண்டு	கோவை கோயில்பாளையம் காலகலேசுவரர் கோயில்	கவையன்புத்தூர் வேட்டுவர் உத்தமப் பாண்டியப் பல்லவரையன் தன் தந்தை அணுக்கப் பல்லவரையர் நினைவாகச் சந்தியா தீபம் வைத்தான்
18	பாண்டி வேட்டுவர்	கி.பி 1230, வீரராசேந்திர சோழனின் 23 ஆம் ஆட்சியாண்டு	நாமக்கல் பருத்திப்பள்ளி சீகாழிநாதர் கோயில்	பருத்திப்பள்ளி ஊராளி பாண்டி வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன் திருக்கோயிலைப் புதுப்பித்தான்
19	கரடி வேட்டுவர்	கி.பி. 1248, வீரராசேந்திர சோழனின் 41 ஆம் ஆட்சியாண்டு	கரூர் வெஞ்சமாங்கூடல் விகிர்தேசுவரர் கோயில்	கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவரையர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்
20	காவலர் குறும்பிள்ளர்	கி.பி 1282, குலோத்துங்க சோழனின் 9 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு	வேட்டுவர் காவலர் குறும்பிள்ளரில் கூத்தன் கூத்தனான அதியமான் என்பவன் மண்டபம் அமைத்தது

21	காவலர் குறும்பின்னர்	கி.பி 1292, விக்கிரமசோழ னின் 19 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவர ர் கோயிலில் உள்ள கல்வெட்டு	கோயில் மண்டம் கட்டிய கூத்தன் கூத்தன் ஆன அதியமான் மனைவியும் மகன் வீராந்தப் பல்லவரையனும் , மகளும் செய்த கொயை குறிப்பிடுகிறது.குடும்பத்தார் செய்த கொடை
22	காவலர் குறும்பின்னர்	கி.பி 1292, விக்கிரமசோழ னின் 19 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவர ர் கோயிலில் உள்ள கல்வெட்டு	கோயில் மண்டபம் கட்டிய கூத்தன் கூத்தனான அதியமான் மனைவியும் , மகளும் செய்த கொடையைக் குறிப்பிடுகிறது.
23	கரைய வேட்டுவர்	கி.பி 1335, யோசன மன்னன் வீரவல்லாளன் காலம்	ஈரோடு அறலூர் புற்றிடகொண்டீசு வரர் கோயில்	அறச்சலூர் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன் என்பவன் திருநிலைக்காலும், படியும் அமைத்தார.

24	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1208 , வீரராசேந்திர தேவரின் 11 வது ஆட்சியாண்டு	திண்டுக்கல் பழனி கீரனூர் வாகீசுவரமுடையார் கோயில்	யோத்தன் கோன் ஆன சோனாவரையன் கோயிலில் சந்தியா தீபம் வைதுழ
25	கொடும்பூர் வேட்டுவர்	கி.பி. 1241, வீரராசேந்திர சோழனின் 34 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு பவானி பட்டிலூர் வாகீசுவரமுடையார் கோயில்	பிள்ளை என்பவர் வாகீசுவரருக்கு மூன்றுவிளக்குகளை வைத்தார்
26	கொடும்பூர் வேட்டுவர்	கி.பி. 1245 வீரராசேந்திர சோழனின் 38 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு பவானி பட்டிலூர் வாகீசுவரமுடையார் கோயில்	பெரியதேவன் என்பவர் சந்தியா தீபம் வைத்தார்
27	கொடுகத்தாளி வேட்டுவர்	கி.பி 1248 , வீரராசேந்திரன் 41 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு, பெருந்துறை, திங்களூர் சந்திரபுரீசுவரர் கோயில்	மதவபிள்ளை சேனன் என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்

28	கரைய வேட்டுவர்	கி.பி 1275, விக்கிரமசோழனின் இரண்டாம் ஆட்சியாண்டு	ஈரோடு பெருந்துரை திங்களூர் சந்திரபுரீசுவரர் கோயில்	சபையமந்திரி சிறு பிள்ளை என்பவர் விநாயகருக்குப் பீடம் அமைத்தார்
29	காவலர் கீழைக்கரையர்	கி.பி 1281, வீரபாண்டியனின் 16 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் கீரனூர் ஆதிகேசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு	அழகிய பிள்ளை என்பவர் திருநிலைக்கால்களை கொடையளித்தார்
30	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1287, விக்கிரம சோழ வேவனின் 14 ஆம் ஆட்சியாண்டு	கரூர் வேட்டமங்கலம் புட்பவனமுடையார் கோயில்	சிலம்பன் செஞ்சிறு பிள்ளை என்பவன் கோயிலில் சந்தியா தீபம் வைத்தான்.

31	கரடி வேட்டுவர்	கி.பி. 1287, விக்கிரம சோழ வேவனின் 14 ஆம் ஆட்சியாண்டு	கரூர் வேட்டமங்கலம் புட்பவனமுடையார் கோயில்	செய்யபிள்ளை என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்
32	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1287,	விக்கிரம சோழ வேவனின் 14 ஆம் ஆட்சியாண்டு	சிலம்பன் செஞ்சிறு பிள்ளை என்பவன் கோயிலில் சந்தியா தீபம் வைத்தான்.
33	பூலுவன் வேட்டுவர்	கி.பி 1290, சுந்தர பாண்டியனின் 5 ஆம் ஆட்சியாண்டு	கோவை பொள்ளாச்சி குள்ளிசெட்டிபாளையம் சுப்ரமணியசுவாமி கோயில்	சிலம்பன் பிள்ளையான் அதியன் காலிங்கராயன் கோயிலுக்கு கொடுத்த கொடையை குறிப்பிடுகிறது
34	பூலுவ வேட்டுவர்	கி.பி 1633...	கோவை பேரூர் பட்டீசுவரர் கோயில்	பூலுவர் பெரும்பற்றார் சந்திரக் குமாரக் கோப்பண மன்றாடியார் கந்தசாமிக் கவுண்டர் பேரூர் கோயிலின் கருவறையைக் கட்டினார்

நீர் நிலைகளை உருவாக்கிய வேட்டுவர்கள்				
35	செம்ப வேட்டுவர்	12 ஆம் நூற்றாண்டு, குலோத்துங்க சோழனின் 55 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு கோபி கொடிவேரி பவாணியாற்றங்கரை	குலவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவர் தொண்டயன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காழ்வான் குளம் வெட்டி, வாய்க்காலும் வெட்டிய செய்தியை கூறுகிறது.
36	ஊராளி வேட்டுவர்	கி.பி 1292, சுந்தரபாண்டியனின் 7 வது ஆட்சியாண்டு	சேலம் ஓமலூர் தாரமங்கலம் பூலாம்பட்டி பெருமாள் கோயில்	பிள்ளப்பன் உடையான் தன் ஏரிப் பாசனத்தில் ஒரு தடி நிலம் வரம் தரும் பெருமாளுக்குக் கொடையாகக் கொடுத்தான்
37	முனை வேட்டுவர்	13 ஆம் நூற்றாண்டு	சேலம் ஆத்தூர் பிள்ளை மதில் ஆற்றோரப் பாதையில் உள்ள கல்	முனையூரான அஞ்சாதகண்டன் நல்லூரில் , மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர் ராயன் கிணரு வெட்டிக் கொடுத்தான்
38	சுண்டை வேட்டுவர்	கி.பி 13 ஆம் நூற்றாண்டு	சேலம் மல்லூர் மூக்குத்திப்பாளையம் மோழப்பாறை	பெரிய விலங்கி சுண்டை வேட்டுவர் சிலம்பன் சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் மாத்த ஆறாதப்பிள்ளை என்பவர் "அக்கை சாரை" என்ற பெயரில் குளம் அமைத்ததை கூறுகிறது

39	பூச்சந்தை வேட்டுவர்	கி.பி 1496, உம்மத்தூர்த் தலைவர் வீரநஞ்சண உடையார்	ஈரோடு கோபி கிடாரம் சாலை ஓரம் உள்ள கல்வெட்டு	வேட்டமங்கலம் பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் பெருமாள் முத்தாண்டன் என்பவன் கப்பலன் கிடாரம் என்ற ஊரில குளம வெட்டியது
40	இரும்புளை வேட்டுவர்	கி.பி 1645, சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கர் காலம்	நாமக்கல் இராசிபுரம் குட்டலாம்பாறை உனும் இடத்தில் உள்ள பாறை	இராமச்சந்திர நாயக்கர் சொல்ல வாழவந்தி இரும்புளை வேட்டுவர் வடசேரி ஆறங்காடி குளம் ஒன்றை அமைத்தார்
கறவைப்பசுவை தானம் அளித்த வேட்டுவர்				
41	முன்னை வேட்டுவர்	கி.பி. 1597	ஈரோடு கோபி கோசனத்தில் உள்ள குத்துக்கல்	பெருமால் என்பவர் பருவாச்சி அய்யருக்கு கறவைப்பசு தானமாக கொடுத்தமை
வேட்டுவர்க் குல மகளிர் செய்த திருப்பணிகள்				
42	காவல் குறும்புள்ளர்	கி.பி 1095, அபிமான சோழ ராஜாதிராஜதே வரின் 10 ஆம ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பிடாரியம்மன் கோயில் கல்வெட்டு	நாயகவிச்சி நாயன்சிலம்பி என்பவர் தன் கணவன் வேட்டுவர் குறும்பிள்ளரில் காவலன் அரையனுக்காகப் பிடாரி கோயில் கட்டினார்.

43	காவலர் வளவர்	கி.பி 1215, வீரராசேந்திர சோழனின் எட்டாம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயிலில் கல்வெட்டு	வேட்டுவர் காவலன் வளவரில் ஒருவருடைய மனைவி சோழாண்டி என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்
44	காவலர் குறும்பிள்ளர்	கி.பி. 1230, வீரராசேந்திர சோழனின் 23 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு ஓலகடம் ஓலகீசுவரர் கோயில்	வடகரை நாட்டுப் புன்னம் ஊராளி வேட்டுவர் மகள் பாண்டாண்டி கோயிலில் சந்தியா தீபம் வைத்தாள்.
45	காவலர் குறும்பிள்ளர்	கி.பி 1285 , விக்கிரம சோழனின் 12 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு	வேட்டுவர் காவலன் குறும்பிள்ளரில் போடன் என்பவர் மனைவி கோவி என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கோயில் திருப்பணிகள் செய்த வேட்டுவப் பெருமக்கள்				
46	பிரமியம் வேட்டுவர்	கி.பி. 1095, அபிமான சோழ ராஜாதிராஜ தேவர்	ஈரோடு தாராபுரம் பிரமியம் திருவலஞ்சுழி நாதர்	சிலம்பன் அடைக்கலவன் என்பவன், சிலம்பன் என்பவர் நினைவாக முகமண்டபத்தின் நடுவில் கல் பாவச் செய்தார்
47	சிறுத்தலை வேட்டுவர்	கி.பி 1162, குலோத்துங்க சோழனின் 14 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு கோபி கொடிவேரி முன்னையீசுவரர் கோயில்	இருங்கோளன் என்பவன் சந்தியா தீபம் வைத்தது
48	காவலர் கள்ளிப்பின் ஊர்	கி.பி 1211, வீரராசேந்திர சோழனின் 4 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் முத்தூர் சோழீசுவரர் கோயில்	உடையபிராட்டி என்பவர் சந்தியா தீபம் வைத்தது

49	காரை வேட்டுவர்	கி.பி 1211, வீரராசேந்திர சோழனின் 4 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு கோபி கொடிவேரி பவாணியாற்றங்கரை	தநாவெயன் என்பவன் சிவன் கோயிலில் சந்தியா தீபம் வைத்தது
50	சிறுத்தலை வேட்டுவர்	கி.பி 1216, வீரராசேந்திர சோழனின் 9 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு கோபி கொடிவேரி முன்னையீசுவரர் கோயில்	இருங்கோளன் கந்தமன் சந்தியா தீபம் வைத்தது
51	காவலர் குறும்பிள்ளர்	கி.பி. 1220, வீரராசேந்திர சோழனின் 13 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு	வாழவந்தான் என்பவன் சிவராத்திரி பூசைக்காக கொடை கொடுத்தான்

52	சிறுத்தலை வேட்டுவர்	கி.பி 1229, வீரராசேந்திர சோழனின் 22 ஆவது ஆட்சியண்டு	ஈரோடு, கோபி, கொடிவேரி முன்னையீசுவரர் கோயில்	இருங்கோளடி என்பவர் சந்தியா தீபம் வைத்தது
53	கன்னை வேட்டுவர்	கி.பி. 1231, வீரராசேந்திர சோழனின் 24 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு ஒலகடம் ஒலகீசுவரர் கோயில்	கருஞ்சொக்கன் வலிய சொக்கன் முருகன் கோயில் கட்டியது
54	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1237, வீரராசேந்திர தேவரின் 30 ஆம் ஆட்சியாண்டு	கோவை அவினாசி அன்னூர் மன்னீசுவரர் கோயில	அன்னூர் வேட்டுவர் எண்ணை காப்புக்காக கொடை கொடுத்த விவரம்
55	படடாலி வேட்டுவர்	கி.பி 1263, விக்கிரமசோழ னின் ஏழாவது ஆட்சியாண்டு	ஈரோடு பெருந்துறை விசயமங்கலம் நாகேசுவரசுவாமி கோயில்	சொக்கன ஞானசம்பந்தன் என்பவர் சந்தியா தீபம் வைத்தார்

56	புல்லை வேட்டுவர்	கி.பி 1267 , வீரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டு	ஈரோடு வெங்கம்பூர் சோழீசுவரர் கோவில் முன்புகிடக்கும் கல்வெட்டு	வீரசிங்க தேவனுக்கு வெங்கம்பூர் அளிக்கப்பட்டது. வெங்கம்பூரில் வசூலாகும் பணத்தை சிவன் கோயில் அமுது படிக்குத் தந்தார்
57	காவலர் கன்னிப்பின்னர்	கி.பி 1269 வீரபாண்டியனின் 4 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் ஆறு தொழு சிவன் கோயில் கல்வெட்டு	பல்லாண்டி என்பவர் திருநிலைக்கால்கள் கொடையாகக் கொடுத்தார்
58	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1269 , மாறவர்மன் வீரபாண்டியனின் 4 ஆம் ஆட்சியாண்டு	கோவை, பேரூர், பட்டீசுவரர் கோயில்	பேரூர் ஊர்ச் சபையார் பூலுவ வேட்டுவர் ஆனந்த கூத்தரிடம்200 பணம் கொடுத்து அதற்குரிய நிலத்தை பெற்று கோயிலுக்கு கொடையாக அளித்தான்

59	காவலர் புன்னகர்	கி.பி 1275 வீரபாண்டியதேவரின் 10 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் ஆறுதொழு நக்கீசுவரமுடையார் கோயில் கல்வெட்டு,	கரியான் வீரன் என்பவர் கருவரை திருநிலைகால் அமைத்தார்
60	பூலுவ வேட்டுவர்	கி.பி. 1285, விக்கிரம சோழ வேவனின் 12 ஆம் ஆட்சியாண்டு	கோவை அவினாசி அவினாசியப்பர் கோயில்	வடபரிகாரநாட்டு வேட்டுவர் வடபரிசார நாட்டு வேட்டுவர் சமூக அமைப்பான பூலுவ நாட்டார் கொடுக்கும் கொடை கூறப்படுகிறது.
61	பூலுவ வேட்டுவர்	கி.பி 1291, விக்கிரமசோழனின் 8 ஆம் ஆட்சியாண்டு	கோவை பொள்ளாச்சி பெரிய களந்தை ஆதீசுவரர் கோயில் அம்மன் சன்னதி	தொட்டான் கருமானி என்பவன் ஒரு தூண் கொடையாக கொடுத்தார்

62	காவலர் குறும்பிள்ளர்	கி.பி. 1293 சுந்தரபாண்டியனின் எட்டாம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் அகிலாண்டபுரம் அகத்தீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு	பட்டாலி செங்காளி என்பவரின் மனைவி புளியம்மை, அர்த்தமண்டபம் முகப்பு அமைத்தார்
63	காவலர் புன்னாடியர்	கி.பி 1294, விக்கிரமசோழனின் 21 ஆம் ஆட்சியாண்டு	ஈரோடு காங்கயம் பட்டாலி பால்வெண்ணீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டுஈரோடு	காளிகாளி என்பவர் சந்தியா தீபம் வைத்தது
64	பூலுவ வேட்டுவர்	கி.பி 1298, விக்கிரம சோழனின் 25 ஆம் ஆட்சியாண்டு	கோவை கோயில்பாளையம் காலகலேசுவரர் கோயில்	பியங்கன் இராமனான வங்கலன் இடையான் அடியான் சிறியான் கோயிலில் திருவிளக்கு வைத்தான்

65	அண்ட வேட்டுவர்	கி.பி 1299, சடையவர்மன் சுந்தரபாண்டியனின 14 ஆம் ஆட்சியாண்டு	கரூர் வெஞ்சமாங்கூடல் விகிர்தேசுவரர் கோயில்	திருவெஞ்சமாங்கூடல் காணி, நெடுங்குளியான முனிவரத்துப் பெருமாள் நல்லூரக் காணியாளரில் கரூர் அண்ட வேட்டுவர் சிவந்த கால் பெருமாளுக்கு அளிக்கப்பட்டதை கல்வெட்டு கூறுகிறது
66	பூலுவ வேட்டுவர்	கி.பி 1300, சுந்தர பாண்டியனின் 15 ஆம் ஆட்சியாண்டு	கோவை , பொள்ளாட்சி, பெரியகளந்தை ஆதீசுவரர் கோயில் அம்மன் சன்னதி	வாணன் நிலையுடையான் என்பவன் கோயில் திருப்பணியின் போது ஒரு தூண் கொடையளித்தான
67	காவலர் மேலக்கரையர்	கி.பி 13 ஆம் நூற்றாண்டு , சேரமன்னர குலசேகரதேவர்	ஈரோடு காங்கயம கீரனூர் ஆதிகேசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு	ஊராளி என்பவர் திருநிலைகால அமைத்தார்
68	வேட்டுவர் குலப் பெருமக்கள்	கி.பி 13 ஆம் நூற்றாண்டு	அரசன் வெஞ்சமாங்கூடல் ஊரைக் கோயிலுக்குக் கொடுத்தான.	இதில் வேட்டுவர்கள் கையெழுத்திட்டனர்.

69	பூலுவ வேட்டுவர	13 ஆம் நூற்றாண்டு, கோனேரின்மை கொண்டானின் 17 ஆம் ஆட்சியாண்டு	கோவை, பேரூர், பட்டீசுவரர் கோயில்	சோழச் சதுர்வேதி மங்கலத்தில் நீர் தட்டுப்பாடு ஏற்பட மாளிகைப்பழநத்தம் என்ற பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட மக்களில் பூலுவ வேட்டுவரும் இருந்தனர். அவர்கட்கு ஊரில் மூன்றில் ஒரு பகுதி இறையிலியாக தரபபட்டது.
70	பாசறை வேட்டுவர்	கி.பி. 1500, உம்மத்தூர்த் தலைவர் நஞ்சராய உடையார்	ஈரோடு பவானி அந்தியூர் செல்லீசுவர் கோயில்	குறும்பன் கொங்கன் என்பவன் பொன்னாங்கட்டியார்க்கு சமாதி அமைத்தான்
71	கதுகால வேட்டுவர்	18 ஆம் நூற்றாண்டு	ஈரோடு சிவகிரி மோளப்பாளையம் பண்டிதகாரன் குட்டை	தேவண கவுண்டன் மகன் ஆவுடைக் கவுண்டன் செய்த ஒரு குடையை குறிக்கிறது
72	பாண்டி வேட்டுவர்	20 ஆம் நூற்றாண்டு	ஈரோடு பெருந்துறை வெள்ளோடு அண்ணன்மார் கோயில்	அண்ணன்மார் கோயிலில் மாதுபட்டி குட்டி மேக்கிப்பட்டி புள்ளிபாளையம் என்பவர் இரண்டு குதிரைகள்அமைத்தார்

		நடுகல்		
வரிசை எண்	குலம்	காலம்	இடம்	குறிப்பு
1	கிழங்கு வேட்டுவர்	கி.பி 10 ஆம் நூற்றாண்டு	ஈரோடு சிவகிரி கவுண்டம்பாளையம் நத்தக்காடு	தலையநல்லூரில் இருந்த கிழங்கு வேட்டுவரில் பெரிய கிழங்கன் போரில் வீரமரணம் அடைந்தார்
2	கரைய வேட்டுவர்	கி.பி 10 ஆம் நூற்றாண்டு	ஈரோடு பழமங்கலம் நத்தக்காடு வேடன் கல்	எதிர்த்த பகைவர்களைக் கொன்று , வென்ற கரையகுலச் சொக்கன் வீரமரணம் அடைந்தான். அவனுக்குக் கல் எடுத்துப் பீடும் பெயரும் எழுதப்பட்டுள்ளது. செய்தி வெண்பா வடிவில் எழுதப்பட்டிருப்பது வேறு எங்கினும் காணாத சிறப்பாகும்.

3		கி.பி 10 ஆம் நூற்றாண்டு	விழுப்புரம் கள்ளக்குறிச்சி எடுத்தவாய் நத்தம் ஆத்துக்காடு	கம்பாடரு மகன் சாமி என்ற வேட்டுவகுல வீரர் ஆநிரை கவரும் போரில் இறந்ததற்காக எடுக்கப்பட்ட நடுகல்
4	ஊராளி வேட்டுவர்	கி.பி 11 ஆம் நூற்றாண்டு	ஈரோடு துக்காச்சி வேட்டுவன் காடு	ஒரு போரில் ஊராளி அழகன் காளி வீரமரணம் அடைந்ததால் அவருக்கு நடுகல் நாட்டப்பட்டது.
5		கி.பி 1290, சுந்தரபாண்டியனின் 5 ஆம் ஆட்சியாண்டு	நாமக்கல் திருச்செங்கோடு திருச்செங்கோடு நடுகல்	வடகரை நாட்டு உலகடத்தில் வேட்டுவரில் அந்தியூரனுக்காக நடுகல் எடுக்கப் பட்டது
6	குன்ன வேட்டுவர்	பிரசோத்பத்தி வருடம்	நாமக்கல் திருச்செங்கோடு இராசாபாளையம் குட்டி மேய்க்கன் பாளையம் அப்பச்சி கோயில் அருகில்	தந்தை குன்னத்தூர் குன்னம் வேட்டுவர் ஆவுடைக் கவுண்டர் போரில் இறந்ததற்காக மகன் வட்டமலைக் கவுண்டர் எடுத்த நடுகல்

வேட்டுவர் குலச் செப்பேடுகள்			
வரிசை எண்	காலம்	செப்பேட்டின் பெயர்	குறிப்பு
1	கி.பி. 1633	பேரூர்ச் செப்பேடு	வேட்டுவர் சமூகத்தினர் பேரூர் கோயிலில் மடம் கட்டியது. குல குருவும், குல தெய்வமும் நியமனம் செய்து கொடைகள் அளிக்கப் பட்டது. களந்தை ஆதிபுராணலிங்கேசுவரர் கோயில் திருப்பணிகள் செய்யப்பட்டதை கூறுகிறது
2	கி.பி.1117	ஊசிப்பாளையம் செப்பேடு	சாந்தைப் படை வேட்டுவர் வெள்ளை பெண்ணை கரைய வேட்டுவருக்கு திருமணம் செய்து கொடுத்து காணியாட்சியை கொடுத்தான். மருமகன் இல்லாதபோது, திருவிழா நடத்திய சாந்தைப்படை மாமனாரை துரத்தி விட்டு காணியாட்சி முழுவதும் கைப்பற்றி , தன்னை ஆதரித்த செட்டியாருக்கு இரண்டாவது உரிமை அளிக்கப்பட்டதை கூறுகிறது

3	சாலியவாகன சகார்த்தம 1325 கலியுகசகார்த்தம் 4422 க்கு மேல்	காடையூர் பட்டயம்	இப்பட்டயம ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் அருங்காட்சியகததில் உள்ளது. திருப்பூர் கோட்டையில வேட்டுவ ஆட்சியாளர் கோப்பணக் கவுண்டர், மதுரை நாயக்கருக்கு வரி கொடாமல் ஆட்சி செய்தார மதுரை நாயக்க மன்னர காடையூர் பெததான் காங்கயம் மன்றாடியாரைக் கொண்டு திருப்பூர் கோட்டையைத் தாக்கி வெற்றிபெறுகிறார் அவவெற்றிக்காக காங்கய மன்றாடியாருக்கு திருப்பூர் கோட்டையும பரிசுகளும் கிடைககிறது. கோப்பணக கவுண்டர் மீணடும் திருப்பூர் கோட்டையை சுறறி வளைததுக் கொண்டார். அப்போது , பெத்தான காங்கய மன்றாடியார் றொம்பவும மனம் கலங்கி கவுண்டர்களை அழைத்து யோசனை பண்ணிக் கொண்டிருக்கும் போது , கொங்கு நாவிதன் இருப்புலி குமரன் கொங்கு வேளாளர்களுக்கு ஆதரவுடன் படையுடன் சென்று , கோப்பண கவுணடரை வென்று கொங்கு வேளாளர்களுக்கு மீண்டும் ஆட்சியை பெற்றுத தருகிறான். வேட்டுவர்களை விழத்திய வெள்ளாள மருத்துவனைக் கொன்று விடுகிறான் வேட்டுவ மருத்துவன். காடையூர் பட்டயம் கூறுகிறது.
4	கி.பி 1717, மதுரை லட்சுமணநாயக்கர் காலம்	நலலூர் பட்டயம்	மின்ன வேட்டுவர் பொன்ன கவுண்டர் மகன் காளியப்ப கவுண்டர் ஒடுவங்கநாட்டு நல்லூரில் கரிய காளியம்மன், கண்ணப்ப நாயனார், கறுப்பணசாமி ஆகிய தெய்வங்களை பிரதிட்டை செய்து மூனறு கால பூசைகளையும ஏற்பாடுகள் செய்யப்பட்டதை கூறுகிறது.

பின்னிணைப்பு - 2

கோசனம் செப்பேடு

கோபிசெட்டிப்பாளையம் வட்டம், கோசனம் அருகேயுள்ள செல்லிபாளையம் பெருமாள் நாடார் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது. இதைப் பெற்றுப் பதிப்புக்கு அளித்தவர் தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்கள் ஆவார். இச்செப்பேட்டு எழுத்துக்களை புலவர் . செ. இராசு அவர்கள் மிகவும் உணர்ந்து படித்து வெளியிட்டார்கள்.

விசயநகர மன்னர் சீரங்கராயர் ஆட்சிக்காலத்தில் கோசனம் கோட்டையில் குருகுலத்து வம்சச் சிற்றரசர்கள் பூலுவ வேட்டுவர் மகாகாளியண்ணக்கவுண்டர் நாட்டு நிர்வாகம் செய்து வந்தார். அவருக்கு உதவியாக மணிய வேட்டுவர் மகன் ராக்கியாக் கவுண்டர், புன்ன வேட்டுவர் பச்சையாக் கவுண்டர் ஆகியோர் இருந்தனர்.

கோசனம் கோட்டை மீது அந்நியர் படையெடுத்தனர் மேற்கண்ட மூன்று பேருக்கும் ஆதரவாகத் தாளிசடைய மூப்பன், பொன்னி சின்னான், மசக்குட்டை ராக்கி, மணியராக்கி ஆகியோர் கோட்டை மேற்குக் கொத்தளத்தில் போர் செய்து வெற்றிபெற்றனர். அதனால் வேட்டுவத் தலைவர்கள் நாடார் சமூகத்தவர்ட்குச் சிறப்புச் செய்து பச்சை நாகியம்மன் கோயிலில் சில உரிமைகளையும் அளித்தனர். நாடார் சமூகத்தினருக்கு வெள்ளைக்குடை, வெண்சாமரம் சிறப்புக் கூறப்படுகிறது.

இச்செப்பேட்டிற்கு ரங்கப்ப சேருவைகாரன், வேளராசி திருமலைக் கவுண்டர் ஆகியோர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளனர். இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1613 ஆம் ஆண்டு ஆகும்.

செப்பேடு

1. சுபஸ்ரீமன் மகாமண்டலீசுரன் கட்டாரி சாளுவன் அரியராய விபாடன் பா

2. சைக்குத் தப்புவராய கண்டன் மேதினி மீசுரகண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடா

3. தான் எம்மண்டலமும் ஈழமண்டலமுங் கொண்ட தசரத ராமன் மதியாத மன்னர் ம

4. குடம் பிடுங்கி பதிகூறையாடும் பரசுராமன் போரிட்ட மன்னர் பதியைப் பிடுங்கி

5. மார்தட்டும் வெங்குடிப் பிரதாபன் ராசாதிராச ராசபரமேசுவரன்

6. ராசமார்த்தாண்டன் ராசகெம்பீரன் ராசகோலாகலன் அசுவபதி கேசபதியான நவகோ

7. டி நாராயணன் செகதள விபாடன் கெசவேட்டை கண்டருளிய நரசிங்கராயர் ஆனைகுந்திராயர்

8. ராமதேவராயர் அச்சுதராயர் கிருஷ்ணராயர் சீரங்கராயர்க்குச் செல்லாநின்ற கலியுக சகாத்தம் 4715

9. சாலிவாகன சகாத்தம் 1535 மேல் பிரபவ வருஷம் மாசி 9 தேதி சத்தியமங்கலத்துக்குச் சேர்ந்த குறுப்பு நாடு

10. கோசணத்தில் கோட்டையிலே குருகுலத்தரசரான பூவுல வேட்டுவன் மகா காளியண்ண

11. கவுண்டன் துரைதனத்தில் மணிய வேட்டுவன் மகன் ராக்கியாக் கவுண்டன் புன்ன வேட்டுவன்

12. பச்சையாக் கவுண்டன் இந்த மூன்று பேருக்கு சகாயமாய் வெள்ளைக்குடை வெண்சாமரமுடைய தாளிச்ச

13. டையமுப்பன் பொன்னி சின்னான் மசைக்குட்டை ராக்கி மணியராக்கி இந்த நாலு பேரும் கோசணத்துக் கோட்டை

14. மேற்குக் கொத்தளத்திலே நின்று எதிராளியை செயித்த படியினாலே இவர்களை மெச்சிக் குடுத்த வெகுமானம் பச்சை

15. ப்பட்டு தங்கச்சரப்பணியும் கோசணத்தில் காணியும் முந்தின பாக்கு வெத்தலையும்

16 குண்ட முறைப்பாடு எடுதூதுக் கொண்டு பொங்கலுங் கிடாயும் குடுத்து மனைரண்டு கூறு புஞ்சை நாலு வள்ளக்காடு யுல

17. ந்தைக் குட்டைக்காடு சடைச்சிகாடுங்குடுத்து பச்சை நாகியம்மன் சன்னிதியில் சகலமாக பலபட்டடையும்

18. கூடிச்சம்மதிச்சு எழுதிக்குடுத்த சாசனப்பட்டையம் பூமி ஆகாசம் உள்ளவரை நடத்திவிக்கத் தக்கதாகும்.

19 இதுக்கு யாதாமொருத்தர் ரண்டு நினைத்தால் மகாபாதகத்திலே போகக் கடவது காசியிலே காராம் பசுவைக்

20. கொன்ற தோஷத்திலே போவார்கள். இதுக்குச் சாட்சி ரங்கப்பசேருவைகாரன் வேளராசி திருமலை கவுண்டன்

21. இந்த சாசனப் பட்டயம் பாஞ்சாளாரில் குப்பத் தட்டான் யென் கையெழுத்து உ பச்சை நாகியம்மன் துணை.

பின்னிணைப்பு - 3

ஈஞ்சங்குலகாணிச் செப்பேடு

ஈங்கூர் புலவனூர் பழனிச் சாமிக் கவுண்டரிடம் இந்தச் செப்பேடு உள்ளது அவர் இச்செப்பேட்டில் குறிக்கப்பட்ட ஈஞ்சகுல இரகுநாதசிங்கக் கவுண்டர் அவர்களின் வழியினர்.மூவேந்தர்களின் ஆட்சியின் போது ஆதொண்டச் சோழன் நாளில் பாண்டியன், சேர அரசர்கள், கொங்கு நாட்டில் குடியேறின 48 ஆயிரம் கோத்திரம் வேளாளர்களிடம் உங்கள் திறமையில் வேட்டுவர்களை அடக்கி எந்தெந்த ஊர்களை யார், யார் பிடிக்கின்றீர்களோ அந்த ஊரை உங்களுக்குக் காணிக்கையாகக் கொடுப்போம் என்றனர்

ஈஞ்சகுல இரகுநாதசிங்கக் கவுண்டர் சிறிது இராணுவம் சேர்த்துக் கொண்டு திருக்காம்புலியூர் வந்து தோரணம் கட்டி மதுக்கரைச் செல்லாண்டி யம்மனை வணங்கிப் பல ஊர்களில் வெற்றி பெற்றனர்

88 ஊர்களை அவர்கள் பிடித்தனர் அந்த 88 ஊர்களும் ஈஞ்சகுலத்தார் காணியூர்கள் என்று செப்பேடு கூறுகிறது மூவேந்தர்களும் இக்காணிச் செப்பேட்டை எழுதித் தந்தனர். பிடாரியூரை ஈஞ்சகுலத்தாரிடம் பொருளந்தைக் குலத்தார் காணியாகப் பெற்ற விபரமும் இறுதியில் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூலம்

திருச்சிற்றம்பலம் கலியுக சகாத்தியம் 1687 வருசத்துக்கு செல்லாநின்ற ஆங்கிரச வருஷம் சித்திரை மாதம் மங்கல வாரம் பரணி நட்சத்திரம் பெற்ற சுபதினத்தில் தென்திசையிலேயிருந்து ஆதண்டச் சோழன் நாளில் வடதிசைக்கு வாரபோது கொத்துமுடிப் பாண்டியன் சேரன் இவ்விரண்டு பேரும் வந்து வேளாளர் பிரபுவாகிய காராள வங்கிஷத்தை வந்து குறுக்காட்டிக் கொண்டு நீங்கள் நான் சொன்னபடி நீங்கள் நாற்பத்தெண்ணாயிரம் கோத்திரமும் கேட்க வேணும்

உங்களுக்கு இந்தக் கொங்கு இருபத்து நான்கு நாட்டிலையும் அவனவன் சாமார்த்தியத்துக்குத் தக்காப்போலே சேவுக முனையிலே எந்தெந்த ஊர் பிடிக்கிறானோ அந்தந்த ஊரு அவரவர்கட்கு கல்வெட்டுப் போட்டுக் குடிக்கிறேன். இந்தக்கொங்கு இருபத்துநான்கு நாட்டிலேயும் வேட்டுவன் காவலுவன் பூவிலுவன் மாவலுவன் வேடன் இப்படிப் பாளையப் பட்டுச் செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பிரகாரத்துக்கு நீங்கள் செயம் கொண்டு வரவும்.

நல்லதென்று சொல்லி சம்மதிச்சுக் கொண்டார்கள். அவரவர் இராணுவங்கள் சேர்த்துக் கொண்டு நாட்டுப்புரத்தில்

புறப்பட்டார்கள். ஈஞ்சங்கூட்டம் இரகுநாதசிங்கக் கவுண்டன் சிறிது படையெழுப்பிக் கொண்டு திருக்காம்புலியூரு வந்து தோரணம் கட்டி மதுக்கரைச் செல்லாண்டியம்மனைச் சேவுச்சுக் கொண்டு குளித்தலை முசிறி தொட்டியம் பவுத்திரம் பொகலியூரு திருவில்லிப்புத்தூரு தெங்கூரு புல்லூரு ஈங்கூறு வடகரை ஆத்தூர் கொந்தளம் குன்னத்துரு பரமத்தி மூலனூரு பருத்திப்பள்ளி பாலமேடு கோக்களை கொன்னையாறு இராசிபுரம் அத்தனூரு வீரப்பூரு மல்லூரு பெரியூரு மோரூரு முளசி ஈச்சம்பள்ளி அஞ்சூரு காங்கயம் தலையூரு புலியூரு பரஞ்சேர்வளி புடாரியூர் நசியனூரு பெரும்புலியூரு புன்னம் பட்லூரு காவேரிபுரம் சாம்பள்ளி வேம்பத்திக் காஞ்சிக்கோவில் கவுந்தப்பாடி திங்களூரு கொளப்பலூரு செவியூரு கோசணம் குருமந்தூர் எலத்தூரு நம்புயூரு அஞ்சானூரு நடுவஞ்சேரி கருவலூரு துடியலூர் தொண்டாமுத்தூர் பேரூர் வெள்ளலூர் கீரனூர் பழனியூரு தாண்டிக்கொடி மங்கலம் மானூரு பொங்கலூரு கீரனூர் கொத்தையம் தேவத்தூரு குத்திலுப்பை மயில்ரங்கம் அரவக்குறிச்சி கூத்தம்பட்டி சோழவந்தான் வேலூர் வெங்கரை வெங்கம்பூருகோனகரம் கண்ணனூர் காரச்சேரி மாம்பரை பொன்னிவாடி நீலம்பூர் புல்லூர் அஞ்சூர்

ஆத்தூர் தேவூர் மேல்ச்சேரி கம்பையனூர் விசயமங்கலம் காடையூரு ஆக 88

இந்த யென்பத்தெட்டுக் காணியும் ஈஞ்சங்கூட்டம் இரகுநாதசிங்கக் கவுண்டனுக்கு கல்வெட்டு தாம்பூர சாதனம் பட்டயம் கொத்து முடிப்பாண்டியன் சேரன் சோழன் மூவராசாக்களும் கூடி எழுதிக் குடுத்தார்கள் இதுக்குச் சாட்சி சோழவந்தான் பாண்டிய முகுந்தர் மதுரையில் சொக்கநாயக்கன் சாட்சி கன்னங்கூட்டம் புறப்பனகவுண்டன் சாத்தந்த கூட்டம் வேலப்ப கவுண்டன் காட கூட்டம் காசிலிங்கக் கவுண்டன் எழுத்துப் படைத்தலைவர் சாட்சி இந்தப் பட்டயம் எழுதி வச்சவர் மதுரையில் வீரப்பாசாரி இந்தசதனப் பட்டயத்துக்கு விகாதம் பண்ணாமல் நடத்திக் கொண்ட பேர்கள் அனேகங்கோடி சிவாலயம் சேவித்தபணி இதுக்கு விகாதம் பண்ணின பேருக்கு அசுவத்தி கோவத்தி பிருமத்தி சிசுவத்தி இப்படியாக கொத்த பஞ்ச பாதகத்திலே போவார்கள் என்றவாறு மீனாட்சியம்மன் துணை செய்யவும்

கலியுக சகாற்தம் 1800 வருஷத்துக்குச் செல்லா திற்க நள வருஷம் பங்குனி மாதம் 7 தேதி மங்கள வாரம் உத்தர நட்சத்திரம் பெற்ற சுப தினத்தில் சொக்கநாயக்கர் விசாரணையில் மேல்கரைப் பூந்துறை நாட்டில் பிடாரியூரில் கூத்தக் கவுண்டன் மகள் வெள்ளைப் புள்ளை

பழனியம்மாளை கருமா புரத்தில் பிரளந்த கூட்டம் பள்ளிக் கூடத்தான் குழந்தைக் கவுண்டனுக்கு வெள்ளைப் புள்ளை பழனியம்மாளைக் குடுத்து பிடாரியூரை வெள்ளைப் புள்ளைக்குக் குடுத்து விட்டோம்

இதற்கு சாட்சி பூந்துரைப் பட்டக்காரன் வெள்ளோடு பயரங்கூட்டம் வேலப்ப கவுண்டன் சாத்தந்தை கூட்டம் இராசா கவுண்டன் நசியனூரு கண்ணங்கூட்டம்' புறப்பன கவுண்டன் சாட்சி பிராட்டி பண்டாரம் சாட்சி சோழிப் பரையன் கருப்புத் தோட்டி சாட்சி இதுக்கு விகாதம் பண்ணின பேர்கள் காசியிலே காராம் பசுவைக் கொண்ண தோசமடைவார்கள் பிராட்டியம்மன் துணை.


●●



வடகரையாற்றூர் மேல்முக கிராமம், ஜேடர்பாளையம் காவிரியாற்றில் இருந்து இராசா வாய்க்கால் புறப்படும் இடம். (காண்க பக்கம் 66)



திருச்செங்கோடு - ஆதிநாகேஸ்வரர் வழிபாட்டுக் குழுவினர் (காண்க பக்கம் 87)



பரமத்திக் கோட்டையின் வடகிழக்கு மூலை மண்மேடு
(காண்க பக்கம் 36)



பரமத்திக் கோட்டையின் தென்கிழக்கு மூலையின் மண்மேட்டில் உள்ள
வெடிவைக்கும் பாறை (காண்க பக்கம் 36)



பரமத்திக் கோட்டை கோட்டையண்ணன் சாமி எதிரில் உள்ள காவல் தெய்வங்கள்
(காண்க பக்கம் 37)




கோட்டையண்ணன் கோயிலுக்குத் தெற்கே காணப்படும் தூண்கள்
(காண்க பக்கம் 37)




கோட்டையின் உட்புறம் தென்மேற்குப் பகுதியில் தரையில் கிடக்கும் ஒரு சிறிய பாறைத்துண்டில் காணப்படும் ஆஞ்சனேயர் புடைப்புச் சிற்பம் (காண்க பக்கம் 37)




வேலூர், வெங்கரையம்மன் கோயிலில் உள்ள ஆறுவிரல் அத்தியாண்டி
(காண்க பக்கம் 92)




கே.சி. தியாகராசன், முன்னாள் படை வீரர்,
கொண்டரசம்பாளையம் அவர்களிடம் உள்ள பட்டயம்
(காண்க பக்கம் 93)




இருக்கூர் பட்டக்காரர் தங்கவேல் இளையநாயக்கர் அவர்களின்
புதுப்பிக்கப்பட்ட வீடு (காண்க பக்கம் 129)




பரமத்திக்கோட்டையில் இருந்து, உயிருக்கும் மானத்திற்கும் பயந்து தப்பியோடித்
தீயில் இறங்கி உயிர் விட்ட "கொமராயி" தெய்வங்கள். (காண்க பக்கம் 113)




நன்செய் இடையாற்று இராசா கோயிலில் உள்ள கோடந்தூர் மணிவேல்
(காண்க பக்கம் 111)



இராசா கோயில் கருவறை முருகன் ராசாவிற்கு வலதுபுறம் உள்ள சுவரும், சுவரின் கீழ் மூலையில் உள்ள இரகசிய வழியும் (காண்க பக்கம் 111)



வெங்கரை, வேலாகவுண்டம்பாளையம் சாவடி அருகே உள்ள நடைபாதையில் மண்ணில் புதைந்த இளையநாயக்கரின் கல்வெட்டும் படம் எடுக்க உதவிய பொது மக்களும் (காண்க பக்கம் 103)




திருச்செங்கோட்டு மலை திருநாகேசுவரர் சன்னதி மகாமண்டபத் தூணில் உள்ள கண்ணைக் கவரும் கல்தூண் (காண்க பக்கம் 78)




இளையநாயக்கரால் கட்டப்பட்ட திருநாகேஸ்வரர் திருக்கோயிலில் இருந்த
63 நாயன்மார்கள் (63 நாயன்மார்களில் கண்ணப்ப நாயனாரும் ஒருவர்)
(காண்க பக்கம் 77)



இளையநாயக்கரால் கட்டப்பட்ட திருநாகேஸ்வரர் திருக்கோயிலில் இருந்த
ஏழு கன்னிமார் தெய்வங்கள் (காண்க பக்கம் 79)



திருச்செங்கோடு மலையில் உள்ள பாபநாச தீர்த்தக் குளம்
(காண்க பக்கம் 81)



திரு. K.K. கணேசன் அவர்கள் மதுரையில் உள்ள தம்பட்டன் பாறையைப் பார்வையிடுதல் (காண்க பக்கம் 65)

திருநாகேஸ்வரர்



திருச்செங்கோடு மலையில் இளைய நாயக்கனால் அமைக்கப்பட்ட கோயிலில் உள்ள சுயம்பு திருநாகேஸ்வரர் புஷ்ப அலங்காரம்

குறிப்புகளுக்காக....



திருச்செங்கோடு மலையில் இளைய நாயகனால் கட்டப்பட்ட
திருநாகேசுவரர் கோயிலில் உள்ள சுயம்புலிங்கம், நந்தீஸ்வரர்



